
## மல்லிகா மணிவண்ணனின்

# இப்படிக்கு... உன் இதயம்



# இப்படிக்கு...
# உன் இதயம்

மல்லிகா மணிவண்ணன்

நாகம்மை நிலையம்
24/11, ஐயா தெரு,
இராயப்பேட்டை,
சென்னை – 600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : இப்படிக்கு... உன் இதயம் |
| ஆசிரியர் | : மல்லிகா மணிவண்ணன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : அக்டோபர், 2016 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 220 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : நாகம்மை நிலையம்<br>24/11, ஐயா தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : பா.குணாளன் |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |



# இப்படிக்கு... உன் இதயம்

## முன்னுரை

மதிப்பிற்குரிய வாசகர்களுக்கு,

என் அன்பான வணக்கங்கள். இப்படிக்கு உன் இதயம் கதையின் மூலம் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. இது எனது பதினாறாவது கதையாக நாகம்மை பதிப்பகத்தின் மூலம் வெளிவருகின்றது. தொடர்ந்து ஊக்கமும் உற்சாகமும் அன்பும் ஆதரவும் அளிப்பதற்கு நன்றி. கதையை தொடர்ந்து உடனுக்குடன் பிரசுரிக்கும் நாகம்மை நிலையத்தின் திரு SM அருணாசலம் அவர்களுக்கும் நன்றி. உடன் நிற்கும் தோழமைகள் அனைவருக்கும் நன்றிகள் பல.

**மல்லிகா மணிவண்ணன்**

YOU CAN CATCH ME ONLINE AT mallikamanivannan.com

# ஆசிரியரின் பிற வெளியீடுகள்

1. என் வாழ்வு உன்னோடு [ எனை தெரிந்தும் நீ ]
2. தலைவியின் நாயகன்
3. உயிரே என் உறவே [ சத்தமில்லாமல் ஒரு யுத்தம் ]
4. கனாவில் உன் முகம்
5. உன் பார்வை நானறிவேன்
6. காதல் கொண்டேனே
7. பூவை நெஞ்சம்
8. நீதானே தாலாட்டும் நிலவு
9. வரம் தரும் வசந்தமே
10. வீழ்வேனென்று நினைத்தாயோ [இரண்டு பாகம்]
11. கனவே கை சேருமா
12. நெஞ்சுக்குள் பெய்திடும் மாமழை
13. பக்கம் வந்து கொஞ்சம்
14. ஊமை நெஞ்சின் சொந்தம்
15. தென்றல் என்னை தீண்டும் போது

# இப்படிக்கு... உன் இதயம்



## 1

மாவிலைத் தோரணம் கட்டி, பந்தலிட்டு, மாக் கோலமிட்டு, அந்தத் திருமண வீடு களை கட்டி யிருந்தது. அந்தக்களை வீட்டில் மட்டுமல்ல அங்கிருந்த ஆட்களிடமும் பரி பூரணமாய் இருந்தது. ஆளுக்கு ஒரு புறம் பரபரப்பாய் அங்கும் இங்குமாய் நடந்து கொண் டிருந்தனர்.

அந்த வீட்டில் பெரியவர் சீதாராமன்.. அவரின் மனைவி கௌரி.. மகன் லக்ஷ்மணன், அவரின் மனைவி

அனுராதா மற்றும் பரதன் அவரின் மனைவி செல்லம்மாள் அவர்களுடைய மக்களுடன் வாசம் செய்தனர்.

பெரிய குடும்பம்! கூட்டுக் குடும்பம் கூட, எப்போதும் வீடு ஒரே சத்தமாக கலகலவென்று இருக்கும். பிள்ளைகளின் சத்தம் மட்டுமல்ல பெரியவர்களும் அதற்கு சற்றும் குறைவில்லாமல் போடுவர்.

இதில் லக்ஷ்மணனின் மகள் பூரணிக்குத் தான் திருமணம். இன்னும் ஐந்து நாட்களில்.. அன்று மணப்பெண் பூரணியின் தாய்மாமன் வீட்டினர் நலங்கு வைப்பதாக இருந்தது. அதனால் பூரணி மட்டும் நீராடாமல் இருக்க.. மற்ற அனைவரும் குளித்து பட்டுடுத்தி இருந்தனர். வீட்டின் ஒவ்வொரு இடமும் அதன் செல்வ செழிப்பைப் பறை சாற்றியது.

''பூரணிக்கா..'' என்று கத்தியபடி வந்தாள் ஜனனி..

''என்ன ஜனனி?'' என்ற பூரணியிடம்,

''எனக்கு பிரெஞ்சு நாட் போட்டு விடு!'' என்று தலையைத் திருப்பி நின்றாள்.

''ஹேய் இம்சை, இன்னைக்குக் கூட என்னை ஃப்ரீயா விடமாட்டியா நீ, போனி டெயில் போட்டுக் கோடி.''

''அதெல்லாம் முடியாது.. நீ போட்டு விடலை, கல்யாணத்தன்னைக்கு நீ போட்டிருக்குற மாதிரி மேக் அப், ஜூவெல்ஸ், நானும் போட்டுக்குவேன்! அப்புறம் நீ தனியா தெரிய மாட்ட, பரவாயில்லையா யோசிச்சு சொல்லு!'' என்றாள்.

''அடப்பாவி! இது என்னடி புது ப்ளாக் மெயில்? எப்படி இப்படி உன்னால முடியுது?'' என்று பூரணி அதிசயிக்க.

''எஸ்! பிராண்ட் நியூ! இப்போ தான் க்ரியேட் பண்ணினேன்.. உன்னோட காஸ்டியும்க்கு மேக் அப்க்கு ஜூவெல்ஸ்க்குன்னு தேடித் தேடி உனக்கு சொல்ற உன்னோட மாப்பிள்ளையோட டிப்ஸ் எல்லாம் எனக்குத் தான். நான் அழகா தெரியலைன்னாலும் எனக்கு அது சூட் ஆகலைன்னாலும் அதைத் தான் போடுவேன்!'' என்று மிரட்டல் விடுக்க,

''ஆங்!'' என்று பூரணி பார்க்க,

''இதுக்குப் பேர் தான் மாத்தி யோசின்னு சொல்றது!''

''ஆத்தாடி ஆத்தா! நீ நேரா யோசிச்சாவே நான் தாங்க மாட்டேன்! இதுல எதுக்கு நீ மாத்தி யோசிக்கற?''

''சும்மா தான்! எத்தனை நாள் நேராவே யோசிக் கறது!'' என்று அவள் சொல்லும் போதே பூரணியின் போன் அலற,

அதன் ரிங் டோன் கேட்டு தலையில் கை வைத்த ஜனனி, ''ஏன் பூரணிக்கா, இப்போவே எல்லாம் பேசிட் டீங்கன்னா கல்யாணத்துக்கு பிறகு என்ன பேசுவீங்க?'' என்று அபிநயத்துடன் கேட்க,

''இதெல்லாம் உனக்குப் புரியாது போ! உனக்கு மாப்பிள்ளை வரும் போது புரியும்!'' என்று பூரணி சிரிக்க..

''என்னவோ போ பூரணிக்கா! எனக்கு யாரைப் பார்த் தாலும் அவங்களோட குறைகள் தான் கண்ணுக்குத் தெரியுது. யாரையும் பிடிக்கறதே இல்லை.. உனக்கு மாப்பிள்ளை காட்டினாங்க! நீ பிடிச்சிருக்கு சொன்ன! அப்படியே டெவலப் ஆகிடுச்சு.''

''எனக்கு அப்பா காட்டும் போது பிடிக்கலைன்னா? ஒரு வேளை அப்பியரன்ஸ் பிடிச்சு அப்புறம் பேசும் போது பிடிக்காமப் போயிட்டா? நான் என்ன பண்ணுவேன், உனக்கு முடிச்ச உடனே எனக்கு ஆரம்பிச்சிடுவாங்க!'' என்று சலித்துக் கொண்டே போகப் போக..

போனில் பூரணி, ''ஒரு அஞ்சு நிமிஷம்.. ஜனனிக்கு ஜடை போட்டுட்டுப் பேசறேன்!'' என்று போனை வைத்தாள்.

''இல்லைக்கா நீ பேசு!'' என்று ஜனனி நகர..

''நீ வாடி!'' என்று அருகமர்த்தி பின்ன ஆரம்பிக்க..

''அக்கா உன்னோட மாம்ஸ் திட்டப் போறாங்க என்னை!''

''அதென்ன உன்னோட மாம்ஸ்! உனக்கு இல்லையா?''

''அவர் எனக்கு அக்காவோட மாம்ஸ் அவ்வளவு தான்.. எனக்கு நீ தான் எப்பவும் முதல்ல! உன் மூலமா தானே அவங்க!'' என்று சிரிக்க,

''வில் மிஸ் யு ஜனனி பேட்லி!'' என்று பூரணி கண் கலங்கினாள்.

''ஐயோ! அக்கா! என்ன இது? சின்னப் பொண்ணு மாதிரி.. என்னோட தொல்லையில்லாம சந்தோஷமா இரு!'' என்றால் பெரிய மனுஷியாக பூரணியின் தலை மேல் கைவைத்து ஆசீர்வதிக்க.

பூரணி சிரித்தாலும் கண்களில் நீர் துளிர்த்தது.

''பெரியம்மா!'' என்று அவள் கத்திய கத்தலில், விரைந்து அனுராதா என்னவோ ஏதோ வென்று வர.. ''பெரியம்மா! அக்கா அழறாங்க! எனக்கும் அழுகை வருது! பேசாம கல்யாணம் முடிஞ்சு மாப்பிள்ளையை நம்மளோட இருக்க சொல்லிடலாமா'' என்று ஜனனி சொல்ல..

''விளையாடாத ஜனனி!''

''நோ பெரியம்மா.. ஐ அம் டெட் சீரியஸ். பொண் ணுங்க மட்டும் ஏன் அவங்க வீட்டுக்குப் போகணும். அக்கா மாப்பிள்ளை இங்க வரட்டும்!'' என்று சொல்ல,

''ஐயோ ஆரம்பிச்சிட்டீங்களா டீ! என்னால முடியாது.. இந்தக் கல்யாணம் நிச்சயம் ஆனதுல இருந்து உங்க அட்டகாசம் தாங்கலை! பூரணி, நீ இஞ்சினியரிங் முடிச் சிட்டு ஒரு சாஃப்ட் வேர் கம்பெனில வேலை பார்க்கற!''

''நீ ஜனனி.. ஃபைனல் இயர்ல இருக்க.. கொஞ்ச மாவது பொறுப்பு வேண்டாமா, இரு, உங்கம்மாவைக் கூப்பிடறேன்! அப்போ தான் நீங்க சரி ஆவீங்க!'' என்று சொல்லி,

''செல்லம்மா!'' என்று கூப்பிட்டும் விட..

''என்னக்கா! இவளுங்களுக்குத் தான் வேலை இல்லைன்னா உங்களுக்குமா?'' என்று கேட்டபடி தான் அவர் வந்தார்.

''உனக்குத் தெரியுமா, நான் எதுக்குக் கூப்பிட் டேன்னு'' என்று அனுராதா கேட்க,

''இவளுங்க இருக்கும் போது நீங்க கூப்பிட்டா எதுக் குன்னு எனக்கு தெரியாதா.. என்ன ஜனனி, பெரியம் மாவை டிஸ்டர்ப் பண்ணின?'' என்று கேட்க.....

''அக்கா அமுதா! அதுதான்...'' என்று விஷயத்தை சொல்லி ஜனனி செல்லம் கொஞ்ச,

விஷயத்தை கேட்டதும் அதுவும் கோபத்தைக் கொடுக்க, ஜனனி பேசிய விதமும் கோபத்தைக் கொடுக்க, ''ஏழு கழுதை வயசாகுது, எப்போ பார்த்தாலும் கொஞ்சிக் கொஞ்சி பேசறது! பேசறதும் அர்த்தமில்லாம பேசறது! முதல்ல நல்லாத் தெளிவா பேசு!'' என்று செல்லம்மாள் ஏகத்திற்கும் அதட்டினார்.

அவரை முறைத்த ஜனனி.... பூரணி பின்னிக் கொண்டு இருந்த தலையை இழுத்து..... பின்னிய பின்னலையும் விடுவித்து.... ''நீ ஒண்ணும் என் கூடப் பேசாத போ! எப்போ சேன்ஸ் கிடைக்கும் என்னை திட்டன்னு பார்த்துட்டியே இருப்பியா'' என்று வெளியே விரைந்து விட,

''ஜனனி! இது என்ன அம்மாவை 'வா போ'ன்னு பேசற!'' என்று பெரியம்மாவும் அதட்ட,

''எங்கம்மா நான் அப்படித்தான் பேசுவேன்!'' என்று கத்திக் கொண்டே விரைந்தாள்.

''அம்மா அவளை உனக்குத் தெரியாதா? ஏன் சித்தி நீங்க வேற?'' என்ற பூரணியைப் பார்த்து..

''என்ன பழக்கம் இது? காலேஜ் முடிக்க போறா! இன்னும் கொஞ்சித் தான் பேசறா, எத்தனை தடவை சொல்றது, ஒரு சொல் பொறுக்கறது இல்லை, முகத்தை நாள் முழுசும் தூக்கி வெச்சிக்கறது! வீட்ல எல்லோரும் செல்லம் கொஞ்சி அவளைக்கெடுக்கறீங்க, இப்படியேப்

போகற வீட்லயும் எல்லோரும் அவளை கொஞ்சிக் கிட்டே இருப்பாங்களா?'' என்று சலிக்க,

''அவ நம்ம கிட்ட தான் அப்படிப் பேசுவா சித்தி, மத்த எல்லார்கிட்டயும் தெளிவாத் தான் பேசுவா!'

''என்னவோ போங்க! நான் என் பொண்ணு கொஞ் சாமப் பேசிப் பார்த்ததே இல்லை!'' என்றார் அவர்.

''போங்க சித்தி! அழுதுட்டு இருப்பா!'' என்று சொல்லி பூரணி அவரை விரட்ட,

செல்லம்மாள் சென்ற போது படுக்கையில் படுத்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள் ஜனனி.

ஆம்! அதுதான் ஜனனி.. சின்ன விஷயத்திற்குக் கூட உடனே அழுது விடுபவள். அங்கே நடந்த பிரச்சனை என்ன ஒன்றுமே இல்லை.. ஆனாலும் யாரும் கடிந்து சாதாரணமாக ஒரு வார்த்தைச் சொன்னால் கூட அழுவாள்.

செல்லம்மாளின் செல்ல மகள்! மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்ட மகள், இன்னும் சிறு குழந்தை போல கொஞ்சி கொஞ்சி பேசும் சுபாவம். சிறிய வயதில் தேனாய் இனிக்க, விட்டு விட்ட அம்மா இப்போது பேசாதே என்றால் சுபாவம் எப்படி மாறும்.

எத்தனையோ முறை செல்லம்மாள் நல்ல விதமாகச் சொல்லி, திட்டி , கொஞ்சி , கெஞ்சி , மிஞ்சி , என்று பலவகையாக முயற்சி செய்து விட்டார். ஆனாலும் மாற்றிக் கொள்ள மாட்டாள் என்பதையும் விட மாற்ற முயற்சி எடுக்கவே மாட்டாள். ஜனனி என்னக் கேட்

டாலும் அடுத்த நிமிடம் அவள் முன் வைக்க அவளின் தந்தை பரதன் விருப்பப்படுவார்.

“இப்படி அவ கேட்கறது எல்லாம் உடனே வாங்கிக் கொடுக்காதீங்க! கஷ்டம் தெரியாம பிள்ளைங்களை வளர்க்காதீங்க!” என்று கணவரிடம் பல முறை சொன்னாலும்.

“நான் பாடு பட்டு இப்படி உழைக்கறது எதுக்கு? நம்ம மக்களுக்குத் தானே! அவளுக்குச் செய்யாம நான் யாருக்குச் செய்யப் போறேன்! முதல்ல எதுக்கு அவளுக்கு கஷ்டம் தெரியணும்னு நினைக்கற! அப்படி ஒரு வாழ்க்கை என் பொண்ணுக்கு அமையாது!” என்று வாயை அடைப்பார்.

“என்னவோ செல்லம்மாளுக்கு இன்னும் மகள் பொறுப்பாக இருக்கவில்லை, பக்குவப் படவில்லை, நாளைத் திருமணமாகி செல்லும் வீட்டில் அவளை யாரும் எதுவும் சொல்வார்களோ!” என்ற எண்ணம் தான்.

இருந்தாலும் இப்பொழுது அழுதுக் கொண்டிருப்பவளைப் பார்த்து, “எதுக்கு இப்போ சின்ன விஷயத்துக்கு அழற, எழுந்துரு!” என்று சமாதானம் செய்யவும்,

“எது சின்ன விஷயம், என்ன நான் கொஞ்சிப் பேசறேன், எப்பவும் நீங்க என்னை அதட்டிக் கிட்டே இருக்கீங்க, அதுவும் பெரியம்மாவும் அக்காவும் இருக் காங்க, பெரியம்மா, பெரியப்பாக் கிட்ட சொல்லுவாங்க! அப்படியே எல்லார் கிட்டயும் சொல்லுவாங்க! எல் லோரும் வண்டி வண்டியா அட்வைஸ் குடுப்பாங்க!”

என்று உதடு பிதுக்கி சொன்ன விதம் மீண்டும் செல்லம் கொஞ்சுவது போல தான் அவருக்கு தோன்றியது.

''மா! அக்கா ஏன் அழறா?'' என்றபடி வந்தான் அவினாஷ், ஜனனியின் தம்பி, கூடவே வந்தது ரகுலன், பூரணியின் தம்பி, இருவருக்கும் ஒரே வயது, இருவரும் கல்லூரியில் முதல் ஆண்டு பயின்றனர். அவர்களும் இஞ்சினீயரிங் படிப்பே.. ஆக மொத்தத்தில் அந்த வீட்டினில் நான்கு இஞ்சினீயர்கள்.

ஆனால் அவர்களின் தாத்தாவின் தொழில் பிரிண்டிங் பிரஸ், மிகுந்த பெரிய அளவில். அதில் தான் இரு மகன்களும் இருந்தனர்.

''ஒரு வார்த்தை அதட்டி பேசினேன், அழறா!''

''அவ தான் ரொம்ப சென்சிடிவ்ன்னு தெரியாதா?'' என்று அம்மாவை அதட்டிய அவினாஷ்,

''அக்கா! எழுந்துரு! வீட்ல விசேஷம், எல்லோரும் வர ஆரம்பிப்பாங்க! இப்போ அழுதா என்ன என்ன கேட்பாங்க, அவங்க போனதுக்கு அப்புறம் கண்டினியூ பண்ணு! இல்லை உன் கண் மை எல்லாம் கரைஞ்சு பேய் மாதிரி இருப்ப!'' என்று சொல்ல,

''டேய்! சும்மா இருடா!'' என்று அவனை அதட்டிய ரகுலன், ''அக்கா! எழுந்துரு!'' என்று அவன் சமா தானப்படுத்திக் கொண்டு இருக்க... அப்போது தான் குளித்து முடித்து வந்த பரதன்,

''குட்டிம்மா! அப்போவே குளிச்ச, இப்போ என்ன திரும்ப படுத்திருக்க!'' என,

''அப்பா! அக்கா அழறா!''

உடனே மனைவியிடம் திரும்பியவர், ''திட்டுனியா அவளை!'' என்றார். அம்மா திட்டினால் தான் உடனே அழுகை வரும் என்று அறிந்தவர்.

''கொஞ்சிக் கொஞ்சி பேசினா திட்டினேன்'' என,

செல்லம்மாவை முறைத்த பரதன், ''நீ எழுந்திரு குட்டிம்மா, இப்போ எல்லோரும் வந்திடுவாங்க, நாம அவங்க போன பிறகு உங்கம்மாவை ஒரு வழி பண்ணிடலாம்!'' என்று ஜனனியை ஒருவழியாக கிளப்பினார்.

அம்மாவிடம் பேசாமல் அவள் எழுந்து செல்ல, ''ஜடை தான் போடணும் ஜனனி! லூஸ் ஹேர் விடாத'' என்றார் செல்லம்மாள் மீண்டும்.

அவரை ஒரு பார்வை பார்த்தவள், சென்று விட,

''நீ சொல்லாம இருந்திருந்தா கூட அவ ஜடை போட்டிருப்பா! இப்போ நீ சொல்லிட்ட தானே, கண்டிப்பா முடியை விரிச்சு போட்டுட்டு நிற்பா, பசங்களை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு உனக்கு இன்னும் தெரியலை! சும்மா ரூல்ஸ் போட்டுக்கிட்டு! முதல்ல நான் சொல்ற பேச்சை நீ கேட்கறியா!'' என்று மனைவியைக் கடிந்து கொண்டே அவர் தயாராக..

அதற்குள் வீட்டிற்கு விருந்தினர் வர ஆரம்பிக்க, தயாராகி அதை கவனிக்கச் சென்றனர்.

அனுராதா இன்னும் பிறந்த வீட்டினர் வரவில்லை என்று வாயிலை பார்த்துப் பார்த்து நின்றார்.

பல வருடமாகத் தொடர்போ போக்குவரத்தோக் கிடையாது பிறந்த வீட்டினரிடம், அதாகப்பட்டது அப்பா, அம்மா, அண்ணியுடன். ஆனால் மற்ற வகை பிறந்த வீட்டின் சொந்தங்களுடன் நல்ல தொடர்பு இருந்தது, அதாகப்பட்டது சித்தப்பா மாமா வீட்டினர் இப்படி.

அவர்கள் எல்லோரும் கூட வர ஆரம்பித்து விட்டனர். அவர்களை வரவேற்று அமர்த்த.. வீட்டின் பிற ஆட்கள் அவர்களைப் பார்க்க,

பூரணியின் திருமணம் கை கூடி வர அதன் பொருட்டு தான் இப்பொழுது பல வருடங்களுக்குப் பிறகு அம்மா வின் வீடு சென்று அவர்களை அழைத்து இருந்தனர். இன்று அவர்கள் நலங்கு வைப்பதாக தொலைபேசியில் அனுராதாவின் அம்மா சொல்லியிருந்தார்.

இன்னும் இவர்களைக் காணோம், தவித்தவர்.. தொலைபேசியை எடுத்துப் பேசலாமா என்று பார்க்க, முடியவே முடியாது! கண்கொத்தி பாம்பாக லக்ஷ்மணன் பார்த்துக் கொண்டு இருந்தார்.

அவரை மீறி ஏதாவது செய்து விட்டால் அவ்வளவு தான், வார்த்தைகளால் குத்திக் கிழித்து விடுவார். அவ ருக்கு சபையில் தாங்கள் பெரிய ஆட்கள் என்று காட்ட வேண்டும்.

பல வருடமாகத் தொடர்பு இல்லாத போதும், திரு மணத்திற்காவது சென்று கூப்பிடுவோம் என்று அனுராதா வெகுவாக ஆசைப்பட்டார்.

இதற்கு வேறு வேறு ஊர் கூடக் கிடையாது. எல் லோரும் சென்னை வாசிகளே, இவர்கள் வடபழனி, அவர்கள் தற்போது கே கே நகரில் இருந்தார்கள்.

“நாமளா போகாம விட்டோம். அவங்க வர்றதில்லை. நம்மளும் நிறுத்திக்கிட்டோம். அப்போவாவது கொஞ் சம் ஏதோ வசதி இருந்தது. இப்போ ஒண்ணுமில் லைன்னு கேள்வி, அவங்க என்ன செய்வாங்க, செய் யலைன்னா எனக்கு அசிங்கம்! அவங்களைக் கல்யாணத் துக்குக் கூப்பிடவே வேண்டாம்!” என்று சொல்லி யிருந்தார்.

கணவரின் வார்த்தைகளை மீற முடியாமல் கண்கள் கலங்கியவரைப் பார்த்து,

மாமனார் மாமியாரிடம் ரகசியமாக செல்லம்மாள் சொல்ல, அவர்கள் தான் பிறந்த வீட்டினரைக் கூப் பிடாமல் இருந்தால், அது உறவுகளுக்கு இடையே ஒரு சொல் ஆகிவிடும். அவர்கள் வருவதும் வராததும் அவர்கள் விருப்பம் நம் வரை நாம் சரியாக இருக்க வேண்டும். கூப்பிட வேண்டும். என்று பேசி சம்மதிக்க வைத்தார்.

அனுராதாவை மேலும் தவிக்க விடாமல் ஆட்டோ ஒன்று வந்து நிற்க, அதில் இருந்து, அவரின் அப்பா சந்தானம், அம்மா வசந்தி, அண்ணி ஸ்வாதி இறங்க.. ஆட்டோ டிரைவருடன் அமர்ந்து இருந்த வாசுதேவனும் இறங்கினான்.

“வாங்கப்பா! வாங்கம்மா!” என்று அனுராதா வேக மாக சென்று வரவேற்க,

ஸ்வாதி மாமியாரின் கைகளை பிடித்துக் கொள்ள, வாசுதேவன் தாத்தாவின் கைகளை பிடித்துக் கொள்ள,

ஆட்டோ டிரைவர் அவர்கள் பைகளில் கொண்டு வந்திருந்த பொருட்களை இறக்க முற்பட்டார்.

''ரகுலன், அவினாஷ்'' என்று அனுராதா குரல் கொடுக்கவும், அவினாஷும் ரகுலனும் வந்து பையை எடுத்துப் போக,

''எவ்வளவு பெருசா வளர்ந்துட்டான் சின்ன கண்ணன் அண்ணி! நாங்க அன்னைக்கு வீட்டுக்கு வந்தப்போ பார்க்க முடியலை!'' என்று அனுராதா ஸ்வாதியிடம் வாஞ்சையாக சொல்ல,

''அத்தையை தெரியுதா வாசு!'' என்று பாட்டி கேட்க,

''தெரியுது பாட்டி!'' என்று முன்பு பார்த்ததை ஞாபகத்தில் வைத்து சொன்ன வாசுதேவனை தான் அங்கிருந்த மற்ற வீட்டினரும் பார்த்தனர்.

''ப்பா! எப்படி இருக்கிறான் இந்தப் பையன்!'' என்று தான் தோன்றியது. நல்ல நிறம், நல்ல உயரம், பொருத்தமான உடற் கட்டு, களையான முகம், அத்தனை வசீகரத்துடன் இருந்தான். அவனை அங்கு யாரும் பார்த்தது இல்லை.

அவனின் வகை உறவுகளே ''வாசு! எப்படி இருக்க? பார்த்து ரொம்ப நாள் ஆச்சு!'' என்று கேட்க,

''நல்லா இருக்கேன் மாமா!'' என்றான் யாரிடமோ.

உள்ளே ஹாலில் நுழைய, அப்போதுதான் லஷ்மணன் வந்து ''வாங்க!'' என்று தனது மாமனாரையும் மாமியாரையும் உபசரித்தார். ஸ்வாதி அவர் வரவேற்கும் முன்பே அவரைப் பார்த்து வணக்கம் என்பது போலக்

கையை குவிக்க, ''வாங்க'' என்றவர், வாசுதேவனை பார்க்க, ''வாசு!'' என்ற அம்மாவின் குரலுக்கு அவனும் வணக்கம் என்றான்.

''என் மகன்'' என்று ஸ்வாதி சொல்ல..

''ஓஹ்!'' என்று பார்த்த லக்ஷ்மணனின் பார்வை, வாசு தேவனை சற்று ஆச்சர்யத்துடன் தான் பார்த்து. இந்தத் தோற்றம் ஸ்வாதியின் வீட்டினரைக் கொண்டு என்று புரிந்தது.

இப்போது வசதி வாய்ப்புகள் இல்லாவிட்டாலும், அந்த மேல் தட்டு மக்களின் தோற்றம் அம்மாவிடமும் மகனிடமும் அப்படியே இருந்தது. அவர்களின் எளிமையான உடைகள் கூட அதைக் குறைக்க முடியவில்லை.

''பூரணிக்கா! உங்க பாட்டி தாத்தா வந்துட்டாங்க போல!'' என்று ஜனனி சொல்லி ரூமின் உள் இருந்து வெளியே வந்தாள். அவசரமாக பூரணியும் மணமகனுடன் பேசிக் கொண்டிருந்த அழைப்பைத் துண்டித்து வர,

''ஹேய்! பூரணிக்கா யார் இந்த பியுட்டி!'' என்று ஜனனி ரகசியம் பேச,

''யாரைச் சொல்கிறாள்'' என்று பூரணி பார்க்க, அங்கே அவள் கை காட்டிய இடத்தில் பூரணியின் தாய் வழிப் பாட்டியுடன் ஸ்வாதி அமர்ந்து இருந்தார்.

பூரணி ''அது எங்க அத்தை!'' என்று ரகசியம் பேசினாள்.

''உங்க மாமாவோட மனைவியா? எவ்வளவு அழகா இருக்காங்க!'' என்று ஜனனி சொன்ன ஸ்வாதி, உண் மையில் அந்த வயதிலும் அவரின் வயதிற்கு பேரழகி தான், அதனுடைய தாக்கம் தான் அவரின் மகன் வாசுதேவனுக்கும் வந்திருந்தது.

ஜனனி மேலே பூரணியிடம் பேசும் முன், அனுராதா மகளை கண்களால் அழைத்து, பாட்டியிடம் போ என்று காட்ட, பூரணி வேகமாக வந்து ''பாட்டி'' என்று அவரின் மற்றொரு கையை பற்றி, ''வாங்க அத்தை'' என்று ஸ்வாதியையும் வரவேற்றாள்.

தாத்தா இரும, ''கொஞ்சம் தண்ணி கொண்டு வாங்க அத்தை!'' என்று வாசுதேவன் சொல்ல, குரல் வந்த திசையைப் பார்த்த ஜனனி, வாசுதேவனை விழியகற் றாமல் பார்த்தாள்.

''யாரு இது?'' என்று தன் தம்பி அவினாஷிடம் ரகசியம் பேச,

''அவங்க பையன்!'' என்று ஸ்வாதியைக் காண்பித்து சொன்னான்.

அவங்க அப்பா ஒரு பைத்தியம் சொன்னாங்க, இவன் இவ்வளவு சூப்பரா இருக்கான்! என்று திரும்ப ரகசியம் பேச,

அவினாஷ் சுற்றும் முற்றும் பார்த்தவன், ''வாயை மூடு அக்கா!'' என்று கோபமாக அதட்டினான், யார் காதிலாவது விழுந்து விடப் போகிறது என்று.

ஜனனி வாயை கப்பென்று மூடிக் கொண்டாலும், வாசுதேவனை பார்ப்பதை மட்டும் நிறுத்தவில்லை.



# 2

ஜனனி வாசுதேவனைப் பார்த்திருக்க.. சுற்று புறத்தில் கண்ணை ஓட்டிய வாசுதேவனுக்கு தன் னையே பார்த்துக் கொண்டிருந்த ஜனனி கண்ணில் பட்டாள்.

வாசுதேவன் விரைந்து பார்வையை திருப்பிக் கொண் டாலும், சில நொடிகள் விட்டுப் பார்க்க அப்போதும் பார்த்திருந்தாள்.

பக்கத்தில் நின்றிருந்த அவினாஷ் ஜனனியிடம், ''எதுக்கு இப்படி பார்க்குற அக்கா, யாராவது பார்த்து வைக்கப் போறாங்க! உள்ள போ!'' என்று அக்காவை உள்ளே தள்ளிச் சென்றான்.

தன்னைப் பார்ப்பதால் அவினாஷ் அவளை இழுத்துச் செல்வது வாசுதேவனுக்கு புரிந்தது.

அதற்குள் பூரணியை மணையில் அமர வைக்க ஏற்பாடுகள் நடக்க, வாசுதேவன் அதில் கவனத்தை திருப்பினான்.

ஜனனியை உள்ளே இழுத்து சென்ற அவினாஷ் ''என்ன பண்ணிட்டு இருக்குற நீ! அவரை விடாமா பார்த்தா யாராவது தப்பா எடுக்க மாட்டாங்க!''

''எதுக்குத் தப்பா எடுப்பாங்க?'' என்று ஜனனி திரும்ப வேறு கேள்விக் கேட்க,

''ஏய் மக்கு! நீ சைட் அடிக்கறன்னு நினைப்பாங்கடி'' என்று அவினாஷ் விளக்கம் சொல்ல.

''ஆங்! சைட்டா! நானா! மூஞ்சி முகரையெல்லாம் பேத்துடுவேன் உன்னை! ஒரு பொண்ணு ஒரு பையனைப் பார்த்தா அதுக்கு பேர் சைட்டா?'' என்று வழக்காடினாள்.

''வேற என்ன பண்ணின நீ?'' என்றான் அவினாஷும் கடுப்பாக.

''அதுவா, ரசிச்சேன்!'' என்றவளை, குத்தவா வெட்டவா என்று அவினாஷ் பார்க்க,

''என்ன தப்பு அதுல? நல்லா இருக்காங்க தானே! இப்போ பூரணிக்கா மாப்பிள்ளை வந்தப்போ கூட இப்படித் தான் பார்த்தேன், பூரணிக்காக்கு பொருத்தமா இருப்பாங்களான்னு, அந்த மாதிரி அவங்கம்மாவும் அழகு பையனும் சூப்பரா இருக்காங்க, அவங்கப்பாவை மட்டும் ஏன் பைத்தியம் சொல்றாங்க, யோசிச்சிட்டு இருந்தேன்!'' என்றாள் குரலை தழைத்து.

''ஜனனி!'' என்று அதட்டிய அவினாஷ், ''நமக்கு தேவையில்லாத விஷயம் எப்பவும் நாம அலசவும் கூடாது, பேசவும் கூடாது, புரிஞ்சதா!'' என்று அதட்டினான்.

மிகுந்த கோபம் வந்தால் தான் ஜனனி என்று அதட்டுவான் என்று புரிந்தமையால் திரும்பவும் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள் ஜனனி.

அப்பாவிடம் அம்மாவிடம் மற்ற எல்லோரிடமும் எதிர்த்து பேசும் ஜனனி அவினாஷிடம் எப்போதும் பேச மாட்டாள்... ஏனென்றால் அவள் வெளியே இழுத்து வைக்கும் பிரச்சனைகள் வீடு வரை வராமல் எப்போதும் காப்பது அவினாஷ் தான். இருவருக்கும் மூன்று வருட வித்தியாசம். ஆனால் எப்போதும் அவினாஷ் தான் பெரியவன் போல தோன்றும். ஜனனி சிறு பெண் போல தான் தெரிவாள். தோற்றத்திலும் சரி! நடை உடை பாவனைகளிலும் சரி!

ஒடிசலாக உயரமாக குழந்தைத்தனம் மாறாத முகம் தான் ஜனனிக்கு. அழகி தான், என்ன ஒரு குறை மாநிறம், கூடவே சதைப் பற்று தேவையான அளவு கூட இருக் காது. கூடவே நை நை என்று எப்பொழுதும் ஏதாவது பேசிக் கொண்டே இருக்கும் சுபாவம்.

வீட்டில் பிள்ளைகள் நால்வரும் ஒரே பள்ளி.. பின்பு கல்லூரியும் ஒன்றே.. அதனால் அங்கேயும் யாராவது அவளைப் பார்க்க இருப்பர்.

அவினாஷ் வெளியே போக... ''நானும் அக்காவுக்கு நலங்கு வைக்கிறதைப் பார்க்கட்டுமா?'' என்று கொஞ்சிக் கேட்க,

''வா!'' என்று அதட்டலாக சொன்னவன்... ''ஆனா! திரும்ப அவரைப் பார்க்கக் கூடாது! இப்படி அவங்கப் பாவுக்கு ஏன் அப்படின்னு யாரையும் கேட்டு வைக்கக் கூடாது.. கேட்டே தொலைச்சிடுவேன்!'' என்று மிரட்டி அழைத்துப் போனான்.

அங்கே யார் தம்பி? யார் அக்கா? என்றே தெரியாது. எப்போதும் அவினாஷ் தான் ஜனனிக்கு இதைச் செய்யாதே அதைச் செய்யாதே என்று சொல்லுவான்.

அதுவும் கூட ஜனனி செல்லம் கொஞ்சுவதற்கு காரணம்! அவளை பெரிய பெண்ணாக யாரும் பார்ப்பது கிடையாது.

நன்றாக சுயமாக சிந்திக்கும் பெண்ணை, இப்படிச் செய், அப்படிச் செய் என்று எப்போதும் கூட இருந்து, இருந்து, எதற்கு சிந்திப்பது என்பது போல அவளும் செல்லம் கொஞ்சியே காலத்தைத் தள்ளுகிறாள் என்பது தான் உண்மை.

பூரணிக்கு நலங்கு வைத்து, தலைக்கு ஊற்றி, ஸ்வாதி பார்த்துப் பார்த்து தேர்ந்து எடுத்து இருந்த பட்டுப் புடவையில் மீண்டும் அவள் மணையில் அமர்ந்த பொழுது  எல்லோருக்கும் திருப்தி..

எந்த அனாவசியப் பேச்சு வார்த்தைகள் இன்றி நன்றாக நடந்தது. திரும்பவும் நலங்கு வைக்க.. ஸ்வாதி தன் னுடைய மாமியாரிடம் ஒரு தங்க ஆரத்தைக் கொடுக்க.. அதைப் பூரணிக்கு அணிவித்தார்.

எல்லோருக்குமே ஆச்சர்யம்! இப்போது அவர்கள் இருக்கும் நிலைக்கு ஒரு பவுன் சீர் செய்வது என்பதே அதிகம்.. அது எப்படியும் ஒரு ஐந்தாறு பவுனாவது இருக்கும்.

இப்போது தான் லக்ஷ்மணன் முகத்தில் சற்று திருப்தி.

அனுராதாவிற்கு இதற்காக எவ்வளவு சிரமப் பட்டார்களோ என்று மனது கலங்கியது. அப்பா

அம்மாவிடம் எதுவும் இல்லை என்று தெரியும், நிச்சயம் இது ஸ்வாதியின் ஏற்பாடு தான் என்று தெரியும். இன்னும் வாசு வேலைக்கு போகவில்லை என்றும் தெரியும்.

அண்ணியிடம் ''எப்படி ஏற்பாடு செய்தீர்கள் அண்ணி'' என்றோ, ''நான் கொடுக்கட்டுமா'' என்றோ கேட்டு விட முடியாது. சொல்லப் போனால் அனுராதா விடம் என்ன இருக்கிறது என்று கூட லக்ஷ்மணனுக்குத் தெரியாது.

அனுராதா எப்போதும் ஏதாவது நகை வாங்கியே யிருப்பார். அவரிடம் புதிதாக உள்ளதை கொடுத்தாலும் யாருக்கும் தெரியாது. ஆனால் ஸ்வாதி வாங்குவது என்பது இரண்டாம் பட்சம், இந்தப் பேச்சை கூட அவ ரிடம் எடுத்து விட முடியாது. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தார் அனுராதா.

பின்பு வேகமாக காலை உணவு பரிமாறப்பட.. உண்டவுடன் அவர்கள் கிளம்பி விட்டனர். ''இன்னும் கொஞ்ச நேரம் இருங்க அண்ணி'' என்று ஸ்வாதியிடம் சொன்னதற்கு,

''இல்லை அனு, அவரைத் தனியா விட்டுட்டு வந்திருக்கோம், வாசு பிரண்ட் தான் கூட இருக்கிறான். நாங்க போகணும்!'' என்று சொன்ன பிறகு வேறு பேச முடியாதல்லவா.

அப்பா அம்மாவிடம் சென்ற அனுராதா, ''நீங்க இருங்கப்பா கல்யாணம் முடியறவரை, இல்லை இன் னைக்கு சாயந்தரம் வரையாவது இருங்க! நான் கொண்டு போய் விட்டுடறேன்'' என,

''ஸ்வாதியும் இருங்க!'' என்று சொல்ல,

''இல்லை அனு! கல்யாண வேலை இருக்கும் உனக்கு.. அதைப் பாரு! நாங்க எங்க போயிடப் போறோம்! அப்புறம் பார்க்கலாம்!'' என்று கிளம்பி விட்டனர்.

வாசு வந்த போது ஓரிரு வார்த்தைகள் பேசியதுடன் சரி, அதன் பிறகு நடப்பவைகளை ஒரு மௌனப் பார்வையாளராகப் பார்த்திருந்தான் அவ்வளவே.

அதில் அவன் அதிகம் பார்த்தது ஜனனியை, முதலில் தன்னை பார்த்ததும், அவினாஷ் அவளை இழுத்துச் சென்றதும், பின்பு தன்னையும் பார்ப்பதும் தன்னை விட அம்மாவை அதிகம் பார்ப்பதும் புரிய.. எதற்கு இப்படி இந்தப் பெண் பார்க்கிறாள் என்று யார் கவனத்தையும் கவராமல் அவளைப் பார்த்து இருந்தான்.

கிளம்பும் போது எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பினான் அவ்வளவே.

அவினாஷ் ஜனனியை அந்த இடத்தில் அதிகம் இருக்க விடவில்லை. ''எதற்கு வம்பு! அக்கா எதாவது பேசி, யார் காதிலாவது விழுந்தால் மனது சங்கடம்'' என்று ஜாக்கிரதையாக இருந்தான்.

ஜனனி வாசுதேவனைப் பார்த்ததை விட ஸ்வாதியைப் பார்த்தது தான் அதிகம். அதன் காரணம் ஒன்றுமில்லை அவரின் இளமையான முகம் மற்றும் உடல் வாகு.

இங்கே அவர்களின் வீட்டில் அனுராதா குண்டாக இருப்பார், பூரணிக்கும் பூசினாற் போல தான் உடல்

வாகு, செல்லம்மாளும் சற்று சதைப் பிடிப்போடு தான் இருப்பார்.

''இவங்களுக்கு மட்டும் எப்படி இடுப்பு இவ்வளவு ஒல்லியா இருக்கு! எப்படி அழகா இருக்காங்க.. நாம் இப்போ ஒல்லியா இருக்கோம், பின்னால இப்படி நம்மலும் மெயிண்டெயின் பண்ணனும், அம்மா மாதிரி குண்டு ஆகிடக் கூடாது!'' இது மட்டுமே அவளின் எண்ணம்.

அதன் பின்னர் திருமண விஷயங்களும் நிகழ்வு களும் இழுத்துக் கொள்ள எல்லாம் மறந்து விட்டாள்.

திருமணமும் மிகவும் அமோகமாக, விமரிசையாக மூன்று தினங்கள் நடந்தது.

அது மிகவும் பெரிய கூட்டம் என்பதால் ஜனனிக்கு பார்க்க நிறைய பேர் இருந்தனர். திருமணத்திற்கு ஸ்வா தியோ வாசுதேவனோ வந்தார்களா என்று கவனிக்கக் கூட நேரமில்லை.

வேளாவேளைக்கு அவள் போடும் உடைகளும் நகைகளும் மேக்கப்பும் அவளை இழுத்துக் கொண்டன. கூடவே எப்போதும் இருக்கும் உறவுகள், இளவட்டங்கள். அதுவும் ஜனனியின் பேச்சுக்கும் கிண்டலுக்கும் பெரிய ரசிகப் பட்டாளமே இருக்க... பொழுதுகள் வேகமாக ஓடி விட்டன.

திருமணம் முடிந்ததுமே அவளின் செமஸ்டர் எக்ஸாம் இருந்தது, அதன் பிறகு கேம்பஸ் இன்டர் வ்யூக்கள் இருந்தது... வரும் செமஸ்டரில் ப்ராஜெக்ட்

மட்டுமே.. அதனால் செமஸ்டர் முடித்து இன்டர்வியூ விற்காக தயாரானாள்.

அவளின் தாத்தா சீதாராமன் கூட எதுக்குடாம்மா இவ்வளவு வருத்திப் படிக்கற என,

''நான் வேலைக்குப் போறனோ இல்லையோ தாத்தா செலக்ட் ஆகலைன்னு வரக் கூடாது. இது உங்களுக்கு புரியாது தாத்தா!'' என்று விட்டாள்.

''ஏன் புரியாது?''

''வேலை என்னை செலக்ட் பண்ணக் கூடாது தாத்தா! நான் தான் அதை பண்ணனும்! நான் பெஸ்டா இருந்தாதான் அந்த வேலை வேண்டாம்னு சொல்லும் போது எனக்கு ஒரு மரியாதை'' என,

''முதல்ல புரிஞ்சது! இப்பப் புரியலையே!'' என்று நொந்து கொண்டார் சீதாராமன்.

இதை கேட்டிருந்த செல்லம்மாள் கூட ''இப்போ நீ என்ன சொல்ல வர்ற? வேலைக்கு போறேன்னு சொல் றியா? இல்லை போகமாட்டேன் சொல்றியா?''

''எதுக்கு உன்கிட்ட சொல்லணும்! போறேன்னு சொன்னா.. நீ ரொம்ப விளையாட்டுத்தனமா இருக்க! பொறுப்பா இருக்கணும்! உன்னை எப்படி வேலைக்கு அனுப்பன்னு சொல்லுவ!

''போகலைன்னு சொன்னா... வர்ற வேலையை வேண்டாம் சொல்வியா.. அதுக்கு எதுக்கு படிக்கணும்... கொஞ்சம் கூட பொறுப்பு இல்லை விளையாட்டுத் தனமா இருக்கேன்னு சொல்லுவ!''

''மொத்தத்துல ரெண்டுக்கும் அதைத் தான் சொல்லுவ! நான் ஏன் சொல்லணும்!'' என,

செல்லம்மாள் வாய் பிளந்து பார்த்தார்.

''அக்கா! நீ எங்கயோ போயிட்ட!'' என்று ரகுலன் சொல்ல, அவினாஷ் நீயா பேசியது! என் அக்கா நீயா பேசியது!'' என்று பாட,

அவளின் பாட்டி கௌரி ''என்ன ஜனனி சொல்ற?'' என,

''அச்சோ அத்தை! அவகிட்ட கேட்டு, திரும்ப அவ விளக்கினானா அவ்வளவுதான்! செல்லம்மா மயக்கம் போட்டுடுவா!'' என்று அனுராதா சொல்ல..

அங்கே ஒரு சிரிப்பலை..

ஜனனி எல்லோரையும் முறைத்து.. திரும்ப படிக்க சென்று விட்டாள்.

''அக்கா! கொஞ்சம் புத்திசாலி ஆகிட்டாளோ!'' என்று ரகுலன் சொல்ல..

''கொஞ்சம் இல்லை ரொம்ப.. ஆனா எப்போ எதுல சொதப்பி வைப்பான்னு சொல்ல முடியாது!'' என்று அவினாஷ் சொல்ல..

எங்கிருந்தோ ஒரு தலையணை அவன் மேல் பறந்து வந்து விழ.. ''டேய்! எஸ்கேப்!'' என்று சொல்லி அவி னாஷ் ஓட ஆரம்பிக்க.. ஜனனி துரத்த ஆரம்பித்தாள்.

அன்றும் அப்படித்தான் படிக்கிறேன் பேர்வழி என்று கன்னிமாரா லைப்ரரிக்கு போக வேண்டும் என்று பிடி வாதம் செய்ய..

அவினாஷ் அவளை அழைத்துச் சென்று விட்டு, ''முடிச்சிட்டு போன் பண்ணு! அப்பா வந்து அழைச் சிட்டு போவாங்க!'' என்று பல முறை சொல்லிப் போக...

'ஏன்? எனக்கு போகத் தெரியாதா? நான் சின்னப் பொண்ணா?' என்று மனதிற்குள் நினைத்தவள், நான் தனியாகத் தான் போவேன்! என்று நினைத்துக் கொண்டாள்.

லைப்ரரி உள் நுழைந்து உடல் மொழி (பாடி லேங்கு வேஜ்) சம்மந்தமாக புத்தகம் தேடி எடுத்து ஓரிடம் அமர்ந்தவள்.. எதிரில் தலை நிமிர்ந்து பார்க்க, அங்கே வாசுதேவன் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

ஜனனியைக் கவனிக்கவில்லை.

ஜனனிக்கு எங்கே இவனைப் பார்த்தோம் என்று ஞாபகத்தில் இல்லை... ஆனால் எங்கோ பார்த்திருக் கிறோம் என்று தோன்ற, முகமும் வசீகரிக்க எங்கே பார்த்தோம் என்று பார்த்தபடியே இருந்தாள்.

யதேச்சையாக வாசுதேவன் தலையை தூக்கிப் பார்க்க, தன் பெரிய கண்களுடன் பார்த்திருந்த ஜனனி பார்வையில் பட, அவனுக்குப் பார்த்ததுமே, அங்கே அத்தை வீட்டில் பார்த்த பெண் என்று தெரிந்து விட்டது.

அன்றும் இப்படித் தான் பார்த்தாள், இன்றும் இப்படித் தான் பார்க்கிறாள் என்று அவனும் பார்க்க,

இப்போது பார்ப்பதா? பார்வையை விலக்குவதா? என்ற மில்லியன் டாலர் கேள்வி ஜனனி முன்.

பின் உடனே பார்வையைத் திருப்பினால், நான் சைட் அடித்தேன் என்று இவன் நினைத்து விட்டால் என்ன செய்ய என்று பார்த்திருக்க,

வாசு புருவம் உயர்த்தி ''என்ன'' என்றான் பாவ னையாக..

யோசிக்கவேயில்லை, ''என்ன, என்ன?'' என்றாள் திரும்ப ஜனனி.

''எதுக்கு என்னை இப்படி பார்க்கறீங்க'', என்று வாசு கேட்க,

''அதுவா?'' என்றவள், கேட்கவா? வேண்டாமா? என்று நகம் கடிக்க.

''என்ன இது, நகம் கடிச்சிக்கிட்டு. கெட்டப் பழக்கம். விரலை எடுங்க!'' என்றான் வாசு. அதட்டலாக எல்லாம் சொல்லவில்லை.. ஒரு மாதிரி சிறு குழந்தைக்குச் சொல்வது போலப் பொறுமையாக சொல்ல..

அந்த பாவனை ஜனனியை ஆகர்ஷித்தது. ஆனா லும் சொன்னவுடன் கேட்டால் அது ஜனனி அல்லவே... திரும்பவும் அதையே செய்ய...

''படிக்கறது பாடி லேங்குவேஜ், ஆனா நகம் கடிக்க றீங்க!'' என்றான் திரும்ப,

இப்போது கையை எடுத்துக் கொண்டாள்.

''இப்போ சொல்லுங்க! எதுக்கு என்னைப் பார்க்க றீங்க? அன்னைக்கும் பார்த்தீங்க!'' இன்னைக்கும் பார்க்கறீங்க!

''என்னைக்குப் பார்த்தேன்!'' என்றாள் ஜனனி.

''அதுதான் அன்னைக்கு விசேஷத்துல நலங்கு வைக்கும் போது, அத்தை வீட்ல'' என்று வாசு சொல்ல,

''எஸ்!'' என்று கை முஷ்டி செய்து காண்பித்தவள், ''ஹப்பா! இன்னைக்கு நைட் நல்லா தூங்குவேன்!'' என்றாள்.

அவளின் பாவனையில், கூட ஒலித்த வார்த்தை களில், ''என்ன பேசுகிறாள் இவள்'' என்று வாசு பார்க்க..

புன்னகையுடன் ''அதுவாங்க, உங்களை எங்கயோ பார்த்த மாதிரி இருந்தது. ஆனா எங்கன்னு தெரியலை, என் ஞாபகத்துல வரலைன்னா நான் அதையே யோசிப்பேனா! அப்புறம் எப்படி தூக்கம் வரும்!'' என்று ஜனனி கேட்க,

மெல்லிய புன்னகை வாசுவின் முகத்தில்.

''சரி! இன்னைக்கு ஞாபகம் வரலைன்னு பார்த்தீங்க! அன்னைக்கு எதுக்குப் பார்த்தீங்க,'' என்றான் அவனும் விடாமல்.

''அதுவா நீங்க ஹேண்ட்சமா இருக்கீங்க தானே அதனால.. ஆனா உங்களை விட உங்கம்மா இன்னும் அழகா இருக்காங்க!'' என்று ஜனனி நேரடியாகச் சொல்ல..

அந்த வார்த்தைகளைக் கேட்ட வாசுதேவனுக்கு ஜனனியைப் பிடித்துப் போனது.

''ஹேண்ட்சமா இருக்கேன்னு சொல்றீங்க! அதனால பார்த்தேன்னு சொல்றீங்க! ஆனா உங்களுக்கு என்னை ஞாபகமே இல்லையே!'' என்று கேட்க,

''எஸ்! யு ஆர் ரைட், இந்த பாடி லேங்குவேஜ் முடிச்சிட்டு, நினைவாற்றலை அதிகப்படுத்தன்னு ஏதாவது புக் இருக்கான்னு பார்க்கணும்!'' என்று ஜனனி சீரியசாகச் சொல்ல..

வாசுதேவனுக்குத் தானாக ஒரு சிரிப்பு மலர, சிரித்தும் விட, ''ஹச்சோ மூச்! இது லைப்ரரி!'' என்று வாய் மேல் விரலை வைத்து மிரட்டிய ஜனனியை இன்னும் பிடித்துப் போனது.



# 3

''என்னங்க இது? இப்போ தான் பார்த்தோம் மிரட்டுறீங்க!'' என்று வாசு பேச்சை வளர்த்தான்.

''பொதுவாக வாசு யாரிடமும் பேசப் பிரியப்பட மாட்டான். தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருப்பான். அவனாக ஒருவரிடம் பேச விருப்பப்படுவது என்பது அபூர்வம்.

நண்பர்கள் அதிகம் உண்டு! ஆனால் எல்லோரும் அவனைத் தெரிந்தவர்கள்! அவர்களாக வாசுவிடம் நட்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள். அவனின் இந்த குணத்திற்காகவே கூட இருப்பவர்கள்.

''என்ன நான் மிரட்டுறேனா? நல்ல கதையா இருக்கே! இது லைப்ரரி ரூல்ஸ்ங்க..!''

''ஆனாலும் மிரட்டுறீங்க!'' என்று அவன் சொன்ன விதத்தில் விளையாட்டுப் பேச்சு என்று புரிய..

''பரவாயில்லை நீங்க பயப்படாதீங்க!'' என்று இலகுவாக சொல்லியபடி புத்தகம் விரித்தாள்.

''இதுல பெருசா டிப்ஸ் இருக்காது! நான் வேற எடுத்துக் கொடுக்கறேன்'' என்று தேடி எடுத்து வந்து கொடுத்தான்.

''தேங்க் யூ!'' என்றவள் வாங்கிப் படிக்க ஆரம்பிக்க...

அதிகம் பேசிப் பழக்கமில்லாத வாசுதேவனுக்கு எப்படித் திரும்ப பேச்சை வளர்க்க என்று தெரிய வில்லை. ஆனால் ஜனனியிடம் பேச வேண்டும் என்ற ஆவல் அதிகம் இருந்தது.

ஜனனி பின் புத்தகத்தில் ஆழ்ந்து விட்டாள். வாசு தேவன் அவன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் ஒரு கண் அவளிடம் ஒரு கண் என்று இருந்தான்.

ஒரு மணிநேரம் கழித்து அவள் எழ..

''படிச்சிட்டீங்களா?''

''கொஞ்சம்! கொஞ்சம்! ஆனா இதைத் தானே நம்ம வீட்ல எப்பவும் சொல்றாங்க. ஆனா நம்ம தான் கேட்கற தில்லை.. எங்க பாட்டியும் தாத்தாவும் இதைத் தான் சொல்லுவாங்க, எல்லோரையும் பார்த்ததும் வணக்கம் சொல்லு. அவங்க கண்ணைப் பார்த்து பேசு, அசட்டு சிரிப்பு சிரிக்காத, நீ பேசறதை விட அவங்களைப் பேச விட்டு கேளு, இப்படி நிறைய'' என்றவள்..

''அதை நான் கேட்டதேயில்லை! இனிமே கேட்க முயற்சி பண்றேன்!'' என்று புன்னகைத்தாள்.

''சரி! கிளம்பறேன்!'' என்று ஜனனி எழ,

''நானும் முடிச்சிட்டேன்! என்று வாசுதேவனும் எழுந்தான், அவளுடன் பேச்சை வளர்க்கத் எழுந்தான் என்பது தான் உண்மை, அவன் இன்னும் படித்து முடிக்கவேயில்லை.

வெளியே வந்தார்கள், அவள் நடக்க நடக்க.. ''உங்க பேர் என்ன?'' என்று வாசு கேட்க,

''ஜனனி'' என்றவள், கூடவே ''நான் ஃபைனல் இயர் ஐ டி ஸ்டூடண்ட்'' என்றவள், கூடவே காலேஜ் பெயரையும் சொல்லி, ''எப்படியும் வரிசையா கேட்பீங்க! அதுதான் சொல்லிட்டேன்'' என்று சிரிக்க,

அந்த சிரிப்பு வாசுதேவனை வசீகரித்தது.

வாசு அதை பார்த்திருந்த போதே, எனக்கு ஒரு ஹெல்ப் வேணுமே! என்றாள்.

அவள் வரிசையாக பதில் சொன்ன விதத்தில் மலர்ந்த புன்னகையை அடக்கி ''சொல்லுங்க!'' என,

''என்னை வந்து கூட்டிட்டுப் போறேன்னு சொன்னாங்க.. ஆனா நான் தனியா போகணும். நான் ஏறப் போற பஸ் கரெக்டா பார்க்கறீங்களா?''

''ஆட்டோ வேண்டாமா?''

''வேண்டாம்! தனியாப் போறேன் இல்லையா? ஆட்டோல போகும்போது இவன் நம்மை பத்திரமா கொண்டு

போய் சேர்ப்பானான்னு என் கற்பனை ஓடும்! எதுக்கு வம்பு!'' என ஜனனி சொல்லிய பாவனையில்,

சிரித்தே விட்டான்.. ''அதனோடே நீங்க பஸ்லயே போனது இல்லையா?''

''போயிருக்கேன்! ஆனா தனியா போனது இல்லை. யாராவது இருப்பாங்க, எனக்கு போக தெரியும்! ஆனாலும் எங்க வீட்ல எல்லோரும் எப்பவும் பத்திரம் சொல்றாங்களா ஒரு சின்ன டென்ஷன்'' என,

''வாங்க!'' என்று அவளோடு நடந்தான்...

தன்னைப் பற்றி எதுவும் கேட்பாளா? கேட்பாளா? என்று வாசுதேவன் பார்க்க, ஜனனி அமைதியாக அவ னோடு நடந்தாள், கேட்கவேயில்லை.

பஸ் ஸ்டாப் வந்ததும் ''இருங்க! நான் சொல்றேன்! அது கரெக்டா சொல்லுங்க!''

வரும் பஸ்ஸை தான் ஆராய்ந்து பார்த்திருந்தாள், வாசுதேவனை பார்க்கவில்லை. அவளின் நேரம் பஸ் ஐந்து நிமிடத்தில் வந்தும் விட.. இது போகும் தானே!

''போகும்!'' என்றவனைப் பார்த்து,

''ஓகே பை!'' என்றபடி ஏறிக் கொள்ள, வாசுதேவனுக்கு இவள் சரியாக போவாளா மாட்டாளா என்று தோன்ற அவனும் ஏறிக் கொண்டான்.

''நீங்களும் அந்தப் பக்கம் தானா?'' என்றவளைப் பார்த்து,

''ஆம்!'' என்பது போல தலையாட்டியவன், பின்பு ஏதாவது பேசுவாளா என்று பார்க்க.. பஸ் செல்லும் வழியை தீவிரமாக பார்த்திருந்தாள்.

"என்ன செய்கிறாய் வாசுதேவா?" என்று அவனின் மனது அவனிடம் பேச, தெரியவில்லை! வழி தெரி யாததால் கூட செல்கிறேன்" என்று அவன் பதில் சொல்ல..

இப்படியாக அவள் இறங்கும் இடம் வர, பேருந்து நிலையத்தில் அவினாஷ் நிற்பதைப் பார்த்தவன், இறங்காமல் அடுத்த நிறுத்தத்தில் இறங்கி மீண்டும் பேருந்து ஏறி லைப்ரரி சென்றான்.

ஆனாலும் எண்ண அலைகள் ஜனனியைச் சுற்றியது என் பெயர் கூடக் கேட்கவில்லை! இறங்கும் போது ஒரு தலையசைப்பு இல்லை! ஏன் என் புறம் திரும்பக் கூட இல்லை! மனதிற்கு சற்று வருத்தமாய் இருந்தது.

பின் நினைவுகளை ஒதுக்கி படிக்கத் துவங்கி னான். அடுத்த வாரம் பரீட்சை. நீ என்ன செய்து கொண் டிருக்கிறாய், ஒரு பெண்ணின் பின்னால் போகிறாயா என்று.

இது வாசுவின் இயல்பே அல்ல.. ஜனனி பேசிய விதம் மனதிற்கு இதமாய் இருக்க.. சில காலம் கழித்து இப்படி தானாய் ஒரு சிரிப்பும் வர அதன் பொருட்டே சென்றான். அதுவும் தன்னை பற்றி கேட்பாளா என்று பார்க்க கேட்கவேயில்லை.

அங்கே பேருந்து நிறுத்தத்தில் அவினாஷ் ஜனனியை பிடி பிடி என்று பிடிக்க, "எதுக்குக் கத்துற, நான் என்ன சின்ன பொண்ணா, எனக்கு வரத் தெரியும்."

"அப்போ இப்போ எதுக்கு மெசேஜ் பண்ணின ஜனனி?"

''அதுவா! இங்க இருந்து வீடு தூரம்... நடக்கணும்! யாரு நடப்பா! அதுக்கு தான்! வண்டியை விடுடா!!!'' என்று இவளும் பதில் பேசி சண்டை போட்டுக் கொண்டே வீடு வந்து சேர்ந்தனர்.

நுழையும் போதே ''அம்மா பசிக்குது!'' என்று கத்தி, உணவு உண்டு முடித்த பிறகு தான், 'அச்சோ! அவர் கிட்ட சொல்லாம இறங்கிட்டேனே!' என்று நினைத் தவள்..

''சே! உனக்கு ரொம்ப மறதியாப் போச்சு ஜனனி!'' என்று தன்னையேத் திட்டிக் கொண்டாள்.

நாட்கள் விரைந்து செல்ல, ஒரு முன்னணி கன் சர்னின் இன்டர்வியூவில் செலக்ட்டும் ஆகிவிட்டாள். மனது நிறைய சந்தோஷத்தோடு வீடு வந்து ''அம்மா! நான் செலக்ட் ஆகிட்டேன்!'' என்று ஜனனி சொன்ன நொடி,

''ஆத்தா! நான் பாசாயிட்டேன்!'' என்று அவினாஷ் கௌண்டர் கொடுக்க..

சுற்றி இருந்த அம்மாவும் பெரியம்மாவும் ரகுலனும் சிரிக்க, அப்படி ஒரு கோபம் ஜனனிக்குப் பொங்கியது.

''இந்த இன்டர்வியுக்காக நான் எவ்வளவு சீரியஸா ப்ரிபேர் பண்ணியிருக்கேன்! வொர்க் பண்ணியிருக் கேன்! உனக்குக் கிண்டலா? இவங்க எல்லோரும் சிரிப்பாங்களா?'' என்று ஆத்திரம் பொங்க கேட்டவள்,

''அங்க காலேஜ்ல வந்து பாருங்க, எப்படி இதுக்காக எல்லோரும் டென்ஷனா இருக்காங்கன்னு, நாலு பேர் தான் ஆனோம், அதுல நான் ஒருத்தி!''

''ஹேய், அக்கா ஈசி!'' என்று சிரித்த அவினாஷிற்கு ஜனனியின் கோபம் புரியவில்லை.

காலேஜில் எல்லோரும் பாராட்டி இருக்க, அவளின் லெக்சர்கள், சக தோழர்கள் எல்லோரும்.. வீடு வந்ததும் எப்போதும் போலத் தன்னை சிறு பெண் போல நடத்த அவளுக்கு கோபம் பொங்கி விட்டது.

அவினாஷ் சிரிக்க சிரிக்க, ஜனனியின் கோபம் அதிக மாகியது. எதை எடுத்து அவன் மேல் வீசலாம் என்று சுற்றும் முற்றும் பார்க்க..

''டேய் விடுடா! அவ ஏதோ சந்தோஷத்துல செலக்ட் ஆகிட்டேன்னு சொல்றா! யாரு இப்போ அவளை வேலைக்கு அனுப்பப் போறா!'' என்று செல்லம்மாள் சொல்ல,

''இதுவரைக்கும் எனக்குப் போகற ஐடியா இல்லை. ஆனா இப்போ சொல்றேன், நான் போவேன்!'' என்று ஜனனி சொல்ல,

''அக்கா கோபப்படாதே!'' என்று அவினாஷ் சமா தானத்தில் இறங்க,

செல்லம்மாள் மீண்டும், ''உன்னை யாரும் அனுப்பப் போறதில்லை!'' என,

எப்போதும் எதிர்த்துப் பேசும் ஜனனி பேசவேயில்லை... அமைதியாக அவளின் ரூம் போய் விட,

''என்னமா அக்காக்கிட்ட அடி வாங்குவேன்னு நினைச்சா, பேசாமப் போயிட்டா.''

''விடுடா! கொஞ்சம் நேரம் சமாதானம் ஆகிடுவா..'' என்று அம்மா சொல்ல, அவரவர் அவரவர் வேலையை பார்த்தனர்.

இரவு உணவு உண்ணக் கூட ஜனனி வராததால், செல்லம்மாள் பார்க்க, ரூமில் அமர்ந்து லேப் டாப்பில் கேம் விளையாடிக் கொண்டு இருந்தாள்.

''தூங்கறன்னு நினைச்சா, நீ விளையாடுறியா?'' என்று செல்லம்மாள் கேட்க,

''அதுதான் நான் விளையாட்டுப் பொண்ணுன்னு எல்லோர் முன்னாடியும் எப்பவும் என் மானத்தை வாங்கற தானே, போ நீ!'' என்று எடுத்த எடுப்பிலேயே மிகவும் அலட்சியமாக எடுத்தெறிந்து பேசினாள்.

''ஜனனி!'' என்று அதிர்ந்து செல்லம்மாள் கூப்பிட,

''என் கண்ணு முன்ன நிக்காத போ! போய்டு! ஏதா வது தூக்கி வீசிடுவேன் போ!'' என்று கத்தினாள்..

அவள் கத்தியதை பார்த்து பாட்டி வந்தவர், ''என்ன ஜனனி மா?'' என,

''முதல்ல இவங்களை இங்க இருந்து போகச் சொல் லுங்க பாட்டி! இவங்களுக்கு இவங்க பையன் தான் உசத்தி, போகச் சொல்லுங்க!'' என,

செல்லம்மாள் பேச்சற்று போனார்.. எப்போதும் பேசும் பேச்சுக்கள் தான் ஆனால் மகளிடம் இப்படி ஒரு நடத் தையை எதிர்பார்க்கவில்லை.

''அம்மாவை இப்படிச் சொல்லக் கூடாது!'' என்று கௌரி சொல்ல,

''அவங்க என்னோட அம்மாவே இல்லை, போகச் சொல்லுங்க!'' என்று மீண்டும் கத்தினாள்.

எப்போதும் அம்மாவிற்கும் மகளிற்கும் சண்டை வருவது தான், ஆனால் இன்று எல்லைகளைக் கடந்து கொண்டிருந்தது.

''வா செல்லம்மா! அவ அப்பா வரட்டும்! இன்னைக்கு அடங்காப் பிடாரி மாதிரி கத்துறா'' என ஜனனியின் செய்கையைப் பார்த்து கௌரி செல்லம்மாளை அழைத்துச் செல்ல..

அது இன்னும் ஜனனியின் கோபத்தை தூண்டி விட்டது.



# 4

அவர்களின் சண்டை முற்றிய சிறிது நேரத்திலேயே பரதன் வந்து விட்டார்.. மகள் அவருக்குக் கைப் பேசி மூலம் நேர்காணலில் தேர்வான செய்தியைச் சொல்லி யிருக்க,

ஒரு அழகிய தங்கச் சங்கலியால் ஆன கைக் கடிகாரத்தை மகளுக்கு வாங்கி வந்தவர்... வீட்டில் ஆளுக்கு ஒரு புறம் முகத்தை தூக்கி வைத்திருப்பதை பார்த்து.. மகளிடம் விரைய.. ஜனனி அவரைப் பார்த் ததும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

பேசவேயில்லை.. அழுகை அழுகை அப்படி ஒரு அழுகை.. ''என்னடா குட்டி? அழக் கூடாது!'' என்று பரதன் வாய் வார்த்தைகளால் சொன்ன போதும் மகளின் அழுகையைப் பார்த்துக் கலங்கி விட்டார்.

அப்போது தான் சினிமா போய்த் திரும்பிய அவினாஷிற்கும் ரகுலனிற்கும் அப்படி ஒரு திட்டு விழுந்தது..

''என்னடா பண்ணுனீங்க அவளை?'' என்று திட்ட,

''ஒண்ணுமே பண்ணலை டேடி!'' என்று ஜனனியே சொல்லிச் சொல்லி அழ,

''பார்த்தீங்களா'' என்றபடி நின்றனர் இருவரும்..

எதற்கும் செல்லம்மாள் வரவில்லை.. அதன் கொண்டே மனைவிக்கும் கோபம் என்று புரிய..

''ஒண்ணும் பண்ணாததுக்கு எதுக்குடா அழற?''

''எங்க காலேஜ்லயே நாலு பேர் தான் செலக்ட் ஆனாங்க! அதுல நான் ஒருத்தி... இவங்க ஒண்ணுமே பண்ணலை! கங்க்ராட்ஸ் கூடச் சொல்லலை.. வெளில எல்லோரும் பண்றாங்க, ஆனா வீட்ல யாருமே பண்ணலை! என்னைக் கிண்டல் பண்றாங்க!'' என்று தேம்பியபடி சொல்ல..

பரதன் பார்த்த பார்வையில், ''ஐயோ! இத்தனை வருஷம் கழிச்சு இன்னைக்கு அப்பாக் கிட்ட அடி தான் வாங்க போறோம் போல'' என்று நினைத்துக் கொண்டான் அவினாஷ்.

ஒரு பார்வை பார்த்தவர்.. ''அவனை விடுறா குட்டிமா.. அப்பா பாரு உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்!'' என்று அந்த அழகிய கை கடிகாரத்தைக் கொடுக்க..

''தேங்க்ஸ் பா!'' என்று சொல்லி வாங்கிய போது மகள் சற்று சமாதானம் ஆனது போல தோன்ற,

''வா!'' என்று செல்லம்மாள் இருந்த இடம் அழைத்துச் செல்ல, செல்லம்மாள் மகளிடம் முகத்தை திருப்பி, இவ என்று ஜனனி மாமியாரிடம் பேசினதை சொல்ல,

''நீ கூட தான் என்னை எப்பவும் எல்லோர் முன்னாடியும் பேசற, எனக்கு எப்படி இருக்கும், படிச்சிருந்தா நான் எவ்வளவு கஷ்டப்பட்டு செலக்ட் ஆகியிருக்கேன்னு உனக்கு தெரியும், நீ தான் படிக்கவேயில்லையே!'' என்று ஜனனி சொல்ல,

''பாருங்க! பாருங்க! எப்படிப் பேசறா, கொஞ்சம் கூட மரியாதையே இல்லை!'' என்று செல்லம்மாளும் சண்டையிட, மீண்டும் அங்கே ஒரு குட்டிப் போர்க்களம். மகளுக்குச் சொல்வதா மனைவிக்குச் சொல்வதா திணறி விட்டார் பரதன்.

ஒரு வழியாக சமாளித்து, உண்டு, உறங்கி, அடுத்த நாள் கல்லூரி சென்றவளிடம், தோழிகள் ட்ரீட் கேட்க.. பொதுவாக வெளியில் இந்த மாதிரி தோழமைகளுடன் செல்வாள் தான், ஆனால் பூரணியும் இருப்பாள்.

இப்போது பூரணி இல்லாமல் தனியாக முதல் முறை, ''ஓகே, போகலாம்!'' என்று சொல்லி, எங்கே என்று இடத்தையும் அவர்களே தேர்வு செய்யச் சொல்ல.. அவர்கள் தேர்வு செய்தது ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்..

''ஓகே!'' என்று அவளும் சொல்லி, அப்பாவிடம் சொல்லி, அக்கௌண்டில் பணத்தை போடச் சொல்லி..

அவினாஷிடம் "என்னை பிரண்ட்ஸ் வீட்ல விட்டுடு வாங்க, அப்படி இல்லைன்னா முடிச்சிட்டு சொல்றேன், என்னைக் கூப்பிட்டுக்கோ, அதுவரை நீ என்னோட வரக் கூடாது!" என்று சொல்ல,

"அக்கா! எனக்கு ட்ரீட் இல்லையா?" என்ற அவினாஷிடம்,

"என் கண் முன்னாடி வராத போ நீ! எனக்கு என்ன கொடுத்த, ஒரு சாக்லேட் கூடக் கொடுக்கலை, ஒரு விஷ் பண்ணலை, போடா!" என்று அவனிடம் கோபத்தைக் காட்டி, கல்லூரியில் இருந்து அப்படியே கிளம்பினார்கள்.

செல்லம்மாவிடம் ஜனனி சொல்லவே இல்லை!!! அப்பாவோ அவினாஷோ சொல்லிக் கொள்ளட்டும் என்று நினைத்து அவர்களிடம் சொல்லச் சொல்லிவிட்டாள்.

அந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு நண்பன் இமானின் காரில் சென்று.. அங்கிருந்த ரெஸ்டாரண்டில் அமர்ந்து ஆர்டர் செய்து, மெதுவாக உண்ண ஆரம்பித்தனர். ஆண்கள் இருவர் பெண்கள் இருவர் இவளையும் சேர்த்து ஐந்து பேர்.

தோழமைகள் கூடினால் சிரிப்பிற்கும் ஆர்ப்பாட்டத்திற்கும் பஞ்சமா என்ன? நல்ல படியாக பொழுது கழிய.. கிளம்பும் பொழுது ஆரம்பித்தது பிரச்சனை.

பில்லில் பிரச்சனை!

பொதுவாக இந்த மாதிரி கல்லூரி மாணவர்கள் வரும் பொழுது பில்லை செக் செய்ய மாட்டார்கள், சொல்வதை கட்டி விட்டுச் சென்று விடுவார்கள்..

ஆனால் முதல் முறை ஜனனி தனியாக நண்பர் களுடன் வருவதால் அவர்கள் பில் கொடுத்ததும் அதனை ஊன்றிப் பார்த்தாள்... என்னவோ மனதிற்கு அதிகமாக இருப்பது போல ஒரு தோற்றம்.

இமானிடம் பில் நாம் உண்டதை விட அதிகமாக இருக்கிறதோ என்ற கேள்வியை எழுப்ப..

''கொடு'' என்றவன், என்ன உண்டோம் எனக் கேட்டு, அது சரியாக இருக்கிறதா என்று பார்க்க.. உண்ட ஐட்டங்களை ஒன்றிற்கு இரண்டாக சேர்த்துக் கிட்ட தட்ட ஆயிரத்து ஐநூறு ரூபாய் அதிகம்.

''பில் ஏதோ தப்பாப் போட்டு இருக்கீங்க!'' என்று ஜனனி நல்ல விதமாகவே அங்கிருந்த பில் கொடுத்த வரிடம் சொல்ல.. நண்பர்களும் ஏதோ தவறி விட்டது என்று தான் நினைத்தனர்.

''இல்லை! நீங்க சாப்பிட்டீங்க! நாங்க பில் தப்பாப் பண்ணலை!'' என்று அங்கிருந்த சர்வ் செய்தவன் அடித்துப் பேச.. திரும்ப பேச முயன்ற நண்பர்களிடம்..

''விடு! பணம் தானே! போனாப் போகுது!'' என்று ஜனனி சொல்லி பணத்தைக் கொடுக்க முற்பட,

அதோடு பிரச்சனை முடிந்திருக்கலாம்..

''வந்தா என்ன சாப்பிடறோம்னு கூடத் தெரியாம அடுத்தவங்க முகத்தை பார்த்துட்டு, சிரிச்சிக்கிட்டு, உட்கார்ந்து இருக்க வேண்டியது.. என்னவோ பசங்க! பொண்ணுங்க!'' என்று அங்கே வெகுநேரமாக அவர் களின் சிரிப்பை பார்த்திருந்த பில் கொடுக்க வந்த

ஒருவர், பெரிதாக தெரிந்தவர் போல கமெண்ட் அடிக்க,

''இருங்க ஒரு நிமிஷம்!'' என்று அவரிடம் சொன்ன ஜனனியின் தோழன் இமான், ''யாரு யாரு முகத்தைப் பார்த்தா.. இப்படி என்னன்னு தெரியாம, அடுத்தவங் களை க்ரிடிசைஸ் பண்ணுவீங்களா..?'' என்று அவரிடம் கோபப்பட்டவன்,

''நாங்க இதைச் சாப்பிடலை, எக்ஸ்ட்ரா பில் பே பண்ண மாட்டோம்..'' என்று திரும்பி அங்கிருந்த இன்சார்ஜிடம் சொன்னவன்.. பேசறிங்கள்ள யாரு தப்புன்னு இருந்து பார்த்துட்டுப் போங்க!'' என்றான் பேசியவரிடம்,

''என்ன? நான் எதுக்குப் பார்க்கணும், அதெல்லாம் முடியாது, நான் போகணும்!''

''அப்போ பேசினதுக்கு சாரி கேளுங்க!'' என்று அவனும் பிடிவாதமாக நிற்க..

''விடு இமான்! போகலாம்! பிரச்சனை வேண்டாம்!'' என்று ஜனனியும் மற்ற தோழிகளும் சொல்ல..

சிறு சலசலப்பு.. ''மேனேஜரை கூப்பிடுங்க!'' என்று சொல்ல.. அங்கே வந்தவன் வாசுதேவன்.

''என்ன?'' என்றபடி அருகில் வந்தான்.. ஜனனியை கவனிக்கவில்லை.

அந்தப் பேசியவர், ''நான் யாருன்னு தெரியுமா? என்னன்னு தெரியுமா? ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ன்னு வந்தா, யாரோ என்னை அதட்டுறாங்க! வாட்ஸ் கோயிங் ஆன்!'' என்று பொரும..

"ப்ளீஸ் சர்! வி வில் லுக் இன் டு தி இஸ்யு!" என்றவன் சுற்றிலும் பார்வையை ஓட்ட.. அங்கே கலவரமான முகத்துடன் நின்றிருந்த ஜனனி தான் பட்டாள்.

"இங்கே எங்கே இவள்" என்று பார்த்தவன், உடன் குடும்ப நண்பர்கள் யார் இருக்கிறார்கள் என்று பார்க்க யாரும் இல்லை.. நண்பர்களுடன் வந்திருக்கிறாள் என்று புரிந்தது.

இவனைப் பார்த்ததும் ஜனனி பேச வர... ஒற்றை விரலை வாய் மேல் வைத்து பேசாதே என்பது போல சைகை காட்டியவன்.. பின்பு அவள் புறம் திரும்ப வில்லை. ஆம் ஜனனி தனக்குத் தெரிந்தவள் என்று தெரிந்தால் எதிரில் இருப்பவன் இன்னும் எகிறக் கூடும் என்று புரிந்து, தெரிந்தவன் என்று காட்டிக் கொள்ளாமல் பேச ஆரம்பித்தான்.

"என்ன விஷயம்" என மற்றவர்களை பார்த்துக் கேட்க.. இமான் விஷயத்தை சொல்ல..

அந்த பேசியவரிடம் "இவங்க சார்புல நான் மன் னிப்புக் கேட்டுக்கறேன்" என்று அவரிடம் சொல்லி, கூடவே, "என்ன விஷயம்னு நமக்கு தெரியாத போது நம்ம பேசக் கூடாது..." இன்னொண்ணு யங் ஸ்டார்ஸ்னா இப்படி தான் இருப்பாங்கன்னு நம்மளா நினைக்கக் கூடாது" என்று சொல்ல,

"நான் யாருன்னு தெரியாம பேசாதீங்க!"

"நீங்க யாரா இருந்தா என்ன சர்? எங்களுக்கு எல்லா கஸ்டமர்சும் ஒண்ணு தான்.." என்று அவன் பேச..

அவர் ''நீங்களும் அவங்க ஏஜ் க்ரூப் தானே'' என,

கோபம் வரப் பெற்றவன், ''சர்! ப்ளீஸ் மூவ்!'' என்று பொறுமையாகவே வாயிலை நோக்கி ஒரு ஆளுமை யோடு கையைக் காட்டினான்.

''நீ எப்படி இங்க வேலைல இருக்கறேன்னு நான் பார்க்கறேன்!'' என்று உறும..

அப்படியே சீரியசாக இருந்த வாசுதேவனின் முகம் புன்னகைக்கு மாறி.. ''அப்போ இந்த வேலைல இருந்து உங்களால என்னைத் தூக்க முடியுமா! தயவு செஞ்சு அதை பண்ணுங்க!'' என்று சொல்ல,

ஜனனி எல்லாவற்றையும் ஆ என்று பார்த்து நின்றாள். ஏற்கனவே தோற்றம் கவர்ந்து தான் இருந்தது. இப் பொழுது அவனின் பார்வை, நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாம் கவனத்தை ஈர்த்தது.

அவனிடம் அதற்கு மேல் பேச முடியாதவராக அவர் சென்று விட்டார்.

அதன் பிறகு பில்லை வாங்கி.. இமானிடம் அவர்கள் என்ன அதிகம் சாப்பிடவில்லை என்றும் கேட்டு.. பில் போட்டவரைப் பார்க்க..

''நான் சர்வ் பண்ணினவங்க சொன்னதைத் தான் போட்டேன்!'' என்று சொல்ல.. சர்வ் செய்தவன் அவர்கள் சாப்பிட்டார்கள் என்று சத்தியம் செய்யாத குறையாகச் சொல்ல..

ஜனனியைப் பார்த்தான். தன்னிடம் உறுதிப் படுத்த பார்க்கிறான் என்று புரிந்து ஜனனி ''இல்லை'' என்று தலையாட்டினாள்.

"ஒரே நிமிஷம்" என்று நேராக கிச்சன் சென்றவன்.. "இதெல்லாம் இப்போ செஞ்சீங்களா!" என்று அங்கிருந்தவரிடம் கேட்க..

"ஆம்!" என்றார். சிறிது நேரம் யோசித்தவன் ரூம் சர்வீஸ் அழைத்து யாருக்காவது ரூமிற்கு போனதா என்று கேட்க,

ஆம்! அங்கே எக்ஸ்ட்ரா இருந்தது சென்றிருந்தது. ரூமிற்கு கொண்டு கொடுத்து அதை பணமாக பில்லில்லாமல் தனியாக வாங்கிக் கொண்டு அதை இந்த பில்லில் சேர்த்து இருந்தனர்.

தவறைக் கண்டு பிடித்து விட்ட போதும்.. ஜனனி மற்றும் நண்பர்களிடம் அதைக் காட்டிக் கொள்ளாமல், சாரி! சம் மிஸ்டேக்! ரீ பில் போட சொல்றேன்! "சாரி ஃபார் தி இன்கன்வினியன்ஸ் அண்ட் தி ஸினாரியோ ஓவர் ஹியர்" என,

"அதெப்படி!" என்று இமான் ஆரம்பிக்க..

"இமான் ப்ளீஸ் விட்டுடுவோம்!" என்று ஜனனி சொல்ல..

"நீ சொல்றதுக்காக விடறேன், இல்லை.." என்றபடி இமான் நிறுத்த..

"அதென்ன இவளிற்காக விடுவது" என்றபடி வாசு பார்த்து நிற்க.. எல்லோரும் கிளம்பினார்கள்.

ஜனனிக்கு அங்கிருந்து சென்றால் போதும் என்று தோன்றியது.. வீட்டில் வாழ்த்தவில்லை, அங்கே

சண்டை. அம்மாவிடம் சொல்லாமல் இங்கு நண்பர்களோடு வந்தால் இப்படி! ஒரு மாதிரி சஞ்சலம் அடைந்தவள், அதே யோசனையில் வெளியேறினாள்.

''பார்ப்பாளா?'' என்று வாசு பார்த்து இருந்தான்.

கதவின் வெளியே போகும் சமயம் ஜனனி திரும்ப வாசுவைப் பார்க்க.. வாசு அவளைப் பார்ததபடி தான் நின்றிருந்தான்.

அவனிடம் சென்று பேசுவோமா என்று ஜனனி நினைத்த போதே.. ''ஹேய் வா! என்ன வேடிக்கை பார்க்கற!'' என்று தோழி கைப்பிடித்து இழுத்து சென்றாள்.

சென்ற முறையும் பேசவில்லை, இப்பொழுதுமா என்று தோன்ற ''ஒரே நிமிஷம்'' என்று கை இழுத்து விரைந்து வாசுவிடம் வந்தவள்,

''இன்னைக்கு தேங்க் யு'' என்று நிறுத்தியவள், ''அன்னைக்கு சாரி'' என்றாள் தலை சரித்து முகத்தை சுருக்கி.

அவள் சொல்ல வந்தது ஒரு உவகையை கொடுக்க, அவளின் பேச்சே கவிதையாய் தோன்ற, ''எதற்கு'' என்ற கேள்வியை தாங்கி வாசுவின் விழிகள் ஜனனியை பார்த்தது.

''அன்னைக்கு சொல்லாம போயிட்டேன்! நீங்க இங்க தான் வேலை பார்க்கறீங்களா?'' என்று கேட்க,

''ஆம்!'' என்பது போலத் தலையாட்டினான்.

''நான் கேம்பஸ்ல செலக்ட் ஆனேன், அது செலப்ரேட் பண்ண தான் வந்தோம். இப்படி ஆகிடுச்சு! ஓகே பய்!'' என்று சொல்லி விரைந்து போய்விட்டாள்.

காரை பார்க்கிங்கில் இருந்து இமான் எடுக்கும் சமயம், மற்ற மூவரோடும் வெளியே பார்த்தவாறு நின்றிருந் தாள்.

''ஜனனி'' என்ற குரல் பின்னிருந்து கேட்க, திரும்பி னால், வாசுதேவன் நின்றிருந்தான்.

அவள் திரும்பியதும் ''கங்க்ராட்ஸ்'' என்றபடி அவளின் முன் ஒரு ஹோம் மேட் சாக்லேட்ஸ் அடங்கிய ஒரு அழகிய பாக்சை நீட்டினான்.

அதனைப் பார்த்ததும் ''ஹேய், உங்களுக்கு எப்படி எனக்கு இது பிடிக்கும்னு தெரியும், தேங்க் யூ!'' என்று முகமலர்ந்து அவள் வாங்க,

''எனக்கும் இது பிடிக்கும்! இங்க நடந்த இந்த சின்ன பிரச்சனையை மறந்துடு! மூட் அப்செட் ஆகாதே! திஸ் இஸ் யுவர் ஈவ்நிங் அண்ட் யுவர் டே'' என்று சொல்ல,

ஜனனி அவனைப் பார்த்து மீண்டும் ''தேங்க் யூ'' என்றாள், அதை சொல்லும் பொழுது அவளின் மனது பெருமளவு அமைதி அடைந்து இருந்தது.

தோழிகள் வியப்போடு பார்க்க, ''என்னோட கசின்'' என்றாள்.

''ஹாய் ஹேண்ட்சம்!'' என்று ஒரு தோழி புன்ன கையோடு சொல்லி, ஐ அம் ரக்ஷா என்று சொல்லிக் கை நீட்ட..

ஜனனியைப் பார்த்தவாறே கை குலுக்கினான், தன் பெயர் சொல்லவில்லை.

''உங்க பேர் சொல்லலையே?'' என்று ரக்ஷா கேட்க..

''ஜனனி சொல்லுவா'' என்று சொன்னான், ஜனனிக்குத் தெரியாது என்பதால் தான் அப்படி சொன்னான். அவனின் பேச்சும் இயல்பாக ஒருமைக்குத் தாவியிருந்தது.

''கசின்'' என்று சொல்லி விட்டு பெயர் தெரியாது என்றா சொல்ல முடியும்.. வாசுதேவன் ஒரு குறும்புப் புன்னகையுடன் பார்த்திருக்க,

அதே குறும்புத் தனத்துடன், ''உங்களுக்கு நானே பேர் வெச்சிடட்டுமா?'' என்று ஜனனி கேட்க,

வாய் விட்டு சிரித்தான். பின் ''வாசுதேவன்'' என்று சொல்ல, ஜனனியும் அவனைப் பார்த்து மலர்ந்து சிரித்தாள். இருவர் பார்வையுமே ஒருவரை ஒருவர் விசை கொண்டு ஈர்த்தது.

''ஹலோ சர், பேர் கேட்டது நான்!'' என்ற ரக்ஷாவின் வார்த்தை இருவர் காதிலும் விழுந்ததாகவே தெரியவில்லை.

''உள்ள தெரியாத மாதிரி இருந்தாங்க! இப்போ இப்படி பேசறாங்க! என்னடா நடக்குது?'' என்று தோழர்களின் மனதினில் ஓட..

சிறு தலையசைப்போடு காரில் ஜனனி ஏறி விடை பெற, வாசுவின் மனதினிலும் ஜனனியின் மனதினிலும் ஏதோ ஒன்று நிலை பிறழத் தான் செய்தது.



# 5

அம்மாவிற்கும் மகளிற்கும் சண்டை அதிகம் ஆகியதே தவிர குறையவேயில்லை.

“இவ என்கிட்டே ஒரு வார்த்தை வெளில போறேன்னு சொல்லலை, பெர்மிஷன் கேட்கணும், இல்லை அட் லீஸ்ட் இன்ஃபர்மேஷனாவது சொல்லணும். எதையும் செய்யலை. ஆனா நீங்க அவளுக்குப் பணம் கொடுத்து இருக்கீங்க! அப்போ நான் யாரு?” என்று செல்லம்மாள் பரதனிடம் சத்தமிட,

“எதுக்கு சொல்லணும்? எதுக்கு சொல்லணும்? நேத்து இருந்து என்கிட்டே சண்டை தான் பிடிக்கறீங்க! ஆனா இப்போ வரைக்கும் நீங்க என்ன பண்ணுனீங்க.. ஒரு விஷ் இல்லை ஒண்ணுமில்லை... அட எனக்கு விஷ் பண்ணலைன்னா போகுது, ஆனா உங்களுக்கு ஒரு சந்தோஷமில்லை..” என்று மகளும் முறைத்து நிற்க,

“எப்படி சந்தோசம் வரும்.. நீ ஏதோ வந்தவுடனே ஒரு வார்த்தை சொன்னதுக்கு அப்படி இன்சல்ட் பண்ற.. அப்புறம் எப்படி சந்தோசம் வரும்.”

அம்மாவிற்கும் மகளிற்கும் இடையில் பரதன் நொந்து விட்டார். அவினாஷ் நடுவில் வரவேயில்லை. இருவரும் பிறகு தன் மீது பாய்வார்கள் என்று புரிந்தவன்.

வீட்டில் மற்றவர்களும் வேடிக்கைத் தான் பார்த்தனர். அம்மாவும் மகளும் சரிக்கு சமமாய் வாய் ஆடும் போது யாருக்கென்று பேசுவர். இரண்டு நாட்கள் முறைத்துக் கொண்டு திரிந்தவர்கள்அவர்களாக ஓய்ந்து சண்டையை விட்டனர். ஆனாலும் முறைப்பு ஓயவில்லை.

இப்போதெல்லாம் சில முறை வாசுதேவனின் முகமும் கண்களுக்குள் மின்னி மறைந்தது. எப்போதும் ஜனனி என்ன செய்கிறாள் என்று பார்த்துக் கொண்டே இருப்பவள், என்ன யோசிக்கிறாள் என்று கணிக்கக் கூடியவள் ஒருத்தி மட்டுமே! அவள் பூரணி!

இப்போது பூரணி திருமணமாகி சென்றிருக்கக் கூடிய இந்த தருணத்தில், பூரணி புது வாழ்க்கை, புது இடம், மனதுக்கு மிகவும் பிடித்து விட்ட கணவன், இவ்வாறு இருக்க, அவள் ஜனனியிடம் எப்படி கவனத்தை வைப்பாள். முடியாது! தொலைபேசி அழைப்பு கூட அரிதாகிவிட்டது.

கூட பூரணி இல்லாத போது அம்மாவோ, தம்பியோ, அப்பாவோ இன்னும் கூடுதல் கவனத்தை ஜனனியிடம் வைத்து அவளிடம் எப்போதும் இருக்கும் நெருக்கத்தை விட அதிகப்படுத்தியிருக்க வேண்டும். தவறி விட்டனர் அந்த விஷயத்தில்.

''நீ என்னை விஷ் பண்ணலை!'' என்று சொன்ன பிறகாவது செல்லம்மாள் செய்திருக்க வேண்டும்... எங்காவது வெளியில் அழைத்துச் சென்று, இல்லை இது உனக்காக என்று சமைத்து, எந்த வகையிலாவது காட்டி யிருக்க வேண்டும்.

அதை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளாமல் அசால்டாக விட்டு விட்டார்.

''செய்!'' என்று சொன்னால் செய்ய மாட்டாள். ''செய் கிறாயா!'' என்று சொன்னால் யோசிப்பாள், ''எனக்காகச் செய்!'' என்று அன்போடு ஒரு வார்த்தை சொன்னால், அடுத்த நொடி செய்ய ஆரம்பித்து விடுவாள். அது அவளின் இயல்பு! கனிவான அன்பான வார்த்தைகள் மட்டுமே அவளிடம் ஒரு வேலையைச் செய்விக்க வைக்கும்.

வாசுதேவனைப் பார்த்தும் ஒரு ரசிப்பு இருந்தது ஜனனியிடம் ஆனால் ஈர்ப்பு இல்லை. மூன்றாவது சந்திப்பில், அதுவும் அவனாக வந்து பேசிப் பெயரை தெரிந்து கொள்ள வைத்தான்.

அந்த வாழ்த்து, அவன் சொன்ன விதம், ஜனனியைக் கவர, அதன் பின் தான் வாசுதேவன் கவர்ந்தான்.

ஒரு வேளை வீட்டில் இன்னும் அம்மா, தம்பி என்று அவர்கள் ஆர்ப்பாட்டமாக அவளைப் பாராட்டி வாழ்த்தி இருந்தால் வாசுதேவன் ஜனனியின் கவனத்தில் இவ் வளவு அழுத்தமாகப் பதிந்து இருக்க மாட்டான்.

செல்லம்மாள் குறை சொல்ல முடியாத அம்மா தான், மகளிடம் சந்தோஷத்தை காட்டா விட்டாலும் அறிந் தவர் தெரிந்தவர் என்று அத்தனை பேரிடமும் பெருமை பேசினார் தான்.. சில சமயம் அதை பிள்ளைகளிடமும் காட்ட வேண்டும். ஆனால் கிரக நிலைகளின் மாற்றமோ என்னவோ இதில் சறுக்கி விட்டார்.

மறுவாரமே இமானின் பிறந்த நாள் வர.. ட்ரீட் என்று சொன்ன நண்பர்களிடம்.. அந்த ஹோட்டல் தான் போக வேண்டும் என்று சொல்லி, ஏற்கனவே அங்கே அந்த பிரச்சனை வேண்டாம் என்று சொன்னவர்களிடம், இல்லை அங்கே தான் போக வேண்டும் என்று ஜனனியைப் பிடிவாதம் பிடிக்க வைத்தது வாசுதேவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மட்டுமே.

அங்கே சென்ற உடனே அவன் எங்கே என்று தேடவும் வைத்தது.

வாசுதேவன் கண்ணில் படாத போது யாரிடம் கேட்பது என்று யோசித்து சுற்றும் முற்றும் பார்வையைச் சுழல விட, ''யாரைப் பார்க்கிற?'' என்றாள் ரக்ஷா.

''அதான் அன்னைக்குப் பார்த்தோமே அவரை, வாசுதேவன்!'' என்றாள் தயங்கி தயங்கி.

''ஓஹ்ஹ்! அதுக்குத் தான் இங்க வரணும்னு பிடிவாதம் பிடிச்சியா .''

''எஸ்!'' என்றபடி தலையாட்ட,

அப்போது மெனு கேட்க வந்தவரிடம் ''உங்க மேனேஜர் மிஸ்டர் வாசுதேவன், எங்க இருப்பார்'' என்று ரக்ஷா கேட்க,

''எங்கயாவது ரௌண்ட்ஸ்ல இருப்பார்'' என்று அவன் சொல்லும் போதே,

''கூப்பிடச் சொல்லேன்!'' என்று ஜனனி சைகைக் காட்ட,

''அவரைப் பார்க்கணும்!''

"நீங்க யாருன்னு சொல்ல?"

"ஜனனி சொல்லுங்க!" என்றவளிடம் தலையசைத்துச் சென்றான்.

பிறகு அவர்கள் சொன்ன உணவு வகைகள் வர, அப்போதும் வாசு வரவில்லை.. சொல்லி அனுப்பிய ஆளும் கண்ணில் படவில்லை. ஜனனியின் பார்வை வாயிலை விட்டு அகலவில்லை. எல்லோரிடமும் சகஜமாக பேச முடியவில்லை.. யோசனைகள் வாசுவைச் சுற்றியே இருந்தன. உணவையும் அளந்து கொண்டிருந் தாள்.

பார்க்க வேண்டும் என்ற ஆவல் மிதமிஞ்சி இருந்த போதும், வர சொல்லியதும், ஏதோ தவறு செய்கிறோமே, எதற்கு வர சொல்கிறோம் என்று ஒரு மன சஞ்சலம்.

"ஹேய்! சாப்பிடுடி! உன் ஹீரோ வருவார்!" என்று ரக்ஷா காதை கடிக்க,

"என்னது ஹீரோ வா?" என்ற ஜனனி, அப்படித் தானோ தனக்கு! என்று ஒரு புதிய பரிமாணத்தில் சிந்தனையை ஓட்ட,

அவளின் ஹீரோ எனப்பட்ட வாசுதேவன், சரியாக அந்த நேரம் உள்ளே நுழைந்தான்.. வாவ் ஹீரோ தாண்டி! என்று ரக்ஷா மீண்டும் ஜனனியின் காதைக் கடிக்க..

ஆம்! அவனின் தோற்றம் அன்று அவ்வளவு வசீகர மாய் இருக்க.. கூடவே அவனின் வேக நடை ஜனனியை இன்னும் ஈர்த்தது.

அவர்கள் நேரம், அந்த ஹோட்டலில் சரியில்லை என்று நிரூபிப்பது போல மீண்டும் ஒரு சம்பவம்..

அந்த சமயம் அங்கே உணவருந்த வந்த நான்கு இளைஞர்களில் ஒருவன் வேண்டும் என்றே ஓரமாக அமர்ந்திருந்த ரக்ஷாவின் தோளின் மீது இடித்துக் கொண்டு சென்றான்.

''ஹேய்! என்ன பண்ற?'' என்று ரக்ஷா உடனே எழுந்து கோபமாக கேட்க,

உடன் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. ஜனனியும் ரக்ஷாவும் வாசுதேவனைப் பார்த்திருக்க.. வாசுதேவனும் அவர்களைப் பார்த்தபடி வந்ததால்.. இதைப் பார்த்து இருந்தான்.

''வை ஷவுட்டிங், நான் வரும்போது நீ சாஞ்சு என்னை இடிச்சிட்டு என்னை கேட்கறியா!'' என..

''என்ன நான் இடிச்சனா?'' என்று ரக்ஷாவும் பதிலுக்குப் பேச..

உடனே இமான் எழுந்தவன்.. ''என்ன பேசற?'' என்றான் அந்த இளைஞனைப் பார்த்து..

அதற்குள் வாசுதேவன் அருகில் வந்திருந்தவன், ''மிஸ்டர், சாரி கேளு! நீதான் இடிச்ச, நான் பார்த்தேன்!'' என்றான்.

''சாரியா! எதுக்கு கேட்கணும்? நீ யாரு நடுவுல?''

''நான் இங்க மேனேஜர்!''

''இருந்துட்டுப் போ! நான் இடிக்கலை! சாரி கேட்க முடியாது! அப்படியே இடிச்சு இருந்தாலும் பதிலுக்கு

இடிக்கச் சொல்லு சரியா போயிடும்!'' என்றான் அலட்சியமாக.

அவனிடம் இருந்து வந்த வாடையே அவன் குடித்திருக்கிறான் என்று காட்ட,

இமான் பேச வர.. அவனை கை அமர்த்திய வாசுதேவன்.. ''ஒழுங்கா சாரி கேள்!'' என்றான்.

''நான் யாருன்னு தெரியுமா?''

''நீ யாரா வேணா இருந்துட்டுப் போ! ஒழுங்கா சாரி கேள்!'' என்றான் மீண்டும்.

அதற்குள் ஹோட்டலின் சில பணியாளர்கள் அங்கே கூடி விட, வாசுதேவனின் முகத்தில் இருந்த தீவிரம், எதிரில் உடன் இருந்தவர்களுக்கு ஒரு அச்சத்தை கொடுத்தது.

''டேய்! சாரி கேளுடா! வீணா பிரச்சனை வேண்டாம்'' என்று ஒரு நண்பன் அவனிடம் சொல்ல, இன்னொரு நண்பன் ''அவனுக்காக நான் சாரி கேட்கறேன்!'' என்று சமாதானம் செய்ய..

''டேய் யாரு இவன்னு சாரி கேட்கறீங்க..'' என்று அந்த குடித்திருந்தவன் கத்தினான்.

சுற்றிலும் பார்வையை ஓட்டிய வாசுதேவன் எல்லோரும் இங்கே பார்த்திருப்பதைப் பார்த்து.. ''இவனைக் கூட்டிட்டுப் போங்க!'' என்றான் அவன் நண்பர்களைப் பார்த்து,

''நாங்க சாப்பிட்டு தான் போவோம்!'' என்று அவன் சட்டமாக அங்கே அமர்ந்துக் கொள்ள.. வாசுதேவன் அதன் பிறகு ஒன்றும் பேசவில்லை..

இவர்களிடம் திரும்பி ''சாரி! நீங்க இங்க வரும்போது ஏதாவது அன்வான்டட் நடக்குது!'' என்று மன்னிப்பு கேட்க..

''அப்போ இவங்களை ஒன்னும் பண்ணலையா? இப்படியே விட்டுடுவீங்களா! என்ன மேனேஜ்மென்ட்? என்ன ஹோட்டல்?'' என்று கோபப்பட்டவன் ஜனனி யிடம் திரும்பி..

''நாங்க இங்க வேண்டாம்ன்னு அப்போவே சொன் னோம் தானே! பாரு திரும்ப!'' என்றும் கோபத்தோடு சொல்ல..

எல்லாம் அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்த ஜனனி யின் கண்கள் லேசாக கலங்கவே ஆரம்பித்தது.

ரக்ஷா இமானிடம் பாய்ந்தால் ''வாயை மூடு, யாரோ பண்ணினதுக்கு...'' என்று ஆரம்பிக்கும் போதே,

ஜனனியிடம் கோபத்தைக் காட்டி விட்டோம் என்று புரிந்து ''சாரி! சாரி!'' என்று இமான் கேட்க ஆரம்பித்தான்.

ஆனால் முகம் தெளியாத ஜனனி ''இட்ஸ் ஓகே இமான், சாரி! உன்னோட பர்த்டே என்னால ஸ்பாயில் ஆகிடுச்சு.. நான் கிளம்பறேன்!'' என்று கிளம்பினாள்.

மனது அவளையேத் திட்டிக் கொண்டு இருந்தது, வாசுதேவனை பார்க்கவேண்டும் என்று என்ன இழுத்து வைத்திருக்கிறாய். மனது திட்ட கண்கள் வாசுதேவன் புறம் செல்ல முயலவில்லை.

ரக்ஷாவின் கண்கள் இமானை முறைத்த முறைப்பில்.. இருவருக்குள்ளும் நட்பையும் மீறிய ஏதோ ஒன்று

என்று புரிய, அதனைக் கொண்டு தான் ரக்ஷாவை இடித்ததற்கு இமான் இப்படி ஜனனியிடம் கூட கோபப்படுகிறான் என்று வாசுதேவனுக்குப் புரிந்தது.

ஜனனியைப் பார்க்க, அவள் பேகை தூக்கிக் கொண்டு வாசுதேவன் புறம் கூட திரும்பாமல் நடக்க ஆரம்பிக்க..

இமான் யோசிக்கவேயில்லை.. ஜனனியின் முன் வேகமாக சென்று மண்டியிட்டு அமர்ந்தவன் கை கூப்பி "சாரி ஜனனி.. தோ அந்த பிசாசை இடிச்சிட்டான்னு ஓவர் ரியாக்ட் பண்ணிட்டேன்" என ரக்ஷவைக் காட்டி னான்.

"ஹேய்! என்ன பண்ற நீ?" என்று ஜனனி இன்னும் பதறி விட்டாள்,

அருகில் வந்த ரக்ஷா "டேய்! இவளை ஏன்டா இன்னும் இன்னும் டென்ஷன் பண்ற, எருமை எழுந்திரு, அவ பயந்துடுவா" என,

அந்த இளைஞன் இடித்த பிரச்சனை போய் இப்போது ஜனனியை எப்படி சமாதானம் செய்வது என்ற கவலை தான் எல்லோருக்கும்,

அப்போதும் இமான் அப்படியே அமர்ந்திருக்க, ஜனனி, அவனை மன்னிச்சிட்டேன்னு சொல்லு, பர்த்டே பாய்! என ரக்ஷா சொல்ல,

"எழுந்திரு! எழுந்திரு!" என்றாள் ஜனனி..

திரும்ப இமான் அவளிடம் சாரி கேட்க, ஜனனி அவனுக்கு பதில் சொல்லிக் கொண்டு இருக்க,

பார்த்து நின்ற வாசுதேவனின் அருகில் வந்த ரக்ஷா, ''ஹீரோ சார், உங்களால தான் எங்களுக்குள்ள இப்போ பிரச்சனை!'' என்றாள் மெலிதாக அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

''நானா?'' என்று வாசு பார்க்க,

''பின்னே உங்களை பார்க்கணும்ன்னு தான் அந்த அம்மணி இங்க வரணும்னு அடம் பிடிச்சா?'' என்று சொல்ல,

திரும்பி அவளை நேர் பார்வை பார்த்த வாசுதேவன், ''சும்மா சொல்லலையே?'' என,

''அய்யோங்க! நிஜம்மா!'' என..

வாசுதேவனின் முகத்தில் உதித்த புன்னகையைப் பார்த்தவள், வேறு பேசும் முன்.. ''எனக்கு ஒரு அவசர வேலை.. நீங்க உங்க ப்ரண்ட்ஸ பாருங்க.. ஒரு பத்து நிமிஷம் நான் வர்றேன்.. இந்த அவசர வேலை உங்களுக்காக!'' என்று சொல்லி வாசுதேவன் செல்ல..

''இந்தப் பொண்ணு இவனை பார்க்கிறான்னு சொன்னா, இவன் என்னடா உங்களுக்காகன்னு என்னைக் காட்டுறான்'' என்று குழம்பிய ரக்ஷா, ஒரு வேளை என்னை சைட் அடிக்கறானோ? கூடாதே! என்று குழம் பியே விட்டாள்.

அதற்குள் இமான் ''வா!'' என்று அவளிடம் சொல்ல.. இப்போதைக்கு சண்டை முடிந்தது என்று திரும்ப அவர்கள் அமர..

''சர்! இதெல்லாம் ஆறியிருக்கும்னு புதுசா சேர்வ பண்ண சொன்னாங்க'' என்று முன் இருந்த உணவு வகைகள் எடுத்துப் போக,

சமாதானம் ஆகாத போதும், அமர்ந்த நண்பர்கள் குழாம்.. இப்போது அந்த இடித்த இளைஞனின் புறம் பார்வையைத் திருப்ப..

அங்கே சர்வ் செய்து கொண்டிருந்தவன் எதையோ அவன் மேல் சிந்தி விட, ''டேமிட்!'' என்று கத்தியபடி அந்த இளைஞன் எழ,

''சாரி சர், சாரி! சாரி!'' என்று ஏகத்துக்கும் பணிவாக அந்த சர்வ் செய்தவன் மன்னிப்புக் கேட்டு, ''சர்! அங்க ரெஸ்ட் ரூம் இருக்கு, வாங்க!'' என்று அழைத்துப் போக..

அதற்குள் இவர்களுக்கு மீண்டும் சூடாக வர.. ''ப்ளீஸ்டி! அவன் ஒரு லூசு, எனக்காக அவனை மன்னிச்சிடு!'' என்று ஜனனியிடம் பேசி அவளை சாப்பிட சொல்லிக் கொண்டு இருந்தாள் ரக்ஷா..

பத்து நிமிடங்கள் கழித்தும் அந்த இளைஞன் வராததால் நண்பன் ஒருவன் சென்று பார்த்து வேகமாக திரும்பி வந்து அவன் அடிபட்டு இருக்கான் என்று கத்த உடன் இருந்த நண்பர்கள் ஓட.. இமானும் என்ன என்று பார்க்கப் போனான் ,

அங்கே ரெஸ்ட் ரூமில் அந்த இளைஞன் ''யாரோ என்னைத் தள்ளி விட்டாங்க.. அப்புறம் என் முகத்தை மூடி அடிச்சாங்க'' என,

''நான் இடிச்சவங்களோ.''

''இல்லைடா! எல்லோரும் அங்க தான் இருந்தாங்க!'' என்று நண்பன் சொல்ல..

வாசுதேவன் வேறு முதல் ஆளாக ஆஜராகி.. பதறி... "நாம போலீஸ் கூப்பிடுவோம்!" என்று சொல்லி போலீசிற்கு அழைக்க வேறு செய்ய.

தாங்கள் குடித்து இருப்பதால்.. எதுவும் செய்ய முடியாமல் வேறு வழியில்லாமல் "அப்புறம் பார்த்துக்கலாம் வாடா!" என்று நண்பனை கூப்பிட்டு சென்றனர்.

இங்கே இமான் வந்து கதை சொல்ல, வாசுதேவனும் வர, வாசுதேவன் என்று கணித்து "கொஞ்சம் யோசிச்சா இது நீங்க தான் அந்தப் பசங்க கண்டுபிடிச்சிட்டா" என்று ரக்ஷா சொல்ல,

ஜனனி "இவனா?" என்று அதிர்ந்து வாசுதேவனைப் பார்த்தாள்.

"பிடிச்சா, பிடிச்சிட்டு போறாங்க!" என்று வார்த்தைகள் ரக்ஷாவிற்கு பதில் சொன்னாலும் கண்கள் ஜனனியைப் பார்த்தன..

"நீங்களா?" என்ற இமானின் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. ஆனாலும் இமானிடம் நடக்கறது எப்படியும் நடக்கும், அதுக்காக நம்ம அடுத்தவங்களை சொல்லக் கூடாது! என்றான்.

இமான் புரியாமல் விழிக்க,

"நீ ஜனனியை உன்னால தான்னு சொன்ன இல்லையா அதுக்கு!" என்றாள் ரக்ஷா..

கூடவே ரக்ஷாவைப் பார்த்து, "நீங்க மட்டும் தைரியமா இருந்தா போதுமா, உங்க பிரண்டும் தைரியமா இருக்கணும்.. யாரு இவர்?" என்று இமானைக் காமித்து,

''நீங்க தினமும் பார்க்கறவர், உங்க பிரண்ட், அவர் சொன்னா அப்சட் ஆவாங்களா.. ஒண்ணும் அவருக்கு பதில் கொடுக்கணும் இல்லை அவர் ஏதோ டென்ஷன்ல இருக்கார்ன்னு விட்டுடணும் இப்படி கண்ல தண்ணி எல்லாம் விடுவாங்களா?'' என்றான்.

''என்ன அழுதாளா?'' என்று ரக்ஷா கேட்டு திரும்பவும் இமானை முறைக்க,

''எனக்குத் தெரியாது! அதான் மண்டியிட்டு மன் னிப்பு கேட்டுட்டேன்! வேற என்ன பண்ண?'' என்றான் இமான் பதறியவனாக,

எதற்குமே ஜனனி எதுவுமே பேசவில்லை.

''டைம் ஆச்சு ரக்ஷா, நான் போகணும்!'' என்று சொல்ல,

''ஆரம்பிச்சிட்டா இவ, இன்னும் நிறுத்தவே மாட்டா.. சீக்கிரம் காலி பண்ணுங்கடா'' என்று சொல்ல.. வேக மாக உண்டனர். வாசுதேவனை ஜனனி பார்க்கவே யில்லை. ஆனால் வாசுதேவன் ஜனனியை மட்டுமே பார்த்திருந்தான்.

ரக்ஷா வாசுவைப் பார்த்து.. ''இந்த ட்ரெஸ்ல ஏதாவது கொட்டி அவளைத் தனியா அனுப்பட்டா, உங்க டெக்னிக்!'' என்று சொல்ல,

''அவங்க ஃபிமேல் ரெஸ்ட் ரூம் போவாங்க, நான் போக முடியாது!'' என்று வாசுதேவன் சொல்ல,

''ஓஹ், ஆமாமில்லை!'' என்று ரக்ஷா அசடு வழிய..

அதில் வாசுதேவன் சிரித்து விட்டான்.. அதில் ஜனனி அவனைப் பார்க்க.. கண்களை மூடித் திறந்து, சிரிக்கச் சொல்லி ''ஸ்மைல்'' என்பது போலச் சிறிய சைகை வாசு செய்ய..

ஜனனியின் முகத்தில் சிரிப்பு வராவிட்டாலும் கண்களில் இருந்த கலக்கம் மறைய அவனைப் பார்த்து இருந்தாள். ஆனாலும் என்னவோ ஒரு தயக்கம் பேச முயற்சிக்கவில்லை, வாசுதேவனும் பேசவில்லை.

அவர்கள் முடித்துச் செல்ல.. ஜனனிக்கு ஒரு சிறு தலையசைப்புடன் விடை கொடுத்தான்.. ''ஹல்லோ ஹீரோ சர், திரும்ப இந்த ஹோட்டலுக்கு இப்போதைக்கு நாங்க வரமாட்டோம்!'' என்று சொல்லி ரக்ஷா விடை பெற்றவள்..

சிறிது தூரம் சென்று திரும்ப வந்து, ''உங்களுக்கு ஜனனி நம்பர் தெரியுமா?''

''இதுவா?'' என்று அவன் கைப் பேசியைக் காட்ட, அதில் ஜனனி அவனுக்கு அழைத்து இருந்தாள், அதுவும் ஒரு ஐந்து நிமிடங்களுக்கு முன்னால்..

''இப்போ தான் அவ போன்ல இருந்து கால் குடுத்தேன், அவளுக்குத் தெரியாம!'' என்று சொல்ல,

''நாங்க எல்லோரும் அங்க தானே இருந்தோம்!'' என்று ரக்ஷா விழிவிரிக்க,

தோளைக் குலுக்கி வாசுதேவன் புன்னைகைத்தான்.

''நீங்க உங்களுக்காகன்னு என்கிட்டே சொன்னீங்களா. நான் கன்ஃபியுஸ் ஆகி பயந்துட்டேன், இப்போ தெளி வாயிட்டேன்.''

''பாருடா'' என்று கிண்டல் செய்தவன், உங்களுக் காகன்றதே நீங்க ஜனனி பிரெண்ட்றதுனால தான்!'' என்று வாசு சொல்லவும்

''நீங்க சத்தமில்லாம வேலை செய்யறீங்க, டேஞ் சரஸ்!'' என்று சொல்லி, ரக்ஷா செல்ல,

''நாம இவனைப் பார்க்கக் கூடாது. அப்பா அம்மாக்குத் தெரியாம இப்படிப் பார்க்கிறது தப்பு '' என்று அவளுக்கு அவளே சொல்லியபடி ஜனனியும் சென்று கொண் டிருந்தாள்.



# 6

இமானும் ரக்ஷாவும் ஜனனியை வீட்டில் விட்டுக் கிளம்ப, ''போனவாரம் தான் ட்ரீட்ன்னு போன, திரும்ப இந்த வாரமும் போற என்ன பழக்கம் இது, எப்போவாவது போகலாம் தப்பில்லை, இப்படி அடிக்கடி போறது சரியா?'' என்று செல்லம்மாள் கோபமாக வினவ,

எப்போதும் திரும்ப பேசும் ஜனனி ஒன்றும் பதில் சொல்லவில்லை சண்டையும் இடவில்லை. அவளுக்கே மனதில் இப்படி வாசுவைக் கொண்டு தான் அங்கே போக வேண்டும் என்று தோழர்களுடன் பிடிவாதம் பிடித்துப் போனது தவறு என்று தோன்ற அமைதியாக இருந்தாள்.

அவினாஷும் ரகுலனும் அங்கே தான் இருந்தனர். ஜனனி பதில் பேசாமல் போனது அவனுக்கும் ஆச் சர்யமே!

''அம்மா! அக்கா ஒண்ணும் பேசாம போறா!''

''நான் ஒரு வாரமா சரியா பேசலை தானே! அதனால சண்டை வேண்டாம்னு நினைச்சு பயந்திருப்பா!'' என்று செல்லமாள் பெருமையாக சொல்ல,

''அக்காக்கு பயமா? நீங்களும் உங்க புத்திசாலித்தனமும்!'' என்று ரகுலன் சொல்ல.. அவினாஷும் ''என்னமா நீங்க?'' என்று அவரிடம் முறைத்து விட்டு ஜனனியின் ரூம் சென்றான்.

''அக்கா இமான் பார்த்டே தானே, எங்க போயிருந் தீங்க?''

ஜனனி ஹோட்டலின் பெயரைச் சொல்ல..

''ட்ரீட் நல்லா போச்சா!'' என்று ஜனனியின் வாயைத் துருவ.. சாதாரண நேரமாக இருந்தால் உள்ளே நுழைந்ததில் இருந்து வெளியே வரும் வரை நிகழ்ந்ததை காட்சி மாறாமல் அப்படியே விவரித்து இருப்பாள்.

இப்போது வாசுதேவனைப் பற்றிய நினைவுகள் ஓடிய தால் ''நல்லா போச்சு!'' என்றதுடன் நிறுத்திக் கொண் டாள்.

''என்ன சாப்பிட்டீங்க?'' என்று கேட்க,

''நீ என்ன என்னை இன்டர்வியு எடுக்கறியா? உனக்கு இப்போ என்ன தெரியணும்!'' என்று அவினாஷிடம்

முகத்தைக் காட்ட, எப்போதும் இருக்கும் விளையாட்டுத் தனம் கிஞ்சித்தும் முகத்தில் இல்லை.

எப்போது இருந்து ஜனனி இப்படி மாறினாள் என்று பார்த்து இருந்தான்.

அவினாஷ் தன்னையே பார்த்து இருப்பதை புரிந்து, நைட்டியை எடுத்துக் கொண்டு உடை மாற்ற குளிய லறையில் புகுந்து கொண்டாள்.

வேலைக்குத் தேர்வான உடனேயே அக்கா இன்னும் விவரமாக ஆகிவிட்டாளோ? விளையாட்டுத்தனத்தை குறைத்துக் கொண்டாளோ? என்று தான் தோன்றியது.

மனதில் ஏதோ சலனம் என்று தோன்றவில்லை.. ஜனனியின் மனம் யார் புறமாவது செல்லக் கூடும் என்ற நினைவே யாருக்கும் இல்லை. இவர்கள் ட்ரீட் கிளம்பும் பொழுது கூட இமானிடம், ''அண்ணா பத்திரமா வீட் லயே விட்டுடுங்க!'' என்று சொல்லி அவினாஷ் தானே கார் கதவையே மூடினான். அங்கே சென்று யாரையாவது பார்க்கக் கூடும் என்று எப்படி தெரியும்.

யோசித்தவாறே அங்கே தான் அமர்ந்து இருந்தான். ஜனனி குளியலறைக் கதவை திறக்கவும் அவளின் போனில் மெசேஜ் டோன் வரவும் சரியாக இருந்தது.

''என்ன?'' என்று அவினாஷ் எடுத்துப் பார்க்கப் போக..

''டேய்! அது என் போன்! என் பிரண்ட்ஸ் ஏதாவது மெசேஜ் பண்ணியிருப்பாங்க! போனை எடுக்காத!''

''ஏன் உன் பிரண்ட்ஸ்து நான் ஏன் பார்க்கக் கூடாது!'' என்று போனை எடுக்க..

"டேய் மடையா, ஏதாவது கோர்ள்ஸ் டால்க் இருக்கும்!" என்று கத்த,

"ஓஹ்!" என்றபடி எடுத்த இடத்தில் போனை வைத்துச் சென்றான்.

பின்னே ஒரு முறை ஜனனியின் போனை எடுத்துப் பார்த்துவிட்டு "நீங்க பொண்ணுங்க இப்படி எல்லாம் பசங்களை பத்தி பேசுவீங்களா?" என்று கேட்டு இருக்கிறான்..

அது முன்பு எப்போதோ! அதிலிருந்து ஜனனி, "என்னோட மெசேஜஸ் பார்க்காதே!" என்று சொல்லி இருக்கிறாள். ஆனாலும் எப்போதாவது அவன் பார்ப்பது தான்.

இன்று எடுக்கவும் ஏதோ ஒரு கடுப்பில் தான் கூறினாள், அப்படி ஏதாவது அவன் பார்க்கக் கூடாத மாதிரி இருக்கும் என்று சொல்லவில்லை.

இப்போது அவள் எடுத்துப் படிக்க, "ஐயோ, இதை அவினாஷ் பார்த்திருந்தால் என்னைக் கேள்விகளால் துளைத்து எடுத்து இருப்பான்" என்று தோன்றியது.

ஆனாலும் முகத்தில் அதைப் படிக்கும் பொழுது ஒரு மெல்லிய முறுவல், மனதில் ஒரு இனிய சாரல்.

"ஹாய்! நான் வாசுதேவன், வீட்டுக்குப் போய் சேர்ந்துட்டீங்களா!" என்று ஒரு மெசேஜ்.

அப்போது தான் ஒரு மணி நேரத்திற்கு முன் இவனைப் பார்க்கக் கூடாது, தள்ளி இருக்க வேண்டும் என்று நினைத்தோம் என்று நினைத்ததே மறந்து போனது.

''எப்படி உங்களுக்கு என் நம்பர் தெரியும்?'' என்று பதில் மெசேஜ் அடித்த பொழுது அவளின் குறும்புத் தனம் முகத்தில் மீண்டு இருந்தது.

''நீ தானே என்னைக் கூப்பிட்ட'' ஒருமைக்கு தாவி இருந்தான்.

''நான் கூப்பிட்டேனா? எப்போ?''

''உன் போன்ல இருந்து'' என்று வாசுதேவன் மெசேஜ் செய்ய,

''நானா! இல்லை!'' என்று அவள் பதில் மெசேஜ் செய்ய,

இப்படியாக அரை மணி நேரம் மெசேஜ் செய்து.. முற்றிலுமாக பேலன்ஸ் தீர்த்தாள் ஜனனி.

''எங்கேடா பேசிக் கொண்டு இருந்தோம், திரும்ப சத்தமில்லை!'' என்று நினைத்து வாசுதேவன் அவளை கைபேசியில் அழைக்க,

''பேலன்ஸ் போய்டுச்சு! இனி ரீசார்ஜ் பண்ணனும்!'' என்றாள் எடுத்த வுடனே,

''வாட்ஸ் அப் வந்திருக்கலாம் தானே!''

''அதுவும் நெட் பேக் தீர்த்துட்டேன்!'' என,

அதற்குள் எங்கே உள்ளே சென்ற பெண் காணவில்லை என்று செல்லம்மாள், ''ஜனனி!'' என்று கூப்பிட,

''அம்மா கூப்பிடறாங்க பை!'' என்று போனை வைத்து விட்டாள்.

இப்போதுதான் பேசினால் அதற்குள் வைத்து விட் டாளே என்று வாசுதேவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

என்னவோ ஜனனியிடம் பேச வேண்டும் என்ற ஆர்வம் அலைகடலென பொங்கியது. அவளைப் பார்க்கும் போதே மனதில் இருந்த கவலைகள் எல்லாம் பின்னுக்கு ஓடியது.

ஜனனி ரூமில் இருந்து வெளியே வந்தவள் "என்னமா?" என்றாள் இயல்பாக, முகத்தை தூக்கிக் கொண்டு இருந்தவள் இப்போது இயல்பாக பேசவும், செல்லம்மாளும் பேச.. நேரம் ஓடியது.

ஆனாலும் அன்றிலிருந்து வாசு அவளுக்கு மெசேஜ் செய்வதும் அவளும் பதிலுக்கு செய்வதும் பின்னர் கைப்பேசியில் உரையாடுவதும் சகஜமாக இருவருக்குள்ளும் ஆரம்பித்தது.

என்ன பேசுகிறாள் என்று கேட்டால் ஜனனிக்கு சத் தியமாக சொல்லத் தெரியாது.. ஆனாலும் வாசுவோடு பேசும் ஒவ்வொரு நிமிடத்தையும் எதிர்பார்த்தாள், ரசித்தாள்.. மனதிற்கு மிகவும் இனிமையாக உணர்ந்தாள்.

ஆனாலும் இதுவரை அவன் என்ன படிக்கின்றான்? என்ன செய்கின்றான்? என்று கேட்டதில்லை. யார் என்று தெரியும் அவ்வளவே! இந்த ஹோட்டலில் வேலை செய்கிறான் தெரியும் அவ்வளவே!

ஜனனிக்கு அப்படி ஒன்றும் விவரம் தெரியாது இதை கேட்கும் அளவிற்கு என்பது போலக் கிடையாது. அவனிடம் பேசாத பொழுது கேட்க வேண்டும் என்று தோன்றும். ஆனால் பேசும் பொழுது எதுவும் ஞாப கத்தில் நிற்காது.

ஆனால் வாசு நன்கு உணர்ந்தான். இன்னும் தன்னைப் பற்றி அவள் எதுவும் தெரிந்து கொள்ள முயலவில்லை என்று. அவள் கேட்காத பொழுது, உன் வீட்டில் யார் யார் என்ன செய்கிறார்கள் என்பது போல பேச்சுக்கள் வாசுவிடம் இருந்தும் வரவில்லை.

பேச்சுக்களை ஒவ்வொரு நொடியும் பேசும்போது ரசித்தாள், பேசியவனையும் மனம் ரசித்தது, நேரில் காண விழைந்தது. ஆனால் எப்படி சொல்லுவாள். உங்களைப் பார்க்க வேண்டும் என்றா?

வாசுதேவனிற்கு இதற்கு பெயர் தான் காதல் என்பது தெளிவு, ஆம் அவனுக்குத் திண்ணமே! அவனுக்கு ஜனனியைப் பிடித்திருக்கிறது.. அவளோடு அவன் வாழ்க்கை அமைய வேண்டும் என்று.

ஜனனி மிகவுமே அவனை ஈர்த்தாள்!!!

பேசினாலும் பார்க்க முற்படவில்லை வாசு.. ஒரு வேளை இது ஈர்ப்பு மட்டுமே என்றால் பார்க்காத பொழுது இது குறையவோ மறையவோ செய்யும் என,

ஆனால் குறையவும் இல்லை மறையவும் இல்லை.. ஜனனியோடு பேசும் மணித்துளிகள் மட்டுமே அவனை உற்சாகமாக வைக்கிறது என்பது போல உணர ஆரம் பித்தான்.

இதே உணர்வு, ஈர்ப்பு, பிடித்தம், அதையும் மீறி காதல், ஜனனியிடம் இருக்கிறதா என்று தெரியவில்லை. தெரிந்து கொள்ள ஒரு ஆவல் மனதில் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது.

ஜனனிக்கு நேர் எதிர் வாசு. அதனால் தான் அவனைக் காந்தமாய் இழுத்தாள் ஜனனி.. வாசு மிகவும் பொறுப் பான, கஷ்டங்களை உணர்ந்து, அனுபவித்து, வளர்ந்த பிள்ளை. அதனால் தான் விளையாட்டு பிள்ளையான ஜனனியை அவனுக்கு மிகவும் பிடித்தது.

ஜனனி கவலை என்பதே என்னவென்று தெரியாமல் வளர்ந்தவள்.

ஜனனியின் குறும்பான பேச்சு, அவளுடைய விளை யாட்டுத்தனம் எல்லாம் அவனை அணு அணுவிலும் ஈர்த்தது. அதே சமயம் பயம் கூட, இவ்வளவு விளை யாட்டுத்தனம் நிறைந்தவள், என்ன உணர்வோடு தன்னிடம் பேசுகிறாள். வெறும் நட்பு மட்டுமேயா... இது காதல் அல்லவோ.. என்னைப் பற்றி இதுவரை எதுவுமே கேட்டது இல்லையே..

அதே சமயம் சொல்லிக் கொள்வது போல என்னிடம் என்ன இருக்கிறது.. அதுவுமே ஒரு பயம்.. காதல் சொல்லும் அளவிற்கு உனக்கு தகுதி இருக்கிறதா என்று ஒரு கேள்வி.

இந்த உணர்வுகள் மனதினில் ஓட... ஒரு இரண்டு நாட்கள் ஜனனிக்கு மெசேஜ் போடவும் இல்லை, அழைக்கவும் இல்லை.. முதல் நாள் அவளிடம் இருந்தும் எந்த மெசேஜும் இல்லை.

எப்பொழுதும் இவன் போடும் மெசேஜிற்கு பதிலாகத் தான் ஆரம்பிக்கும் அவளின் மெசேஜ்.

அடுத்த நாள் ''வாசு உங்க மெசேஜ் காணோம்'' என்று காலையிலேயே மெசேஜ் செய்தாள்.

அதற்கு பதில் இல்லை.. சரி, ஆர்டினரி மெசேஜ் செய்தால், பார்த்தானோ இல்லையோ என்று தோன்ற வாட்ஸ் அப் மெசேஜ் செய்தாள்.

அதில் பார்த்த குறியீடும் வந்தது, ஆனால் பதில் இல்லை. அதுவரையிலும் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் பார்த்த பின்பும் ஏன் பதிலில்லை என்று மண்டையைக் குடைய ஆரம்பித்தது.

எதிலும் அவளின் கவனம் செல்லவில்லை. மாலை வரை நிமிடத்திற்கு ஒரு முறை மெசேஜ் வந்து விட்டதா என்று பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அதற்கு மேல் தாளாமல் வாசுவிற்கு அழைத்தாள். வாசு அந்த அழைப்பை பார்த்துக் கொண்டு தான் இருந்தான். ஆனால் எடுக்க முயலவில்லை.

பலமுறை அழைத்து விட்டாள், ஆனால் வாசு எடுக்கவில்லை.

''உடம்பு ஏதாவது சரியில்லையா? வீட்டில் யாருக் காவது சரியில்லையா? ஏதாவது பிரச்சனையா? மெசேஜ் பண்ணுங்க வாசு!'' என்று திரும்பத் திரும்ப பல மெசேஜ்கள்.

அடுத்த நாள் காலை கல்லூரி வந்ததும் திரும்பவும் தன்னுடைய தொலைபேசியில் இருந்து அழைத்தாள், எடுக்கவில்லை. உடனேயே இமானிடம் போனை வாங்கி வாசுவின் நம்பரை அழைத்தாள்.. இரண்டு ரிங்கிலேயே எடுக்கப்பட்டு ஹலோ! என்ற வாசுவின் குரல் கேட்க,

அப்பொழுது தன்னைத் தான் தவிர்க்கிறான் என்பது புரிய, மளுக்கென்று கண்களில் நீர் நிறைந்தது.

ஏனென்று தெரியவில்லை..

''ஹலோ, யாருங்க!'' என்று வாசு திரும்பவும் கேட்க,

''இது இமானோட போன்!'' என்றாள் ஜனனி.

அந்தப் புறம் பேச்சே இல்லை!

''ஏன் என் போன் மட்டும் எடுக்கலை? நான் எதுவும் உங்களை சண்டை போடலை, திட்டலை, எதுவுமே பண்ணலை, ஏன்? எனக்கு தெரியாம ஏதாவது பேசும் போது ஹர்ட் பண்ணிட்டேனா?'' என்று கேட்டாள், கேட்கும் போதே குரலின் நெகிழ்வு நன்கு தெரிந்தது.

கலங்குகிறாள் என்று புரிந்தது. வாசு பொய் சொல் லவோ காரணம் சொல்லவோ விழையவில்லை.. ''வேண்டாம்னு தான் எடுக்கலை!'' என்றான்.

''என்ன வேண்டாம்?''

''உன்னோட பேசறது!''

''ஏன் என்ன பண்ணினேன் நான்?'' என்றாள் கலக்க மாக.

''எப்பவும் உன்னோட பேச்சைக் கேட்கணும் போல இருக்கு! உன்னைப் பார்க்கணும் போல இருக்கு! அதுதான் அவாய்ட் பண்றேன்!'' என்றான் ஆழ்ந்த குரலில்..

கலக்கம் இன்னும் அதிகமாக.... அவளின் இதயம் துடிக்கும் ஓசை அவளுக்கே கேட்டது. என்ன சொல்ல

வருகிறான் என்று புரியாத அளவிற்கு முட்டாளா என்ன ஜனனி?

அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஜனனி மௌனம் காக்க..

''அதுதான் எடுக்கலை! சாரி! உன்னை ஹர்ட் பண்ணியிருந்தா! பட் நாம பேச வேண்டாம்! பேசினா நான் ஐ லவ் யு ஜனனின்னு எப்போவேணா சொல் வேன்!'' என..

''என்ன? ஐ லவ் யூ வா!'' மனது பட படவென்று அடிக்க ஆரம்பித்தது. பதட்டத்தில் ஜனனி எதுவும் பதில் சொல்ல முயலாமல் போனை கட் செய்தாள்.

அந்தப் புறம் வாசு போனை வெறித்தான்! வைத்து விட்டாளா? அவ்வளவு தானா!

வேறு என்ன சொல்ல வேண்டும் என்று நீ எதிர்பார்க் கின்றாய்? ஐ லவ் யு என்றா.. அவள் சொல்வாளா? சொன்னாலும் இது நடக்குமா என்ன? நீ! உன் வீடு! உன் சூழல்! உன் அப்பா, அம்மா! இதை நினைக்கவில் லையா.. உன் வயதென்ன? இப்போது போய் காதல் என்று உன் அம்மாவின் முன் நிற்க முடியுமா..

பொறுப்புகள் அதிகமாக, உன்னை நீ பெரியவனாக உணர்ந்தாலும் இது நீ திருமணம் செய்யும் வயதில் லையே.. நீ பூரணியை விடவும் சிறியவன்.

மனநிலை பிறழ்ந்த உன் அப்பாவோடு நித்தமும் உன் அம்மா போராடுவது உனக்குத் தெரியாதா.. அவருக்கு ஒரு நிம்மதி, ஷாந்தி இல்லாத பொழுது, இப்படிக் காதல்

என்ற ஒரு வார்த்தை உன்னிடம் இருந்து வரலாமா? மனது உணர்ந்தாலும், வாய் வாக்கியமாக வரலாமா?

இதுதானா நீ வாசு? மனது கேள்வியாய் கேட்க,

ஐயோ! நான் ஜனனியிடம் இதைப் பேசாமல் இருந்திருக்கலாமோ? மனது அடித்துக் கொண்டது. இப்போது அவள் காதலிக்கிறேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வாய்?

அம்மா! அம்மாவை எப்படி மறந்தாய்!!

ஸ்வாதி ரெட்டியாக பிறந்தவர், ஸ்வாதி பால கிருஷ்ணன் ரெட்டியாக மாறிய பின் தானே நீ பிறந்தாய்.. காதல் எங்கே இருந்தவரை எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

சுந்தரத் தெலுங்கு பெண்ணான அவர் பெற்றவர் களை எதிர்த்துத் தமிழ் மண்ணின் மகனான உன் தந்தையைக் காதலித்து திருமணம் செய்திருக்கலாம்..

செல்வச் சீமாட்டியான அவர், அவருடன் ஒப்பிடும் பொழுது சாதாரண நிலையில் இருந்த உனது தந்தை யுடன் நன்றாக பத்து ஆண்டு காலம் வாழ்ந்தும் இருக் கலாம்..

அதன் பின் ஒரு விபத்தில் உன் தந்தைக்கு அடிப் பட்டு மனநிலை பிறழ்ந்த நாளாக.. ஒரு குழந்தையை போல இத்தனை வருடங்களாக இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் என்ன சாதாரண குழந்தையா இல்லை சங்கிலியால் கட்டி வைத்து பார்த்துக் கொள்ளும் நிலையில் இருப்பவர்.

அவரை மட்டுமல்ல அவரின் அப்பா அம்மாவை கூடவும்..

இப்படி வாழ்க்கையை போராட்டங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவரோடு தோள் கொடுக்காமல், காதல் சொல்வாயா?



# 7

வாசுவிற்கு மனது குழப்பமான குழப்பம் தான், ஜனனி வேண்டும் என்று மனது சொல்ல.. இது சரிவராது உனக்கு! இப்பொழுது வயதும் அல்ல.. சூழலும் அல்ல.. அம்மா ஒத்துக் கொள்ளவே மாட்டார்! என்று அறிவு அடித்துச் சொன்னது. ஒரு வாரமாக இந்த குழப்பம் தான் ஜனனியிடம் பேசிய நாளாக.

ஜனனி திரும்பக் கூப்பிடுவாளோ என்று நினைக்கக் கூப்பிடவில்லை. இவனிற்கும் பின்பு கூப்பிடும் தைரிய மில்லை.

ஒரு புறம் இந்த எண்ண அலைகள் மனதினில் ஓடிக் கொண்டே இருந்தாலும்.. எந்த வேலைகளையும் நிறுத்தவில்லை.. அது பாட்டிற்கு நடந்து கொண் டிருந்தது.

கலகலப்பான மகன் கிடையாது தான், ஆனாலும் இன்னும் ஏதோ வாசுவிடம் குறைவது போலத் தோன்ற..

''என்னவோ உன் முகமே சரியில்லையே, என்ன வாகிற்று?'' என்று ஸ்வாதி மகனிடம் கேட்டார். தமிழில் இல்லை தெலுங்கில்.. ஆம் அம்மாவும் மகனும் உரை யாடுவது தெலுங்கில் தான்.

கணவரிடம், கணவர் வீட்டினரிடம், திருமணமாகி வந்த நாள் முதலாக ஒரு உடைந்த தமிழில் பேசினாலும், மகன் பிறந்த நாள் முதலே அவனிடம் பேசுவது தெலுங்கில் தான்..

தெலுங்கு அவரின் தாய் மொழி மட்டுமல்ல உணர்வு மொழியும் கூட, ஆம்! அவர் பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் ஹைதராபாத். அவர்களது அங்கே ஐந்து நட்சத்திர ஹோட்டல் இருந்தது. அங்கு மட்டு மல்ல ஆந்திராவின் இன்னும் சில இடங்களிலும்.

அவர்கள் சென்னையில் கால் பதிக்க விரும்பி, சென்னையில் அவர்களுடைய பெயரைக் கொண்டு ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் கட்டி முடிக்க.. சமீபமாக படிப்பை முடித்த தனது பெரிய மகளிடம்.. அந்தப் பொறுப்பைக் கொடுத்து சென்னையில் விட..

அங்கு ஏற்பட்ட பழக்கம் தான் பாலகிருஷ்ணனோடு. புதிதாக தொழில் துவங்கியிருந்த பாலகிருஷ்ணன் தன்னுடைய பொருட்கள் சிலவற்றை ஹோட்டல் வாங்குவதற்காக அதன் நிர்வாகியை அணுக, அந்த இடத்தில் ஸ்வாதி இருக்க..

எங்கு எப்படி என்று தெரியாமல் இருவருக்குள்ளும் காதல் மலர... ஸ்வாதியின் அப்பா, பாலகிருஷ்ணன் ஒரு தமிழ் மகன் என்று திருமணத்திற்கு சம்மதம் தர மறுக்க..

அவர்களை மீறித் திருமணம் நடந்தது, அதனால் மகளை பெற்றோர் ஒதுக்கி விட..

மனதினில் பல வருத்தங்கள் இருந்த பொழுதும்.. கணவன் பின்னோடு வந்து விட்டார்.. இவர் தான் மூத்த மகள்.. இவருக்கு பின் ஒரு மகன், மகள் என்று இருந்தனர்.

அதன் பிறகு பிறந்த வீட்டினருடன் எந்த வகையிலும் ஸ்வாதிக்கு தொடர்பு இல்லை. அதனால் மகன் பிறந்ததில் இருந்து அவனோடு அவர் உரையாடும் மொழி தெலுங்காகிப் போனது. தொடர்ந்த பத்து வருடங்களில், பெற்றோருடன் தொடர்பு இல்லை என்ற வருத்தத்தை தவிர ஸ்வாதிக்கு வேறு எந்த வருத்தமும் இல்லை.

பாலகிருஷ்ணனோடு இல் வாழ்க்கை எந்த குறையும் இன்றி மகிழ்வோடு நிறைவோடு சென்றது. எல்லாம் பாலகிருஷ்ணன் ஒரு விபத்தில் மாட்டும் வரை.. அதில் தலையில் அடிபட்டு மூளையில் ஏற்பட்ட பாதிப்பால் மன நிலை பிறழ்ந்து விட்டார், வேறு வார்த்தைகளில் பைத்தியமாகி விட்டார்.

சில சமயம் அமைதியாக இருப்பார், மனைவி, மகன், அப்பா, அம்மா, எல்லோரையும் அடையாளம் தெரியும்.. சில சமயம் யாரையும் தெரியாது, கையினில் கிடைத்ததை தூக்கி வீசுவார்.. எதிரில் இருப்பவரை அடிக்க ஆரம்பித்து விடுவார்.

வீட்டில் வைத்திருப்பது ஆபத்து அவரை இதற்கென்று இருக்கும் மருத்துவமனையில் சேர்த்து விடுங்கள் என்று மருத்துவர் சொன்னாலும் ஸ்வாதி சேர்க்கவில்லை. மருத்துவர் மட்டுமல்ல ஸ்வாதியின் பெற்றோர் கூட....

ஆம்! நன்றாக இருந்தவரை வராத பெற்றோர் மகளுக்கு இப்படி ஒரு நிலை என்றதும் ஓடி வந்தனர்.. ''எப்படி இவருடன் இருக்க முடியும். வந்து விடு.. இவரை மருத்துவமனையில் சேர்த்து விடலாம்.. ராஜ வைத்தியம் செய்யலாம், அவர் இருக்கும் வரை.. அவருடைய பெற்றோருக்கும் அவர்கள் இருக்கும் வரை பணம் அனுப்பிக் கொடுக்கலாம், நீ வந்துவிடு'' என்று மகள் பைத்தியமான தன் கணவருடன் கஷ்டப்படுவதை பொறாத பெற்றோர் கெஞ்சிக் கெஞ்சி கேட்டனர்.

ஸ்வாதி ஒத்துக் கொள்ளவில்லை.. அவர்களிடம் இருந்து ஒரு உதவியும் பெறவில்லை.. கணவரிடம் இந்த பத்து வருட சம்பாதனையில் வந்திருந்த ஒரு வீட்டினை விற்று, அதை வங்கியில் இட்டு.. குடும் பத்தை சமாளிக்க ஆரம்பித்தார். வேறு ஒன்றிரண்டு சொத்துக்களும் இருந்தது. எல்லாம் கை கொடுத்தது.

ஸ்வாதி மிகுந்த புத்திசாலிப் பெண் தான்.. தனியா கவே தொழில் செய்யக் கூடிய திறமை இருந்தது, அவரின் பிறப்பே அதை கொடுத்து இருந்தது. சிறந்த கல்வி இருந்தது.

ஆனால் கணவரைத் தனியாக விட முடியாத ஒரு சூழலில், எதுவும் செய்ய முயலவில்லை. தினசரி வாழ்க்கைக்காக, கணவரின் மருத்துவத்திற்காக என்று இருந்தது எல்லாம் கரைந்து, கஷ்ட ஜீவனம் ஆனா போதும் மீதம் இருப்பதைக் கொண்டு சமாளித்தார். வேறு யோசிக்கவில்லை.

அதுதான் அவரின் பெற்றோருக்கு இன்னும் வருத்தமே! ஆண் பெண் என்ற பேதம் இல்லாத அவரின்

அப்பா, மகள் கோலோச்சுவாள் என்று சிறுவயது முதலே நினைத்து இருக்க.. இப்படி காதல் திருமணம் என்று சென்று அதிலும் கஷ்டங்களை அனுபவிக்க.. அவர் களால் தாள முடியவில்லை.

என்ன தான் சொத்து சுகம் இருந்தாலும், பரம்பரை யின் பேர் கூடவே நின்றாலும், அது கொடுக்கும் மரியாதை இருந்தாலும், இன்னொரு மகனும், மகளும், சீரும் சிறப்புமாய் வாழ்ந்தாலும், பெரிய மகளின் இந்த நிலை அவர்களின் கண்களில் ரத்தக் கண்ணீர் வர வைத்தது. ஆனாலும் எதுவும் செய்ய முடியவில்லை.

யார் பேச்சையும் கேட்பவர் அல்ல ஸ்வாதி. இப்போது வாசுதேவன் இருப்பது அவர்களின் ஹோட்டல் தான். மகனையாவது எங்களுடன் விடு என்றதற்கு.. எனக்கு உயிர்ப்பு அவன் தானே என்று விட்டார். உயிர்ப்பு மட்டு மல்ல வடிகாலும் கூட, அவருடைய வாழ்க்கை மீதான கோபங்கள் அத்தனையும் வாசுவிடம் மட்டுமே காண் பிப்பார்.

சில சமயம் கணவரை சமாளிக்க முடியாமல், இய லாமையின் உச்சியில் இருக்கும் பொழுது வாசுதேவ னுக்கு அடி கூட விழும் ஸ்வாதியிடம் இருந்து. மௌன மாக வாங்கிக் கொள்வான்.

ஸ்வாதியின் பெற்றோர்களின் தொடர் வேண்டு கோளுக்குப் பின் தற்பொழுது ஒரு இரண்டு மாதமாக ஹோட்டல் வர ஆரம்பித்து இருந்தான்.

ஸ்வாதி அவனை அனுப்ப ஆரம்பித்து இருந்தாலும், வேலை செய்யட்டும், இன்னும் பொறுப்பெடுக்க அவன் தயாராகவில்லை என்று விட்டார்.

அதுதான் இந்த மேனேஜர் போஸ்ட்!!!

''ஏன்ட்ரா பாபு, ஏமாயிந்தி செப்பு..'' என்று மகனின் அருகில் அமர்ந்து வினவ,

''ஏமி லேதம்மா!'' என்று அம்மாவைப் பார்த்து புன்னகைத்தான்.

அவர்களின் உரையாடல்கள் தெலுங்கில் தான் தொடர்ந்தன..

''இல்லை, எனக்கு என்னவோ உன்கிட்ட வித்தியாசம் தெரியுது.''

''கண்ணாடி மாத்துங்க முதல்ல!''

''நான் இன்னும் கண்ணாடியே போடலை, அப்புறம் எப்படி கண்ணாடி மாத்துவேன்!''

''அப்போ முதல்ல போடுங்க, அப்புறம் மாத்துங்க!'' என்றான்.

எல்லாம் உறங்கிக் கொண்டிருந்த தந்தையின் அருகில் அமர்ந்தபடி தான்.. இருவரின் பார்வையுமே அடிக்கடி அவரைத் தொட்டு தொட்டு மீள, இனிமை யான பேச்சுக்கள் என்றாலும், இலகுத்தன்மை இருந் தாலும், ஒரு சந்தோஷம் அம்மாவிடமோ மகனிடமோ வரவில்லை.

எப்போதும் இருக்கும் சூழல் இருவருக்குமே மனதில் வந்து வந்து போகும் தந்தையின் நிலை. உறக்கம் கூட மருந்துகளின் உதவியால் தான். நாளுக்கு நாள் நலிந்து மெலிந்து விட்டார்.. உடலிலுமே மருந்து மாத்திரை

களின் தாக்கம் அதிகமாகி விட்டதால் உடல் உறுப்புகள் சிதிலமடைய ஆரம்பித்து விட்டது.

தற்பொழுது வலிகளும் சேர்ந்து கொள்ள.. அவரிடம் ஆர்ப்பாட்டங்கள் அதிகமாக ஆரம்பித்தன. அதனால் அந்த ஆர்ப்பாட்டத்தை குறைக்க மாத்திரை, கூட வலி மாத்திரை, நித்திரையில் இருந்தார்.

சட்டென்று ஒரு மௌனம் சூழ, அம்மாவின் கண்கள் கண்ணீரைக் காட்ட, அம்மாவின் கையை ஆதரவாக பிடித்தான்.

''ரொம்ப கஷ்டப்படறார், இன்னைக்கு எல்லாம் என்னால சமாளிக்கவே முடியலை'' என்றார் ஸ்வாதி.

அதற்குள் ''வாசு!'' என்ற பாட்டியின் குரல் கேட்க... அங்கே எழுந்து சென்றான்.

தாத்தாவும் படுக்கையில்.. அவருக்குமே காய்ச்சல்.. ''ரொம்ப காய்ச்சல் அடிக்குதுடா கண்ணா'' என்றார்.

''ஹாஸ்பிடல் போகலாம் பாட்டி'' என்றவன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு, ஆட்டோவை வரவழைத்து.. ''நீங்க வராதீங்க, நான் போயிட்டு வர்றேன்'' என்று பாட்டியிடம் சொல்லிக் கொண்டு.. தாத்தாவை ஒரு குழந்தையைப் போல இரு கைகளிலும் தூக்கிக் கொள்ள, ஆட்டோ ஓட்டுனர் உதவி செய்ய, கிளம்பினர்.

பார்த்திருந்த பாட்டிக்கு, ''இப்படி இந்த பையன் கஷ்டப்படுகிறானே, பகவானே எங்களை எல்லாம் உன்னுடன் அழைத்துக் கொள், இவனுக்கும் இவனின் அம்மாவிற்கும் ஒரு நிம்மதியை கொடு'' என்று மனமுருக வேண்டினார்.

"எனக்கும், என் கணவருக்கும், என் மகனிற்கும், ஒரு நல்ல சாவைக் கொடுத்துவிடு!" என்றும் வேண்டினார்.

கண்கள் கலங்கி அவர் நிற்க, "சரியாகிடும் அத்தே! நீங்க வாங்க!" என்று ஸ்வாதி சொல்ல, ஒன்றும் சொல் லாமல் முகத்தை மருமகளுக்காக சாதாரணமாக வைத்து கொண்டார்.

அவர் வந்து அமர, அவரின் முகத்தை வைத்து மாமியார் சோர்வாக இருப்பதைப் பார்த்து, உடனடியாக காபி போட்டு, அவரின் முன் வந்து நீட்ட, கலக்கத்தில் அவருக்கு கைகள் நடுங்க, இருங்க! என்று ஸ்வாதியே புகட்டினார்.

"பூர்வ ஜென்ம பாபங்கள் தங்கள் மகனுக்கு இப்படி செய்தாலும், ஏதோ ஒரு புண்ணியம் இவளை எங் களுக்கு மருமகளாக்கியதோ" என்று தோன்றியது.

ஜனனிக்கு அன்று கல்லூரி விடுமுறை, வீட்டில் தான் இருந்தாள். அவினாஷிற்கும் ரகுலனிற்கும் கல்லூரி இருந்தது. ஹாலில் அமர்ந்து படித்துக் கொண்டிருக்க, அங்கே தான் அவளின் தாத்தாவும் பாட்டியும் கூட அமர்ந்து இருந்தனர்.

அங்கே வந்த அவளின் பெரியம்மா அனுராதா, "அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாம் அத்தை, ஹாஸ் பிடல்ல சேர்த்து இருக்காங்களாம், நான் போகட்டுமா?" என்று கேட்டார்.

தற்பொழுது பூரணியின் திருமணத்திற்கு பிறகு தான், பெற்றவர்களிடம் பேச ஆரம்பித்து இருந்தார் கைப்பேசி யில். இன்று பெற்றவர்களின் ஞாபகம் சற்று அதிகமாக

இருக்க, அதன் கொண்டு அழைக்க, அப்பா ஹாஸ் பிடலில் இருப்பது தெரிய, உள்ளமும் உடலும் அவரைக் காண பரபரத்தது.

''போயிட்டு வா அனு!'' எனவும் உடனே அவர் அவசரமாக கிளம்ப, கேட்டுக் கொண்டிருந்த ஜனனிக்கு வாசு அங்கே இருப்பான் தானே என்று உரைத்தது.

வாசு பேசிய நாளாக திரும்ப அவனிடம் பேசத் தைரியமில்லை, காதல் இருக்கிறதா என்று தெரிய வில்லை, இருந்தாலும் ஒத்துக் கொள்ள எல்லாம் தைரிய மில்லை.

வாசுவே எந்நேரமும் மனதில் இருந்தான். ஏதாவது போன் அடித்தால் அவனோ என்று தான் மனம் ஆவ லாக எதிர்பார்த்தது. வாசு அழைக்காத பொழுது ஒரு ஏமாற்றம் மனதினில்.

இப்போது பெரியம்மா கிளம்பவும், ''நானும் வரட்டுமா பெரியம்மா'' என, தனியாக கிளம்பிய அவரும் உடனே வா என,

கார் இருந்தாலும் கார் ஓட்ட ஆண்கள் யாரும் இல்லாததால் ஆட்டோவில் கிளம்பினர்.

அங்கே ரூம் தேடிப் போய் பார்க்க, தாத்தாவிற்கு ட்ரிப்ஸ் ஏறிக்கொண்டிருக்க பாட்டி அருகில் அமர்ந்து இருந்தார். அனுராதாவை பார்த்ததும் கண்கள் கலங்க, அம்மாவைப் பார்த்ததும் அனுராதாவும் கண்கள் கலங்க, இருவரும் பேச ஆரம்பிக்க,

கூட இருந்த ஜனனிக்கு வாசு இல்லையா என்று ஏமாற்றமாக இருந்தது.

பேசிக் கொண்டு இருந்தவர்கள், ''நீங்க மட்டும் தான் இருக்கீங்களா அம்மா?'' என்று கேட்க,

''இல்லை அனு, வாசு இருக்கான், இப்போ தான் வீட்டுக்கு குளிச்சிட்டு வரேன்னு போனான், நேத்து காய்ச்சல்ன்னு காட்ட வந்தவரை அட்மிட் பண்ணிட்டாங்க, அவனே தான் இருந்தான். இன்னைக்கு காலையில தான் நான் வந்தேன், வீட்டுக்குப் போயிட்டு வரேன்னு போனான், வந்துடுவான்'' என சிறிது நேரத்திலேயே உணவு எடுத்துக் கொண்டு வாசு வந்துவிட்டான்.

ஜனனியை எதிர்பார்க்கவில்லை, ''வாங்க அத்தை'' என்று வாய் மொழியாக அனுராதாவிடம் பேசினாலும், ஜனனியைப் பார்த்ததும் முகத்தில் தானாக ஒரு பரவசம்.

ஜனனியின் கண்கள் அவனை ஒரு தயக்கத்தோடு பார்த்தது, கூடவே புன்னகைப்பதா வேண்டாமா என்று யோசனை.

''என்ன சொல்றாங்க வாசு.''

''செஸ்ட் இன்ஃபெக்ஷன் இருக்காம் அத்தை. ஒரு ரெண்டு நாள் இருந்து ஆன்டிபயாடிக்ல கண்ட்ரோல் வருதான்னு பார்ப்போம்ன்னு சொன்னாங்க.''

''ஒண்ணும் பயமில்லையே.''

''இல்லைன்னு தான் சொல்றாங்க.''

''அப்பா எப்படி இருக்கார்.''

''இருக்கார்'' என்பது போல தலை மட்டும் தான் ஆடியது. திரும்பவும் ஒரு மௌனமான சூழல், வாசுவின் முகத்திலும் வருத்தத்தின் சாயல்,

தனக்கு இன்னும் அவன் வீட்டினரைப் பற்றி எதுவும் தெரியாது என்பது ஜனனிக்கு அப்போதுதான் உரைத்தது. வாசுவின் முகத்தில் வருத்தத்தை பார்த்ததும் அதைப் போக்க வேண்டும் என்ற உந்துதல்.

இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு, ''மெடிசின் ஏதாவது வாங்க சொன்னாங்களா பாட்டி'' என,

பாட்டி ஒரு சீட்டைக் கொடுக்க, ''நான் வாங்கிட்டு வந்துடறேன்'' என போனான்.

''பேசிட்டு இருங்க பெரியம்மா, நான் வெளில உட்கார்ந்து இருக்கேன், பிரண்ட் கிட்ட ஒரு போன் பேசணும்'' என்று சொல்லி ரூமை விட்டு வெளியே வந்து ரூமின் முன் இருந்த ஒரு பெரிய பென்ச் போன்றதில் அமர்ந்து வாசுவிற்காகப் பார்த்து இருந்தாள்.

வாசு வந்தவன், அந்தத் தளத்தில் இருந்த சிஸ்டரிடம் அந்த மருந்தை கொடுத்து, ரூம் நோக்கி வந்தவன், அங்கே ஜனனி அமர்ந்து இருப்பதைப் பார்த்து சற்று இடைவெளி விட்டு அருகில் அமர்ந்தான்.

வாசுவும் பேசவில்லை, ஜனனியும் பேச முயலவில்லை.

திரும்பி அவனை பார்த்தாள், புன்னகைக்க முயன் றாள், ஆனால் வருவேனா என்றது. வாசுவும் அவள் புன்னகைக்க முயல்வதையும் முகத்தில் ஒரு தயக்கம் இருப்பதையும் பார்த்து இருந்தான்.

ஜனனி என்ன செய்யப் போகிறாள் என்பது போல பார்த்து இருக்க, இருபுறமும் கை வைத்து அமர்ந்து இருந்தான் வாசு.

மிகுந்த தயக்கம் தான் கையைத் தொடுவதற்கு, ஆனால் கை பிடிக்க தயக்கம் இல்லை, ஜனனி அவனின் கை மேல் கை வைத்தவள், அதில் நானிருக்கிறேன் என்பது போல ஒரு அழுத்தம் கொடுக்க, எப்போதும் விளையாட்டுப் பெண்ணாய் தெரியும் ஜனனி, அவனின் கண்களுக்கு அப்பொழுது அப்படித் தெரியவில்லை.

நேற்று அவனின் அம்மாவிடம் அவன் ஆறுதல் சொன்ன ஒரு உணர்வை இன்று ஜனனி அவனுக்குக் கொடுத்தாள்.

அவனின் முகம் அப்போதும் தெளியாததை போலத் தோன்ற,

''எப்போ வேணா ஐ லவ் யு சொல்வேன்னு சொன் னீங்க! எப்போ சொல்வீங்க?'' என ஜனனி அவனைப் பார்த்து புருவம் உயர்த்தி ஏதோ ஒரு சாதாரண பொருளைக் குடுங்க என்பது போலக் கேட்க,

இப்போது அவளின் முகத்தில் குறும்புத்தனம் அப் படியே மீண்டு இருந்தது.

அதையே வாசு ரசித்துப் பார்த்திருந்தான். மனதில் இருந்த ஒரு அழுத்தம் வாசுவிற்குப் பெரிதாக குறைந்தது. அவனின் முகமும் தெளிய கூடவே ஒரு புன்னகையும் தோன்ற..

ஜனனியின் கண்கள் அவனைப் படமெடுத்தது, நான் உன்னைப் பார்க்கிறேன்! என்று கண்கள் அவனோடு மொழிந்தது.

**விழியில் விழி மோதி இதயக் கதவு இன்று திறந்ததே..**

**இரவு பகலாக இதயம் கிளியாகிப் பறந்ததே..**

**ஏ.. காதல் நெஞ்சே.. யாரோடு சொல்வேன்..**

**வந்து போன தேவதை... நெஞ்சை அள்ளிப் போனதே..**

**நெஞ்சை அள்ளிப் போனதே!!!**



# 8

வாசு ஜனனியையே சிறிது நேரம் பார்த்திருந்தவன், தெளிந்த மனதை கட்டுக்குள் கொண்டு வந்தான். தனது கைகளை ஜனனியின் கைகளிடம் இருந்து உருவிக் கொண்டவன்.. கூடவே சாரி என,

''எதுக்கு சாரி? என் போன் எடுக்காததுக்கா'' என்றாள் இலகுவாகவே ஜனனி.

''இல்லை'' என்பதுப் போல தலை அசைத்தவன்.. ''ஐ லவ் யு சொல்வேன்னு சொன்னதுக்கு'' என,

ஜனனியின் முகம் என்ன பேசுகிறான் இவன் என்பதுப் போல பார்த்தது.

விளக்கம் சொல்ல வேண்டிய அவசியத்தை உணர்ந்தவன், ''அது உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.. என்னோட கவலைகள் என்னை சூழாத போது எனக்கு உன்னோட ஞாபகம் தான்.. நான் உன்கிட்ட பேசும்போது என்னையே மறந்துடறேன்.. ஒரு மாதிரி ரொம்ப சந்தோஷமா இருக்கு.. ஐ லவ் யு ன்னு கத்தணும் போல

ஆசையாயிருக்கு! அதுதான் உன்கிட்ட அப்படி சொன் னேன்!'' என்று நிறுத்தினான்.

வாசுவின் பாவனைகள் காதல் சொல்வது போல இல்லை, ஜனனியின் முகம் குழப்பத்தைத் தத்தெடுக்க..

''இப்போ அது தப்பு மாதிரி தோணுது!'' என்றான்,

ஜனனியின் முகம் அதிர்ச்சியை தாங்கி அவளின் விழிகள் தானாய் விரிந்தது.

''ஐ மீன் உன்னை லவ் பண்றது இல்லை! ப்ளீஸ் சரியாப் புரிஞ்சிக்கோ! அப்படி உன்கிட்ட சொல்றது! ஏன்னா இது என்னோட வயசு கிடையாது.. மே பீ உன்னை விட சில மந்த்ஸ் தான் பெரியவனா இருப்பேன், இது என்னோட அனுமானம்.. பொண்ணுங் களுக்கு இது ரைட் ஏஜ், ஆனா பசங்களுக்குக் கிடையாது இல்லையா! என்னோட வீடு இப்போ இருக்குற சூழல்ல, நான் லவ் பண்றேன்னு சொல்றதே எனக்கு ரொம்ப கில்டியா இருக்கு!''

முதலில் அதிர்ந்தாலும் ஜனனி இடையில் பேசவே யில்லை.. பேச முற்படவுமில்லை.. அமைதியாக கேட்டுக் கொண்டு இருந்தாள்.

''அதுவும் அம்மாக் கிட்ட என்னால சொல்லவே முடியாது!'' என்றான், சொல்லும் போதே முகத்தில் அவ்வளவு குற்ற உணர்ச்சி..

அவன் உணர்ச்சி வசப்படுவது தாளாமல், ஹேய், ஈசி! இதுக்கு இவ்வளவு நீங்க கில்டியா ஃபீல் பண்ண வேண்டாம், இதுவரைக்கும் உங்களுக்கு எப்படியோ? எனக்கு என்னோட பேசிகிட்டு இருந்த பிரண்ட்

திடீர்ன்னு இப்படி சொல்லிட்டாறேன்னு ஒரு ஷாக்.. அப்புறம் ஏன் இப்படின்னு ஒரு எண்ணம்? அதுவே உங்களை எப்பவும் நினைக்க வெச்சது.. இப்போ உங்களைப் பார்க்கணும் போல தோண வந்துட்டேன்!''

''அவ்வளவு தான்... நீங்க ரொம்ப அப்செட்டா இருக்கவும் தான் அப்படிப் பேசினேன்.. உங்க லவ்வை அக்செப்ட் பண்ணினா என்னன்ற மாதிரி.. பட் எனக்கு உங்க மேல லவ் இருக்கான்னு இதுவரை தெரியலை.''

''ஆனா இப்போ லவ் பண்ணினா என்னன்னு தோணுது..'' என்றாள் முகத்தில் ஒரு மென்னகையுடன்.

''வேண்டாம்! வேண்டாம்! இது சரிவராது!'' என்றான் வாசு அவசரமாக.

''ஓஹ்! அப்படியா! சரி வேண்டாம்!'' என்றாள் உடனே.

அப்படியே அவனின் முகம் ஏமாற்றத்தை பூசியது.

''இது என்னங்க? சரின்னு சொல்ல வந்தாலும், லவ் சொல்லவே வேண்டாம் சொல்றீங்க! வேண்டாம்னு சொன்னாலும் உங்க முகம் இப்படியாகிடுது!'' என்றாள்.

''நீ என்ன ஃபீல் பண்ற?''

''அதான் சொன்னேனே லவ் பண்ணினா என்னன்னு தோணுது! ஆனா அது தானா தாங்க வரணும்.. இவ்வளவு யோசிக்காதீங்க...'' என்று தோளைக் குலுக்கி அவள் சிரித்த போது மனது ரசிக்க முற்பட்டாலும் என்ன சொல்லுகிறாள் என்று புரியவில்லை.

''காதல் சொன்னா மனசு முழுக்க ஒரு சந்தோஷம், ஒரு பரவசம் இருக்கணும். சொல்றதுக்கு முன்னாலயே

இவ்வளவு டென்ஷன் இருக்கும் போது சொல்ல வேண்டாம்! ஸ்டே கூல்!'' என்றபடி எழுந்தாள்.

''நீ என்னை லவ் பண்ணறியா இல்லையா?'' என்றான்.

''நான் அதை யோசிக்கறதா இல்லை!'' என்றபடி உள்ளே சென்றவள், சிறிது நேரத்தில் அவளின் பெரியம்மாவுடன் வெளியே வந்து, அவர் வாசுவிடம் பேசியதை வேடிக்கை பார்த்திருந்து ஒரு சிறு தலையசைப்புடன் சென்று விட்டாள்.

''இவளையா விளையாட்டுப் பெண் என்று நினைத் தேன். இல்லவே இல்லை.. நான் தான் இப்பொழுது அப்படி இருக்கிறேன் போலும் என்று தோன்றியது.. அப்பொழுது மட்டுமல்ல அதற்கு பிறகும்...

அதன் பிறகு ஒரு மாதம் வரை இயல்பு போல வேலைகள் நடந்தாலும், ஜனனி மனதின் ஓரத்தில் எப்பொழுதுமே இருந்தாள். ''பேசு! அவளிடம் பேசு!'' என்று மனது அடித்துக் கொண்டே இருந்தது.

என்ன எதிர்பார்க்கின்றான் அவன் என்று அவனிற்கே தெரியவில்லை, எப்பொழுதும் யாரிடமும் எதையுமே பகிராதவன் வாசு, இப்பொழுது இதை யாரிடம் சொல்வான்.

ஜனனி அழைப்பாளோ, அழைப்பாளோ என்ற தவிப்பும் கூடவே... ஏனோ ஒரு இனம் புரியாத வேண் டுதல் கடவுளிடம் கூட.. சரி வராது.. தன்னால் அவளை நோக்கி எந்த அடியும் எடுத்து வைக்க முடியாது என்று தெரிந்தும்.. ''ஜனனிக்கு என்னைப் பிடிக்க வைத்து விடு

கடவுளே! இது நடக்குமோ? நடக்காதோ? அது வேறு விஷயம்!''

''அவளுக்கு என்னைப் பிடிக்க வேண்டும்!'' என்று மனது அடித்துக் கொண்டது.

வாசுவாக ஒரு நாள் தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல் குரலையாவது கேட்போம் என நினைத்து..

ஜனனியின் தொலைபேசி எண்ணிற்கு அழைக்க... இந்த தொலைபேசி எண் தற்போது உபயோகத்தில் இல்லை என வந்தது.

''ஏன்? ஏன் நம்பர் உபயோகத்தில் இல்லை என வருகிறது?'' என தலை குடைய... ஒரு முறை ஜனனி அழைத்த இமானின் எண்ணை சேமித்து இருந்தவன், இமானிற்கு அவன் கல்லூரியில் இருக்கும் சமயம் பார்த்து அழைத்தான்.

''ஹாய் இமான்! நான் வாசு பேசறேன்! ஜனனி கசின், அவங்களோட பேச முடியுமா?'' என்றான்.

''அவ இன்னைக்கு காலேஜ் லீவ் வாசு, பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு ரக்ஷா சொன்னா!'' என,

வாசுவின் கையினில் இருந்த கைப்பேசி தானாக நழுவியது.

திரும்ப எடுத்துப் பார்த்தால் அது வேலை செய்ய வில்லை. ''நான் ஐ லவ் யு சொல்லியிருக்க வேண்டும்.. அவசரப்பட்டு அதையும் இதையும் நினைத்து சொல் லாமல் விட்டது தவறு.''

''இப்பொழுது ஐ லவ் யு சொல்லாமல் விட்டதனால் மட்டும் என்னுடைய சூழல் மாறிவிட்டதா என்ன?

ஜனனியை இழப்பதா?'' தலையில் கை வைத்து அமர்ந்து விட்டான்.

அங்கே ஜனனிக்கும் அதே நிலை தான்..

அன்று ஹாஸ்பிடலில் இருந்து வரும் பொழுதே பெரியம்மாவிடம் வாய்க் கொடுத்து, வாயைக் கிண்டி, கிளறி, எல்லா விவரங்களையும் அக்கு வேறு ஆணி வேறாக பெரியம்மாவின் கண் பார்வையில் வாங்கியிருந் தாள்.

முதல் அதிர்ச்சி வாசுவின் அம்மா தங்கள் ஆட்கள் அல்ல, என்ன தெலுங்கா..? அதுவும் காதல் திருமணமா..? அதுதான் பெரியப்பாவிற்கு வாசுவின் அம்மாவைக் கண்டால் ஆவதில்லையா?

இவர்கள் வீட்டினர், அடுத்தவர் வீட்டில் காதல் திருமணம், வேற்று ஆட்களுடன் செய்தாலே ஆகவே ஆகாது.. அவர்களை முறைத்துக் கொண்டு திரிவர். இதில் அவளை எப்படி அனுமதிப்பர்.. மாட்டவே மாட்டர்.

தங்கள் இனம், உறவினன், என்ற சில சலுகைகள் இருக்கவும் தான் அவளின் மனம் அவன் புறம் சாய முற்பட்டது. இப்போது இல்லையா? அய்யகோ? என்று வசனம் தான் பேசியது. ஆயினும் விளையாட்டுத் தனத்தை விட்டு சூழலை ஆராய்ந்தாள், ஆதலினும் விளையாட்டுத்தனம் அவளை விட்டு எங்கே போகும்.

''அது மட்டுமா? இந்த லூசுப் பயல்.. நீ அழகா இருக்கன்னு தோணலை?.. உன்னைப் பிடிக்கணும் தோணலை? ஆனா நடந்துடுமோன்னு பயமா

இருக்குன்னு கூடச் சொல்லாம, எப்போ வேணா ஐ லவ் யு சொல்வேன்னு என்னைக் குழப்பி விட்டுட்டு இப்போ சரி வராது, தெரியாம சொல்லிட்டேன்னு சொல்றான். டேய் வாசு! உன் மண்டையை உடைச்சா என்ன?'' என்று தான் தோன்றியது.

''இவனே இப்படிச் சொல்லும் பொழுது, அவனிடம் நான் சொன்னது தான் சரி! நான் இவனைக் காதலிக் கிறேனா இல்லையா என்று யோசிக்கவே கூடாது!'' என்று நினைத்தவள்..

வாசுவின் போன் நம்பர் இருந்தால் தானே அழைப் போம் என நினைப்போம், இல்லை அவன் அழைக் கிறானா மெசேஜ் செய்கிறானா என்று பார்த்துக் கொண்டே இருப்போம்! முதலில் அவனின் நம்பர் எனக்கு தெரியவே வேண்டாம் என்று நினைத்து சிம்மை டீ அக்டிவேட் செய்து தூக்கிப் போட்டு விட்டாள்.

ஆனால் மனதில் இருந்த வாசுவின் கைப்பேசி எண்ணை எந்த அழிப்பானை வைத்து அழிப்பது. தன் மனது வாசுவின் புறம் போகாமல் இருக்க ஆன முயற்சி எடுத்தாள் அவளாகவே. தனக்கென்று கைப்பேசியே வைத்துக் கொள்ளவில்லை.

''ஒரு அவசரம்னா எப்படி கூப்பிடறது? போன் இல் லாம எப்படி?'' என்றுக் கேட்ட செல்லம்மாளிடம்,

''நான் எங்கே தனியா போறேன், கிளாஸ்ல ரக்ஷாக்கு கூப்பிடு!'' என்று விட்டாள்.

''ஏன் போன் வேண்டாம்?'' என்று அப்பா அம்மா கேட்க,

"எப்போ பார்த்தாலும் அதுலயே இருக்குற மாதிரி ஒரு ஃபீல் பா! கொஞ்ச மந்த்ஸ் கழிச்சு வெச்சிக்கறேன்!"

"உண்மையை சொல்லுடா? யாரும் எதுவும் தொந் தரவு பண்ணலையே?"

"இல்லைப்பா! அதுதான் என் சைட்ல ரெண்டு பாடி கார்ட்ஸ் இருக்காங்களே! அவங்களை மீறி என்கிட்டே யார் வர முடியும்?" என,

"ஆமாப்பா! காலேஜ்ல எல்லாம் ஸ்மூத்தா தான் போகுது, எந்த ப்ராப்ளமும் இல்லை!" என்று அவினாஷும் அடித்துச் சொல்ல... பெற்றோர்கள் பாரம் நீங்கியவர் களாக இருந்தனர்.

அந்த சமயத்தில் ஒரு மாப்பிள்ளை பூரணியைத் திருமணம் செய்து கொடுத்த வகையில் இருந்து வந்தது.

"பூரணி கல்யாணத்துல நம்ம ஜனனியைப் பார்த் தாங்களாம் பரதா! பொண்ணு கேட்கறாங்க? என்ன சொல்லலாம்?" என்று லக்ஷ்மணன் தந்தையின் முன் னிலையில் தம்பியிடம் சொல்ல,

"ஆளுங்க எப்படிண்ணா?"

"வசதி வாய்ப்புள ஒரு படி நம்மளை விட மேல தான். ஆளுங்களும் நல்ல மாதிரி தான் தெரியறாங்க.. அடிமை வேலையில்லை, சொந்த தொழில் தான்! ஒரே பையன்.. ஜாதகம் வாங்குவோம்! சரி வந்தா மேற்கொண்டு பேசலாம்!" என்று முடிவெடுத்தனர்.

''மாப்பிள்ளை பார்க்கலாமா?'' என்று ஜனனியிடம் யாரும் கேட்கவில்லை. முதலில் அவர்களுக்குத் திருப்தி யானால் தானே பெண்ணிடம் கேட்பார்.

அதனால் அவர்கள் ஜாதகம் பார்த்து, பொருத்தம் பார்த்து, பையனைப் பார்த்து, அவனின் சொத்து, சுகம், திறமை, தோற்றம், எல்லாம் பார்த்து, அவர்கள் அத்தனை பேருக்கும் பிடித்த பிறகு தான் ஜனனியிடம் சொன்னர்.

''என்ன? அதுக்குள்ள கல்யாணமா!'' என்றவளின் பேச்சு யார் காதிலும் விழவில்லை.

''பூரணிக்கும் தான் ரெண்டு வருஷமா பார்த்தோம்! அவளுக்கு உடனே அமையலை! அதனால் வேலைக்கு போனா! நீ அதைப் பத்தி பேசாதே!'' - அம்மா

''முதல்ல பையனைப் பாரு, அப்புறம் பேசு!'' - அப்பா.

அவருக்கு அவ்வளவு நம்பிக்கை மகளுக்குப் பிடித்து விடும் என்று. குறை சொல்ல எதுவும் இல்லை. தோற்றம், ஆஸ்தி, அந்தஸ்து, படிப்பு, எல்லாம் சிறப்பாக இருந்தது.

மனது வேறு ஒருவரிடம் இருக்கும் பொழுது எவ் வளவு சிறப்பாக இருந்தாலும் எப்படிப் பிடிக்கும் என்று யோசிக்கவில்லை! ஏனென்றால் ஜனனிக்கு யாரை யாவது பிடிக்கும் என்று அவர்கள் நினைத்ததே இல்லை.

அதையே தான் வாசுவும் நினைத்தான், ''ஜனனிக்கு என்னை பிடிக்கவில்லை'' என.

அதையே தான் ஜனனியும் நினைத்தாள், ''எனக்கு வாசுவைப் பிடித்திருக்கிறதா? இல்லையா?'' என,

ஆனால் யார் நினைத்து என்ன பயன்?.. இங்கு அவளை அலங்கரித்து இருக்க.. மாப்பிள்ளை தனது அப்பா அம்மாவுடன் பெண் பார்க்க ஹாலில் அமர்ந்து இருந்தான்.

மாப்பிள்ளைக்கு பிடித்து விட்டால் அவ்வளவு தான்.. அதன் பிறகு ஜனனியின் கையினில் எதுவும் இல்லை என்று அவளுக்குத் தோன்றியது. பின்னே அதற்குள்ளா கவே மாபிள்ளையின் அருமை பெருமைகள் கேட்டு நொந்து விட்டாள்.

''அக்கா! மாப்பிள்ளை ரகுநாதன் செம ஹேன்ட்சம்'' என்று அவினாஷ் ரன்னிங் கமன்ட்ரி கொடுக்க,

''அதை நான் சொல்லணும்'' என்றாள் ஜனனி.

''உன் முகத்தை பார்த்தாலே நீ சொல்லுவன்னு தோணலையே!'' என்று மனதிற்குள் சரியாக நினைத்தான் அவினாஷ், ஆனால் வெளியில் சொல்லவில்லை.

சொன்னால், ''அப்போ உனக்கே எனக்கு பிடிக்காதுன்னு தெரியுது தானே! மாப்பிள்ளையைத் திருப்பி அனுப்பி விடு!'' என்று அக்கா சொன்னாலும் சொல்லுவாள் என்று வாயில் பசை போட்டுக் கொண்டான்.

'இந்த வாசு எதையாவது தெளிவாக சொன்னானா?' என்று மனதிற்குள் நினைத்தவாறு பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள் ஜனனி. எதிரில் இருந்தால் அடித்து துவைத்து விடும் ஆவேசம் தான்.

அவள் கண்டாளா என்ன வாசு தேவன் எதிரில் வந்து நிற்பான் என்று?

அதன் பின் நிகழப் போகும் அனர்த்தங்கள்!!!



# 9

என்ன பெண் பார்க்க வருகிறார்களா? அதன் பின் நிலை கொள்ளவில்லை வாசுதேவனுக்கு.. அவன் முன் காதல் சொல்ல முடியாமல் நின்ற காரணங்கள், அவ னின் பொறுப்புகள், எல்லாம் பின்னுக்கு ஓடி விட்டன.

தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை.. எப்படியாவது பார்த்தே ஆகவேண்டும் என்று ஆவல் உந்த,

பெண் பார்க்க மாலையில் தானே வருவார்கள் என்று தோன்ற, பாட்டியிடம் பேசி, ஒரு காரணத்தை உருவாக்கி, அத்தையைப் பார்க்க செல்வது போல ஜனனியின் வீட்டிற்கு ஒரு பன்னிரண்டு மணி போல சென்றான்.

ஹோட்டலில் வேலை செய்யும் ஒரு பையனை ஜனனியின் வீட்டில் விடச் சொல்லி அவனோடு வந்தான். ஆம்! வாசுவிடம் பைக் கிடையாது, அதையும் விட அவனுக்கு அதை ஓட்டவும் தெரியாது. ஒரு முறை பழகச் சென்ற போது, அவனின் நேரமோ என்னவோ முதல் நாளே தடுமாறி விழுந்து விட்டான்.

நெற்றியில் சிறிது காயமும் ஆகிவிட, அதன் கொண்டு ஸ்வாதி அன்று மிகவும் டென்ஷனாகி விட்டார். பைக் ஆக்சிடண்டில் தலையில் அடிபட்டு தான் வாசுவின்

தந்தையின் நிலை இப்படி ஆகிவிட்டது. அந்த நினைவுகள் ஒரு பெரும் பயத்தைக் கொடுக்க, அதன் பிறகு வாசுவை பைக் கற்றுக் கொள்ள விடவில்லை.

அம்மாவிற்குத் தெரியாமல் கற்றுக் கொள்ளலாம் தான், தடுப்பவரோ அம்மாவிடம் சொல்பவரோ யாரும் கிடையாது தான். ஸ்வாதிக்கு பிடிக்காத எதையும் செய்து பழக்கம் இல்லாத காரணத்தால் வாசு இன்னும் அதைப் பற்றி யோசித்ததில்லை.

அம்மாவிற்கு தன்னால் ஒரு சிறு மன சுணக்கமும் வந்து விடக் கூடாது என்பதில் அவ்வளவு கவனமாக வாசு இருப்பான்.

இன்று இந்த மணித்துளிகளில் அம்மாவைப் பற்றிய ஞாபகமே இல்லை. ஜனனி மட்டுமே அவனின் ஞாபகத்தில்... எப்படியாவது அவளை பார்த்துக் காதல் உணர்த்தி விட வேண்டும் என்று ஒரு வேகம்.

அது எந்த அளவில் சாத்தியம் என்றெல்லாம் யோசிக்கவில்லை. கேட்டின் உள் நுழைந்த பிறகு தான் அங்கே இரண்டு மூன்று கார்கள் நிற்பதை பார்த்தவன், யாரோ வந்திருக்கிறார்கள் போல ஒரு வேளை மாப்பிள்ளை வீட்டினரோ, நினைவே கசந்த போதும், இப்போது சென்று நிற்க முடியாது.. திரும்புவோமா என்று நினைக்க.. சரியாக அந்த நேரம் பார்த்து ரகுலன் அவனைப் பார்த்து விட்டான்.

''வாங்க, வாசு அத்தான்!'' என்று ஆர்வமாக அருகில் வந்தவன், வாங்க! உள்ள வாங்க! என்று கைப் பிடித்து அழைத்துச் செல்ல முயல,

''அத்தைக் கிட்ட சொல்லணும்னு பாட்டி ஒரு விஷயம் சொல்லி விட்டாங்க, உள்ள வீட்ல கெஸ்ட் போல, நான் அப்புறம் வர்றேன்'' என்று திரும்பிச் செல்ல முயன் றான்.

''வாங்க அத்தான் நீங்க! அது ஒண்ணுமில்லை, ஜனனி அக்காவை பொண்ணு பார்க்க வந்திருக்காங்க'' என்று கை பிடித்து விடுவேணா என்று மறுக்க மறுக்க உள் அழைத்துச் சென்றான்.

ஜனனி தன்னை எப்படி எதிர் கொள்வாளோ என்று மனது திக் திக் என அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

சரியாக அவன் உள்ளே செல்ல, ஜனனியை சில நிமிடங்களுக்கு முன் தான் வெளியே அழைத்து வந்து அமர வைத்து இருந்தனர்.

மாப்பிள்ளை பையனின் அம்மா ஏதோ கேட்க, அதற்கு பதில் சொல்லிக் கொண்டு இருந்தாள். வாய் மொழி உரைத்தாலும் மனது ''என்ன செய்ய? என்ன செய்ய? ஏதாவது செய்!'' என்று அவளிடம் சண்டை இட்டுக் கொண்டிருந்தது.

வாசு உள் நுழையவும், அவனைப் பார்த்த ஜனனியின் கண்களில் அப்படி ஒரு அதிர்ச்சி, பின் ஹப்பாடி வந்து விட்டாயா என்பது போன்ற ஒரு உணர்வு.. வாசுவிற்கு அதை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

வாசுவும் சில நொடிகள் அவளைப் பார்க்க, ஜனனியும் பதில் பார்வை பார்த்தது சில நொடிகளே!!!

**ஒரு காதல் என்பது என் நெஞ்சில் உள்ளது**

**என் நெஞ்சில் உள்ளது கண்ணில் வந்ததடி**

"நீங்க வாங்க வாசுத்தான்... நாம அந்த ரூம் போவோம்!" என்று வாசுவை வேறு ஒரு ரூமிற்கு ரகுலன் அழைத்துச் சென்றான். பார்த்துக் கொண்டிருந்தவர்களிடம்... "அம்மாவைப் பார்க்க வந்தாங்க!" என்று அவனின் அப்பாவிடம் சொல்லி போனான்.

ரகுலன் இவனிடம் பேச்சுக் கொடுக்க, மனது அவன் என்ன பேசினான் என்று உணரவில்லை, வெளியே என்ன நடக்கிறது என்ற எண்ணம் தான்.

"இருங்க என்ன நடக்குதுன்னு பார்த்துட்டு வர்றேன்" என்று வாசுவை அங்கே விட்டுப் போக...

சிறிது நேரத்தில் அங்கே அவன் அமர்ந்து இருந்த இடத்திற்கு அனுராதா, லக்ஷ்மணன், பரதன், செல்லம்மாள் எல்லோரும் வந்தனர்.. கூடவே ஜனனியும்... அங்கே மாப்பிள்ளை வீட்டினருடன் தாத்தாவும் பாட்டியும் பேசிக் கொண்டு இருந்தனர். யாரையும் அழைக்கவில்லை! வீடு வரை மட்டுமே வைத்துக் கொள்ளலாம். பிடித்தால் பின்னர் உறவுகளுக்குச் சொல்லிக் கொள்ளலாம் என்று இருந்தனர்.

அனுராதா வாசுவிடம் "நீ இங்கேயே இரு, ஒரு அஞ்சு நிமிஷம் வந்துடறேன்" என்று விரைந்து வந்து சொல்லிச் சென்றார்.

வீட்டினர் ஜனனியிடம் பையனைப் பிடித்து இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டு இருந்தனர். "அப்புறம் சொல்றேன் மா!" என்று செல்லம்மாளிடம் ஜனனி சொல்லிக் கொண்டு இருந்தாலும், ஓரக் கண்ணால் வாசுவையும் பார்வைத் தொட்டு மீண்டது.

வாசு ஜனனி என்ன சொல்லப் போகிறாள் என்று இமை எடுக்காமல் பார்த்து இருந்தான்.

''அப்புறம் எல்லாம் சொல்ல வேண்டாம்! இப்போவே சொல்லுவோம்! ரொம்ப நல்ல ஆளுங்களா தெரிய றாங்க, பையனை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்று செல்லம்மாள் சொல்ல,

ஜனனி அவரை முறைத்துப் பார்த்த பார்வை சொன்னது, ''உனக்கு பிடிச்சிருந்தா நீ பண்ணிக்கோ!'' என்று.

அந்தச் சூழலிலும் ஜனனி அவளின் அம்மாவைப் பார்த்த பார்வை வாசுதேவனை இலகுவாக்கியது என்றே சொல்ல வேண்டும்.

படபடத்த மனது அமைதி அடைய, ஜனனியைப் பார்த்து இருந்தான்.

அப்போதும் விடாமல் ''சரி'' என்று சொல் என்பது போல, மாற்றி மாற்றி ஆளுக்கொருவராக நிர்பந்தித் தனர். என்னவோ அவள் சின்னப் பெண்! அவளுக்கு ஒன்றும் தெரியாது என்ற பாவனையே!

ஒரு நொடி கண் மூடி திறந்தவள், முடிவெடுத்த வளாக, ''எனக்கு இவரைத் தான் பிடிச்சிருக்கு!'' என்று வாசுதேவனைக் காட்டினாள்.

வாசுதேவன் அதிர்ந்து எழுந்தே விட்டான்.. ஜனனி யின் இந்த தைரியத்தை அவன் எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் ஸ்தம்பித்து நின்றனர்.

தூர நின்று வேடிக்கைப் பார்த்திருந்த அவினாஷ், ''அக்கா! விளையாடாதே, இந்த விஷயத்துல எல்லாம்

விளையாடக் கூடாது!'' என அவசரமாக அருகில் வந்தான்.

''நான் விளையாடலை! ஐ அம் சீரியஸ்!'' என்றாள் நிறுத்தி நிதானமாக தெளிவாக.

''ஹப்பா! இவளா விளையாட்டுப் பெண்! எனக்குக் கூட இந்தத் தைரியம் கிடையாது'' பார்த்தது பார்த்தபடி நின்றான் வாசு.

லக்ஷ்மணனின் பார்வை அழுத்தமாக வாசுதேவன் மீது பதிந்தது. பரதனும் செல்லம்மாளும் இப்படித் தங்கள் பெண் பேசுவாள் என்று கனவிலும் நினைத்தது கிடையாது. அப்படியே நின்று விட்டனர்.

''நீ இங்க யாரை பார்க்க வந்த!'' என்ற லக்ஷ்மணனின் கேள்விக்கு..

''ஜனனியை'' என்று வாசு மறையாமல் உரைத்தான்.

அவ்வளவு தான் செல்லம்மாள் பரதனிடம் பாய்ந்தார்.. ''அவளுக்குச் செல்லம் குடுக்காதீங்கன்னு எத்தனை தடவை சொன்னேன், எப்பவாவது அவளைக் கண்டிச்சு இருக்கீங்களா! இப்போ அவளோட விளையாட்டுத்தனம் எதுல கொண்டு வந்து விட்டிருக்கு பாருங்க.. வெளில மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இருக்காங்க! எவ்வளவு தைரியமா இப்படி பேசறா!'' என்று ஆவேசமாக பேசத் துவங்க..

''ஷ்!'' என்று அவரை அடக்கிய பரதன்.. ''ஏற்கனவே உன் பொண்ணு என் மானத்தை வாங்கிட்டா! இனி நீயும் வாங்காத! சத்தமா பேசாதே வெளில ஆளுங்க இருக் காங்க!'' என்றவர்.

ஜனனியை நெருங்கினார், "நிஜமா தான் சொல்றியா!" என்ற அவரின் கேள்வி, அது கேட்ட விதம்..

ஜனனிக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது, இருந்தாலும் "ஆம்!" என்றே தலையாட்ட..

அவருக்கு வந்த கோபத்திற்கும், ஆத்திரத்திற்கும், ஓங்கி ஜனனியை கன்னத்தில் அறைய, தூரப் போய் விழுந்தாள். பொறி கலங்கி விட்டது என்றே சொல்ல வேண்டும்.. அப்பா அடிப்பார் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. எவ்வளவு குறும்பு செய்தாலும் அடித்தது கிடையாது.

வாசு வேகமாக அருகில் வர.. ஒற்றைக் கையால் அவனைப் பிடித்த லக்ஷ்மணன்.. "நீ உன் வீட்டுக்குக் கிளம்பு!" என்றார்.

அவினாஷும் ரகுலனும் ஜனனியிடம் விரைந்தனர்.

"இல்லை! ஜனனி மேல தப்பில்லை!" என்று அவன் சொல்ல வர..

"கிளம்புன்னு சொன்னேன்!" என்றார்.

அவரின் கையை விலக்கியவன்.. "அடிக்க வேண்டாம் அவளை!" என்றான்..

"என் பொண்ணு நான் அடிப்பேன்! கொல்லுவேன்! நீ கிளம்பு முதல்ல!" என்றார் பரதனும்.

என்ன செய்வது என்று தெரியாமல் ஜனனியைப் பார்த்து, "என்னோட வந்துடு!" என்றான்.

கண்களில் நீர் தளும்ப, அழுகை என் நேரமும் வெடிக்கும் என்ற நிலையில் பார்த்து இருந்தவள்.. 'வரமாட்டேன்!' என்பது போலத் தலையசைத்தாள்.

''அதான் வரமாட்டேன்னு சொல்றா தானே! கிளம்புடா!'' என்று பரதன் ஆக்ரோஷமாகக் கத்தினார்..

''கிளம்ப முடியாது! என்ன செய்வாய்?'' என்று வாசு வாய் மொழியாகக் கேட்கவில்லை, ஆனால் பார்வை அதை உணர்த்த பரதனை பார்த்து நின்றான்.

வாசுதேவனை அமைதியான வாய் பேசத் தெரியாத தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருக்கும் ஒரு பையனாகத் தான் அவர்களுக்குத் தெரியும். இப்படி ஒரு நிமிர்வை அவனிடம் யாரும் எதிர்பார்க்கவில்லை.

அனுராதா வேகமாக வாசு அருகில் வந்தவர்.. ''கிளம்பு வாசு! வெளில மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இருக் காங்க.. வெளில தெரிஞ்சா எங்களுக்கு அசிங்கம்! கிளம்பு!'' என்று மன்றாடிக் கேட்டார். ஒரு பையனை தங்கள் பெண் பிடித்திருக்கிறது என்று இப்படி மாப்பிள்ளை வீட்டினர் வெளியில் இருக்கும் போது சொல்வதைக் கருத்தில் கொண்டு சொன்னார்.

''எது அசிங்கம்? என்னைப் பிடிச்சிருக்குன்னு உங்க பொண்ணு சொல்றதா?'' என்றான் நிதானமாய்.

அனுராதாவிற்கு பதில் சொல்லவே வாய் எழவில்லை. வாசுவின் பார்வை, வாசுவின் வார்த்தை பிரயோகம், எல்லாம் எதிரில் நிற்பவருக்கு ஒரு கலக்கத்தைக் கொடுத்தது.

அவினாஷ் தான் ரகுலனிடம் ஜாடைக் காட்டி, இருவரும் வாசுவிடம் வந்தவர்கள்.. ''எதுன்னாலும் அப்புறம் பேசலாம் ப்ளீஸ் வாங்க!'' என்று அவினாஷ் சொல்ல,

எப்படி உள்ளே அழைத்து வந்தானோ, அதே போலவே ரகுலன் ''வாங்க வாசுத்தான்!'' என்று கைப் பிடித்து திரும்ப அழைத்து சென்றான்.

அப்போதும் அவினாஷை பார்த்து ''ஜனனியை அடிக்க வேண்டாம்னு சொல்லு.. அவரோட பொண்ணு தான்! அது என்னைக்கும் மாறப் போறது கிடையாது! அதை அடிச்சு நிரூபிக்க வேண்டாம்னு சொல்லு!''

''அடிக்க மாட்டாங்க! அடிக்காம நான் பார்த்துக்கறேன்!'' என்று அவினாஷ் ஸ்திரமாகச் சொல்ல,

ஜனனியை ஒரு பார்வை பார்த்துக் கிளம்பினான்.

கீழே விழுந்தவள் எழுந்திருக்கவில்லை, அப்படியே தான் அமர்ந்து இருந்தாள்.

வாசு சென்ற நிமிடம், ஜனனியை விட்டு அனை வரும் முன்னறைக்கு வந்தனர்.. ''எல்லாம் நல்ல வார்த்தையாத் தான் பொண்ணு சொல்றா! இருந்தாலும் எங்க மத்த அண்ணன் தம்பிங்கக் கிட்ட கலந்துகிட்டு, நல்ல பதிலா ஒரு ரெண்டு நாள்ள சொல்றோம்!'' என்று சுமுகமாகப் பேசி அவர்களைக் கிளப்புவதற்குள் போதும் என்றாகி விட்டது.

அவர்கள் வேறு, பெண்ணிடம் ஒரு வார்த்தை சொல்லிச் சொல்கிறோம் என்று சொல்ல..

ஆளாளுக்கு முகத்தைப் பார்க்க, அதுவே எதோ சரியில்லை என்று காட்டியது, அவர்கள் மேலும் வற் புறுத்தாமல் கிளம்பினர்.

வாசு நேராக சென்றது அம்மாவிடம்.. அம்மாவிடம் நடந்த அத்தனையையும் ஒன்று விடாமல் சொன்னான்.

அதாகப்பட்டது ஜனனியின் வீட்டினில் நடந்தது. மற்றபடி இன்னும் வாய் வார்த்தையாகக் காதல் சொல்லிக் கொள்ளவில்லை என்பது போல எல்லாம் சொல்லவில்லை. இருவரும் விரும்புகிறோம் என்று சொல்லிவிட்டான்.

வாசு சொல்லச் சொல்ல, என்ன காரியம் செய்து வந் திருக்கிறான் மகன் என்று ஸ்வாதி அப்படியே அமர்ந்து விட்டார். அவரே பெற்றவர்களை எதிர்த்து காதல் திருமணம் செய்தவர் தான், ஆனால் மகனின் காதலை ஏற்றுக் கொள்ள அவரால் முடியவில்லை.

நான் காதல் சொன்னேன் என்றால், எனக்கு எந்த பொறுப்புகளும் இல்லை.. என் தாய் தந்தையரைப் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.. அதற்கான வயதும் வந்திருந்தது, வாழ்க்கையை எதிர் கொள்ளும் பக்குவமும் இருந்தது.

ஆனால் வாசு.. இந்த வீட்டின் ஆதாரமே அவன் தானே! எப்படி அவனால் முடிந்தது. இருபத்தி இரண்டு வயது.. வாழ்க்கை எங்கோ இருக்க என்ன செய்து வந்திருக்கிறான்.

ஸ்வாதியை புரிந்தவனாக தெலுங்கினில் பேச ஆரம்பித்தான், ''அம்மா! எனக்கு இது சரியான வயசு கிடையாதுன்னு தெரியும்.. இது அதுக்கான நேரமும் இல்லைன்னு தெரியும். நானே சொல்லக் கூடாதுன்னு தான் இருந்தேன், ஆனா முடியலை..'' என்று வாசுவும் தலை பிடித்து தான் அமர்ந்து இருந்தான்.

''என்ன செய்யணும்னு நினைக்கிற?''

''என்ன செய்யட்டும்?'' என்று திரும்ப அம்மாவிடம் கேட்டான்.

''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை.. ஆனா அந்தப் பொண்ணு உனக்கு ரைட் சாய்ஸ் கிடையாதுன்னு தான் தோணுது.. நீ பூரணி கல்யாணத்துல வரலை, ஆனா நான் போனேன் தானே.. ரொம்ப ஆட்டம்.. நீ லவ் பண்றேன்றதுக்காக தப்பா சொல்லலை.''

''நான் பார்த்தவரை ஒரு மெச்சூரிட்டி இல்லை.. சின்ன பசங்களுக்கு சமமா ஆடிக்கிட்டு.. ஒரு பொறுப்பில்லாம.. உனக்கு அந்த பொண்ணு மனைவியா வர்றதை நான் என்னைக்குமே விரும்ப மாட்டேன்!'' என்றார்.

வாசு அம்மாவின் இந்த பதிலில் அப்படியே தேங்கி நின்றான். காதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று ஏதோ ஒரு வகையில் மனம் சொல்ல அதை எதிர்பார்த்தான்.

ஆனால் ''எனக்கு பெண்ணை பிடிக்கவில்லை! அந்தப் பெண் உனக்கு பொருத்தமில்லை!'' என்று சொல்வார்கள் என்று அவன் நினைக்கவேயில்லை!!!



# 10

என்ன பேசியும் வாசுவினால் ஸ்வாதியை சம்மதிக்க வைக்க முடியவில்லை. அவர் எடுத்துச் சொன்ன

விதமே, ''காதல் தப்பென்று என்னால் சொல்ல முடியாது! ஏனென்றால் அந்த காதல் தான் என்னை... உன் தந்தையை இப்படிப் பார்த்துக்கொள்ள வைக்கிறது.''

''ஆனால் இது உனக்கு காதல் சொல்லும் வயதும் அல்ல.. ஒரு பெண்ணை பார்த்துக் கொண்டு குடும்பத்தை நிர்வகிக்கும் வயதும் அல்ல.. அதற்கான சம்பாதனையும் உனக்கு கிடையாது.. முதலில் உனக்கு சம்பாதனையே கிடையாது. படிப்பையே இன்னும் நீ முடிக்கவில்லை. உன்னுடைய எம் பி ஏ படிப்பின் கல்லூரிக் காலம் முடிவடைந்து விட்டாலும் இன்னும் நீ அரியர் வைத்திருக்கிறாய்'' இப்படி நிறைய இருந்தாலும்..

''என்னோட மனசுக்கு சரின்னு பட்டா எதுன்னாலும் பார்த்துக்கலாம் வாடான்னு நானே போய் பொண்ணு கேட்பேன்! ஆனா எனக்கு அந்த பொண்ணைப் பிடிக்கலை!''

''வெளில மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இருக்கும் போது அம்மா அப்பாக்கு எவ்வளவு நெருக்கடி குடுத் துட்டா .. அதோட இம்பேக்ட் தெரியலை.. முதல்லயே பேரண்ட்ஸ் கிட்ட சொல்லியிருக்க வேண்டாமா.. இப்படி ஒரு பொண்ணு வேண்டாம்'' என்றார்.

வாசு ''இல்லை! அது ஜனனியால் இல்லை! என்னால் தான்!'' என்றெல்லாம் சொல்லி அவரை கன்வின்ஸ் செய்ய முயலவில்லை. அவனுக்கு அம்மாவைப் பற்றி நன்கு தெரியும்..

ஒன்றில் நின்று விட்டால் அதிலேயே தான் நிற்பார், மாற்றிக் கொள்ள முயலவே மாட்டார்.. குதிரைக்கு

கடிவாளமிட்டது போலத் தான்.. அதனால் தான் அவனின் தந்தையை சமாளித்து இத்தனை வருடங்கள் அவரால் காலம் தள்ள முடிகிறது. வாசு அந்த இடத்தை விட்டு எழுந்து செல்ல முயல..

''இல்லை! எனக்கு அவள் தான் வேண்டும்!'' என்று சண்டை போடுவான் வாசு என்று ஸ்வாதி எதிர்பார்க்க வில்லை. ஆனாலும் இப்படி ஒன்றுமே சொல்லாமல் மகன் எழுந்து போக, என்னவோ வாசு அவ்ரை விட்டு விலகி போவதாக மனதிற்கு ஒரு எண்ணம்.

ஆனாலும் இப்படியே விட முடியாதே ''உட்காரு வாசு!'' என்றார்.

வாசு மௌனமாக அமர.. ''நீ அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போய் பிரச்சனை பண்ணிட்டு வந்திருக்க... அது தப்பு!'' என்றார்.

''என்ன பண்ணனும்?'' என்பதுப் போல பார்த்து நின்றான்...

''சாரி கேளு அவங்க கிட்ட!''

''நான் பிரச்சனை பண்ணனும்னு போகலை.. அவங்க தான் நடந்துகிட்டாங்க... ஜனனி, என்னைப் பிடிச்சிருக் குன்னு அப்போ சொல்ற ஒரு நிலைக்கு கொண்டு வந்தது அவங்க தான்!''

''தப்பு கண்ணா! நீ அவங்க அம்மா அப்பா சைட்ல இருந்து பாரு, அவங்க ஃபீலிங்க்ஸ் புரியும்.. லவ் மேரேஜ் பண்ணின என்னாலயே நீ லவ் சொல்லும் போது ஒத்துக்க முடியலை! அவங்க எப்படி ஒத்துக்கு வாங்க!''

''ஏற்கனவே எனக்கும் உங்க அத்தை வீட்டுக்காரருக்கும் ஆகவே ஆகாது! அதனால் தான் அவங்க இங்க நம்ம வீட்டுக்கு வர்றதே இல்லை.. பூரணி கல்யாணத்துக்கு பிறகு தான் கொஞ்சம் ஸ்மூத் ஆச்சு, இப்போ நீ போய் இப்படி பண்ணிட்டு வந்திருக்க..'' என்றவர்,

இஞ்ஜெக்ஷனை கையினில் எடுத்தார்.. ''அம்மா! இப்போ எதுக்கு அப்பாவை தூங்க வைக்கறீங்க!'' என்றான். இவர்கள் இங்கே பேசிக் கொண்டு இருக்க ஜன்னல் வழியாக பாலகிருஷ்ணன் வானத்தை வெறித்துக் கொண்டு இருந்தார்.

''நாம அவங்க வீட்டுக்குப் போறோம்'' என்றார் ஸ்வாதி.

''எதுக்கு?'' என்று வாசு கேட்டதற்கு பதில் சொல்லவில்லை. கணவரைத் தூங்க வைத்து, ''வா'' என்று மகனை கூட்டிக் கொண்டு மாமியாரிடமும் மாமனாரிடமும் சுருக்கமாக விஷயத்தை சொல்லிக் கிளம்பினார்.

பெரியவர்கள் இருவரும் நம் வாசுவா என்று மலைத்து பார்த்து இருந்தார்கள்.

''இப்போ வேண்டாம்!'' என்று நின்றவனிடம்..

''நீ அவங்க வீட்டுக்குப் போனது தப்பு!'' என்று அவனை மிரட்டி அழைத்துக் கொண்டு செல்ல...

''வர மாட்டேன்!'' என்று நின்றிருக்க முடியும்.. ஆனாலும் ஜனனியை பார்க்க வேண்டும், திரும்ப அடிக்கிறார்களோ என்று தோன்ற.. சென்றான்.

செல்லும் பொழுது ஸ்வாதியின் முகத்தினில் தெரிந்த உறுதி, கண்டிப்பாக இந்த விஷயத்தை முடித்து விடும்

உறுதி தான் என்று தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.. ஆனாலும் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந் தான்.. என்ன செய்வான்?

இயலாத சூழ்நிலை என்றாலும்... அதை இயலுமாறு அவனால் மாற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருந்தாலும்... அம்மாவின் நம்பிக்கையை இப்போதைக்கு உடைக்க முடியாது அல்லவா..

அமைதியாக கூடச் சென்றான்.

ஜனனியின் வீட்டிற்குள் இவர்கள் செல்ல அங்கே இவர்களை எதிர்பார்க்கவில்லை என்று அனைவரின் முகத்தினிலும் தெரிந்தது.

''வாங்க!'' என்ற வார்த்தை யார் வாயினில் இருந்தும் வரவில்லை. ''ஐயோ! பெண் கேட்க வந்து விட்டார் களோ?'' என்ற பதட்டம் தான் அனைவரின் முகத் தினிலும்.

''எதுக்குடா திரும்ப வந்தே?'' என்று பரதன் ஆக் ரோஷமாக வாசுதேவனை பார்த்துக் கேட்க..

''என்ன? என் மகனை ஒருவன் இப்படி டா போட்டு அடிக்க வருவது போல பேசுவதா?'' என்ற கோபம் ஸ்வாதியின் மனதினில் கிளர்ந்து எழ ஆரம்பித்தது. அவரின் வீட்டு பக்கம் மக்களுக்கு அவ்வளவு மரியாதை கொடுப்பர். அம்மாயி, பாபு என்ற மரியாதையான அழைப்புகள் மட்டுமே!

லக்ஷ்மணன் ஒரு படி மேலே போய், ''நாங்க உங்க வீட்டுக்குப் பெண் கொடுக்கறதா இல்லை!'' என்று ஒரு மாதிரி அலட்சியமாகச் சொல்ல..

ஸ்வாதியின் தன்மானத்தை அது வெகுவாக சீண்டி விட்டது. அமைதியாக மனதை நிலை படுத்தியவர். ''உங்க பொண்ணைக் கொஞ்சம் கூப்பிடறிங்களா?'' என்றார்.

''எதுக்கு அவ மனசை கெடுக்கவா? அதெல்லாம் முடியாது!'' என்று லக்ஷமணன் சீற,

ஸ்வாதியின் முக அமைதியைப் பார்த்த சீதா ராமன் ''அவங்க என்ன சொல்றாங்கன்னு கேட்போம்! பொறு மையா இரு!'' என்று மகனை அதட்டினார்.

வாசுதேவன் அம்மாவின் பின் கை கட்டி நின்றான்.. அவினாஷும், ரகுலனும், மற்ற எல்லோருமே வாசுவைத் தான் பார்த்து இருந்தனர். அவனின் முகத்தில் இருந்து ஒன்றும் தெரியவில்லை! முகம் அவ்வளவு இறுக்கமாக இருந்தது.

''பொண்ணைக் கூப்பிடுங்க! இங்க என்ன நடக்கு துன்னு அவளுக்கு தெரியணும்!''

பரதன் ''கூப்பிடு!'' என்பது போல, செல்லம்மாளிடம் ஜாடை காட்ட,

அழுது, அழுது, முகமெல்லாம் வீங்கிப் படுத்து இருந்தால் ஜனனி, ''வா! அந்தப் பையனோட அம்மா வந்து இருக்காங்க!'' என்று செல்லம்மாள் சொல்ல, யாரென்று தெரியாததினால் அசையாமல் படுத்து இருந்தாள் ஜனனி.

ரகுலன் ''வாசு அத்தான் அம்மா!'' என்று எடுத்துக் கொடுக்க, குழப்பத்தோடு எழுந்து அமர்ந்தவள், வெளியே வர..

அங்கே வாசுவின் அம்மா நிற்பதையும் அதன் பின் வாசு கை கட்டி நிற்பதையும் பார்த்தவள், உணர்ந்தது... அவனின் கைகள் மட்டுமல்ல, அவனும் கட்டப்பட்டு இருக்கிறான் என்பதை போலத் தான்.

ஜனனியை நேர் பார்வை பார்த்து நின்றான், ''அழாதே!'' என்று ஆறுதல் சொல்ல முயன்றன விழிகள்..

''இந்த மாதிரி உங்க பொண்ணை பொண்ணு காட்டுற சமயத்துல இங்க வந்து இந்த மாதிரி பண்ணினது தப்பு! தெரியாம என் பையன் செஞ்சிட்டான்னு என்னால சொல்ல முடியாது! ஏன்னா தெரியாம செய்யற பையன் கிடையாது! தெரிஞ்சு தான் செஞ்சிருக்கான்.. உங்கக் கிட்ட அதுக்காக நான் மன்னிப்பு கேட்கறேன்.''

ஒரு திமிரான மன்னிப்பு வேண்டல் அம்மாவிட மிருந்து, புரிந்து பார்த்து நின்றான் வாசுதேவன்.

''இனிமே இந்த மாதிரி செய்ய மாட்டான்னு வாக்கு கொடுக்கறேன்.. இனி இங்கயோ உங்க பொண் ணையோ பார்க்க வரமாட்டான்'' என, இனி இது வேறா என்பது போல நின்றான் வாசுதேவன்.

அனைவர் முகத்திலும் நிம்மதியின் சாயல். ஜனனி மட்டும் அசையாமல் நின்றிருந்தாள்... ''நீங்க சொல்றீங்க, உங்க பையன் சொல்லணுமே?'' என்று செல்லம்மாள் எடுத்துக் கொடுக்க,

''செப்புரா!'' என்றார் ஸ்வாதி.

வாசுதேவன் ''ஏண்டி செப்பவாளு?'' என,

''இப்போ இங்க வந்து இவங்களுக்கு தெலுங்குல பேசலைன்னா என்ன?.. நான் வாங்கின அடியை உனக்கு

நான் அப்புறமா கொடுக்காம விடமாட்டேன். எல்லாம் உன்னால தான்!'' என்று வாசுவினை நோக்கி முறைத்து பார்த்துக் கொண்டு இருந்தாள் ஜனனி.

''இனிமே அவங்க பொண்ணை பார்க்க மாட்டேன்னு செப்பு!'' என,

''நான் பார்க்க மாட்டேன்!'' என்றான்.

''அதுதானே! இவன் ஏன் பார்க்கப் போறான்! அது தான் என்னை பார்க்க வைக்கிறானே!'' என்று திரும்பவும் ஜனனி மனதிற்குள் கௌண்டர் கொடுக்க..

அவினாஷும் ரகுலனும் அதையே தான் நினைத் தனர்.. ''நான் பார்க்க மாட்டேன்னு சொன்னா? அப்போ ஜனனியைப் பார்க்க வைப்பாரா?'' என,

''போதுமா!'' என்று செல்லம்மாளை பார்த்துச் சொன்ன ஸ்வாதி, கிளம்பலாம் என்பது போல வாசுதேவனை பார்த்து தலையாட்டியவர்..

அப்போதும் லக்ஷ்மணனை பார்த்து.. ''நீங்க பொண்ணு குடுத்தாலும் நாங்க எடுக்கலை'' என்றார்.

''என் பையன் காதலுக்கு எல்லாம் நான் எதிரி கிடை யாது.. ஆனா உங்க பொண்ணு என் பையனுக்கு சரி வரமாட்டான்னு தான் நான் வேண்டாம் சொன்னேன்.. என் மகனுக்கு உங்க பொண்ணு பொருத்தமில்லை'' என்று சொல்ல...

''என்ன மாதிரியான பேச்சு இது?'' என்று வீடே அதிர்ந்தது.

ஜனனி உள்ளுக்குள் நொருங்கிப் போனாள்.. ''இன்னும் காதல் கூட சொல்லாத இவனிற்காக நான்

இங்கே என் வீட்டினரோடு போராட ஆரம்பித்து இருக்கிறேன். இவர் என்ன பேசுகிறார்?'' என்று பார்த்திருந்தாள்.

வாசு பதறி, எப்படி ஸ்வாதியை நிறுத்துவது என்று தெரியாமல் பார்த்து இருந்தான். அவனுக்கு அம்மாவை எப்படி நிறுத்துவது என்ற எண்ணமே, இதில் ஜனனியைக் கவனிக்கவில்லை.

''உங்களை விட நாங்க பல படி இப்பவும் மேல தான்.. நானா வேண்டாம்னு ஒதுங்கி இருக்கேன் அவ்வளவு தான். அண்ட் வாசு என் பையன், அதை மறக்க வேண்டாம்.. மறக்க வேண்டாம் என்ன? ஒரு நிமிஷம் கூட மறக்கக் கூடாது!''

''நாங்க மறக்க என்ன, ஞாபகம் வைக்க வேண்டிய அவசியமேயில்லை.. அவனை எங்க பொண்ணு வழில வராம இருக்க சொல்லுங்க!'' என்றார் லக்ஷ்மணனும் விடாமல்.

''வரமாட்டான்!'' என்று சொல்லிக் கொண்டே மகனைப் பார்த்தவரின் பார்வையில், ''நீ பார்க்கக் கூடாது'' என்ற கட்டளை இருந்தது.. விஷயம் கை மீறிக் கொண்டு இருக்கிறது என்று புரிந்தாலும் எதுவும் செய்ய முடியாத இயலாமையுடன் நின்றான்.

இத்தனை பேர் முன் அம்மாவை மறுத்து பேச முடியாதல்லவா? தனியாகவும் இப்போது இருக்கும் சூழ்நிலையில் பேச முடியாது.

''இப்படி மரியாதை இல்லாம பேசி, ஏதோ தேர்ட் ரேட் பொறுக்கி மாதிரி அவனை மிரட்டுற வேலை

வேண்டாம்!'' என்று திரும்பவும் லக்ஷ்மணனைப் பார்த்து கம்பீரமாக சொன்னார்.

வாசு ஸ்வாதி இப்படி எல்லாம் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை.. அதுவரை ஸ்வாதி பேசுவதையே பார்த்து இருந்தவன், அப்போது தான் ஞாபகம் வந்த வனாக ஜனனியை அவசரமாக பார்க்க..

இப்போதும் ஜனனியின் விழிகள் அவனை முறைத்து பார்த்துக் கொண்டு இருந்தாலும், கண்களில் நீர் நிறைந்து இருந்தது.

''அம்மா! நுவு இக்கடஞ்சே ரா!'' என்று அம்மாவை கைப் பிடித்து ஏறக்குறைய இழுத்து சென்றான்.

இத்தனை நேரமாக ஜனனி அழுதது கன்னத்தில் வாங்கிய அடிக்காக.. இப்போதும் அழுகை கட்டுக்கடங் காமல் பொங்கியது, அது மனதினில் வாங்கிய அடிக்காக.

''நீ காதலிப்பாயா?'' என்று பார்த்திருந்த வீடு, ''காதலிக்கக் கூடாது!'' என்று சொல்லியிருந்த வீடு.. இப்போது ''உனக்கு இது தேவையா?'' என்பது போலக் கேவலமாகப் பார்ப்பதாகத் தான் தோன்றியது.

தாளவே முடியவில்லை.. அழுகை, அழுகை, என அழுது கரைந்தாள்.. மகளின் அழுகை பெற்றவர்களை அசைத்துப் பார்த்தது.. இப்படி ஒரு நிலை வருவதற்கா இப்படி அருமை பெருமையாய் வளர்த்தோம் என்று தோன்றியது.

பரதன் ''இனி ஜனனி கிட்ட இதைப் பத்தி யாரும் பேச வேண்டாம்.. தனியா விடுங்க!'' என்று விட்டார்.. யோசிக்கட்டும்! ''அவளே யோசிக்கட்டும்!'' என்று விட்டு விட்டார்.

''அடித்துத் திருத்தும் வயது அல்ல! அதே சமயம் அடித்துத் திருத்தும் பெண்ணும் கிடையாது ஜனனி!'' என்று அவருக்குத் தெரியும்.

வாசுவின் அம்மா ''பொருத்தமில்லை'' என்று சொன்னதும், மகள் ''நீதான் எனக்குப் பொருத்தமில்லை! போடா!'' என்று வாசுவிடம் சொல்வாள் என்று எதிர் பார்த்தார். ஜனனியின் குணமும் அதுதான்.

ஆனால் காதல் இயற்கையான குணங்களைக் கூட மாற்றி விடும் என்று மறந்து விட்டார்.

''என்ன? நான் பொருத்தமில்லையா! இத்தனை பேர் முன் அவனை தான் பிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டேன்! விட்டு விடுவானா என்னை?'' என்ற எண்ணம் மனதினில் விதைந்தது.

ஆனாலும் வாசுவைத் தொடர்பு கொள்ள முயல வில்லை. ஜனனியின் வீட்டிலும் கல்யாணப் பேச்சு இப்போதைக்கு வேண்டாம் என்று நிறுத்தி இருந்தனர்.

வாசுவின் நிலையோ நேர் எதிர்! ''என்னை விட்டு விடுவானா?'' என்று ஜனனி நினைக்க,

வாசுவோ ''ஜனனி! என்னை விட்டு விடக் கூடாதே!'' என்று இடைவிடாது மனதில் வேண்டி இருந்தான்.

ஜனனிக்கு வாசுவின் மீது இருக்கும் தீவிரத்தை விட வாசுவிற்கு ஜனனியின் மீது இருக்கும் தீவிரம் அதிகம்! மிக அதிகம்!! மிக மிக அதிகம்!!!

ஆனாலும் ஒரு கையறு நிலை அவனிற்கு.. எதுவும் அவன் புறம் இருந்து செய்ய முடியவில்லை. அம்மாவின்

பேச்சை ஜனனியின் விஷயத்தில் கடைபிடிக்கும் எண்ணம் அவனுக்குத் துளியளவும் கிடையாது தான்.

என்ன உடனே மீறுவதற்கு ஒரு தயக்கம்.. கூடவே ஜனனியை அவளின் தந்தை அடித்ததைப் பார்த்து இருந்தான் தானே.. இப்போது மீண்டும் செல்ல, இன்னும் துன்புறுத்தினால்.. அந்த நினைவே அவனை தள்ளி நிறுத்தியது.

ஒரு மாதம் இப்படியே கடந்து செல்ல.. ஜனனியின் இறுதித் தேர்வுகளுக்கு இன்னும் ஒரு மாதமே இருந்த நிலையில்.. இமானிற்கு அழைத்தான்,

இவன் பேசும் முன்னே இமான் உற்சாகமாக பேசினான், ''ஹலோ பாஸ்! கலக்கிட்டீங்க போல.. பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு சொன்ன உடனே வீட்டுக்கே போயிட்டீங்கப் போல!'' என்றான்.

கண்டிப்பாக ஜனனி சொல்லாமல் அவனுக்கு விஷயம் தெரிய வாய்ப்பில்லை என்று புரிய.. மனதிற்கு இதமாக இருந்தது. ''ஜனனியை என்கிட்டே பேசச் சொல்றியா'' என்றான்.

ஜனனி அப்போது அருகில் தான் இருந்தாள், ''ஹல்லோ பாஸ்'' என்று இமானின் உற்சாகமான குரலே, யார் என்று கவனிக்க வைத்து, வாசு என்று தெரிந்ததும் முகத்தில் தானாக ஒரு மலர்ச்சியைக் கொண்டு வந்தது.

''ஜனனியா? இங்க தான் இருந்தா! ஆனா இப்போ என் முன்னாடி திடீர்ன்னு ஒரு ஒளி! அதனால் அவ எங்க இருக்கான்னு தெரியலை!'' என்றான் இமான்.

ஒரு மாதமாக ஒளியிழந்து, கலையிழந்து இருந்த ஜனனியின் முகத்தில் இப்போது மகிழ்ச்சியைக் காணவும் தான் அந்தப் பேச்சு..

கூடவே ஜனனியிடம் சைகை ''உன்னை பேசச் சொல்றாங்க!'' என,

''பேசமாட்டேன்!'' என்பது போல... தலையை அசைத்துக் காட்டினாள்.

''ஜனனி உன்னோட இருக்காளா?'' என்ற வாசுவின் குரலில் இருந்த ஆர்வம் இமானின் பேச்சைத் தேக்க.. அதுவே சொன்னது ஜனனி அருகில் இருக்கிறாள் என்று.

''ஸ்பீக்கர்ல போடு இமான்!'' என்றவன், ஜனனியை என்கிட்டே பேச சொல்லேன், ப்ளீஸ்! என்று ஜனனிக்குக் கேட்குமாறு சொல்ல,

''எந்த போதி மரத்தடில ஞானம் வந்துச்சாம், ஒரு மாசமா பேசாம இப்போ பேசச் சொல்றாங்க!'' என்று ஜனனியும் அவனுக்குக் கேட்குமாறு சொல்லி,

“இந்தப் பொருத்தமில்லாதவ கூட எதுக்கு பேசணும்?” என்று சொல்லும் போதே, குரலும் கலங்கியது, மனதும் கலங்கியது.

என்ன தான் ஒன்றும் நடவாதது போல வீட்டினர் இவளிடம் காட்டினாலும், இவளும் வீட்டினரிடம் காட்டிக் கொண்டாலும், உள்ளத்து வேதனை அவளுக்குத் தானே தெரியும்.

கரையானாய் அவளை அரித்துத் தின்று கொண்டிருந்தது. என்ன தான் விளையாட்டுப் பெண் என்றாலும்,

வாசுவை புரிந்து கொள்ளும் தன்மை தானாக இருந்தது, பக்குவமும் இருந்தது. அதனால் தான் பேசினால் உடைந்து விடுவோம் என்று தவிர்த்து நின்றாள்.

தன்னைப் போல அவன் எல்லோரிடமும் கலகலப் பாகப் பேசும் சுபாவம் கிடையாது.. தான் பேசினால் தன்னையே நினைத்துக் கொண்டிருப்பான் என்று தான் அதுவரை பேசவில்லை.

அப்போதும் பேசும் பொழுது ஆதங்கம் வெளியில் வந்து விட்டது.

இமானிடம் போன் வாங்கி ''சாரி! சொல்லக் கூடா துன்னு நினைச்சேன். ஆனாலும் சொல்லிட்டேன்!'' என்று சொல்லும் போது அழுகை வந்து விட்டது.

''யார் சொன்னாலும், வி ஆர் மேட் ஃபார் ஈச் அதர். அழாத ஜனனி ப்ளீஸ்! நான் தான் சாரி சொல்லணும், ஆனா இப்போதைக்கு அம்மாவை மீறி என்னால எதுவும் செய்ய முடியாது, எனக்கு தைரியமில்லைன்னு மட்டும் நினைச்சிடாத.. தைரியத்தைக் காட்ட முடியாத சூழ்நிலைல இருக்கேன்!''

''எப்போ மாறும்?''

''கண்டிப்பா மாறும், வீட்ல உன்னை திரும்ப எதுவும் சொல்லலையே!''

''இல்லை! அதைப் பத்தியே யாரும் பேசலை.. எது வுமே நடக்காதது மாதிரி, நல்லா பேசறாங்க! எங்கம்மா என்கிட்டே சண்டை போடறதே இல்லை.. திரும்பத் திட்டி இருந்தாலோ? சண்டை போட்டிருந்தாலோ? கண்டிப்பா உங்க கூடப் பேசியிருப்பேன்.. ஏன்

உங்களைப் பார்க்க கூட வந்திருப்பேன்.. ஆனா இப்படி நல்ல விதமா நடக்கும் போது அவங்களை மீறி பேசறது தப்பு மாதிரி தோணப் பேசலை!''

''ஆனா, எங்க வீட்ல கல்யாணம் பேசினாங்கன்னா கண்டிப்பா உங்க கிட்ட வந்துடுவேன்.. வேற யாரையும் எல்லாம் என்னால பண்ண முடியாது!'' என்றாள் ஸ்திரமாக..

அதன் பிறகு தினமும்... வெகு நேரம்... இப்படி எல்லாம் பேசிக் கொள்ளவில்லை, அவசியமான வார்த்தைகள் எப்போதாவது வாசு பேசுவான்.. ஜனனியும் இமானின் கைப்பேசியில் இருந்து பேசுவாள்.

ஜனனியிடம் கைப் பேசி இன்னும் இல்லை! வைத்துக் கொள்ளவில்லை!

இருவருமே பார்க்க முயலவில்லை.

நாட்கள் விரைய, ஜனனி படிப்பை முடித்து, அதன் பின் வேலையில் சேர்ந்தும் ஆறு மாதம் ஆகியிருந்தது. மெதுவாக வீட்டில் திருமணப் பேச்சு எடுக்க,

வாசுவிடம், ''நாம இப்போதைக்கு சேர்ந்து வாழறமோ இல்லையோ கல்யாணம் பண்ணிக்கலாம், வீட்ல ஃபோர்ஸ் பண்ணறாங்க, என்னை உட்கார வெச்சு ஆளாளுக்கு அட்வைஸ் பண்றாங்க. எனக்கு பெரிய டார்ச்சரா இருக்கு, என்னால் சமாளிக்க முடியலை.''

வாசுவிற்கு வெகுவாக யோசனை தான்.. ஆனால் என்று இருந்தாலும் இதை சந்தித்துத் தானே ஆக வேண்டும்.

''எனக்குத் தெரியும், உன்னால இப்போதைக்கு என்னை கூப்பிட்டுக்க முடியாது, பிரச்சனையில்லை, எங்க வீட்டுக்குப் போறேன். அவங்க வைச்சுக்கலைன்னா ஏதாவது ஹாஸ்டல் போயிடறேன்.''

''எங்க அப்பாவும் அம்மாவும் என் முகத்தைப் பார்த்துட்டே இருக்காங்க என்ன சொல்வேனோன்னு. என்னால நாம சொல்றவனை நம்ம பொண்ணு கல் யாணம் பண்ணிக்குவான்னு ஒரு பொய் நம்பிக்கையை வளர்க்க முடியாது, எதுன்னாலும் ஃபேஸ் பண்ணிக் கலாம்'' என்றாள்.

''சரி!'' என்று முடிவெடுத்து, பதிவுத் திருமணத்திற்கான ஏற்பாடுகள் ஒரு மாதம் முன்பிருந்தே செய்து, காலை யில் போய் அவள் அந்த அலுவலகத்தில் இமான் ரக்ஷாவுடன் காத்திருந்தாள். எல்லாம் இமான் தான் இருவருக்கும் இடையில் நின்று செய்திருந்தான்.

பெற்றோருக்குத் தெரியாமல் செய்யும் திருமணம் ஒரு புறம் பெரிய படபடப்பை, நெஞ்சில் ஒரு இனம் புரியாத உணர்வை ஜனனிக்கு கொடுத்தாலும், பல மாதங்களுக்கு பிறகு வாசுவைப் பார்க்கும் ஆர்வம், தவிப்பு, எல்லாம் சேர்ந்து அவளை ஒரு வழியாக்கி கொண்டிருந்தது.

கூடவே ரக்ஷாவிடம், ''நான் நல்லா இருக்கனா? அவருக்கு மேட்ச் ஆவேனா?'' என்ற கேள்வியும்..

வாசுதேவனின் வசீகரம் ஜனனியிடம் குறைவு தான். அதுவும் அவனின் அம்மா சொன்ன பிறகு இன்னும் அழுத்தமாக அது ஜனனியின் மனதினில் நின்று

இருந்தது. இப்படி ஜனனி தவித்து நின்றிருக்க, அந்த பரிதவிப்பு ஒரு முடிவுக்கு வராமல் நீண்டு, நிலைப் பெற்று, அவளுள் நின்று விட்டது.

வாசுதேவன் வரவில்லை!! வரவேயில்லை!! திரு மணம் நடக்கவில்லை!!!



# 11

"வெல்கம் டு ஸ்வாதி பாலகிருஷ்ணன் ரெட்டி!" என்ற எழுத்துக்கள் அந்த லையன்ஸ் க்ளப் வளாகத்தில் வைக்கப்பட்டிருக்க.. அங்கே பெண்களுக்கான ஒரு தன்னம்பிக்கை கருத்தரங்கு ஏற்பாடு செய்யப் பட் டிருந்தது. அதன் தலைமைப் பேச்சாளராக ஸ்வாதி அழைக்கபட்டு இருந்தார்.

பாந்தமாய் கரைகள் அற்ற ஒரு பட்டுப் புடவையில், நான்கைந்து வயதில் ஒரு மகனோ மகளோ இருப்பவர் போல தான் இருந்தார். கழுத்தில் ஒரு சிறிய அளவு மணிகள் கொண்ட முத்து மணி மாலை.. அதற்கு பொருத்தமாய் காதணிகள், வளவிகள், நமக்கு ஏன் இவ்வளவு மென்மையான சருமம் இல்லை என்று கூட இருப்பவர் நிச்சயம் நினைப்பர்.

அவர் பேச ஆரம்பித்தது, தெளிவான ஆங்கிலத்தில், பிறகு தமிழும் ஆங்கிலமுமாய் பேச்சுக்களை அமைத்துக் கொண்டார்.

''முதலில் நான் என்னைப் பற்றி சொல்லிக் கொள் கிறேன். ஏன் சொல்கிறேன் என்றால், பேச்சுக்கள் எவ்வளவு பொருள் வாய்ந்ததாய் இருந்தாலும், பேசு பவரைக் கொண்டு தான் அதற்கு மரியாதை!'' என்று அவர் புன்னகை முகமாய் ஆரம்பிக்கவுமே.. அதுவே அனைவரையும் கவர்ந்தது.

''நான் ஸ்வாதி பாலகிருஷ்ணன் ரெட்டி, ஸ்வாதி நான், பாலகிருஷ்ணன் எனது கணவர், ரெட்டி எனது தந்தையைக் கொண்டு.. ஸ்வாதியாக மட்டுமே என்னை அடையாளம் காட்டிக் கொள்ள விருப்பம்!''

''இருந்தாலும் பாலகிருஷ்ணன் எனது ஆருயிர் கணவர், இப்பொழுது இந்த உலகத்தில் இல்லை.. அவருடைய நினைவுகள் என்னுடனே பயணிப்பதால், அவருடைய பெயரும் என்னோடு பயணிக்கிறது.. பெற்று எனக்கு அடையாளம் கொடுத்த தந்தையை விட மனமில்லாத காரணத்தால் அவரும் என்னோடு.''

''எனது வாழ்க்கை, ஐம்பது வயதை தொட்டு விட்ட நிலையில் தான், இந்த திசையில் பயணிக்க ஆரம்பித்து இருக்கிறது. வாழ்க்கையில் இனி என்ன இருக்கிறது என்று பெண்கள் சோர்ந்து போகும் வயதில் தான், எனது வாழ்க்கை தனது பயணத்தை இன்னும் உற்சாகமாக ஆரம்பித்து இருக்கிறது. நாள் முழுவதும் சோர்வு இல்லாமல் வேலை செய்கிறேன்.''

''என் கணவர் இறந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. அவர் இறப்பதற்கு முன் கணவன் மகன் என்று சுருங்கியிருந்த வாழ்க்கை, அதன் பிறகு முற்றிலுமாக

மாறிவிட்டது. கணவர் இறந்த பிறகு இதற்கு மேல் என்ன இருக்கிறது என்று நினைத்து இருந்த பொழுது.''

''யாருடைய இழப்போடும் யாருடைய வாழ்க்கையும் முடிந்து விடுவதில்லை!! இதற்கு மேலும் உனது வாழ்க்கை இருக்கிறது என்று உணர்த்தியவன் என் மகன், வாசுதேவன்!!!''

''அந்த ஒரு உணர்வை தான் நான் இங்கே எனது வயதில் உள்ள பெண்களுக்கும் ஆண்களுக்கும் கொடுக்க முயல இருக்கிறேன்'' என்று ஆரம்பித்தவர்.. பின்னர் சரளமாக தன் கருத்துக்களை முன் வைக்க..

நிச்சயம், அங்கிருந்த அனைவருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும், பலருக்கு அதில் நாமும் ஏதாவது செய்யலாமே என்ற உத்வேகம் தான்.

லயன்ஸ் க்ளப் அதை ஏற்பாடு செய்திருந்தாலும் அதில் கலந்து கொண்டவர்களில், பாதி ஜனம் நடுத்தர வகையைச் சார்ந்தவர்களும் கூட...

இதைப் போல நிறையத் தன்னம்பிக்கை பேச்சுக் களை கொடுக்கிறார் ஸ்வாதி, இப்போது சென்னையில் இருக்கும் அவரது அப்பாவின் ஐந்து நட்சத்திர ஹோட்டலை அவர் தான் நிர்வகிக்கிறார்... அப்பாவினது மட்டுமல்ல, அது அவரினதும் கூட, ஆம் இரண்டு வருடங்களுக்கு முன் அவரது அப்பாவின் வீட்டில் சொத்துக்கள் பிரிக்கப்பட.. இவரது பங்கும் அதில் கணிசமாக வந்தது.

கணவர் இறந்து சில நாட்களியே தந்தையின் நிழலுக்கு வந்துவிட்டார். தந்தையும் விடவில்லை,

மகனும் விடவில்லை, கணவரின் பெற்றோரும் விடவில்லை.

''நீ செல்! அவருடன் சிறிது நாட்கள் இரு! நீ என்னை வளர்த்தது போலத்தானே அவரும் உன்னைப் பற்றி பல கனவுகள் கண்டு வளர்த்திருப்பார். போ! அவருடன்!'' என்று வலுக்கட்டாயமாக வாசுதேவன் ஸ்வாதியின் அப்பா அம்மாவிடம் விட்டான்.

''இடையில் உன் வாழ்வில் இருந்த இருபத்தி இரண்டு கால வாழ்க்கையை இப்போதைக்கு மறந்து விடு! அம்மா! உன் பெற்றோருக்கு மகளாய் மட்டும் இரு.''

''உன்னை விட்டுவிட்டு எப்படி இருப்பேன்! நீயும் என்னோடு வா!'' என அவர் நிற்க..

''என்னை சிறிது காலம் நானாக இருக்க விடு, நீயும் உன் பெற்றோருக்கு மகளாக மட்டும் இரு!!'' என்று மீண்டும் அழுத்திச் சொன்னவன்,

''நான் என்ன செய்வேனோ? என்னுடைய வாழ்க்கை என்னவோ? என்று குழப்பிக் கொள்ளாதே.. உன் னிடமும் எனது அப்பாவிடமும் இருக்கும் புத்திசாலித் தனம் என்னிடம் இல்லாமலா போகும்!! பிறகு சேர்ந்து இருக்கலாம். எனக்கு அங்கே இருக்க முடியாது!!'' என்று பலவாறாகப் பேசி அவரை அங்கே விட்டு வந்தான்.

அன்றைய நிலையில் அவனின் மன அழுத்தங்கள் அவனுக்கு.. வாழ்க்கை மீதான ஒரு பற்றற்ற தன்மையில் இருந்தான். மீண்டும் அம்மாவின் நிழலுக்குள் சென்று சுயமாய் நிற்க முடியாமல் போவதில் விருப்பமில்லை.

அதுமட்டுமல்லாமல் தானும் அவருடன் இருந்தால் மீண்டும் ஸ்வாதியின் சிந்தனைகள் அவனைக் கொண்டு, அவனை ஒட்டி என இப்படித் தான் ஓடும். ஸ்வாதி அவரைப் பற்றி நினைக்க மாட்டார் என்று புரிந்தவனாக விட்டு விட்டு வந்தான்.

இப்பொழுது வாசுவிற்கு இந்திய நாட்டின் தலைநக ரத்தில் வேலை. பாலகிருஷ்ணனின் பெற்றோர்கள் புது தில்லியில் வாசுவுடன் இருந்தனர். வாசுவிற்கு அங்கே தான் வேலை.. அம்மாவை அவரின் பெற்றோரிடம் விட்டாலும் தாத்தாவையும் பாட்டியையும் தன்னுடன் தான் வைத்துக் கொண்டான். அம்மா பார்த்துக் கொள்ளட்டும் என்றோ, தனியாகவோ விடவில்லை.

இந்தியன் ஃபாரின் சர்வீசில் தேர்வாகி இருந்தான். மினிஸ்ட்ரி ஆஃப் எக்ஸ்டர்னல் அஃபையர்சில் இருந்தான். பணியில் சேர்ந்து மூன்று வருடங்கள் முடியப் போகிறது... இன்னும் நான்கு மாதங்கள் இருக்கிறது... இது அவனின் ட்ரைனிங் பீரியட்...

அதன் பிறகு புது தில்லியில் இருந்து மாறுதல் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் .. இந்தியாவிலோ இல்லை வெளிநாட்டிலோ எங்காகினும்...

அவன் இளநிலை படிப்பு முடித்ததுமே இதற்காக படித்துக் கொண்டிருந்தான் தான்.. பின்பு முதுகலையில் சேர்ந்தான். அந்த வருடங்களில் ஏதோ ஒரு தேக்கம் வாழ்க்கையில்.. எதையுமே படிக்க தோன்றவில்லை.

மனதளவில் ஒரு பெரிய சோர்வு.. அம்மாவிடமும் காட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலை.. அவரே வாழ்வில்

போராடிக் கொண்டிருக்க.. தானும் இதில் என்ன சொல்ல.. பல்கலைக்கழக தேர்விலேயே வெற்றுத் தாளில் பேர் எழுதி கொடுத்து வந்த நாட்கள் அவை.

படிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், படிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தாலும், அதற்கான புத்திசாலித்தனம் இருந்தாலும், எதிலும் பிடிப்பற்று இருந்த நாட்கள்...

அப்போது தான் ஜனனியைப் பார்த்தது.. பார்த்ததுமே கவனிக்க வைத்தாள். கவலைகள் அற்று எப்போதும் சிரிப்பும் உற்சாகமுமாய் இருக்கும் அவளின் புறம் மனம் சென்றது.

ஆனாலும் நிதர்சனமான உண்மை வாசுவை பார்த்த பிறகு அதை ஜனனி தொலைத்து நிற்கின்றாள்.

''விளையாட்டுப் பெண்! உனக்கு பொருத்தமில்லை!'' என்று அம்மா சொன்ன போது..

''அதுதான் எனக்குப் பிடித்திருக்கின்றது'' என்று உரக்க கத்திச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது தான். ஆனாலும் சொல்லவில்லை.

திருமணத்திற்கு ஜனனி கேட்டு.. அதை வாசுவும் சேர்ந்து முடிவு செய்து, ஜனனி ரெஜிஸ்டர் ஆபீசில் நின்றிருந்த காலையில், அவன் வீட்டில் இருந்து வாசு கிளம்பும் சமயம்..

அப்பாவைக் காலையில் சென்று பார்த்த அம்மா, ''வாசு! இக்கட ராரா! அப்பா என்னமோ மாதிரி இருக் காங்கடா!'' என்று பதட்டமாக சொல்ல...

உறங்குவது போலத்தான் இருந்தார், உடலும் சூடாகத் தான் இருந்தது. ஆனாலும் முடிந்து விட்ட ஒரு தோற்றம். அசைவில்லை.. ஹாஸ்பிடல் விரைந்து கொண்டு செல்ல.. அந்த பதட்டத்தில் வீட்டிலேயே போனை வைத்து விட்டான்.

தகவல் சொல்ல முடியவில்லை. ஹாஸ்பிடல் சென்றால் அங்கே முடிந்து விட்டது என்றார்கள்.. திரும்ப வீடு வரும் பொழுது பன்னிரண்டு மணிக்கும் மேல்... இமானின் போனில் இருந்து நூறு மிஸ்டு கால்களாவது இருக்கும்..

நரகமான நேரங்கள் அவை.. ஒரு புறம் இழப்பு, மறுபுறம் அந்த நேரத்தில் அவன் மட்டுமே அம்மாவிற்கு துணை நிற்க முடியும்! ஜனனி எதிர்பார்த்து காத்து நின்றிருந்திருப்பாள்!

அப்பாவின் இழப்பை ஜனனிக்கு தகவலும் சொல்ல முடியவில்லை..

உறவுகளுக்கு சொல்ல ஆரம்பித்துக் கொண்டே இமானிற்கும் அழைக்க, எடுத்த உடனேயே அவன் அவ்வளவு கோபமாக பேசினான். அதுவரையுமே அவன் வந்துவிடுவான் என்று ஜனனி இன்னும் ரெஜிஸ்டர் ஆபீசில் தான் இருந்தாள். கிட்ட தட்ட சொன்ன நேரத்தை விட ஒரு மூன்று மணி நேரங்கள்.

இமான் பேசப் பேச... ''அப்பா இறந்துட்டாங்க!'' என்று வாசு சொல்ல.. யாருக்கும் என்ன சொல்வது என்றே தெரியவில்லை..

''சாரி! நீங்க பாருங்க!'' என்று இமான் வைத்து, ஜனனியிடம் சொல்ல..

''ஓஹ்!'' என்றவளுக்கு வேறு பேச முடியவில்லை. யாரைச் சொல்வது எதைச் சொல்வது.. ஆனாலும் வாழ்க்கையில் என்னவோ தோற்று விட்ட உணர்வு.. கடவுளே இந்த திருமணம் வேண்டாம் என்று நினைக்கின்றாரோ என்ற உணர்வு.. பிறகு, ஏன் இப்படி ஆக வேண்டும்?

வீட்டிற்கு சென்றாள், அங்கே அனுராதா, தனது மாமனார் மாமியாருடன் தனது அண்ணனின் இறுதிப் பயணத்திற்கு சென்றிருந்தார். லக்ஷ்மணனனோ, பரதனோ, செல்லம்மாளோ செல்லவில்லை. செல்வதா? வேண்டாமா? என்ற யோசனையில் இருந்ததினால் வீட்டில் தான் இருந்தனர்.

''என்ன ஜனனி நீ இந்த நேரத்துக்கு வந்திருக்க? ஆபீஸ் லீவ் போட்டுட்டு வந்தியா! ஏன்?'' என்ற அம்மாவிடம்..

எதையும் மறைக்கவில்லை! பொய் சொல்ல முயலவில்லை!! வருவது வரட்டும் கூறிவிடலாம்!!!

''கல்யாணம் பண்ணிக்கலாம்னு போனேன் மா!'' என்றாள்.

''என்ன?'' என்று அதிர்ந்து அவர் நிற்க..

''வாசுவோட அப்பா இறந்துட்டாங்களாமே அதனால அவர் வரலை!'' என.. பெரியவர்கள் அத்தனை பேருமே அதிர்ந்து நின்றனர். இன்னும் வாசு தொடர்பில் இருக்கிறானா?

சரியாக அந்த நேரம் பார்த்து அனுராதா அழைத்தவர், ''வராம இருக்காதீங்க! வந்துடுங்க! நமக்குள்ள நடந்த

பிரச்சனை யாருக்கும் தெரியாது, இப்போ நீங்க அதைக் கொண்டு காரியத்துக்கு வராம இருந்தீங்கன்னா, அப்புறம் எங்க அப்பா அம்மா மட்டுமில்லை.. என் பிறந்து வீட்டு சொந்தங்க அத்தனை பேரும் என்னை ஒதுக்கிடுவாங்க.. வாங்க!'' என அவரும் மன்றாட..

கல்யாணத்திற்கு போகவில்லை என்றால் கூட யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள்! ஆனால் காரியத் திற்கு செல்லவில்லை என்றால் அவ்வளவு தான்.. சண்டை என்ற வார்த்தை முடிந்து பகை என்ற வார்த்தை ஆரம்பித்து விடும் என்று புரிந்தவர் தான் லக்ஷ்மணன்..

பரதனை பார்த்து.. ''வாடா! போயிட்டு வந்துடு வோம்!'' என்றவர்..

கூடவே ஜனனியைப் பார்த்து, ''இவளையெல்லாம் திருத்த முடியாது .. திருந்தாத ஜென்மம்.. பட்டுக்கூட புத்தி வரலை.. நம்ம மானம் மரியாதையை எல்லாம் குழி தோண்டி புதைச்சிட்டு தான் விடுவா!'' என்று வெறுப் போடு சொல்லிப் போக..

லக்ஷ்மணனாவது சொன்னார், பரதன் ஒரு வார்த்தைக் கூட மகளிடம் பேசவில்லை. வெறுப்போடு பார்த்து சென்றவர் தான்.. அதன் பிறகு மகளிடம் பேசவே யில்லை..

இப்படி வளர்த்தும் நம்மைப் பற்றி கொஞ்சமும் நினைக்கவில்லையே என்று ஓய்ந்து போனார். செல்லம் மாளுமே பேசவில்லை.. தாங்கள் எங்கு தவறினோம்.. எப்படிப் பெற்றவர்களை பற்றி சிறிதும் நினையாமல் மகளால் இப்படி ஒரு முடிவு எடுக்க முடிந்தது. ஒரு

வேளை வாசுவின் தந்தை இறக்காமல் இருந்திருந்தால் இந்நேரம் அவள் வாசுவின் மனைவி, நினைக்கவே பிடிக்கவில்லை.

ஜனனி வாசுவைக் காட்டி இவரைத் தான் பிடித் திருக்கிறது, திருமணம் செய்து கொள்வேன் என்பது போலச் சொன்ன அன்று ஒரு ஆவேசத்தில் மகளை அடித்தது தான் பரதன்.. அன்று சாடியவர்கள் தான்.. அப்பொழுதே வாசுவின் அம்மா வந்து உன் மகள் என் மகனுக்கு பொருத்தமில்லை என்று சொன்ன பிறகு அவளே புரிந்து கொள்ளட்டும் என்று விட்டு விட்டனர்..

திரும்ப அதைப் பற்றி யாரும் ஒரு வார்த்தை பேசினர் இல்லை..

இப்படி தாங்கள் இருக்க, மகள் திரும்பவும் இப்படி ஒரு வேலை செய்தது பொறுக்கவே முடியவில்லை.

''அப்படி என்ன அவன்கிட்ட இருக்குன்னு நீ அவன் பின்னாடி போகற .. கொஞ்சம் கூட மான ரோஷமே இல்லையா உனக்கு? அந்தம்மா பெரிய இவ மாதிரி வந்து என் பையனுக்கு உன் மக பொருத்தமில்லைன்னு சொல்லிட்டு போகுது!''

''இதுக்கும் அது காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிச்சு... பைத்தியமா இருந்த புருஷனை அத்தனை சொத்து சுகத்தையும் விட்டுட்டு இத்தனை வருஷமா கண்ணுக் குள்ள வெச்சி பார்த்துக்கிச்சு...''

''ஆனா உன்னோட காதலை அந்தம்மா கூட மதிக் கலை தானே! அவ்வளவு கேவலமாவாடி போயிட்ட நீ.. நீ அவ பையனோட கல்யாணம் பண்ணிக்க போய்

நின்னிருக்க, வாழ்க்கையைக் கொஞ்சம் கூட நீ சீரியஸா எடுக்க மாட்டியா! இதெல்லாம் உனக்கு விளையாட்டா?'' என்று செல்லம்மாள் வார்த்தைகளை கடித்து துப்ப..

கூனிக் குறுகி விட்டாள்!

அதன் பிறகு தானும் கடினமாகி தன்னுடைய வாழ்க்கையையும் கடினமாக்கி கொண்டாள். வாசுவை காதலிக்க வைத்த அவளின் குறும்புத்தனம் விளையாட்டுத் தனம் எல்லாம் எங்கோ அவளிடம் மறைந்து விட்டது.

யாராலும் அதை தேடி எடுக்க முடியவில்லை. தேடி எடுக்க முடிபவனுடன் எந்தத் தொடர்பும் இல்லை...

தந்தையின் காரியங்கள் முடிந்து, அவளைக் காண ஓடி வந்தவனிடம்,

''வேண்டாம் வாசு! யாருக்கும் நம்ம சேர்றது பிடிக்கலை! யாருக்கும் நம்ம கல்யாணமும் பிடிக்கலை! கடவுளுக்கும் பிடிக்கலைப் போல, தடுத்துட்டார்!''

''நாம கல்யாணம் பண்ணி என்ன செய்யப் போறோம்!''

''ஜனனி!'' என்று வாசு பார்த்தது பார்த்தபடி நின்றான்.

விரக்தியில் பேசுகிறாளோ என்று நினைக்க? தெளிவாகப் பேசினாள்!

உன் அம்மா ஏன் அப்படி பேசினார்கள் என்று கேட்கவில்லை, தன்னுடைய அம்மாவைப் பற்றியும் குறை சொல்லவில்லை.. யாரைப் பற்றியும் எதுவும் சொல்லவில்லை.

''இத்தனைப் பேரை கஷ்டப்படுத்தி கல்யாணம் பண்ணி, சேர்ந்து வாழ்ந்து, குழந்தைங்களை

பெத்துகிட்டு, என்ன பண்ண போறோம்.. அப்படி ஒரு வாழ்க்கை நமக்கு வேண்டாம்!''

''நம்ம பிரிஞ்சிடலாம்!'' என்று ஜனனி சொல்ல..

வாசுவால் எதுவுமே பேசவும் முடியவில்லை, செய்ய முடியவில்லை.. ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

சிறிது சமன்பட்டு வாசு என்ன பேசியும், ''ப்ளீஸ் வாசு! வேண்டாம்! பிரிஞ்சிடலாம்!'' என்று பிடிவாதமாக நின்று விட்டாள்.

அப்போதைக்கு ஜனனியின் உணர்வுகளுக்கு மதிப் பளித்து வாசுதேவன் ''சரி!'' என்பது போலத் தலை யாட்டிவிட...

பிரிந்து விட்டனர்.. இந்த ஐந்து வருடங்களாக எந்த தொடர்பும் இல்லை. காலங்கள் செல்ல, வாசுவிற்கு ஜனனியின் நினைவுகள் அதிகமாக, சில முறை பார்க்க, தொடர்பு கொள்ள முயல, எதற்கும் அனுமதிக்கவில்லை.

பிரிந்தது எல்லாவகையிலும் பிரிந்ததாகவே இருந்தது!!

பிரிந்து தான் விட்டனரே தவிர.. யாராலும் யாரையும் மறக்க முடிவில்லை.

இதயங்களின் துடிப்பே அடுத்தவரைக் கொண்டு தான்!!!



# 12

காலையில் வேகமாக கிளம்பிக் கொண்டு இருந் தாள் ஜனனி.. அன்று ஒரு கான்ஃபரன்ஸ் கால் இருந்தது..

இருபத்தி ஆறு வயது முடிய இன்னும் ஒரு நான்கைந்து மாதங்கள் இருந்தன..

அவள் இருப்பது ஹைதராபாத்தில்.. ஆம்! அவள் பணி அங்கே தான் இந்த இரண்டு மாதங்களாக.. முதலில் சேர்ந்த பொழுது சென்னை வாசம்.. பிறகு நிகழ்ந்த பிரச்சனைகளுக்குப் பிறகு சில மாதங்களில் புனேவில் ஒரு வாய்ப்பு வர அங்கே மாற்றிக் கொண்டாள்.. பிறகு ஆன்சைட் என்று அமெரிக்காவில் மூன்று வருடங்கள்.. இப்போது திரும்பவும் இந்தியா..

வந்து இரண்டு மாதங்களே ஆகிறது.. வந்த போது சென்னை வீட்டிற்குச் சென்றது தான்.. திரும்பச் செல்லவில்லை.. அம்மாவும் அப்பாவும் சென்ற மாதம் வந்து பார்த்துப் போயினர்.. திரும்ப அவினாஷ் வந்தான்.. திரும்ப ரகுலன் வந்தான்.. சென்ற வாரம் பெரியம்மாவும் பெரியப்பாவும் வந்து சென்றனர்..

பூரணி அக்காவின் மகளுக்குக் காது குத்து கண்டிப் பாக வரவேண்டும் என்று சொல்லிச் சென்றனர். நாங்கள் உன்னுடன் இருக்கிறோம் என்று அப்பா அம்மா மட்டு மல்ல எல்லோருமே உணர்த்திக் கொண்டே இருந்தனர்.

அதுவும் அவினாஷ் காலையில் ஆரம்பித்து இரவு உறங்கும் நேரம் வரை இரண்டு போன் கால்கள், ஒரு இருபது மெசேஜ்கள் என்று போட்டு விடுவான். இப்போது மட்டுமல்ல புனே சென்ற போது ஆரம்பித்தது, இப்போது அமெரிக்கா, பின்பு ஹைதராபாத் எனத் தொடர்கிறது.

போவதா? வேண்டாமா? என்ற பெரியக் குழப்பம்.. இத்தனை நாட்கள் எந்த விசேஷத்திற்கும் சென்ற

தில்லை... ஏன் பூரணியின் வளைகாப்பு, பின் முதல் குழந்தை பிறப்பின் போது இந்தியாவில் தான் இருந் தாள், அது அவர்களின் வீட்டு விசேஷம் கூட.. அதற்கும் செல்லவில்லை..

வேலை பாதுகாப்பு அரணாய் யாரையும் பார்க்க வேண்டிய அவசியம் இன்றி பார்த்துக் கொண்டது. பின் அமெரிக்க சென்று விட்டதால் எதற்கும் செல்லவில்லை.

இந்த முறை வந்த பெரியம்மா, ''பூரணி பார்க்கணும் சொல்றா.. வந்துடு ஜனனி.. வராம இருந்துடாத..'' என்று பலமுறை சொல்லிச் சென்றார்.

இப்படிச் சொந்த பந்தங்களின் ஞாபகங்கள், அப்பா அம்மாவின் ஞாபகங்கள், எதுவும் மனதில் உலா வர அனுமதிப்பது இல்லை தான்.. இதிலிருந்து பயந்து ஓடி, வேலை வேலை என்று தன்னை மூழ்கடித்துக் கொள்ள..

உத்தியோகத்தில் நல்ல உயர்வு, கூடவே நல்ல சம்பளம், இங்கு இந்தியச் சம்பளம், அங்கு டாலரில் சம்பளம்.. அதை செலவு செய்வதே இல்லை. அத்தியா வசிய செலவுகள் மட்டுமே!

ஆர்வமாக எதையுமே வாங்கியது இல்லை, தேவைக்கு உடைகள், அவ்வளவே! அணிமணிகள் என்று இந்த ஐந்து வருடங்களில் எதையும் வாங்கியதும் கிடையாது, இருப்பதை அணிவதும் கிடையாது. செல்லம்மாள் போராடிப் பார்த்து விட்டார். அசைக்க முடியவில்லை. கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி.. கையினில் வாட்ச் அவ்வளவே...

அவளாக ஏதாவது செய்து உண்டு கொள்ளுவாள்.. உப்பு காரம் எல்லாம் மிகவும் குறைவாக. எப்போதாவது

அலுவலக நிமித்தம் டின்னர்.. என்று சென்றால் தான் ருசியான உணவே!

நாக்கினை ருசிகளில் இருந்து தள்ளி வைத்திருந்தாள்!

காரணம் ஒன்றே! வாசு வேண்டும் என்று மனது கேட்டுவிடக் கூடாது என்பது தான்... நினைக்காமல் இருப்பது என்பது முடியாது. ஆனால் வேண்டும் என்று கேட்காமல் இருக்க வேண்டும் அல்லவா?

என்ன செய்கிறான்? என்ன வேலை? எங்கிருக்கிறான்? எதுவும் தெரியாது. இப்போது வந்த போது பெரியம்மா கூடப் பேச்சு வாக்கினில் ''வாசு'' என்று ஆரம்பிக்க..

''அந்தப் பேச்சு வேண்டாம் பெரியம்மா!'' என்று ஸ்திர மாக மறுத்து விட்டாள். இப்போது அவளின் வீட்டினில் எதிர்ப்பு எதுவும் இல்லை.. யாரோடும் திருமண பேச்சு எடுக்க விடுவதில்லை ஜனனி... இந்த ஐந்து வருடங் களாக மிகவும் போராடி விட்டனர் வீட்டினர்.

யாரோடும் திருமணம் முடியாது என்று நிற்கின்றாள். இந்த முறை அமெரிக்காவில் இருந்து வீட்டிற்கு வந்த போது ''வாசுவையாவது கல்யாணம் பண்ணிக்கோ!'' என்று பெற்றோர் ஆரம்பிக்க..

வாசுவைப் பற்றி பேச்சே கூடாது என்று விட்டாள். அப்போது அவனைத்தான் செய்து கொள்ள வேண்டும் என்று பிடிவாதம். இப்போது வேண்டாம் என்று பிடி வாதம். பெற்றவர்கள் நொந்து தான் போய்விட்டனர்.

வீட்டினில் மகன்கள் பேச்சும் அவர்களால் தாள முடியவில்லை. ''எல்லாம் உங்களால தான்.. சும்மா காதல் சொன்னா என்ன ஏதுன்னு அலசி ஆராயாம அப்படியேத்

தப்பு சொல்லிடுவீங்களா.. நீங்க கொண்டு வர்ற மாப்பிள்ளையை விட அவர் எந்த வகையில குறைவு.. இப்போ நல்ல வேலை, நல்ல பொசிஷன் கூட... தேடினாலும் இப்படி ஒரு மாப்பிள்ளைக் கிடைக்காது... உங்களால தான் அக்கா தானா கல்யாணம் பண்ற முடிவுக்கேப் போனா... இப்போ தனியா நிக்குறா!''

''அவங்கம்மா தாண்டா வேண்டாம்னு சொன்னாங்க!''

''அது நீங்க அவங்க பையனை அப்படிப் பேசினீங்க, நாங்க யாருக்கும் குறைஞ்சவங்க இல்லைன்னு காட்டிட்டுப் போயிட்டாங்க.. உறவுக்காரங்கன்னு கூட இல்லாம மரியாதையில்லாம நடத்தினா.. அவங்க உங்களை விட்டு பொண்ணை பேசிட்டுப் போயிட்டாங்க.. இதுவே காதல்.. இதுல பொருத்தமில்லைன்னு எப்படி வரும்?''

''எப்படியோ சந்தோஷமா இருந்தவள.. இப்படி ஆக்கிட்டீங்க...'' என்று இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது இந்த இரண்டு வருடங்களாக பேசிக் கொண்டு இருந்தனர்.

வயதாகிறது ஜனனிக்கு என்ற கவலை எல்லோருக்கும்.. அவளின் வயதில் இருந்த உறவுப் பெண்கள் அனைவருக்குமே திருமணம் முடிந்து ஏன் குழந்தைகள் கூட இருந்தது.

தாத்தாவும் பாட்டியும் ஒரு படி மேலே போய், ''நாங்க வேணா மருமகளோட அம்மா அப்பாக் கிட்ட பேசட்டுமா?'' என்றனர்.

''எனக்கும் அப்பா அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு. நிறைய வருஷம் ஆச்சு!'' என்றார் அனுராதாவும் இதுதான் சாக்கென்று...

“பெரியம்மா! அவங்களை நம்ம பூரணிக்கா விஷேஷத்துக்கு கூப்பிடலாம்” என்றான் அவினாஷ்.

“அவங்க வாசு கூட இருக்காங்க.. இப்போ கூப்பிட்டா இங்க அண்ணியையும் கூப்பிடணும்!” என்றார் அனுராதா.. மீண்டும் ஒரு தயக்கம் வந்தது எல்லோரிடமும்..

ஒன்றுமில்லாத போதே வீடு தேடி வந்து தைரியமாய், “உன் மகள் பொருத்தமில்லை” என்று சொல்லிச் சென்றவர்..

இப்போது ஸ்வாதி இருக்கும் உயரமே வேறு.. வசதியிலாகட்டும்.. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலின் நிர்வாகியாகட்டும்.. அது மட்டுமா... அவரின் மகன்.. என்ன ஒரு பதவி.. மிகுந்த உயர் பதவி.. இளவயது, இன்னும் எட்டும் தூரங்கள் எத்துணை.. என்ன சொல்ல?

அனுராதா இங்கிருக்கும் அனைவர் வீட்டிற்கும் விசேஷத்திற்கு செல்வார் தான், ஸ்வாதியும் வருவார் தான்.. ஆனால் ஒரு தலையசைப்போ, “வாங்க அண்ணி” என்ற பேச்சோ, “வா அனு!” என்ற பேச்சு மட்டுமே இருவரிடமும். வேறு பேச்சுக்கள் இல்லை. ஆளுக்கு ஒரு புறம் அமர்ந்து விடுவர். இப்படியிருக்க, இப்போது வசதி வாய்ப்பு வந்ததும் பெண் கொடுக்க நினைக்கிறார்கள் என்று நினைத்து விடக் கூடாது இல்லையா?

“முதல்ல பூரணி விஷேஷத்தை நல்ல படியா முடிப்போம்!” என்று அப்போதைக்கு பரதன் முற்றுப்புள்ளி வைக்க.. திரும்பவும் ஆரம்பித்த இடத்திற்கே வந்து நின்று விடுவதா? நொந்து விட்டார் செல்லம்மாள்.

வாசு அப்போதுதான் அலுவலகத்தில் இருந்து வந்திருந்தான். பாட்டியும் தாத்தாவும் அங்கே

குவார்ட்டசின் லானில் அமர்ந்து இருக்க.. அவர்களோடு சென்று அமர்ந்து கொண்டான்.

பாட்டி உடனே காபி ஃபிளாஸ்க் எடுக்கப் போக.. அப்போது வந்த பக்கத்துக்கு குவார்டர்சில் இருக்கும் மற்றொரு ஆபீசரின் மகள்... ''ஹலோ வாசுதேவன்!'' என்றபடி வந்தாள்.

டைட் ஷார்ட்ஸ் முட்டியை கூட தொடாமல் இருக்க, ஸ்லீவ் லெஸ் பனியன் சிறிது இடுப்பைக் காட்ட என இருக்க.. பாட்டியின் முகம் என்ன உடை என்பது போல சுழித்தது.

பாட்டி எழவும்.. ''தாதிம்மா! க்யா சாஹியே? ஹம் லேகர் ஆத்தே ஹை!'' எனவும்..

பாட்டி முழிக்க, ''காபி பிளாஸ்க்'' என்றார் தாத்தா... அவள் உள்ளே செல்ல..

''என்ன உடுப்போ?'' என்று பாட்டி சொன்ன விதத்தில் வாசுவின் முகத்தில் தானாக முறுவல் மலர்ந்தது. ''பாட்டி! அது அவங்களுக்குத் தப்பான ஒரு விஷயம் கிடையாது. அது இங்க ரொம்ப சகஜம்! பழக்கம் கூட!'' என்றான்.

''என்னவோ போ! இந்த கன்றாவி எல்லாம் பார்க் கணுமா!'' என,

''ஏன் கிழவி? இது கன்றாவியா? அழகு!'' என்று தாத்தா சொல்லி, பாட்டியிடம் ஒரு முறைப்பை பரிசாகப் பெற... வாசு வாய் விட்டுச் சிரித்தான்.

ஆம்! வாசுவுடன் இருக்கும் இந்த வாழ்க்கையை அந்த பெரியவர்கள் அனுபவித்தனர்.. மகனில்லை என்ற

குறையே தெரியாமல் கவனமாக பார்த்துக் கொண்டான் வாசு.

''நான் கிழவியா?''

''பின்ன குமரியா? மருமக தெலுங்குப் பொண்ணு வந்துட்டா.. பேரனோட மனைவி இந்தி காரியா வந்துடுவாளோ?'' என்று சொல்ல,

''இந்தி காரி வந்தாலும் பிரச்சனையில்லை.. ஆனா இந்த மாதிரி உடுப்பு போடறவ வேண்டாம்!'' என்று சொல்ல..

வாசுவின் முகம் புன்னகையோடு இருந்தாலும்.. அதில் இழையோடிய வருத்தம் பெரியவர்களுக்கு புரிந்தது. வாசு எழுந்து உள்ளே போகப் போக,

''இரு வாசு! அவ வரட்டும்!'' என்று சொல்லி அந்தப் பெண் வந்த பிறகு,

''இப்போ உள்ளேப் போ!'' என்பது போலச் சைகை செய்ய.. அவன் எழவும்..

''கொஞ்சம் நேரம் பேசிட்டு இருக்கலாம்னு தான் வந் தேன்!'' என்று ஆங்கிலத்தில் ஆர்வமாகச் சொன்னவளிடம்,

''நோ, ப்ளீஸ்! ஹெட் ஏக்'' என்று சொல்லிச் சென்றான்.

அந்த பெண்ணின் முகம் சுருங்கி விட்டது. அது புரிந்தாலும், அங்கே ஒருவள் ''இதயமே சுருங்கிக் கிடக்க, முகம் சுருங்குவதற்கு என்ன செய்ய முடியும்?'' என்று நினைத்தவாறே சென்றான்.

இரவு ஸ்வாதியின் அழைப்பு வர, பேசிக் கொண்டு இருந்த வாசுவிடம், ''பேசிட்டு குடு!'' என்று போன் வாங்கிய தாத்தா..

''வாசுக்கு கல்யாண வயசாகிடுச்சு! ஏன் இன்னும் எதுவும் பார்க்கலை?'' என்பது போலப் பேச்சை ஆரம்பித்தார்.

''நான் இப்போ சிக்ஸ் மந்த்ஸா கேட்கறேன் மாமா! அவன் கொஞ்ச நாள் போகட்டும் சொல்றான்!'' என்றார்.

''இன்னும் சிக்ஸ்டி இயர்ஸ்க்கு அப்புறம் கேட்டாலும் அப்படித்தான் சொல்லுவான்.. நீதான் அவனுக்குப் பிடிச்ச பொண்ணை வேண்டாம் சொல்லிட்டியே!'' என்றார் நேரடியாக.

''அது பொருத்தமில்லைன்னு தான்..'' என்று அவரும் நிமிர்வாகவே சொல்ல,

''உங்க அப்பா அம்மா செஞ்ச தப்பை நீயும் செய்யாதம்மா.. அவங்க ஆசீர்வாதம் இருந்திருந்தா என் மகனும் நல்லா இருந்திருப்பானோ என்னவோ? இந்த உலக நினைப்பே இல்லாத எங்க மகனை அவ்வளவு நல்லாப் பார்த்துக்கிட்ட உன் மகனை விட்டுடுவியா?'' என,

''மாமா என்ன பேசறீங்க..?'' என்று அவரின் குரல் இறங்கிப் போக...

''அந்தப் பொண்ணையே பாரேன்!'' என்றனர்.

''அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகியிருக்கும்! இனி என்ன பண்ண?''

''என்னமா நீ?'' என்றவர்..

''கல்யாணம் ஆகியிருந்தா இவ்வளவு நேரம் உன்கிட்ட எப்படிப் பேசுவோம்.. இன்னும் ஆகலை, நல்லாத் தெரியும்!'' என்றார்.

“ஓஹ்!” என்றார், இன்னும் அவருக்கு வாசு திருமணம் வரை போனது தெரியவே தெரியாது. இவர்கள் பக்கத்தில் யாருக்கும் தெரியாது.

அங்கே ஜனனியின் வீட்டிலும் குடும்பத்திற்குள் மட்டுமே, பூரணிக்கு மட்டுமே வெளியில், அவளும் அவளின் கணவனுடன் கூடப் பகிரவில்லை. ஒரு வேலை திருமணம் வரை சென்றது தெரிந்திருந்தால் ஸ்வாதி அதை விட்டிருக்க மாட்டார்.. அவருக்குத் தெரியவேயில்லை!

ஜனனி ஒரு சிறு கண்ணசைவு காட்டியிருந்தாலோ, இல்லை பேசியிருந்தாலோ, வாசு அம்மாவிடம் திரும்பப் பேசியிருப்பான்.. அவள் தள்ளி நிற்கவும்.. ஒன்றும் செய்ய முடியவில்லை.

சமீப நாட்களாக ஒரு முறை பார்ப்போம் ஜனனியை, பேசுவோம், என்று மனதில் ஓடிக் கொண்டே இருந்தது. இமானிடம் பேசிய பொழுது யு.எஸில் இருக்கிறாள் என்று தெரிய வர, வருவதற்காகக் காத்திருந்தான்.

வந்துவிட்டாள் என்றும் தெரிந்து கொண்டான்... நேரில் போய் நிற்பதா? அம்மாவிடம் பேசலாமா? இல்லை திரும்ப அவள் வீட்டினரிடமே பேசலாமா? என்று ஓடிக் கொண்டிருக்க.. இன்று தாத்தா அம்மாவிடம் பேசவும் விட்டு விட்டான்.

“மாமா! வாசு கிட்ட குடுங்க!” என.. வாங்கியவனிடம்,

“இன்னும் நீ அந்தப் பொண்ணோட பேசறியா?” என்றார்..

''இல்லைம்மா அவ பேசறது இல்லை.''

''ஏன்?'' என்றவரிடம்,

''நாங்க பிரிஞ்சிட்டோம்!'' என்றான்.

''அப்படின்னா நீ இப்போ அந்த பொண்ணை லவ் பண்ணலியா?''

''ப்ச்!'' என்று உச்சுக் கொட்டியவன், ''நாங்க பிரிஞ் சிட்டோம் மா! அப்படின்னா பேசறது இல்லை, பார்க்கறது இல்லை, கல்யாணம் பண்ணப் போறது இல்லை!''

''அப்போ தாத்தா ஏன் அப்படிச் சொல்றார்!'' என்றார் புரியாதவராக.

''ஏன்னா? நான் வேற பொண்ணைக் கல்யாணம் பண்ண மாட்டேன் இல்லையா?''

''வாசு! தெளிவா பேசு!'' என்று தெலுங்கில் கத்தினார்.

''அப்பா இறந்த அன்னைக்கு நானும் ஜனனியும் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ற மாதிரி இருந்தோம். ஆனா என்னால போக முடியலை, நின்னு போச்சு.. திரும்பவும் நான் பார்க்கப் போனப்போ.. இத்தனை பேரைக் கஷ்டப்படுத்தி நாம ஏன் கல்யாணம் பண்ணிக்கணும், பிரிஞ்சிடலாம்னு சொல்லிட்டா!'' என,

இது முற்றிலும் புதிய செய்தி. ''என்ன?'' என்று அதிர்ந்து போனார்.

வாசு இவ்வளவு தீவிரமாக இருந்தான் என்பது எள்ளவும் அவருக்குத் தெரியாது.. ஜனனியைப் பற்றிய பேச்சு அம்மாவிற்கும் மகனிற்கும் எப்போதும் வந்தது

இல்லை. வாசுவாகப் பேசாத போது ஸ்வாதி எப்படி பேசுவார். ஆனாலும் மகன் அப்படியே விடுவான் என்று நினைத்தது இல்லை, மறக்க நாள் எடுக்கிறான் போல என்று தான் நினைத்து இருந்தார்.

இந்தத் தீவிரம் அவருக்குத் தெரிய வரவேயில்லை.. ஏதோ தவறு செய்து விட்டது போன்ற உணர்வு தான், ஸ்வாதியின் மனதினில் பிரவாகமாகப் பொங்கியது.

''என்கிட்டே ஒரு வார்த்தைக் கூட சொல்லலை நீ.. என் பையன் இப்படி ஒரு விஷயத்தை என்கிட்டே இருந்து மறைச்சு இருப்பான்னு நான் நினைக்கவே யில்லை.. நானே காதல் கல்யாணம் தானே பண்ணி னேன்.. நீ ஏன் ஒரு தடவை கூடப் புரியவைக்க முயற்சி செய்யலை.. அவ்வளவு கெட்ட அம்மாவா நான்?'' என்று அவர் கேட்கும் போது குரல் தளுதளுத்து. சுலபத்தில் அழுபவர் அல்ல ஸ்வாதி..

''மா ப்ளீஸ், சொல்லக் கூடாதுன்னு இல்லை.. ஜனனி திரும்ப என்கிட்டே பேசலை மா.. அதுக்கான சந்தர்ப்பமே அவ வரவிடலை.''

ஆனாலும் மகனது இந்தச் செயல் ஜீரணிக்கவே முடியவில்லை,

ஐந்து மிகப் பெரிய வருடங்கள், ஒரு சிறு கோடி கூடக் காட்டினது இல்லை. திருமணம் வரை சென்றிருக்கிறான். பின்னர் வேண்டாம் என்று பிரிந்திருக்கின்றாள்.

அந்தப் பெண் எவ்வளவு வேதனைகளை கடந்திருப் பாள். நினைக்க நினைக்க தாள முடியாமல், பதில் பேசாமல் தொலைபேசியை வைத்து விட்டார்.



# 13

பூரணியின் மகளுக்கு மொட்டை அடித்துக் காது குத்தும் நாள் அன்று, வீட்டினர் பரபரப்பாக கோவிலுக்கு கிளம்பிக் கொண்டு இருந்தனர்.

ஜனனி அன்று காலையில் தான் வீட்டிற்கு வந்திருந் தாள். அங்கே சென்னையில் இருந்து ஒரு இருபது கிலோமீட்டர் தூரம்.. நாங்கள் வந்து கொள்கிறோம் என்று சொல்லியிருந்தனர். அதனால் பூரணி வீட்டினர் அவர் களின் உறவுகளோடு சென்றிருந்தனர்.

காலையில் அனுராதாவிற்கு தொலைபேசி அழைப்பு வர, எடுத்ததும் பேசியது ஸ்வாதி,

''எப்படி அனு இருக்க?'' என்ற உச்சரிப்பிலேயே அது சுவாதி என புரிய,

''நல்லா இருக்கேன் அண்ணி, நீங்க எப்படி இருக் கீங்க?'' என்ற கேள்வியை வாய் தானாகக் கேட்டாலும், அம்மாவிற்கும் அப்பாவிற்கும் எதுவோ என்ற பயம் நெஞ்சினைப் பிடித்து ஆட்டியது.

''சொல்லுங்க அண்ணி!'' என்று கூடவே கேட்க..

அனுராதாவின் குரலில் எதோ ஒன்றுக் குறைய, ''ஏன் அனு? நான் போன் பண்ணினது பிடிக்கலையா!'' என்றார் ஸ்வாதி.

''ஐயோ, அப்படி எல்லாம் இல்லை அண்ணி என்று பதறியவர், நீங்க கூப்பிட்டதே இல்லை, இப்போக் கூப்பிடவும் அப்பா அம்மாவுக்கு ஏதோன்னு பயந்துட்டேன்.. இன்னைக்குப் பூரணி பொண்ணுக்கு வேற மொட்டை அடிச்சு காத்து குத்துறாங்க, அதுக்குக் கிளம்பற பதட்டம் வேற.''

''அப்படியா! சந்தோஷம்...'' என்றவர்.. ''என்னைக் கூப்பிடமாட்டியா?'' என்றும் சொல்ல..

''அச்சோ, வாங்கண்ணி, வாங்க!'' என்றார். அப்படி ஆரம்பித்தப் பேச்சுக்கள்.. நீண்டது.

இப்போது கோவிலில் பூரணியின் குழந்தைக்கு மொட்டை அடிக்கப்பட்டுக் கொண்டிருக்க.. குழந்தை, கத்து, கத்து என்று கத்திக் கொண்டு இருந்தாள்.

ஜனனி, குழந்தை அழுவதைப் பார்த்து.. பூரணியிடம் ''அழுத்தி பிடிக்கா ஆடிடப் போறா, காயம் ஆகிடும்!'' என்று சத்தமாக மிரட்டிக் கொண்டிருந்தாள். ஆம்! குழந்தை வீரிடுவதைப் பார்த்ததும் தானாக வந்தது.

அதுவுமில்லாமல் பூரணி காலையில் அங்கே வந்ததில் இருந்து ஜனனியைக் கூடவே இருத்திக் கொண்டு, இதைச் செய்! அதைச் செய்! என்று அருகில் வைத்து சகஜமாக்கிக் கொண்டு இருந்தாள்.

பூரணியின் கணவன் அருகிலேயே இல்லை. குழந்தை அழுவதைப் பார்க்க முடியாமல் பெரிய மகனை தூக் கிக்கொண்டு, தூரமாகச் சென்று நின்று கொண்டிருந்தான்.

ஜனனிக்குக் குழந்தையிடம் முழு கவனமும் இருந்ததி னால், அப்போது புதிதாக சிலர் அங்கே வர, அதில் கவனம் செல்லவில்லை.

மொட்டை அடித்து முடித்ததும், ''ஷப்பா!'' என பூரணி அப்படியே பின் நகர்ந்து அமர..

''நீ வாடி செல்லம்!'' என்று ஜனனி அவளை தூக்கித் திரும்ப..

அவளின் அருகில் வாசுதேவன்.. முன்பே வந்து விட்டான், ஜனனியை பார்த்துக் கொண்டிருந்தான்.

தூசு படிந்த ஓவியமாய் அவனின் கண்களுக்குத் தெரிந்தாள். தூசி தட்ட கைகள் பரபரத்தன. அணைத்துப் பிடிக்க கைகள் துடித்தன. முயன்று அமைதியாய் காட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

அவன் மட்டுமல்ல ஸ்வாதி, அவரோடு அனுராதாவின் அம்மா, அப்பா என்று எல்லோரும்.. ஓர் பத்து நிமிடம் முன் தான் வந்திருந்தனர்.

எல்லோர் பார்வையும் வாசுதேவன் மேல் தான்.. முன்பே அழகன், வசீகரன், கம்பீரமானவன் தான். இப்போது பதவி கொடுத்தப் பொலிவு.. கூடவே வருடங்கள் கடந்து விட்டதால் அந்த வயதுக்குரிய தோற்றம், ஒரு முழுமையான ஆண்மகனாக முன் நின்றான்.

அவனைப் பார்த்ததும் ஜனனியின் கண்களில் ஒரு அதிர்வு.. பின் பாலைவனத்தில் தண்ணீரைப் பார்த்த ஒரு பரவசம். அவசரமாகக் கண்களில் நிரப்பினாலும் சரியாகத் தெரியவில்லை. கண்களில் தான் நீர் நிறைந்து விட்டதே..

அவளின் இதயம் துடிப்பது அவளுக்குக் கேட்டது!!!

வாசுதேவன் தேவனாய் தெரிய.. ஜனனி அவனுக்குப் பக்கத்தில் காய்ந்த கருவாடாகத் தான் தெரிந்தாள்..

அளவான உயரத்தில், ஒடிசலாக, திருத்தமான முகத்துடன் இருந்தாலும், ஒரு பொலிவு இல்லை, நிறம் வாசுதேவன் பக்கத்தில் இருந்தால் மங்கித் தான் தெரிவாள். உடையில் சிறிதும் கவனம் இல்லை அது இன்னும் ஜனனியை குறைத்துக் காட்டியது.

இது பார்ப்பவர்களுக்கு! ஆனால் வாசுவின் கண் களுக்கு அவள்தானே பேரழகி..

''எப்படி இருக்க ஜனனி?'' என்ற வாசுவிற்கு

''நல்லா இருக்கேன்!'' என்பது போலத் தலையாட்டல் மட்டுமே. பேச முடியவில்லை. பேச்சே மறந்து விட்டது போன்ற உணர்வு. அதற்குள் குழந்தை சிணுங்க.. அதைப் பூரணியிடம் கொடுப்பது போல இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

வாசுதேவனைப் பார்த்த ஜனனியின் வீட்டினர் பிரமித்து தான் பார்த்தனர்.. ''சே, சூப்பரா இருக்கான்யா ஆளு!'' என்பது போலத் தான்..

அதையும் விட ஸ்வாதியைப் பார்த்த செல்லம்மாள், ''அச்சோ! இந்தம்மா இப்படி இருக்கே.. என் பொண்ணு இது பக்கத்துலயே நிக்க முடியாது போல இருக்கே.. இதுல இவங்க பையன் பக்கத்துல எப்படி நிற்க வைக்கும்!'' என்று எண்ணம் தான். சொல்லப் போனால் செல்லம்மாளின் முகம் பொலிவிழந்து விட்டது.

அனுராதா, அம்மா அப்பாவிடம் பேசிக் கொண்டிருக்க.. லக்ஷ்மணனிடம் பேச ஆரம்பித்த ஸ்வாதி..

''வாசு!'' என்று மகனைக் கூப்பிட்டு அருகில் நிறுத்திக் கொள்ள... பரதன் அவர்களின் அருகில் தான் இருக்க, செல்லம்மாள் ஸ்வாதியைப் பார்த்தது பார்த்தபடி நிற்க..

அவினாஷும் ரகுலனும் பூஜைப் பொருள் ஒன்று குறைய, அதை வாங்க அந்த இடத்தில இருந்து சென்றிருக்க.. பூரணியும் அவள் கணவரும் குழந்தையைப் பார்க்க.. அவர்களின் பக்கத்து உறவுகள் சலசல வென்று பேசிக் கொண்டிருக்க..

ஜனனியை கவனிப்பார் யாருமில்லை!!!

ஸ்வாதி சுற்றி வளைக்காமல்.. ''அன்னைக்கு என் பையனை பேசிட்டீங்களேன்னு கோபம். நானும் திரும்பப் பேசிட்டேன்.. சாரி! மனசுல வைச்சுக்காதீங்க'' என்றவர்..

''உங்கப் பொண்ணை என் மகனுக்கு கொடுக்கறீங்களா?'' என்றார் நேரடியாக.

அன்று காலையில் தான் வாசுவும், தாத்தாவும், பாட்டியும் வந்திருந்தனர்.. ஸ்வாதி வாசுவிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை..

வாசு, ''சாரிம்மா!'' என்று ஸ்வாதியின் பின் சுற்றிக் கொண்டிருந்தான்.

''நம்ம ஒரு விசேஷத்துக்குப் போகணும்!'' என்று மாமனாரிடமும் மாமியாரிடமும் சொன்னார் அவ்வளவே..

இங்கு வந்த பிறகு தான் இப்படி என்றே தெரியும்.. வாசுவின் மனம் குதித்தது தான். ஆனால் காட்டும் வழக்கமில்லை.. மனதின் மகிழ்ச்சியே இன்னும் அவனைப் பொலிவாக காட்டியது.

லக்ஷ்மணன் இப்படி ஸ்வாதி நேரடியாகக் கேட்பார், அதுவும் மன்னிப்போடு என்று எதிர்பார்க்கவில்லை..

''நாங்களும் அன்னைக்கு ஜனனி பிடிச்சிருக்கு, இவரைத் தான் கட்டுவேன்னு சொன்னவுடனே, எதுவும் யோசிக்கலை. சாரி!'' என்று அவரும் மன்னிப்பு கேட்டவர்..

''அன்னைக்கே பொருத்தமில்லைன்னு சொல்லிட்டுப் போனீங்க, இன்னைக்கு இன்னும் வாசுவோட உயரமே வேற.. திரும்ப இந்த மாதிரி பேச்சு வந்தா, எங்கப் பொண்ணு தாங்க மாட்டா!'' என்று அவரும் நேரடியாகச் சொல்ல,

''என் மகனுக்குப் பிடிச்சிருக்குன்றப்போ இந்த பொருத்தம் பார்க்கற வேலையே இல்லை.. இனி அந்தப் பேச்சு வராது!'' என்றார்.

அப்போது தான் ரகுலன் வந்தவன், ''அப்பா! ஜனனி அக்கா மெயின் ரோட்ல ஊருக்குப் போற பஸ் ஏறினா.. நாங்க வர வரத் தான் பார்த்தோம்! அவினாஷ் அப்படியேக் கூட ஏறிட்டான்.. நான் இங்க வந்துட்டேன்!'' என்று பரபரப்பாக சொல்ல,

''அச்சோ! என்ன இது?'' என்று பெரியவர்கள் பதற..

ஸ்வாதி வாசுவைப் பார்த்து முறைத்தார்.. ''ஏன்டிரா நுவ்வு? ஏண்டி நீ லவர் பாய் வாசு!'' என்று பாதித் தெலுங்கும் ஆங்கிலமுமாக அவனை திட்டினார்.

''உன்னைப் பார்த்த உடனே ஓடி வந்து ஹக் பண்ணி யிருக்க வேண்டாமா, எத்தனை வருஷத்துக்கு அப்புறம் பார்க்கிறா உன்னை பார்த்ததும் ஓடறா, என்ன சொல்ல?''

''அதும்மா! நாங்க பிரிஞ்சிட்டோம்!'' என்று அன்னை யின் கோபத்தை பார்த்து வாசு உளற,

''போடா!'' என்று அவனைத் திட்டியவர்..

''காதலிக்கறது எதுக்கு பிரியறதுக்கா.. உனக்கு லவ் பண்ணவே தெரியலை.. வேஸ்ட் போ!'' என..

எல்லோர் முன்னும் என்ன சொல்வது என்று தெரியாமல், ''அதிக்காதம்மா!'' என பரிதாபமாக விழித்து நின்றான்.

''ஆ!'' என்று அம்மாவும் மகனும் பேசிக் கொள்வதை ஜனனி வீட்டினர் பார்த்து நின்றனர்.

''ஜனனி போய் டென் மினிட்ஸ் ஆகிடுச்சு, நீ எனக்கு எக்ஸ்ப்ளநேஷன் குடுத்துட்டு இருக்க.. டூ பேட்!'' என்றார்.

''நாங்க ஈவ்நிங் வர்றோம்!'' என்றவர், ரகுலனைப் பார்த்து, ''அவனுக்கு பைக் ஓட்ட தெரியாது நீ கூட்டிப்போ!'' என்றவர்,

திரும்ப இவர்களைப் பார்த்து, ''அனுப்பட்டுமா!'' என்றார்.

''அனுப்புங்க! அனுப்புங்க!'' என்று செல்லம்மாள் முதலில் பதில் சொல்ல.. அன்னையாய் அவரின் மனம் அங்கே எல்லோருக்கும் புரிந்தது.

''ஏன் வாசு பைக் ஓட்ட மாட்டான்?'' என்று லக்ஷ்மணன் பேச்சை இலகுவாக்க..

''அது அவங்கப்பாவுக்கு பைக் ஆக்சிடன்ட் தானே, அதனால எனக்கு ஒரு பயம்.. வீண் பயம்னு தெரியும்.. இருந்தாலும் விட முடியலை..'' என்று அமைதியாகப் பேசியவர்,

''ஏன்? பைக் ஓட்டத் தெரியலைன்னா பொண்ணு குடுக்க மாட்டீங்களா அண்ணா!'' என உற்சாகமாக சொல்ல..

எல்லோர் முகத்திலுமே புன்னகை.. சூழ்நிலைகளை நிமிடத்தில் மாற்றி கட்டுக்குள் கொண்டுவந்து விட்டார் ஸ்வாதி. மகனுக்காக எதுவும் செய்வார் இதைச் செய்ய மாட்டாரா என்ன?

ஜனனி வீட்டுக்குள் நுழைந்த சமயம்.. இவர்களும் பின்னோடு வந்து விட்டனர்.. ஆனால் பைக் வந்த ஸ்மரணைக் கூட இல்லை.. பஸ்ஸிலேயே கண்களைத் துடைத்தபடி தான் வந்தாள். பணம் ஏதும் இல்லாமல் பஸ்ஸில் ஏறிவிட, பின்னால் அவினாஷ் ஏறியதால் ஆகிற்று. இல்லையென்றால் அவ்வளவு தான், அங்கே சங்கடமாகியிருக்கும் அவளிற்கு.

தன்னுடைய ரூம் சென்றவள், கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்தபடி தேம்பித் தேம்பி அழுதவள், பின் முகத்தை மூடி அழ..

வாசு கதவைத் திறந்து உள் வந்தான்.. அது கூட அவளுக்குத் தெரியவில்லை..

அருகில் சென்றவன், ''ஜனனி'' என.. நிமிர்ந்து பார்த்தவள், இன்னும் அழ..

''ஷ்! எதுக்கு இப்படி அழற!'' என்று அவளை ஆதர வாக அணைக்க.. ஜனனி விலக முற்பட.. அவள் விலக முடியாதபடி இன்னும் இறுக்கி அணைத்து பிடித்தான்.

விலக முடியாததால் வாசு மேலேயே சாய்ந்து, தேம்பித் தேம்பி அழுதவள், முகத்தை நிமிர்த்தவே இல்லை.

வந்து விட்டான் என்ற உணர்வு, அது கொடுத்த பரவசம், இனி எப்படியும் தன்னை விட்டுப் போக மாட்டான் என்ற நிம்மதி, வீட்டினரும் விட மாட்டார்கள்,

இனித் தன் வாழ்க்கை வாசுதேவனோடு என்ற மனதின் மகிழ்ச்சி ஊற்று, உணர்ச்சிகளின் பிடியினில் ஜனனியை சிக்க வைத்து, அழுகையைக் கொடுத்தது.

வாசுதேவனை அங்கே திடீரென்று பார்த்ததும், ஹைதராபாத்தில் இருந்து நேற்று அவள் வந்த பயணத் தின் போது இருந்த மன சஞ்சலம், என்ன இருக்கிறது வாழ்க்கையில் என்ற பற்றற்ற தன்மை, தனிமையின் பயம், எல்லாம் சூரியனைக் கண்ட பனியாய் விலகியது.

யார் முன்னிலையிலும் இதை காட்டப் பிரியமற்று அந்த இடத்தை விட்டு ஏறக் குறைய ஓடி வருவது போல வந்துவிட்டாள். கூடவே அவளின் உப்பு சப்பற்ற காரணங்கள்.

அழட்டும் என்று விட்டால், அழுது முடிப்பவள் போலத் தோன்றவில்லை..

''என்னை பாரு முதல்ல!'' என்று ஒரு கையால் முகத்தை வலுக்கட்டாயமாக நிமிர்த்த.. தேம்பிக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

''எதுக்கு அழற?'' என்றவனிடம்..

''தெரியலை!'' என்றவள், கூடவே விழி விரித்து,

''நீங்க இன்னும் அழகாகிட்டீங்க'' என முகத்தைச் சுருக்கி சொல்லிய விதத்தில் வாசுவிற்குச் சிரிப்பு வந்தது.

''அதுக்கு எதுக்கு அழற?'' என இன்முகமாகவே கேட்டான்.

''நான் உங்களுக்கு மேட்ச் இல்லை தானே!''

''நீதான் என்னோட மேட்ச் பாக்ஸ் ஜனனி.. நீ மட்டும் தான் என்னை பத்த வைக்க முடியும்!'' என சொல்லி வாசு பார்த்த பார்வையில்,

''ங்கே!'' என்று தான் ஜனனி பார்த்தாள். வாசுவினது இந்தப் பார்வை, இந்த பேச்சு எல்லாம் புதிது.

ஜனனி விழித்துப் பார்த்த பார்வையில்.. ஈர்க்கப்பட்டு.. அவளின் கண்களின் மேல் பட்டும் படாமல் இதழ் பதிக்க.... ஜனனியின் உடல் சிலிர்த்தது.

வாசுவைத் தானும் இறுக்கமாகப் பற்றிக் கொண் டவள்.. ''இது தப்பு!'' என,

''ஆமாம்! இது தப்பு தான்! இவ்வளவு பக்கத்துல வெச்சிக்கிட்டு கண்ல யாராவது குடுப்பாங்களா?'' என்றவனை,

''இவனுக்கு இப்படிக் கூட பேச வருமா?'' என்று பாவையவள் பார்த்திருக்க,

வாசுதேவன் மையலோடு சொன்னதைச் செயல் படுத்த ஆரம்பித்தான்.. கண்களை விட்டு இதழ்களில் நீண்ட நேரம் இளைப்பாற.. ஜனனிக்கு உடல் நடுக்கமே எடுத்து விட்டது..

வேண்டும் போலவும் இருந்தது, வேண்டாம் போல வும் இருந்தது. அவன் விட்டதும் அவசரமாக கதவைப் பார்க்க.. அது வேறு திறந்து இருக்க.. அச்சோ என்ன இது என்பதுப் போல பரிதாபமாகப் பார்த்தாள்.

புது மயக்கம் வாசுதேவனுக்கு. இத்தனை நாட்கள் யாரைப் பார்த்தாலும் தோன்றாத ஆசைகளும், உணர்வு

களும், ஜனனியைப் பார்த்த இந்த மணித்துளிகளில் ஆரம்பித்து இருந்தது.

முன்னிருந்த காலத்தில் திருமணம் வரை சென்ற போதுக் கூட இப்படித் தோன்றியதில்லை. தினசரி வாழ்க்கையில் ஆணையும் பெண்ணையும் காதலர்களா கவோ, கணவன் மனைவியாகவோ, பிள்ளைகளுடன் குடும்பமாகவோ பார்க்கும் பொழுது ஜனனிக்காக ஏங்கித் துடித்த இதயம்..

இப்போது பார்த்த பிறகு இன்னும் வேகமாகத் துடித்தது!

**யாருமில்லா தனியரங்கில்**
**ஒரு குரல் போலே நீ எனக்குள்ளே**
**எங்கோ இருந்து நீ என்னை இசைக்கிறாய்**
**இப்படிக்கு உன் இதயம்!**

**ஓ! என்ன சொல்வேன் இதயத்திடம்**
**உன்னை தினமும் தேடும்**
**என் பேச்சைக் கேட்காமல் உன்னைத் தேடும்!**
**இப்படிக்கு உன் இதயம்!**

எப்போதும் ஜனனியைக் குறித்து மனதினில் ஒலிக்கும் இனிமையான வரிகள்.

இசையைக் குறித்து பெரிய ரசிகனெல்லாம் இல்லை அவன். ஆனால் கேட்டது முதல் இது அவனுக்கான வரிகள் போல தோன்றவில்லை.. இது அவனின் வரி களே தான். எப்போதும் அவனுள் இசைப்பவள் ஜனனியே! காதலோடு பார்த்திருந்தான்.

ஜனனியின் பரிதவிக்கும் பார்வையைப் புரிந்தவனாக, "உன் தம்பிங்க ரொம்ப டீசன்ட், பார்க்க மாட்டாங்க! இப்போதைக்கு எல்லோருக்கும் உன் சந்தோஷம் மட்டுமே முக்கியம்" என்று சொல்லிப் புரிய வைத்தான்.

"நான் என்ன பண்றேன்னு கேட்க மாட்டியா?" என,

"முத்தம் குடுத்தீங்க!" என்று சின்சியராக, எனக்குத் தெரியும் என்பது போல முகத்தில் செம்மை படர சொல்ல,

"அய்யோடா!" என்பதுப் போல ஒரு லுக் விட்டவன், பின்பு வாய் விட்டுச் சிரித்து, அவளின் தலையோடுத் தலையை செல்லமாக முட்டி,

"அட அறிவே! அதை சொல்லச் சொல்லலை, என் வேலையைப் பத்தி கேளுனு சொன்னேன்?" என,

"என்ன செய்யறீங்க?" என,

"ஐ எஃப் எஸ் ல செலக்ட் ஆகி, வேலைல சேர்ந்து மூணு வருஷம் ஆகப் போகுது. நாடு நாடா சுத்தப் போறேன், நிறையப் பேர் எனக்கு சல்யூட் வைப்பாங்க, வணக்கம் சொல்லுவாங்க, பெரிய ஆபீஸர்" என்று வேலையைச் சொன்னவன்,

என்னோட சம்பளம், அலவன்ஸ், மற்றும் வேலையைக் குறித்த இதர பெருமைகளை அடுக்கிக் கொண்டே போனவன், "என்னோட சக்சஸ் உன்கிட்ட ஷேர் பண்ண முடியாம, ஐ வாஸ் மிஸ்ஸிங் யு எ லாட்!" என்று வாசு உணர்ச்சிவசப்பட்டு பேசிக் கொண்டிருக்க..

திரும்ப அழுகை முட்டியது.. "உங்களை யார் இப்படிப் படிக்க சொன்னா.. திரும்ப உங்கம்மா உங்களுக்கு நான்

மேட்ச் இல்லை சொல்லுவாங்க. அழகா ஆகிட்டீங்க, நல்ல பொசிஷன், இப்போ ஹோட்டல் இருக்காமே, ரிச் கூட.. அப்போவே உங்கம்மா ஒத்துக்கலை, இப்போ எப்படி ஒத்துக்குவாங்க?'' என்று மீண்டும் அழ,

இதில் இப்படி ஒரு கோணமா என்று வியந்து போனவன்.. ''எப்படி இப்படி யோசிக்கற?'' என்று வினவ,

''நான் எப்போவுமே மாத்தி தான் யோசிப்பேன்'' என்றாள் தேம்பிக் கொண்டே..

வாசுவிற்கு முகம் கொள்ளாச் சிரிப்பு.. இந்த விஷயங்கள் தானே அவனை ஈர்த்தது.. காதலாக்கியது.. காத்திருக்க வைத்தது.. தற்பொழுது பித்தனாக்கிக் கொண்டிருக்கிறது.

''அட லூசே!'' என்று வாய் விட்டே சொன்னவன்,

''ரொம்ப மாத்தி யோசிக்கிற.. அதுதான் எல்லோரும் காதலிச்சா ஓடிடலாம்னு நினைச்சா, நீ பிரியலாம்னு நினைச்சிருக்க.. பிரியவும் செஞ்சிட்ட! ஐ வாஸ் பேட்லி மிஸ்ஸிங் யு ஜனனி'' என்றான் காதலாக.

''நான் கூடத் தான் மிஸ் பண்ணினேன்'' என்றவள்,

''நாம கூடத் தானே எல்லோருக்கும் தெரியாமக் கல்யாணம் பண்ணிக்க நினைச்சோம்.. எங்கம்மா என்னை எப்படித் திட்டினாங்க தெரியுமா.. என்ன இருக்குன்னு நீ அவன் பின்னாடி போறக் கேட்டாங்க..'' சொல்லும் போது மீண்டும் அழுகை முட்டியது..

''காதலிச்சு கல்யாணம் பண்ணின அவங்க அம்மா கூட உன் காதலை மதிக்கலை, அவ்வளவு கேவலமாவா

போயிட்டனு கேட்டாங்க!'' என்று அன்றைய நாளின் நினைவுகளில் திரும்பத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித் தாள்.

ஐந்து வருடப் பிரிவு .. அதிலும் இந்த வார்த்தைகள் அவளைத் தனிமைப் படுத்திக் கொள்ள வைத்திருக்கும் என்று புரிந்தது.

''சாரி! விட்டுடு! மறந்துடுவோம்!'' என்றுச் சொல்லி..

பிரிவென்பது இனி கிடையவே கிடையாது என்று உணர்த்த, இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.



## 14

சற்று நேரத்தில் தெளிந்து விலகியவளிடம், ''நம்ம பிரிவு நமக்கு மனக் கஷ்டத்தைக் குடுத்திருக்கு தான் .. ஆனா லைஃப்ல நம்ம ரெண்டு பேருமே நல்லா ஷைன் பண்ணியிருக்கோம் .. நம்ம வேலைல, அதே சமயம் வாழ்க்கையில கூட.''

''அந்த சமயம் கல்யாணம் பண்ணியிருந்தா இவ்வளவு சக்சஸ் இந்த நேரத்துக்கு வந்திருக்காது. இன்னும் நேரமாகியிருக்க வாய்ப்பிருக்கு.. அதையும் விட இந்த மரியாதை கிடைச்சு இருக்குமா நம்ம ஆளுங்கக்கிட்ட தெரியாது.''

''அம்மா ரொம்ப கோபிச்சிக்கிட்டாங்க நான் சொல் லலைன்னு, ஆனா எப்படிச் சொல்லியிருக்க முடியும்..

நான் அந்த நேரத்துல வேலை வெட்டி இல்லாதவன்.. அதையும் விட.. அப்பா அப்படி ஒரு நிலைமையில இருக்கும் போது எப்படிப் புரியவைக்க முடியும்.. இல்லை, அப்பா இறந்த சமயத்துல அதைப் பேசியிருக்க முடியுமா.. முடிஞ்சிருக்காது!''

''நீ என்னைப் புரிஞ்சிக்கிற தானே.. என்கிட்டே நம்ம காதலுக்காக எந்த ஹீரோயிசமோ சாகசமோ கிடையாது.. சொல்லப் போனா அந்த சமயத்துல தைரியமா நீ தான் என்னைப் பிடிச்சிருக்குன்னு அத்தனை பேர் முன்னாடி சொன்ன.''

''அதுக்காகவே நான் என்னை உயர்த்திக்கணும் இல்லையா.. ரொம்ப உழைச்சேன்.. ஒரு நிலைமைக்கு வராம காதல்ன்னு சொன்னா அந்தக் காதலுக்கு ஒரு அங்கீகாரமோ, மரியாதையோ, கிடைக்காது.''

''ரொம்ப, ரொம்ப, தேங்க்ஸ்! எனக்காக இவ்வளவு வலியைத் தாங்கிட்டு காத்து இருந்ததுக்கு'' என்றவனைப் பார்த்தது பார்த்தபடி நின்றாள்.

''என்ன?'' என்று வாசு பார்க்க,

''ஆனாலும் நீங்க ரொம்ப ஹேண்ட்சமா ஆகிட்டீங்க!'' என்றாள்.

''நான் பேசினதை நீ கவனிச்சியா இல்லையா?'' என்று அதட்டியவனைப் பார்த்து, ஏதோ தூக்கத்தில் இருந்து விழித்தவள் போல,

''ஆங்! என்ன பேசினீங்க?'' என்றாள்.

''சுத்தம்!'' என்றவனைப் பார்த்து,

“கதை பேசாதீங்க, என்னை சைட் அடிக்க விடுங்க!”

“என்னது? எவ்வளவு எமோஷனலா பேசிட்டு இருக் கேன், கதை பேசறனா?” என்று வாசு முறைக்க..

“பின்ன! ஐ ஹேட் அட்வைஸ்.. ஒரு ஒருத்தரோட வெற்றியும், ஒரு ஒரு மாதிரி.. எல்லோருக்கும் ஒண்ணே கிடையாது.. புரிஞ்சதா?” என்றாள்.

“எப்போ நான் உனக்கு அட்வைஸ் பண்ணினேன்?”

“ஓஹ், பண்ணவே இல்லையா? அப்போச் சரி! இனிமே பண்ணப் போறதுக்கு இதை அட்வான்சா வைச்சிக்கோங்க!” என கண்ணடித்து சிரிக்க..

பழைய ஜனனி எட்டிப் பார்க்கத் துவங்கி இருந்தாள்.

“வா! வெளில போகலாம்! ரொம்ப நேரமா அவனுங்க வெயிட் பண்றாங்க!” என,

வெளியே வந்து பார்த்தால், ரகுலன் அசதியில் உறங்கியிருக்க, அவினாஷ் ஜனனியை நினைத்தவாறு, அங்குமிங்கும் நடை பயின்று கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த ஜனனி, “என்னடா நீ, டெலிவரி ரூம்க்கு வெளில நிக்கற கணவன் மாதிரி உலாத்திகிட்டு இருக்க!” என,

“ஆ!” என்று அசந்து நின்றவன், இவ்வளவு நேரமாக பஸ் என்றும் பாராமல் தேம்பிக் கொண்டே வந்தது என்ன? இப்போது பேசுவது என்ன?

“ஜனனிக்கா பேக் டு பெவிலியன்!” என்று சந்தோஷ மாகக் கத்த.. அவன் கத்திய கத்தலில் என்னமோ ஏதோ என்று அடித்துப் பிடித்து எழுந்தான் ரகுலன்.

எழுந்தவன், ''என்ன? என்ன?'' என..

அதை பார்த்து ''ஹ, ஹ'' என்று ஜனனியும், அவினாஷும் சத்தமாகச் சிரித்தனர்.

வாசு புன்னகை முகத்தோடு பார்த்து இருந்தான்.. ''ஜனனிக்கா, என்ன?'' என்ற ரகுலனைப் பார்த்து..

''அது ஒண்ணுமில்லைடா, நான் அஞ்சு வருஷத்துக்கு முன்ன, உங்க வாசு அத்தானை பார்த்து அவுட் ஆனதை இப்போ கத்திச் சொல்றான்'' என்றாள். ஒரு கலகலப்பு அங்கே திரும்பியது.

மாலையில் அங்கே ஸ்வாதி வருவதாக சொல்லி யிருந்ததினால், தன்னைப் பார்த்துப் பார்த்து அலங்கரித்து கொண்டாலும்.. ரொம்ப சுமாராக இருப்பது போலத் தோன்ற.. ஜனனியின் முகம் இன்னம் சுருங்கித் தான் இருந்தது.

என்ன தான் வாசு சமாதானம் செய்தாலும் பொருத்த மில்லை என்று அவர் சொல்லிச் சென்ற வார்த்தை காதுகளில் வலம் வந்தது.

மாலையில் ஸ்வாதி வர.. அவரோடு சென்று வாசு அமர்ந்து கொள்ள பார்த்த ஜனனிக்கு இன்னும் ஒரு பதட்டம். பின்னே ஸ்வாதி இன்னும் அழகாகி விட்டாரே!

ஸ்வாதி அனுராதாவின் அப்பா அம்மாவை அங்கே இருக்கச் சொல்லி, ''நாங்க கொஞ்ச நேரம் வெளியேப் போயிட்டு வர்றோம், பெர்மிஷன் குடுக்கறீங்களா?'' என்று கேட்க..

''இன்னும் என்ன?'' என்று கவலையாகப் பார்த்த செல்லம்மாளிடம்,

''தனியா ரொம்ப மனசுக்கு கஷ்டப்பட்டிருப்பா தானே.. கொஞ்சம் பேசிட்டு வர்றேன், இங்கே முடியாது, எல்லோரும் இருக்காங்க!'' என்று சொல்ல,

சொன்ன ஒரு வார்த்தையை சரி படுத்த, அந்தப் பெண்மணி எடுக்கும் எல்லா முயற்சிகளும் புரிய,

''தேங்க்ஸ்'' என்ற செல்லம்மாள்.. தான் கூட இப்போது நல்ல விதமாக நடந்தாலும், அன்று சொன்ன வார்த்தை களுக்காக என்றுமே மன்னிப்பு கேட்டதில்லை என்று புரிய..

''மகளின் வாழ்க்கையில் எல்லாம் சரியாகிட வேண்டும்!'' என்று இடைவிடாது பிரார்த்திக்க ஆரம்பித்தார்.

ஸ்வாதி எங்கும் செல்லவில்லை.. அவர்களின் ஹோட்டலுக்கு செல்ல..

ஜனனிக்கு மலரும் நினைவுகள் தான் அதைப் பார்த்தவுடன். ''நீ இங்க வந்திருக்கிறியா ஜனனி'' என்று சகஜமாகப் பேச்சை ஆரம்பித்தார்.

''வந்திருக்கிறேன்!'' என்று சொல்லி, பின்னே என்ன வார்த்தை போடுவது என்று தெரியாமல் தடுமாற..

''அத்தைன்னு சொல்லு!'' என்றார்.

''வந்திருக்கிறேன் அத்தை!'' என்று அவசரமாகச் சொல்ல, ஜனனி சொல்லிய விதத்தில் ஒரு விரிந்த புன்முறுவல் ஸ்வாதியின் முகத்தில்.. அதையே ஜனனி பார்த்திருக்க..

ஜனனியைப் பார்த்திருந்த வாசுதேவன், ''அம்மா! நீ வந்ததுல இருந்து உன்னையே பார்த்துட்டு இருக்கா!'' என்றான்.

''உனக்கு ஏன்டா பொறாமை?'' என தெலுங்கில் ஸ்வாதி சொல்ல,

''என்னது, பொறாமையா? இதுதான் அம்மா ஜனனிக் கிட்ட என்னை முதல்ல அட்ராக்ட் பண்ணினது.. முதல்ல அவளுக்கு என்னைத் தெரியலை.. நானா அவங்க வீட்ல பூரணி ஃபங்ஷன்ல பார்த்ததை பெரிய இன்ட்ரோ கொடுத்தேன், உடனே சொன்னா, நீங்க அழகா இருக்கீங்க, உங்கம்மா அதை விட அழகுன்னு!'' என்று சொல்லிச் சிரித்தான்.

எனக்குத் தான் இப்போ ஜனனியைப் பார்த்து பொறா மையா இருக்கு. இப்படி என்னால உன்னை சிரிக்க வைக்க முடியலைதானே! இப்போ இவளைப் பார்க்கவும் தானே, உனக்கு சிரிப்பு வருது!'' என்று ஆதங்கமாகச் சொல்ல,

''ஏண்டிம்மா நுவ்வு?'' என்று அம்மாவை அணை வாகப் பிடிக்க..

''நீ வேண்டாம் போ! நான் என் மருமகக்கிட்ட டீல் போட்டுக்கறேன்!'' என்றவர்,

''நீயே சொல்லு ஜனனி! இவன் ரொம்ப அழுத்தக் காரன்! என்கிட்டே உன்னை லவ் பண்றதை அப்போவும் சொல்லலை இப்போவரைக்கும் சொல்லலை!'' என,

''அத்தை! நான் ஒன்னு சொல்லட்டுமா?'' என்றால் தயங்கித் தயங்கி,

அவள் சொன்ன விதத்தில் ''என்னமா?'' என பரிவாகக் கேட்க,

''என்கிட்டே கூட இதுவரைக்கும் சொல்லலை!'' என்றாள்.

கிண்டல் செய்கிறாளோ என்று ஸ்வாதிப் பார்க்க.. ''இல்லை அத்தை, நிஜமா சொல்றேன்!'' என,

''ஆமாம்மா, சொன்னதில்லை!'' என்று சொல்லிக் கொண்டே வாசு காலரை உயர்த்தி சத்தமாகச் சிரித்தான்.

முதலில் திகைத்த ஸ்வாதி, ''உன்னை!'' என்று அடிக்க வருவது போல பாவ்லா காட்ட..

இரு கைகளையும் உயர்த்தி சரண்டர் என்பது போலக் காட்டியவன், ''இப்போ சொல்லட்டுமா?'' என்றான் ஜனனியைப் பார்த்து.

''அம்மா முன்னாடி ஐ லவ் யு சொல்ற ஒரே பையன் நீங்க தான்!'' என்று ஜனனியும் சொல்லிச் சிரித்தாள்.

''அப்போக் கூட சொல்லட்டுமா தான்னு கேட்கறான், சொல்றானில்லை! அவனுக்காக நீ இப்படி வெயிட் பண்ணிட்டு இருக்க, டூ பேட் ஜனனி!'' என்று ஸ்வாதி சொல்ல..

''அம்மா! ஏதோ ஊர்ல ஒரு பொண்ணு என்னைப் பார்க்குது, கெடுக்காதீங்க!''

''என்ன? ஒரு பொண்ணா! ஏன்டா பொய் சொல்ற? உன் பக்கத்துக்கு வீட்ல ஒரு பொண்ணு, எப்பவும் ஷார்ட்ஸ்ல இல்லை மினி ஸ்கர்ட்ல தான் உன் முன்னாடி சுத்துமாமே!'' என,

''நீங்க எப்போ பார்த்தீங்க, டெல்லி வந்தப்போவா?'' என்று வாசு கேட்டு விட்டு ''அச்சோ!'' என்பதுப் போல நாக்கைக் கடிக்க,

ஜனனி, ''இது என்ன புதுக் கதை?'' என்பதுப் போல முறைத்துப் பார்த்தாள்.

''மாட்டினாயா!'' என்று ஸ்வாதி சொல்ல,

''அம்மா!'' என்று வாசு பரிதாபமாக சொல்ல,

''ஹப்பா! இன்னைக்கு நான் நல்லாத் தூங்குவேன்!'' என்று வேலை முடிந்தது என்பது போல ஸ்வாதி கைத் தட்டிச் சிரிக்க..

இப்போது ஜனனி வாசுவை விட்டு, ''நீங்க மட்டும் இல்லை அத்தை, உங்கப் பேச்சும் அழகு, உங்க இன்னர் சென்ஸ் கூட அழகு!'' என்று ஜனனி சொல்ல,

''அவளை என்னை பார்க்க விடமாட்டீங்களா அம்மா!'' என்றான் வாசு.

''அச்சோ, பார்த்துட்டாலும்! சரியான முசுடு அத்தை இவர்!'' என்று வாசுவை நோக்கிப் பழிப்புக் காட்டிய ஜனனியை அணைத்துப் பிடித்தவர்..

''அன்னைக்கு பேசினதுக்கு சாரி, அப்போ உன்னை இவ்வளவு சின்சியரா லவ் பண்ணுவான்னு தெரியாது! வாசு பண்ணினாலும் பண்ணலைன்னாலும் நான் அப்படிச் சொன்னது தப்பு'' என,

''எதுக்கு சாரி எல்லாம்!'' என்றவள்..

''எங்க அப்பா அம்மா என்னை செல்லமா வளர்த் தாலும், சில விஷயம் என்னால இப்படி நீங்களும் இவரும் பேசற மாதிரி பேச முடியாது. சோ! அவங்க பாயிண்ட்ல அவங்க பண்ணினது அவங்களுக்குச் சரி, நானும் கொஞ்சம் ரொம்ப ஓவர் தான் அப்படி பட்டுன்னு

சொன்னேன், அப்புறம் தெரியாமக் கல்யாணம் வரைக்கும் போனேன். எல்லாம் பேசற சுதந்திரம் இருந்தாலும், இது பேசற சுதந்திரம் எனக்கு இல்லை!''

''ஆனா, இவர் உங்கக்கிட்ட எல்லாம் ஃப்ரீயா பேசறார், சோ அன்னைக்கு நடந்த தப்புக்கு இவர் தான் காரணம், இவர் உங்களுக்கு புரிய வைக்க ட்ரை பண்ணியிருக்க மாட்டார்!'' என்று அப்படியே சொல்ல.

ஸ்வாதிக்கு கண்கள் கலங்கி விட்டது.. ''எஸ்! இவன் அப்போ மட்டுமில்லை, அப்புறமும் புரிய வைக்க முயற்சி பண்ணலை!''

''அம்மா!'' என அருகில் வந்த வாசுவைப் பார்த்து,

''கிட்ட வராத போடா!'' என்று கோபிக்க..

''விடுங்க அத்தை! விடுங்க!'' என்று பெரிய மனுஷியாகப் பேசியவள்,

''அவர் வேண்டாம் உங்களுக்கு, நாம ஒரு டீல் போட்டுக்கலாம்!'' என்றாள் சீரியசாக.

''என்ன டீல்?'' என்று ஸ்வாதிக் கேட்க...

''உங்கப் பையனை நீங்க எனக்குக் குடுத்துடுங்க! நான் என் பையனை உங்களுக்கு கொடுத்துடறேன்!'' என,

வாசுவின் முகம் மீண்டும் விரிந்த சிரிப்பை பூசியது. சரியாகப் புரியாமல் ஸ்வாதி பார்க்க..

''ஆனா கொஞ்சம் லேட் ஆகும்! இன்னும் ஒரு வருஷம் ஆகும்! அதுவும் நீங்க உங்கப் பையனை எனக்குக் குடுத்தா தான் ஆகும்!'' என்று ரைமிங்காக பேச,

''ஆங்!'' என்று பார்த்த ஸ்வாதி சிரிக்க ஆரம்பிக்க.. வாசுதேவனும் சிரிக்க..

''இந்த ரகசியத்தை உங்க கிட்ட மட்டும் வெச்சிக் கோங்க. எங்க அப்பா அம்மா கிட்ட சொல்லிடாதீங்க! அப்புறம் விளையாட்டுத்தனமா இப்படி பேசக் கூடாதுன்னு என் காது ஜவ்வு கிழியற அளவுக்கு அட்வைஸ் பண்ணு வாங்க!'' என்றாள்.

இதை எல்லாம் ஜனனி சிரிக்காமல் சொல்லிக் கொண் டிருக்க, கேட்டுக் கொண்டிருந்த அம்மாவிற்கும் மக னிற்கும் அப்படி ஒரு சிரிப்பு.

''எப்படி என் செலக்ஷன்?'' என்று ரகசியமாக வாசு அம்மாவிடம் கேட்க..

''சூப்பர் போ!'' என்று தெலுங்கில் சொல்லி, ஜனனியை நெட்டி முறித்தார்.

''இவ கூட இருந்தா நேரம் போறதே தெரியலைடா, மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு, நிறையச் சிரிக்க வைக்கிறா!'' என்று மகனிடம் மீண்டும் தெலுங்கில் சொல்ல,

''எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் தெலுங்கு வரும். அதுக்கு தான் ஹைதராபாத் போனேன்!'' என்று ஜனனி பெருமையாகச் சொல்ல,

ஸ்வாதிக்கு மிகுத்த மன நிறைவு.

மூன்று மாதங்களுக்குப் பிறகு வெகு விமரிசையாக ஜனனி வாசுதேவனின் திருமணம் நடந்தது.

ஜனனி பரதனாக இருந்தவள் மிஸர்ஸ் ப.ஜனனி வாசு தேவனாக பெயரில் புலம் பெயர்ந்தாள். ஜாதகையையும்

டெல்லிக்கு மாற்றினாள். அவளின் பணியில் தாற்காலிக விடுப்பு எடுத்திருந்தாள், பிறகு வேலையைப் பற்றி முடிவு செய்து கொள்ளலாம் என்று நினைத்தவளாக.

வாசு வரும் நேரம் லானில் தாத்தாவும் பாட்டியும் அமர்ந்திருக்க, ஜனனியும் அமர்ந்திருக்க.. வாசு வந்ததும், ரகசியப் பார்வை ஒன்றை ஜனனியை நோக்கி வீசிய வாறு பாட்டியின் அருகில் அமர..

''காபி எடுத்து வா ஜனனி!'' என்று சொல்லியப் பாட்டி, அடுத்த நொடி ''நீ போகாத! போகாத!'' என்றார் அவசரமாக.

பார்த்தால், பக்கத்துக்கு வீட்டுப் பெண் வந்து கொண் டிருந்தாள். ஒரு மினி ஸ்கர்ட், மற்றும் டைட் டீ ஷர்ட்டில் இருந்தாள்.

முகத்தை சுழித்தார் பாட்டி, அருகில் வந்தவள், ஜனனியை பார்த்து ''இன்னும் காபி டைம் ஆகலையா தீதி!'' என்று கேட்டவாறு உள்ளே ப்ளாஸ்க்கில் இருந்த காபியை யாரும் சொல்லாமலேயே எடுக்கச் செல்ல,

அவள் சென்றது ''ஹ! ஹா!'' என்று ஜனனி சிரிக்க ஆரம்பிக்க, எதற்கு என்று புரியாமல் எல்லோரும் பார்த்தனர்.

''பாட்டி! இருந்தாலும் நீங்க உங்கப் பேரனை, அந்தப் பொண்ணு பார்க்கற மாதிரி இந்த பில்ட் அப் கொடுக்க கூடாது. அவ காபி சாப்பிட வர்றா பாட்டி!'' எனச் சொல்லி, குலுங்கி குலுங்கி சிரிக்க..

''உன்னைப் பாட்டி கேட்டாங்களா?'' என்றான் கிண்ட லாக வாசு.

''கேட்கலைன்னாலும் நாங்க எங்க வீட்டுக்காரரோட அருமை பெருமை எல்லாம் சொல்லுவோம்ல!'' என்று கெத்தாக சொல்லுவது போல மீண்டும் வாசுவை வாரினாள்.

''அடிங்க, உன்னை!'' என்று வாசு எழ.. ஜனனி எழுந்து ஓட ஆரம்பித்தாள்.

திரும்ப அவள் வீட்டுக்குள் ஓட, அதற்குள் பக்கத்துக்கு வீட்டு பெண் வெளியில் வந்திருக்க,

''யு கீப் தேர்! வி வில் ஜாயின் யு இன் டென் மினிட்ஸ்!'' என்று வாசு சொல்ல,

''ஓகே!'' என்று சொன்ன அந்தப் பெண்ணின் முகத்திலும் அப்படி ஒரு சிரிப்பு.

அங்கே சென்று டேபிள் மேல் வைத்தவள், ''அவங்க இப்போதைக்கு வரமாட்டாங்க தாதிம்மா. நான் கொஞ்சம் குடிச்சிக்கறேன்!'' என்று சொல்லி, காபி சிறிது ஊற்றி, அந்த டெல்லியின் வானிலையை அனுபவித்தவாறு குடிக்க,

''ஜனனி சொன்னது போல, இவ காபி குடிக்கத் தான் வர்றா போல, நாமத் தான் தப்பா நினைச்சிட்டமோ'' என்ற நினைத்த பாட்டி, தமிழில் ஏதோ கேட்க அதை ஆங்கிலத்தில் தாத்தா மொழி பெயர்க்க..

இத்தனை நாட்கள் பார்த்தாலும் பேசினாலும் உருவாகாத ஒரு நட்பு, அப்போது அழகாக உதயமானது,

உள்ளே சென்ற வாசு, அவளைப் படுக்கையில் நகர விடாதபடி அழுத்திப் பிடித்திருந்தான். அப்போதும் சிரித்துக் கொண்டிருந்தாள் ஜனனி.

‘‘சிரிக்கிறாயா நீ’’ என்று முறைத்து பார்த்தாலும், சிரித்துக் கொண்டிருந்த மனைவியின் அழகு ஈர்க்க, சிரிக்கும் இதழ்களில் ஒரு முற்றுகைப் போராட்டம் நடத்தினான். சற்று அடங்கியவளாக அதை அனுபவித்தாள்.

மெதுவாக ஜனனியை விடுவித்தவன், அவளின் செம்மையுற்ற முகத்தை ரசித்தவாறு, ‘‘அவ ஒன்னும் காபி குடிக்க வரலை.. இத்தனை நாள் நம்ம பார்த்தும் திரும்பிப் பார்க்காதவன், இந்தப் பொண்ணுக்கிட்ட என்ன பார்த்து கல்யாணம் பண்ணியிருப்பான்னு பார்க்குமா இருக்கும்!’’ என்றான் சரசமாக.

‘‘என்ன பார்த்தாராம்?’’ என்றாள் ஜனனியும் அவனைப் போலவே சரசமாக.

‘‘சரியா ஞாபகமில்லை.. அரியர் வெச்சு, அரியர் வெச்சு, பாஸ் பண்ணின பையன், கொஞ்சம் வீக், மறுபடியும் ஞாபகப்படுத்தணும்’’ என,

‘‘என்னது அரியரா? பிச்சி புடுவேன் பிச்சி! என்று மிரட்டியவள்.. உங்களை நம்பி நான் டீல் வேற போட்டிருக்கேன் அத்தைக்கிட்ட!’’ என்று மிரட்டலாக பேசினாள்.

சிரித்தவன் ‘‘லவ் யு ஜனனி, லவ் யு மச் டீ!’’ என்று எழ,

‘‘இப்போ எதுக்கு எழறீங்க?’’

‘‘ஹேய்! அவ என்னை நக்கலா பார்த்துட்டு போனா! வா! கொஞ்ச நேரம் வெளில போகலாம்!’’

‘‘உங்களுக்கு அவளை மினில பார்க்க ஆசைன்னு சொல்லுங்க!’’

''ஆமா! அவ அழகா இருக்கால்ல.. இத்தனை நாள் எனக்குப் பார்க்க சான்ஸ் கிடைச்சாலும் மனசே இல்லை.. இப்போதான் நீ என் பக்கத்துல இருக்க இல்லை, தைரியமா பார்க்கலாம்!'' என,

இப்போது ''அடிங்க!'' என்று ஜனனி வேகமாக எழ, வாசு வெளியில் ஓட, ஜனனி துரத்த,

''தாதிம்மா! தேக்கியே, அவங்க ரெண்டு பேரும் ஓடி ஓடி எக்சர்சைஸ் பண்றாங்க!'' என்று சொல்லி அந்த யுவதி சிரிக்க..

''கம்! ஜாயின் அஸ்!'' என்று ஜனனி அவளைப் பார்த்து ஓடிக்கொண்டே கத்தினாள்.

''நீ சும்மாவே இருக்கமாட்டியா?'' என்று வாசு ஜனனியை பார்த்து கடிய,

''நோ தீதி! யு என்ஜாய் வித் ஹிம்! ஐ அம் என்ஜாயிங் யுவர் பில்டர் காபி!'' என்று அந்த யுவதியும் பதிலுக்கு கத்தினாள்.

வாசுவைப் பார்த்து ''எப்படி'' என்பது போல ஜனனி கண்ணடித்து பொங்கி பொங்கி சிரித்தவள்,

''வரமாட்டா! காபி மட்டும் தான் உனக்கு! வாசு எனக்குன்னு காட்டிட்டோம்ல, நிறைய நாளா உங்களை சைட் தான் அடிச்சாப் போல, கொஞ்சம் விருப்பமும் இருந்திருக்கு, நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் கூட, ஆனா நீங்க திரும்பிப் பார்த்ததே இல்லையா, அவ புத்திசாலி அதான் காபிக்கு மாறிட்டா! உங்களை விட காபி நல்லா இருக்காம்'' என கிண்டல் செய்து சிரிக்க..

''என் டேஸ்ட் உனக்குத் தெரிஞ்சா போதும், அவளுக்கு காபி டேஸ்ட் மட்டும் தெரியட்டும்!'' என்று வாசு விறைப்பாய் சொன்னவன்,

''ஆனாலும் நீ ரொம்ப என்னை ஓட்டுற!'' என்று செல்லமாய் முறைத்தான்.

''பின்ன, நிறையப் பொண்ணுங்க உங்களைப் பார்த்தா நான் என்ன பண்றது? எதோ இப்படிப் பேசி அவ காபி ஆத்தறது போல என் மனசை ஆத்திக்கறேன்!'' என்று பாவனையாக சொல்லிச் சிரித்தாள்.

கொஞ்சமும் பேச்சில் பொறாமையில்லை, ஒரு ரசிப்புத் தன்மை மட்டுமே. இந்த புரிதல் எல்லோருக்கும் சாத்தியம் அல்லவே! நன்கு புரிதல் இருக்கும் கணவன் மனைவிக்குள் மட்டுமே சாத்தியம்!!

சிரித்ததினால் ஓட முடியாமல் தேங்கி நிற்க, கையெட்டும் தூரத்தில் இருந்தாலும் பிடிக்காமல், பதிலுக்கு வாசுதேவன் ஜனனியைப் பார்த்த பார்வைச் சொன்னது,

**ஊரு அழகி உலக அழகி யாருமில்ல உனைபோலே**

**வாடி நெருங்கி பாப்போம் பழகி,**

**உன் அழகில் என் இதயம் தன் நிலையை மறந்து மறந்து**

**கொஞ்சிடவும் கெஞ்சிடவும் மருகுதே உருகுதே**

**உன் வழியில் என் பயணம் வந்தடைய நடந்து நடந்து**

**அஞ்சிடவும் மிஞ்சிடவும் சிதறுதே பதறுதே**

**உன் அழகில் என் இதயம் தன் நிலையை மறந்து மறந்து**

**கொஞ்சிடவும் கெஞ்சிடவும் மருகுதே உருகுதே**



# 15

ஆம்! உருகி மருகி தான் நின்றான் வாசு! காதல் சொல்லாத போதும் வீட்டினரிடம் சொல்லி, அதற்கு ஏச்சுகளும் பேச்சுக்களும் வாங்கி, தானும் உடன் நிற்காத சூழலிலும், திரும்பவும் மணம் செய்யக் கேட்டு, அதிலும் உடன் நில்லாத போதும்... பிரிந்தாலும்... ஐந்து நீண்ட நெடிய வருடங்கள் தனக்காகக் காத்திருந்தது, எப்போதும் இருந்ததை விட இன்னும் காதல் பெருகியது.

பல வருடங்களாக அப்பா நிலை பிறழ்ந்த நாளாக இல்லாத ஒரு மகிழ்ச்சி மனம் முழுவதும். அதை பார்த்த தாத்தா பாட்டிக்கும் அவ்வளவு நிறைவு. பேரனை அவர் கள் இப்படிப் பார்த்ததே இல்லை. அதனால் அவனை விட அவர்கள் இன்னும் சந்தோஷமாக இருந்தனர்.

ஒரு விடுமுறை நாளில் மதியம் உறங்கி எழுந்தவன், ஜனனி எங்கே என்று தேட, பாட்டி சமையல் அறையில் நின்று ஜனனிக்கு சமையல் சொல்லி கொடுத்துக் கொண்டிருந்தார். காலையிலும் இப்படி தான் வாசுவிற்கு சமைக்கிறேன் பேர்வழி என்று சமையல் அறையிலேயே வெகு நேரம் இருந்தாள். உண்டதும் இவன் உறங்கி விட்டான். இப்போது எழுந்து பார்த்தால் திரும்பவும் கடுப்பானவன்,

''அதுதான் ஆள் வருவாங்க தானே பாட்டி!'' என்றான் வாசு.

''அப்பா, டேய்! உன் பொண்டாட்டி தாண்டா கேட்டா? நான் ஒண்ணும் பண்ணலைடாப்பா!''

''அவ அப்படி தான் பாட்டி கேட்பா? ஆனா யார் சாப்பிடறது?'' என அவளை பார்த்து கண்ணடிக்க,

அதற்கெல்லாம் அசராமல் சமைத்தே தான் தீருவேன் என்று ஜனனி நின்றிருந்தாள்.

''வொய் திஸ் கொலைவெறி?'' என்று அருகில் சென்று நின்றான்.

பாட்டி இவர்கள் என்னவோ செய்துகொள்ளட்டும் என்று வெளியே சென்றார்.

அடுப்பை அணைத்தவன், இரு கைகளாலும் அவளை அலேக்காகத் தூக்கி, ரூம் சென்றவன், ''நானே சண்டே தான் வீட்ல இருக்கேன். அன்னைக்கும் நீ போய் சமையல்ன்னு நிற்பியா! இதை மத்த நாள் செய்ய மாட்டியா?'' என,

''மத்த நாள் செஞ்சா உடனே டெஸ்ட் பண்ண லேப் எலி இருக்காதுல்ல'' என பதிலுக்கு சிரிப்போடு சொல்ல,

''என்ன? நான் லேப் எலியா?''

''ஓஹ், வேண்டாமா! ஓகே, தவக்களை வெச்சிக் கிவோம்!'' என கொஞ்சியவளிடம்,

''முதல்ல என்னை வெச்சிக்கோ! அப்புறம் எலி தவக்களை எல்லாம் வெச்சிக்குவியாம்'' என்று வாசு தேவன் பாவனையாக சொல்ல,

''இன்னும் நான் தான் வெச்சிக்கணுமா? நீங்க மாட்டீங்களா, இருங்க! என் லீவ் கேன்சல் பண்ணிட்டு நான் ஹைதராபாத் போறேன்!'' என முறுக்கியவளிடம்,

''என்ன திரும்ப போவியா? போய் பாரு என்ன பண்றேன்னு?''

''என்ன பண்ணுவீங்க?'' என்றவளிடம்,

''நான் லீவ் போட்டுட்டு உன் பின்னாடியே வந்துடுவேன்!'' என்றான் அசால்டாய் தோளைக் குலுக்கி,

''அய்யோடா இதுக்கு தான் இந்த பில்ட் அப்பா. முதல்ல இறக்கி விடுங்க. கை வலிக்கப் போகுது.''

மெதுவாக அவளைப் படுக்கையில் விட்டவன், ''அம்மா, தாயே! பேசிப் பேசி டைம் பாஸ் பண்ணாத, முதல்ல கிளம்பு!'' என்றான்.

''எங்கே?''

''அது சர்ப்ரைஸ்! முதல்ல கிளம்பு!'' என,

''எங்கேன்னு சொன்னா தான் வருவேன்!''

''அதெல்லாம் சொல்ல முடியாது! கிளம்புடி!'' என்று தெலுங்கில் கத்தி சொல்ல,

''ஆவூன்னா தெலுங்குல பேசி டார்ச்சர் பண்ற நீ!'' முணுமுணுத்துக் கொண்டே கிளம்பினாள்.

''என்ன பேசற? சத்தமா பேசு!'' என ஜனனியை வம்பிழுத்தான்.

''முதல்ல நான் அத்தைக்கிட்ட போய் தெலுங்கு கத்துகிட்டு வர்றேன்'' என ரூமை விட்டு வெளியே போகப் போக,

"அதை எதுக்கு அத்தைக்கிட்ட கத்துக்குற, நான் கத்துக் கொடுக்கிறேன்" என ஜனனியை வளைத்துப் பிடித்தான். விடவே மனதில்லை. நேரம் தான் ஓடியது இருவரும் கிளம்பும் வழியாகக் காணோம்.

"நீங்க எங்கேயோ போகணும் சொன்னீங்க!" என்று ரகசியம் பேசிய ஜனனியிடம்,

"நீ எங்கேயோ தான் என்னை கூட்டிப் போற!" என்றான் மெல்லிய குரலில் வாசு.

"தாத்தா பாட்டி வெளில இருக்காங்க!" என்று முயன்று விடுபட்டு ஜனனி வெளியில் செல்ல, ஆனாலும் ஒரு மயக்கத்தில் தான் இருந்தான் வாசுதேவன்.

சற்று தெளிந்து அம்மாவை அழைத்தவன், "ஐ லவ் யு மா!" என்றான்.

"இதேவின்ட்டிரா ஜனனிக்கு பண்ண வேண்டிய போனை தப்பா பண்ணிட்டியா!" என அம்மா வேண்டும் என்றே கிண்டல் செய்தார்.

"அம்மா!" என்று செல்லமாக கத்தியவன், "ஐ லவ் யு!" என்றான் திரும்ப,

"எதுக்குடா?"

"ஜனனியை எனக்கு குடுத்த தானே, அதுக்கு!"

"போடா!" என திட்டியவர், "நானே அஞ்சு வருஷம் அவளை தவிக்க விட்டுட்டோம்ன்னு ஒரு கில்டி கான்ஷியஸ்ல இருக்கேன். நீ என்ன லவர் பாய் மூட்ல இருக்க, உன் கூடவே விட்டிருக்க கூடாது! என் கூடவே வெச்சிருக்கணும்!"

''என்ன அம்மா நீ? அவ இந்த விஷயத்தை விட்டாக் கூட, நீ விட மாட்டப் போல!''

''எப்படி விடுவேன்? பொண்ணுங்கன்னா தவிக்க விடுவியா நீ?'' என்று அவனிடம் எகிறினார்.

இது ஆகாது என்று புரிந்தவன், ''ஜனனி!'' என்று அவன் கொடுத்த சத்தத்தில் வேகமாக வந்த ஜனனி யிடம் ''உனக்கு போன்'' என கொடுத்தான்.

அங்கே ஸ்வாதி அவனை திட்டிக் கொண்டு இருக்க, ''அத்தை எதுக்கு கோபம்?'' என ஜனனி கேட்க,

''ஓஹ், போன் உன்கிட்ட குடுத்துட்டானா? அவனை...'' என்று கோபப்பட்டவரிடம்.

போன் வைத்திருந்த ஜனனியின் இடையை மீண்டும் வளைத்துப் பிடித்து, அவளின் தோளில் முகம் வைத்து, ''செப்பம்மா'' என்று ஸ்வாதிக்கு கேட்குமாறு கத்தினான்.

அவன் கைகளும் முகமும் செய்த ஜாலத்தில் மயங் கினாலும், ''இருங்க அத்தை உங்க சார்பா நான் ரெண்டு அடி வச்சிட்டு கூப்பிடறேன்!'' என வைக்கப் போக,

''அம்மா! இவ அடிக்கிறா! கேட்க மாட்டியா!'' என்று வாசு மீண்டும் கத்தினான்.

ஸ்வாதியின் முகத்தில் ஒரு மலர்ந்த புன்னகை, இது தானே அவருக்கு வேண்டும் அவரின் மகனின் மகிழ்ச்சி. இதையெல்லாம் இந்தப் பெண்ணிடம் இவன் வைத் திருக்கும் போது அதை அவனிடம் மட்டும் தேடினால் எங்கே கிடைக்கும் என்று தோன்றியது.

அதனோடே கைப்பேசியை அணைத்தார்.

''அம்மா கிட்ட பேசும் போது என்ன கலாட்டா?'' என்று ஜனனி நிஜமாகவே அவனை மொத்த, அவளுக்கு தான் கைகள் வலித்தன.

''அவ்வளவு தானா'' என்று வாசு பார்த்து நிற்க,

''ரொம்பப் பண்றீங்க நீங்க!'' என சலித்தவளிடம்,

''அடிச்சது நீ... நான் பண்றேனா, கிளம்பு, கிளம்பு!''

''எங்கே?'' என்றவளுக்கு பதிலே சொல்லவில்லை. அவனே டிரஸ் எடுத்துக் கொடுத்தான். ஒரு சிகப்பு நிற புடவை.

''எதுக்கு இப்போ புடவை? அதுவும் இந்த கலர்ல, வெளில போகும் போது சுரிதார் தான் வசதி.''

''ஹேய், போடி! நான் எப்படி அப்புறம் உன் இடுப்புல கை போடுவேன். எப்பவும் கவர் பண்ணி வெச்சிக்கிட்டு.''

''நான் என்ன இடுப்பைக் காட்டிட்டா புடவை கட்டு றேன்!'' என்று அவள் முறைக்க,

''நீயும் காட்ட மாட்ட, நானும் பார்க்க மாட்டேன்! ஆனா என் கை அந்த வேலையைப் பார்த்துக்கும்!'' என வாசு ஒரு ரசனையோடு சொல்லவும்,

''ஹய்யோ!'' என்று செல்லமாக தலையில் தட்டிக் கொண்டவள், ''ரொம்ப கலாட்டா பண்றீங்க!'' என்று சலிப்பாக சொல்வது போல சொன்னாலும், பக்கம் வந்து அவனின் கன்னத்தில் முத்தமிட்டு, ''நீங்க போங்க, நான் வர்றேன்'' என்று வாசுவை வெளியில் போகச் சொல்ல.

''நீ மாத்து! நான் இருக்கேன்!'' என்று ஒரு விஷமப் புன்னகையோடு அவன் மீண்டும் அமர,

''நீங்க இங்க இருந்தா அப்புறம் நம்ம வெளில கிளம்பின மாதிரி தான்'' என்று அவனை கைப்பிடித்து இழுத்து, எழுப்பி, வெளியில் தள்ளி கதவை மூடிய போது, முகம் முழுவதும் ஒரு வெட்கப் புன்னகை, கூடவே மனதில் ஒரு நிறைவும்.

திருமணம் ஆன இந்த இரண்டு மாதத்தில், அவனின் வாழ்வே அவள் தான் என்று எப்போதும் எந்த வகையி லாவது உணர்த்திக் கொண்டே இருப்பான். ஜனனியின் ஐந்து வருட கவலைகள் எல்லாம், இதற்காக இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் தாங்கி இருக்கலாம் என்று தோன்றும்.

தயாராகி வந்தவள், எப்போதும் விட இப்போது இன்னும் நன்றாக இருந்தால், அது வாசு அவளுக்கு கொடுத்த பொலிவு. அதுவுமன்றி உப்பு சப்பற்ற அவளின் வாழ்க்கை முறை, உணவு முறை எல்லாம் மாறி இருக்க, அதுவுமே ஒரு அழகை பொலிவை கொடுத்தது.

இருவரையும் பாட்டி திருஷ்டி கழிக்க, ''எதுக்கு பாட்டி திருஷ்டி அதுதான் நான் இவர் கூடப் போறேன் தானே! அதுக்கு அப்புறம் எதுக்கு தனியா திருஷ்டி!'' என,

''லூசு!'' என்று முறைத்தான் வாசு,

''என் பேத்திக்கு என்ன? அவ அழகு!'' என்று தனியாக வேறு பாட்டி திருஷ்டி எடுக்க,

பத்திரம் பாட்டி! நாங்க வர ஆறு இல்லை ஏழு மணி ஆகிடும், வந்து பெல் அடிக்கறேன். நீங்க வந்துடுவ னொன்னு பாதி தூக்கம் தூங்காதீங்க, நல்லாத் தூங்குங்க!'' என்றான்.

காரில் வந்து ஏறவும், அப்போதும் ஜனனியிடம் பேசவில்லை. அவனின் கோப முகத்தை ரசித்துப் பார்த்திருந்தாள் ஜனனி.

சரியாக மாலை ஐந்து மணிக்கு என் ஹெச் ஐநூற்றி ஒன்பதை பிடித்தனர். அந்த தேசிய நெடுஞ்சாலையில் கார் சீராக செல்ல ஆரம்பித்ததும்.

''எதுக்கு இப்போ கோபம்?'' என ஜனனி கொஞ்ச,

''எத்தனை தடவை உன்னை கீழ இறக்கிப் பேசா தேன்னு சொல்றது'' என்று கடிந்தான்.

''அப்போதானே நீங்க என்னை அழகு சொல்வீங்க!'' என சிரித்தாள்.

''சொன்னாலும் சொல்லலைனாலும் நீ அழகிடி!'' என்றவனின் கைகோர்த்து தோள் சாய்ந்தாள். பிறகு அப்படியே கண்மூடிக் கொள்ள,

''உனக்கு இப்படி எட்டி சாயரது கஷ்டமா இருக்கும். நல்லா பின்னாடி சாஞ்சிக்கோ!''

''இல்லை, எனக்கு இதுதான் வேணும்!'' என்று அப்ப டியே வாசுவின் தோள் சாய்ந்து தான் வந்தாள். அதனால் கார் வேகமெடுத்தாலும் முடிந்த வரை சீராக ஓட்டினான்.

ஜனனியும் அந்தப் பயணத்தை அனுபவித்து ரசித்து, சற்று ஓட்டுவதற்கு சிரமம் என்று புரிந்தாலும் கணவன் தோள் வளைவிலேயே இருந்தாள். அந்த ஐந்து கடின மான வருடங்கள், தற்பொழுது முன் ஜென்ம ஞாபகங்கள் போல தோன்றினாலும், அதைக் கடக்க எவ்வளவு சிரமப் பட்டாள். எவ்வளவு தனிமை. அவளே தனிமைப் படுத்திக் கொண்டாள்.

**போயின போயின துன்பங்கள்**

**நின்னை பொன்னென கண்ட பொழுதிலே...**

**காற்று வெளியிடைக் கண்ணம்மா**

**நின்றன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்**

என வாசு மெதுவாக பாடிக் கொண்டே வர,

அவனை நிமிர்ந்து பார்த்தவள், ''இது எனக்கா?'' என,

''உனக்கு தான், உனக்கு மட்டுமே தான்!'' என புன்னைகைத்தான்.

''அப்படியே ஓரமா நிறுத்துங்க!''

''ஏன்? நான் பாடினதுக்கு இறங்கி ஓடிடலாம் தோணுதா!'' என்றவனிடம்,

''அச்சோ, நிறுத்துங்க!''

''ஜனனி, இது ஹைவேஸ், எங்கே வேணா நிறுத்த முடியாது!''

''போ! போ! உனக்கு தான் நஷ்டம்!'' என்றாள்.

''எனக்கு என்ன நஷ்டம்?'' என்று கேட்டுக் கொண்டே ஓரமாக இடம் பார்த்து நிறுத்தினான்.

நிறுத்தியவுடன், வேகமாக அவனின் இதழ்களில் இதழ் பதித்தாள், எதிர்பாராத வாசு இனிமையாக அதிர்ந்தவன், பின்பு அவளை விலக விட்டால் தானே!

சிறிது நேரம் கழித்தே விட்டவன், அவளை ஒரு புன்னகையோடு பார்க்கவும்,

''இப்போ எடுங்க, அப்போ அப்போ நிறுத்திக்கலாம்'' என்று முகம் மலர்ந்து சிரித்தாள்.

''அச்சோ, தேறிட்ட ஜனனி!'' என வாசுவும் மனம்விட்டு சிரிக்க, இப்படியாக அவர்களின் பயணம் கொஞ்சலும் மிஞ்சலுமாக ஆக்ராவை அடைந்தது.

வழியில் உணவுக்கு நிறுத்தி அங்கே அவர்கள் அடைந்த போது இரவு பத்தரை மணி. கிட்ட தட்ட ஐந்து மணிநேரத்திற்கும் மேல் பயணம்.

தாஜ் மஹால்! தூரமாக கண்ணிற்கும் முன் ஒரு அமைதியான அழகோடு நின்றது.


''ஹோ! இதுதான் அந்த சர்ப்ரைசா!'' என ஆர்ப் பரித்தாள்.

''எஸ்! இன்னைக்கு பௌர்ணமி, நிலா வெளிச்சம்! இந்த இரவு இங்க நல்லா இருக்குமாம், அதுவும் இந்த யமுனையோட நதிக்கரையில, ரொம்ப மெஜஸ்டிக்கா இருக்குமாம். மூணு வருஷமா நான் இங்க வந்த நாளா சொல்றாங்க. ஆனா நீயில்லாம எனக்கு வரணும்னு தோணினதே இல்லை. உன்னோட வர்ற நாளுக்காக நான் ரொம்ப நாளா காத்திருந்தேன்'' என்று ஆசையாக பார்த்திருந்தவன்,

''இன்னைக்கு வந்துட்டோம்!'' என்று சாதித்த உணர்வோடு சொல்ல.

மீண்டும் அவனின் கைபிடித்து அவனின் தோள் சாய, ''இரு கார் பார்க் பண்ணிடலாம்!'' என அவளை இறக்கி, அவன் கார் நிறுத்தி வந்ததும், நடக்கத் துவங்கினார்கள்.

குளிர் ஆரம்பித்திருக்க, வாசுவின் தோளோடு தோள் உரச நடந்து கை கோர்த்துக் கொண்டாள்.



அந்த உலகின் ஏழாவது அதிசயம் அவர்களை கொள்ளை கொள்ள, அதன் வெளிப்புற தோற்றத்தை பார்த்து அப்படியே நின்றிருந் தார்கள். பின்னும் அதன் உள் பார்க்கவோ, அருகில் செல்லவோ ஆர்வமில்லை. சற்று தூரத்தில் இருந்த நீர் பரப்பின் அருகில் அமர்ந்தார்கள்.

அந்த ஏகாந்தத்தை அனுபவித்து, வாசுவின் புஜம் பிடித்து, தோள் சாய்ந்து, எதிரில் தென்பட்ட அந்த அழகை, அந்த தாஜ் மஹாலின் அழகின் பின் சுடர் விட்டு ஒளிர்ந்து கொண்டிருந்த இயற்கை அழகை அதாவது நிலாவினை என ரசித்து அமர்ந்திருந்தாள்.

பேச்சில்லா மௌனம்!!!

சில நிமிடத்துளிகள் கழிந்த பின், ''ஜனனி'' என்று ரகசியமாக அவன் கூப்பிட,

''என்ன?'' என்பது போல தலை நிமிர்ந்து பார்த்தவ ளிடம் ,

''என் தோள் வலிக்குது!'' என்றான்.

வாசுதேவன் ரகசியமாக அழைத்த பாவனையில் எதையோ எதிர்பார்த்திருந்தவள், இதை எதிர்பாராமல் பக்கென்று சிரித்து விட்டாள்.

''என்ன பண்ணட்டும்?'' என்று சிரிப்போடு வினவ,

''இந்தப் பக்கம் வந்துடு!'' என்றான் வாசுவும் சிரிப் போடு.

அவன் பேச்சு தட்டாமல், எழுந்து மறு புறம் போய் அமர்ந்து தோள் சாய, இருவர் மனதிலுமே அப்படி ஒரு நிம்மதி.

''என்ன ரகசியம் சொல்வேன்னு நினைச்ச?'' என்றவனிடம்,

''எனக்கு என்ன தெரியும்?'' என்றாள்.

''ஐ லவ் யு வா?'' என்றவனிடம்,

''ஹய்யோடா? இது ரகசியம் கிடையாது! எல்லோர் கிட்டயும் நான் கத்திக் கத்தி சொல்லியிருக்கேன் ஐ லவ் வாசுன்னு!'' என்று சொல்ல,

''இப்போ சொல்லேன்!'' என்றான்.

''என்ன இது?'' என்று புன்னகை முகமாக கேட்டவளிடம்,

''சொல்லணும்!'' என்று பிடிவாதம் பிடித்தான்.

''ஐ லவ் வாசு!'' என்றாள் அவனின் முகம் பார்த்து.

''இப்படி இல்லை, சத்தமா, உரக்க கத்தி...'' என்றான்.

''ஹேய், என்ன நீங்க பைத்தியமா?''

''எஸ்! பைத்தியம்! உன் மேல பைத்தியம்! கத்தி சொல்லு...'' என பிடிவாதம் பிடித்து, அந்த ஏகாந்த வேளையில், ஆங்காங்கே ஆட்கள் சிதறி இருந்த போதும் கத்திச் சொல்ல வைத்தான்.

''இந்த காதல் சின்னத்துக்கு நாம் வைக்கிற சல்யூட்!'' என,

முகத்தை சுருக்கி, ''நிஜம்மா பைத்தியம் முத்திப் போச்சு போல!'' என்ற ஜனனியிடம்,

‘‘எஸ், எஸ்! எல்லோரும் தான் காதல் வசப்படுவாங்க, கொஞ்ச பேர் தான் சொல்லிக்குவாங்க, அதுலயும் கொஞ்சம் பேர் தான் எதிர்ப்பு வந்தா எதிர்த்து நிற்பாங்க, அதுலயும் கொஞ்சம் பேர் தான் என்ன எதிர்ப்பு வந்தாலும் சேருவாங்க! இதுலயும் ஒண்ணு ரெண்டு பேர் தான், இப்படி நம்ம மாதிரி பெர்மிஷன் கிடைக்க வருஷக் கணக்கா காத்திருப்பாங்க!’’

‘‘அப்படி அவங்களை காத்திருக்க வைக்கிறது ஒரு உறுதின்றதை விட, ஒரு பைத்தியக்காரத்தனம் தான்!’’ என்றான்.

‘‘அப்படியா ஆபீசர் சார், ஓகே! ஓகே! நீங்க சொன்னா ஒத்துக்க தான் வேணும்!’’ என்றாள் கிண்டலாக.

‘‘நீ என்னவோ கிண்டல் செய்து கொள், ஆனால் இதுதான் உண்மை!’’ என்ற பார்வை பார்த்தவன், இன்னும் நெருங்கி அமர்ந்து அவளின் இடையில் கையிட,

‘‘ஷ், என்ன இது?’’ என்று கையை விலக்க முயன்றவளிடம்,

அவளைப் போலவே “ஷ், என்ன பண்றாங்க? ஒண்ணும் பண்ணலை!’’ என்று சொல்லி.. விடாது அவளின் வெற்றிடையில்.. புடவை மறைத்திருக்க, வெளியில் தெரியாமல் அணைத்துக் கொண்டான்.

‘‘இதுக்கு தான் புடவை’’ என்று ரகசிய சிரிப்பு வேறு சிரிக்க,

அந்த அணைப்பில் ஜனனியின் உடலும் சிலிர்த்தது, மனதும் மயங்கியது. குளிருக்கும் அந்த அணைப்பு இதமாக இருக்க மௌனமாக தோள் சாய்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் அந்த நிலையிலேயே எதிரில் இருந்த, அந்த அதிசய அழகை கூடவே தண்ணீரில் இருந்த அதன் பிம்பத்தை என்று ரசித்து இருந்தனர்.

வாசு திடீரென்று, ''இரு! அம்மா கிட்ட பேசலாம்!'' என்று கைப்பேசி எடுக்கவும்,

பிடுங்கி வைத்தாள், ''மணி பாருங்க பன்னிரண்டு!'' என,

''ஆனா அம்மா கிட்ட பேசணுமே!'' என்றவன், வாய்ஸ் ரெகார்ட் செய்தான், ''மா! ஐ அம் சோ ஹேப்பி, லவ் யு!'' என சொல்லி வைத்தான்.

ஒரு மணிக்கு மேல் அங்கிருந்து கிளம்பி, திரும்ப அந்த இரவின் தனிமையை அனுபவித்து ஒரு கார் பயணம். வர வர ஜனனி உறங்கிவிட, கார் இன்னும் வேகமெடுத்தது.

அவனின் இனிய காதலி, இப்போது மனைவியாக அவனின் பக்கத்தில்!!!

வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக இருந்த போதும், அம்மாவை தனியாக விட்டிருக்கிறோமே என்ற வருத்தம் மனதின் ஒரு ஓரத்தில் இருந்து கொண்டே தான் இருந்தது.



## 16

மறுநாள் ஜனனி விழித்ததே ஸ்வாதியின் அழைப்பில் தான். காலையில் ஏழுமணிக்கு வந்தனர்.

வந்ததும் சிறிது நேரம் உறங்கினர். உடனேயே தான் ஸ்வாதியின் அழைப்பு, எடுத்தவுடனே, ''ஜனனி, ஏதாவது உங்களுக்குள்ள ப்ராப்ளமா!'' என்ற அவரின் கவலையான குரல் கேட்க,

''ஏன் அத்தே? எங்களுக்குள்ள ப்ராப்ள்மா, அதெல் லாம் ஒண்ணுமில்லையே! ஏன் கேட்கறீங்க?'' என்றாள் அவரின் குரலின் கவலையை உணர்ந்து.

போன் அடித்த போதே வாசுவும் விழித்து விட்டான், இப்படி ஒரு பதிலை ஜனனி சொல்லிக் கொண்டு இருக் கவும்.. ''என்ன?'' என்று அவனும் எழுந்து அமர்ந்தான்.

''இல்லை, உன் கூட இருக்கும் போது எனக்கு போன் பண்றான். நேத்து நைட் வாய்ஸ் மெசேஜ் பண்ணியிருக் கான். அதான் எதுவும் சண்டை போடறீங்களோ?''

''சின்ன வயசுல ஸ்கூல்ல இப்படிதான், ஏதாவது ப்ராப்ளம் வரும்போதோ இல்லை அவனோட அப்பாவை பத்தி யாராவது பேசினாலோ, மா, லவ் யு ன்னு என்னை கட்டிக்குவான். ஆனா என்ன விஷயம்னு சொல்லவே மாட்டான்.''

''பாரு, உன்னை லவ் பண்ணினதை என்கிட்ட திரும்ப அஞ்சு வருஷம் பேசவேயில்லை தானே!'' என்றவரின் குரலில் இருந்த கவலையில் ஜனனிக்கு பாவமாக இருந்தது.

வாசுவைப் பார்த்து முறைத்துக் கொண்டே அத்தே, இவர் ஒரு முசுடு ''அத்தே. பேசவே மாட்டாங்க, எதையும் சொல்லவே மாட்டாங்க, உங்க கிட்ட இல்லை, என் கிட்ட கூட தான் லவ் சொல்லலை, இதுக்கு போய் நீங்க ஃபீல் பண்றீங்களே!''

''அது எதுக்கு உங்களுக்கு அப்போ அப்போ மெசேஜ் போடறாங்க தெரியுமா, உங்களை தனியா விட்டுட் டோம்னு ஒரு கில்டி கான்ஷியஸ்சா இருக்கும்!'' என்று ஜனனி சொல்ல.

தன்னை சரியாக உணர்ந்து கொண்ட ஜனனியை வேகமாக போன் பேசிக் கொண்டிருந்த போதும், அவளை அணைத்து அவளின் தோளில் முகம் வைத்துக் கொண்டான்.

''பாருங்க! இப்போ கூட போன் பேச விடாம என்னை கட்டிப் பிடிக்கறாங்க'' என்று ஜனனி சொல்ல,

''அச்சோ!'' என்று பதறி விலகியவன், ''லூசு!'' என்று அவளை திட்டினான்.

''நான் என்ன லூசு? நீங்க தான் லூசு! அத்தையை எவ்வளவு கவலைப் பட வைக்கறீங்க'' என்று அவனிடம் கோபத்தைக் காட்டவும்,

''நீ குடு போனை'' என்று அவளிடம் இருந்து வாங்கியவன், ஸ்பீக்கரில் போட்டு ''ஏண்ட்டிம்மா நுவ்வு'' என,

''நீ எதுக்குடா அந்த நேரத்துக்கு மெசேஜ் போட்ட?''

''அம்மா! நாங்க தாஜ் மஹால் போயிருந்தோம். நேத்து ஃபுல் மூன் டே! அங்க தான் இருந்தோம்! அப்போ உன் ஞாபகம் வந்ததா, மெசேஜ் பண்ணினேன்!'' என்று சொல்லி அசடு வழிந்தவனிடம்,

''போடா!'' என்று அவனை திட்டியவர், ''ஜனனி சொன்ன மாதிரி என்னை தனியா விட்டிருக்கோம்னு ஃபீல் பண்றியா?'' என,

''ஆமாம்'' என்பது போல தலையசைத்தான்.

''என்னடா பதில் காணோம்?'' என்று ஸ்வாதி கேட்க,

''அவர் தலையாட்டுறார் அத்தை!'' என்று ஜனனி சொல்ல,

''ரே பாபு, என்னை விடு, உன்னை பாரு! என்னோட இருபத்தஞ்சி வயசு வரைக்கும் ரொம்ப செல்லமா வளர்ந்தேன், சந்தோஷமா இருந்தேன், அதுக்கப்புறமும் உங்கப்பா கூட இருந்த பத்து வருஷமும் அப்படித்தான். நானே இளவரசி! நானே ராணி! அதுக்கப்புறம் சிரமங் களை வேண்டிய மட்டும் பார்த்துட்டோம். இப்போ நல்ல படியா அவரை அனுப்பி விட்டுட்டோம்.''

''என்னை மாதிரி நீ எதுவுமே அனுபவிக்கலை கண்ணா, எனக்குள்ள எப்பவுமே அந்த வருத்தம் இருக்கு. சிரமப்பட்ட நாட்கள்ள எல்லா கோபத்தையும் உன்கிட்ட தானே காட்டினேன். நீ உன்னை பாரு, நீ எனக்கு பக்கத்துல வேணும்னு நினைச்சா, நான் வந்துடுவேன், இல்லை உன்னை வரவழைச்சிக்கிறேன். சரியா! உன்னை பாரு. நீ சந்தோஷமா இருந்தா தானேடா அம்மா நிம்மதியா இருப்பேன்!'' என,

''அம்மா நான் ரொம்ப சந்தோஷமா தான் இருக்கேன்!'' என்றான் வாசுவும் நெகிழ்ந்த குரலில்.

''அப்போ அம்மாக்கு நீ லவ் யு சொல்லக் கூடாது, ஜனனிக்கு மட்டும் தான் சொல்லணும் புரிஞ்சதா, போடா! போடா! நைட் எல்லாம் வாய்ஸ் மெசேஜ் போட்டு என்னை பயமுறுத்துற!'' என,

''அம்மா! எனக்கு லீவ் இல்லை, நீங்க ஒரு ரெண்டு நாள் இங்கே வாங்களேன்!'' என்று கொஞ்சி, கெஞ்சி, அவர் வருகின்றேன் என்று சொல்லும் வரை விட வில்லை.

''ஜனனியும் இன்னைக்கு நைட் குள்ள வந்திடுங்க அத்தை. இல்லை இவர் என்னை ஒரு வழி பண்ணிடு வார்!'' என்று சொல்லியவள்,

''அப்படியே எங்க அம்மாவையும் கூட்டிட்டு வர்றிங் களா, இவர் பாட்டுக்கு உங்களை இந்த கொஞ்சு கொஞ்சறார், நான் எங்கம்மாவை பார்க்கலையோன்னு எனக்கு ஒரே கஷ்டமா இருக்கு!'' என்று சொல்ல,

''வர்றோம்!'' என்று சிரிப்புடன் ஸ்வாதி போனை வைத்தவர், உடனே செல்லம்மாளிற்கு அழைத்தார்.

இங்கே வாசு அவளை பார்த்து முறைத்து நின்றான்.

''என்ன?'' என்று புருவம் உயர்த்தியவளிடம்,

''அம்மாக்கிட்ட கட்டிப் பிடிக்கறேன்னு சொல்றியா?'' என்று கடுப்பாகக் கேட்க,

''வேற என்ன சொல்லுவாங்க! அவங்க ரொம்ப கவ லையா இருந்தாங்க, வாய்ல சொன்னதோட நின்னேன்னு சந்தோஷப்படுங்க, அப்படியே போட்டோ எடுத்து அனுப்பியிருப்பேன்'' என்றவளை,

வாசு முறைத்துப் பார்க்க முயன்றாலும் சிரிப்பு தான் வந்தது.

''சரியான அம்மா பையன்!'' என்று திட்டிக் கொண்டே ஜனனி செல்ல, அதை ஒரு புன்னகையோடு கேட்டுக் கொண்டே குளிக்க சென்றான்.

ஆபீசிற்கும் நேரமாகிவிட, விரைந்து தயாராகி வந்தவனுக்கு, உணவு கொடுத்து அனுப்பியவள், ''பாட்டி! நைட் கார்ல வந்ததுனால நான் சரியாவே தூங்கலை, தூக்கம் வருது! தூங்கட்டுமா!'' என்று பாட்டியிடம் அனுமதி கேட்டு நின்றாள்.

''நீ என்ன ராஜாத்தி, இதுக்குப் போய் கேட்பியா! தூங்குடிம்மா!'' என்று பாட்டி அனுமதி கொடுத்த பிறகே தூங்கச் சென்றாள்.

அவர்களை கேட்காமல் எதுவும் செய்ய மாட்டாள். கேட்க வேண்டிய அவசியமே இல்லை, வாசுவை நம்பி இருக்கும் பெரியவர்கள் அவர்கள். ஆனாலும் என் கணவன் உங்களை பார்த்துக் கொள்கிறான் என்கிற மாதிரி எந்த செய்கையும் இருக்காது, அவர்களின் வீட்டில் இவர்கள் இருப்பது போன்ற உணர்வை தான் கொடுப்பாள்.

''தாத்தா! என்னோட போன், யார் போன் பண்ணினாலும் நீங்களே பேசிடுங்க!'' என்று போனையும் கொடுத்து, காலையில் பத்து மணிக்கு உறங்கியவள் பின்மதியம் மூன்று மணிக்கு எழுந்து வெளியே வந்தாள்.

''போன் வந்ததா தாத்தா'' என்று கேட்க,

''முதல்ல நீ சாப்பிடு! அப்புறம் எதுனாலும் பேசலாம். இவ்வளவு நேரமாகிடுச்சு!'' என்று பாட்டி அதட்ட,

உணவு உண்டு, போனை வாங்கியவளிடம், ''உங்க அம்மா, உன் அத்தை, உன் வீட்டுக்காரன், உன் தம்பி, எல்லோரும் போன் பண்ணினாங்க'' என,

''எதுக்காம்?'' என்றவளிடம்,

''ஸ்வாதி ஊருக்கு வர்றலாம்!'' என

''யார்? யார் கூட வர்றாங்க தாத்தா?''

''நாங்க வர்றோம் சொன்னா! யார் யார் சொல்ல லையே!''

உடனே வாசுவிற்கு அழைத்தாள், ''ஹேய்! கும்ப கர்ணி இவ்வளவு நேரமா தூங்குவ?''

''நீ வீட்ல இருந்தா என்னை தூங்க விடறியா, ஆனா நீ மட்டும் எப்படி தூங்காம இருக்க! ஒருவேளை ஆபீஸ் போய் தூங்கறியோ!'' என சீரியசாக கேட்டாள்.

''மானத்தை வாங்காத ஜனனி!'' என்று சிறு சிரிப் போடு சொன்னவனிடம்,

''யாரெல்லாம் வர்றாங்க.''

''தெரியலை, அம்மா போன் பண்ணினப்போ நான் பிசி. சரியா கேட்டுக்கலை, நான் இப்போ ஏர்போர்ட் போறேன், நாலு மணி பிளைட்க்கு வர்றாங்க'' என சொல்லவும்,

''நானு... நானும் வர்றேன்!''

''அங்க வந்து போனா டைம் ஆகிடும். நான் மட்டும் போறேன், நீ பாட்டுக்கு தனியா கிளம்பி வர்றேன்னு வந்துடாத, டெல்லில தனியா வர்றது ரொம்ப ரிஸ்க்!'' என்று அவளைப் பற்றி தெரிந்தவனாக அதட்டி நிறுத்தி வைத்தான்.

பின்பு அவன் வீடு வந்த போது ஐந்தரை மணி, ஸ்வாதி, செல்லம்மாள், அனுராதா, அவினாஷ், ரகுலன் என்று பெரிய பட்டாளமே வந்திருந்தனர்.

''ஹேய்!'' என்று குதித்தவளிடம்,

செல்லம்மாள், ''உனக்கு எத்தனை தடவை கூப்பிடறது, பகல்ல உனக்கு என்ன அப்படி ஒரு தூக்கம். இங்க இருந்து என்ன வேணும்னு கேட்க கூப்பிடேன்!'' என,

''என்ன சும்மா அதட்டுறீங்க, நீங்களா வந்தீங்க! நான் வர சொல்லி தானே வந்தீங்க!'' என்று ஜனனியும் வார்த்தையாட,

''வந்தவுடனேவா..!'' என எல்லோரும் பார்க்க,

''எல்லாம் நீங்க குடுக்கற செல்லம் தான் அண்ணி, இவ இன்னும் பொறுப்பில்லாம இருக்கா!'' என செல்லம்மாள் ஸ்வாதியிடம் புகார் படித்தார்.

திரும்ப பேச ஆரம்பித்த ஜனனியை வாசு தான் அதட்டினான், ''அம்மா ஒரு வார்த்தை சொன்னா திரும்ப பேசணுமா என்ன? போ ஜனனி! முதல்ல வந்தவங்களுக்கு பசிக்கும், காபி டீ ஏதாவது தயார் செய்!'' என அதட்டினான்.

''தனியா மாட்டுடா மவனே நீ! உன்னை பார்த்துக்கறேன்'' என்ற லுக்கோடு ஜனனி உள்ளே செல்ல,

''எதுக்குடா உனக்கு இந்த வீர தீர சாகசம், அடி வாங்கப் போற நீ!'' என்று ஸ்வாதி சொல்ல,

''அதெல்லாம் தினமும் வாங்கறதுதான்ம்மா, ஒரு ரெண்டு சேர்த்து வாங்கிக்கறேன்!'' என்று வாசுவும் சொல்ல,

அங்கிருந்தவர்கள் எல்லோருக்கும் சிரிப்பு பொங்கினாலும் கூடவே ஒரு மன நிறைவு.

அவினாஷும் ரகுலனும் ஜனனியின் பின்னால் சென்றவர்கள், "ஜனனி!" என்று கத்தி, "உன்னைப் பார்க்க அங்க இருந்து வந்தா, நீ எங்களைக் கவனிக்காம எல்லோர் கிட்டயும் சண்டை போடற!"

அப்படியே திரும்பி நின்றவள், "எப்படிடா உங்களை கவனிக்க!" என்று அடிக்க வருவது போல பாவனை செய்தாள்.

"அதுதான் அத்தானை தினமும் போட்டு மொத்தறை யாமே! இப்போ தான் உன் புகழை பரப்பிட்டு இருக்கார்!" என்று கிண்டலாக சொல்ல,

"அப்படியா சொல்றார்! ஒரு வேளை நான் அப்படி கவனிக்கணும்னு ஆசையோ என்னமோ? நான் கவனிச் சிக்கிறேன்!" என்று ஜனனியும் கிண்டல் செய்யவும்,

ரகுலன் வேகமாக சென்று, "வாசுத்தான்.." என்று அப்படியே ஒப்பிக்க, இப்படியாக பொழுதுகள் கேலியும் கிண்டலுமாக செல்ல ஆரம்பித்தது.

"உன் பொண்டாட்டிய மட்டும் தான் தாஜ் மஹால் கூட்டிட்டு போவியா" என்று ஸ்வாதி கிண்டல் செய்ய,

அவரிடம் பதில் சொல்லாமல் "ஜனனி! சீக்கிரம் சாப்பிட எடுத்து வை! நாம இப்போவே போறோம்!" என சொல்லியவன்,

"அச்சோ! சும்மா சொன்னேன்! வேண்டாம்டா! நேத்து தான் நைட் ஃபுல்லா டிரைவ் செஞ்சிருக்க" என்று ஸ்வாதி சொல்லச் சொல்ல,

''அத்தை, நீங்க பேசாம இருங்க! போகலாம்! அவியும் ரகுவும் கூட இருக்காங்க டிரைவ் பண்ணிக்கலாம்'' என்று ஜனனியும் சொல்ல,

ஆளுக்கொரு வேலையாக செய்து ஏழு மணியாகும் போதே கிளம்பிவிட்டார்கள்.

இடத்தை அடைத்துக் கொண்டு காரில் இருக்க, ''என்ன பெரியம்மா நீங்க, பாருங்க, நீங்களும் அம்மாவும் எவ்வளவு குண்டா இருக்கீங்க, இடமே பத்தலை!'' என்று ஜனனி கிண்டல் செய்யவும்.

''நீயும் ஒரு குழந்தை பொறந்தா இப்படி தான் ஆகிடுவ'' என்று செல்லம்மாள் சொல்லவும்,

''அதெல்லாம் ஆக மாட்டோம். நான் என் அத்தை கிட்ட இருந்து டிப்ஸ் வாங்கிப்பேன்'' என்று ஸ்வாதியை காட்டினாள்.

''அம்மா! அவ வாயை மூடு, திரும்பவும் நீ அழகுன்னு ஆரம்பிச்சிடுவா!'' என்று வாசு சொல்ல,

ஸ்வாதி ஜனனியின் வாயை மெலிதாக மூடினார்.

அனுராதா இருவரையும் அவசரமாக திருஷ்டி கழித்தவர், ''இங்க எப்படியோ கொஞ்சிக்கங்க, ஆனா ஊருக்கு வரும் போது, பெர்ஃபெக்ட் மாமியார் மருமகளா வரணும்! அப்போ அப்போ சண்டை போடணும்! இல்லைன்னா எல்லோரும் கண்ணு வைப்பாங்க!'' என்றார்.

அனைவர் முகத்திலும் சிரிப்பு.

சரியாக பன்னிரண்டு மணிக்கு ஆக்ராவை அடைந் தனர். நேற்று தான் பௌர்ணமி என்றதால், இன்றும் சற்று தேய்ந்திருந்தாலும் முழு நிலவு ஜொலித்தது.

அம்மாவும் மகனும் தெலுங்கில் பேசி அதன் அழகை சிலாகித்து கொண்டனர். நேத்தே நீ கூட இல்லைன்னு நான் மிஸ் பண்ணினேன் மா என்று வாசு சொல்ல,

''உன்னோட காதல் மனைவி கூட காதல் சின்னத் துக்கு வந்து, அம்மாவை நினைச்சியா'' என்று ஸ்வாதி கிண்டல் செய்ய,

''நீயில்லாம என்னோட லைஃப் எப்படிம்மா கம்ப்ளீட் ஆகும்! எல்லா நேரமும் நான் உன்னை நினைக்கிறது இல்லை. ஆனா ரொம்ப சந்தோஷமா இருக்கும் போது என் நினைவுல நீ இருப்ப அண்ட் என்னோட அப்பா என்னை எப்படி பார்த்துக்கிட்டார்ன்னு எனக்கு ஞாபகமே இல்லை. ஐ மிஸ் ஹிம் டூ'' என்றான்.

''எதுக்கு இப்போ அதையெல்லாம் நினைக்கிற?'' என்றார் கவலையாக ஸ்வாதி.

''தெரியலை! ரொம்ப சந்தோஷமா இருக்கும் போது மிஸ் பண்ணினதை நினைக்கத் தோணுது!'' என்ற மகனை தோளோடு அணைத்துக் கொண்டார்.

ஜனனி அவர்கள் பக்கத்தில் கூட வரவில்லை, இருவரும் பேச தனிமை கொடுத்து விலகி நின்றாள்.

குடும்பமாக தாஜ் மஹாலின் அழகை ரசித்து இருந் தனர்.

அவினாஷ் மெதுவாக வாசுவிடம், "அத்தான்! உங்க காதல் கதையை சொல்லுங்க பார்ப்போம்!" என்று ரகசியமாகக் கேட்டான்.

வாசு அவனைப் பார்க்கவும், "இவளைப் போய் உங்களுக்கு எப்படி பிடிச்சது?" என்று சொல்லி, அதை ஜனனி கேட்டு, ரெண்டு மொத்தும் வாங்கினான்.

"எனக்கு அவளை பிடிச்சது இருக்கட்டும், அவளுக்கு என்னை பிடிக்கணும்னு எவ்வளவு வேண்டியிருக்கேன் தெரியுமா? ஒரு வேளை பிடிக்காமப் போயிடுமோன்னு பயந்திருக்கேன் தெரியுமா? தேங் காட்! அவளுக்கு என்னை பிடிச்சிடுச்சு!" என்று புன்னகையோடு ஜனனியைப் பார்த்தவாறே சொன்னான்.

"அட ஜனனிக்கா! உனக்கு அப்போவே இப்படி ஒரு ரசிகரா!" என்று சொல்லி, ரகுலன் ரெண்டு மொத்தை பரிசாக பெற்றான்.

"பாருங்க அத்தை! என்னை இவனுங்க ஓட்டுறானுங்க!" என்று ஸ்வாதியிடம் குற்றப் பத்திரிகை வாசித்தாள்.

"அவனுங்களுக்கு என்ன தெரியும் உன்னை பத்தி! விடு, விடு, சின்னப் பசங்க!" என்று ஸ்வாதி பரிந்து வந்தார்.

"அதுதானே!" என்று வாசுவும் பாவனையாகச் சொல்ல,

நிஜமாக சொல்கிறார்களா? கிண்டலாக சொல்கிறார்களா? என்று ஜனனி யோசனையாகப் பார்த்திருந்தாள்.

''நிஜம் பொண்ணே! எதுக்கு இப்படிப் பார்க்கிற?'' என்றார் கனிவாக ஸ்வாதி.



# 17

''விடு! விடு! உன்கிட்ட சொல்லக் கூடாது! உன் அம்மாக்கிட்ட தான் சொல்லணும், தேங்க்ஸ் செல்லம்மா! இப்படி ஒரு பொண்ணை பெத்து என் பையனுக்கு குடுத்ததுக்கு!'' என்றார்.

குரலில் அப்படி ஒரு நெகிழ்ச்சி!

ஸ்வாதியின் நெகிழ்ந்த மனநிலையை பார்த்தவள், ''டேய் லூசு! எதையோ பேசப் போய், என்னத்தையோ பண்ணிட்டடா நீ!'' என்று அவினாஷை முறைத்தாள் ஜனனி.

''ஜனனிக்கா நான் உங்க லவ் ஸ்டோரி தான் கேட்டேன்!'' என்றான் பரிதாபமாக.

''அவங்க லவ் பண்ணியிருந்தா சொல்லிருப்பாங்க! இங்க சொல்ற மாதிரி ஒண்ணுமில்லை! என்கிட்டே இவன் சொல்லவேயில்லை'' என்று ஸ்வாதி நொடித்தவர்,

''ஏன்ட்ரா பாபு, நீ லவ் ஸ்டோரி செப்பு கண்ணா'' என மீண்டும் ஸ்வாதி ஓட்டவும்,

இரு நான் சொல்றேன் என்பது போல அம்மாவை ரோஷமாக பார்த்தவன், ''அதுவாம்மா பூரணிக்கு நலுங்கு வைக்கப் போனப்போ, இவ உன்னையே பார்த்துட்டு இருந்தாம்மா. அப்புறம் என்னையும் பார்த்தா. எதுக்கு இவ இப்படிப் பார்க்கிறான்னு எனக்கு அன்னைக்கே ரொம்ப யோசனை! கொஞ்ச நாள் கழிச்சு லைப்ரரில பார்த்தேன், அப்போவும் என்னையே பார்த்தா!''

''என்ன பார்க்கறீங்கன்னு கேட்டா? அவளுக்கு என்னை தெரியவேயில்லை! எங்கயோ பார்த்த மாதிரி இருக்கு அதுதான் யோசிக்கறேன்னு சொல்றா! சரி எங்கே பார்த்தோம்னு நானா சொன்ன பிறகு, ஞாபகம் வந்து உங்கம்மா ரொம்ப அழகுன்னு சொல்றா. அதனால தான் எனக்கு அவளைப் பிடிச்சது. அப்புறம் ஹோட்டல்ல பார்த்தோம்! அப்போ கூட என் பேர் கேட்கலை!''

''என்னடா என் பேர் கூட கேட்கலைன்னு எனக்கு ரொம்ப கஷ்டமா போச்சு!''

''அப்புறம் அவளோட போன் நம்பர் அவளுக்குத் தெரியாம எடுத்து, தினமும் போன் செஞ்சு, அவளை என்னை நினைக்க வெச்சு, திரும்ப இப்ப ஐ லவ் யு சொல்ற நிலமையில நான் இல்லைன்னு புரிஞ்சு, நீ பேசாத அப்புறம் ஐ லவ் யு சொல்லிடுவேன்னு அவகிட்ட பேசாம இருந்தேன்.''

''அப்போ கூட லவ் எல்லாம் சொல்லலை அத்தை, சொல்லிடுவேன் தான் சொன்னாங்க!'' என்று சிரிப்போடு ஜனனி சொல்ல,

''அப்போ இவன் தான் என் பொண்ணு மனசை கெடுத்தானோ!'' என்று செல்லம்மாள் பார்த்திருந்தார்.

''அவளுக்கு என்னை காதலிக்கிற ஐடியா எல்லாம் இல்லைம்மா, பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு சொன்னவுடனே நான் டென்ஷன் ஆகி அவ கிட்ட ஐ லவ் யு சொல்லலாம்னு போனா, எனக்காக அவங்கப்பா அம்மா கிட்ட என்னைப் பிடிச்சிருக்கு சொல்றா!'' என்றான்.

''அய்யே, உங்களுக்காக ஒன்னும் சொல்லலை!'' என்று வாசுவிடம் பலிப்பு காட்டியவள்,

''எனக்கும் பிடிச்சிருந்தது அத்தை!'' என்று ஸ்வாதி யிடம் ஒப்புக் கொண்டாள்.

அன்றைய நாளின் நினைவுக்கு எல்லோரும் போய் விட..

செல்லம்மாளிடம் திரும்பியவர், ''எங்க வாசு அந்த நாள்ல ரொம்ப டல்லா இருப்பான். எதுலையும் இன்ட் ரஸ்ட் இருக்காது யாரோடையும் பேசக் கூட விரும்ப மாட்டான், எக்ஸாம்ல பதில் தெரிஞ்சாலும் ஒன்னுமே எழுதாம வெறும் பேப்பர் கொடுத்துட்டு வருவான்.''

''நான் என்ன பண்ணினாலும் ஒரு சோர்வு அவனுக் குள்ள இருந்துக்கிட்டே தான் இருந்தது. ஜனனி வந்ததுக்கு அப்புறம் தான் அது மாறிச்சுன்னு நினைக் கிறேன்.''

''ஏன் நினைக்கிறேன்னு சொல்றேன்னா, எனக்கு அது தெரியவேயில்லை, இவன் என்கிட்டே சொன்னதே யில்லை. உங்க வீட்டுக்கு வந்து நான் பேசிட்டு வந்த துக்கு அப்புறம் ஜனனியைப் பத்தி அவன் பேசினதே

யில்லை. அவன் கல்யாணம் பண்ண போனது எல்லாம் எனக்கு தெரியாது.''

''எப்படி ஒரு சூழல்ல ஒரு பொண்ணை நிறுத்தி யிருக்கான், எனக்கு தெரியவேயில்லை..'' என்று சொல்லும் போது கண்கள் கலங்கிவிட,

''மா'' என்று அருகில் வந்து அணைத்தவாறு அமர்ந்து கொண்டான்.

''சாரி ஜனனி!'' என்றார் ஸ்வாதி மீண்டும்.

''அச்சோ, அத்தை!'' என்று அவினாஷ் அமர்ந்த வாக்கில் அவர் காலில் படுத்துக் கொண்டான்.

''விட்டுடுங்க அத்தை விட்டுடுங்க, இல்லை ரூம் போட்டு என்னை ஜனனி அடிப்பா!'' என்றான் அலறியபடி.

அவனின் அந்த செயலில் இருந்த சூழல் மீண்டும் லகுவாக, எல்லோரும் மனம் விட்டு சிரித்தனர்.

''அம்மா! உன் கால்ல விழுந்திருக்கான்!'' என்று வாசு எடுத்துக் கொடுக்க... அவன் சொன்னதின் அர்த்தம் புரிந்து,

ஸ்வாதி சிரித்துக் கொண்டே ''நல்லா இரு!'' என்று ஆசீர்வதித்தவர், ''எழுந்திரு, ஜனனி ஒண்ணும் பண்ண மாட்டா! நான் கியாரண்டி!'' என்றவர்,

அவினாஷ் எழவும், ''குனி அவினாஷ்'' என,

''எதற்கு?'' என்று புரியாமல் அவன் குனிய, அவரின் கழுத்தில் இருந்த ஒரு சங்கிலியைக் கழட்டி அவனின் கழுத்தில் போட்டவர்,

''கால்ல விழுந்தா சும்மா ஆசீர்வாதம் செய்யக் கூடாது!'' என்றார்.

''ஆங்!'' என்று விழித்த அவினாஷ், ''அத்தை'' என்று அவசரமாக அதைக் கழற்ற முற்பட,

''ஹேய் அவினாஷ், விடு!'' என்று அதட்டினான் வாசு.

''அது என்ன அவனுக்கு மட்டும் அத்தை!'' என்று சண்டை பிடித்தாள் ஜனனி.

எதற்கு சண்டை பிடிக்கிறாள், அவளுக்கோ என்று மற்றவர்கள் நினைக்க... அவளை அறிந்தவனாக ''ரகுலன், அம்மா கால்ல நீயும் விழு!'' என்று வாசு சொல்லவும்,

''விளையாடாத ஜனனி!'' என்று செல்லம்மாள் அதட்டினார்.

''இதுல என்ன விளையாட்டு? விழு!'' என்று ஸ்வாதி சொல்லி ரகுலனிற்கும் கழுத்தில் சங்கிலி போட்டார். அப்போது கழுத்தில் இருந்த இரு சங்கிலியையும் ஸ்வாதி போட்டு விட்டதால், வாசு அவன் கழுத்தில் இருந்ததை அம்மாவிற்கு உடனே போட்டு விட்டான்.

அனுராதாவிற்கும் செல்லம்மாளிற்கும் பொறாமையாக தான் போய் விட்டது. பின்னே மனைவி வந்த பிறகும் அவரின் மக்களும் இப்படி பார்த்துக் கொள்வார்களா என.

வாசு ஸ்வாதி வந்ததில் இருந்து அவருடன் தான் இருந்தான்.ஜனனியின் அருகில் கூட வரவில்லை. ஜனனியும் அதை ரசித்து தான் பார்த்திருந்தாள் எதுவும் தொந்தரவு செய்யவில்லை. இந்த புரிதல் தங்கள்

மகனுக்கும் வரப் போகும் மருமகளிற்கும் வருமா?. அவர்களின் மனதில் வெகுவாக யோசனைகள்.

பின்பும் தாஜ் மஹாலை ரசித்து வந்தனர், வீடு திரும்பிய போது காலை ஏழரை மணி.

முதல் நாள் போல எல்லாம் ஜனனி உறங்கவில்லை. காரில் வரும்போது உறங்கியது தான். அவள் உறங் கவேயில்லை. வீடு மொத்தமும் உறக்கத்தில் இருக்க, வாசுவும் இரண்டு நாட்களாக கார் ஓட்டியதால் உறங்க தான் வேண்டும் என்று கட்டாயப் படுத்தி உறங்கச் செய்து, இவள் வேலைகளை பார்த்துக் கொண்டிருந் தாள்.

சமையல் செய்ய வருபவர், நார்த் இந்தியன் சமையல் செய்து போக, இவள் அங்கே அம்மா வீட்டின் சமையல் சிலவற்றை செய்து வைத்தாள்.

காலையில் பத்து மணிக்கு மற்றவர்கள் எழுந்து வந்த போது, எல்லாம் தயாராக இருந்தது.

அனுராதா வெகு நாட்களுக்கு பிறகு அம்மா வீடு சொந்தம் கொஞ்சினார்.

வாசு எழுந்தவன் ''அம்மா! நான் லீவ் தான், கொஞ்சம் வேலை இருக்கு ஆபீஸ் போயிட்டு மதியம் போல வந்துடறேன்'' என்று சொல்லி கிளம்ப, அப்போது பார்த்து பக்கத்து வீட்டு பெண் வந்தாள்.

எப்போதும் போல ஒரு டைட் ஷார்ட்ஸ், ஸ்லீவ் லெஸ் என்று இருந்தவள், ''எங்கே தீதி உங்களை ரெண்டு நாளா பார்க்க முடியலை! உங்க வீட்ல கெஸ்ட்டா?'' என்று வர,

அவளிடம் ஒரு தலையசைப்போடு வாசு தேவன் நின்று விட,

''திஸ் இஸ் மை மாம்'' என்று ஆரம்பித்து அம்மா, பெரியம்மா, அத்தை, அவினாஷ், ரகுலன் என்று எல்லோரையும் அறிமுகப்படுத்தினாள் ஜனனி.

வாசுவின் அம்மாவை முன்பே பார்த்திருந்தாலும் வாசு அறிமுகம் எல்லாம் செய்து வைத்ததில்லை.

''ஹாய் ஆன்ட்டி'' என்று ஆங்கிலம் தெரிந்த அவருடன் அந்தப் பெண் பேச ஆரம்பித்தாள்.

அவினாஷும் ரகுலனும் அந்த பெண்ணை ஆர் வமாகப் பார்த்திருக்க, அவர்களின் அருகில் சென்றாள் ஜனனி.

வாசுவும் அருகில் தான் இருந்தான், ''டேய், அது உங்க அத்தானோட சைட், நீங்க பார்க்கக் கூடாது தம்பிங்களா'' என,

இருவரும் வாசுவை ஜனனி என்ன சொல்கிறாள் என்று விழி விரித்துப் பாத்தனர்.

''ஜனனி, நீ அடங்கவே மாட்டியா?'' என்ற வாசுவிற்கு பொறுமை பறந்தது.

''இரு, உங்களுக்கு டவுட்டா, அவ கிட்டயே கேட் போம்!'' என்று ஜனனி கிளம்ப,

''ஜனனி!'' என்று மீண்டும் வாசு டென்ஷன் ஆனான்.

கலகலவென்று சிரித்தவள் ஓட ஆரம்பிக்க, வாசு துரத்த ஆரம்பித்தான். வீடே ''ஆங், இது என்ன?'' என்று

வேடிக்கை பார்த்தது, அவர்களுக்கு இதெல்லாம் பழக்கமே இல்லை.

கணவனும் மனைவியும் துரத்தி விளையாடுவதா என பார்த்திருந்தனர்.

என்ன விளையாட்டு இது தாத்தாவும் பாட்டியும் இருக்கும் பொழுது என்பது போல ஸ்வாதியும் பார்க்க, அவளிடம் பேசிக் கொண்டு இருந்த பக்கத்து வீட்டு பெண், "அவங்க எப்பவுமே இப்படித் தான் ஆன்ட்டி தனியா எக்சர்சைஸ் வேண்டாம், இப்படி தான் பண்ணு வாங்க!" என்று சகஜமாக சொல்லி பேச,

பாட்டியும் தாத்தாவும் கூட தங்களுக்கு இது பழக்கம் என்பது போல தான் பார்த்திருந்தனர்.

அவர்கள் தவறாக நினைக்கவில்லை எனும் போது என்ன இருக்கிறது ஸ்வாதிக்கு. அவரும் திரும்ப அந்தப் பெண்ணிடம் பேச ஆரம்பித்து விட்டார்.

சிறிது நேரத்தில் உள்ளே வந்த ஜனனி, "அவங்க லேட் ஆச்சுன்னு என்னை பிடிக்காம போயிட்டாங்க!" என்று தோளைக் குலுக்கி ஏதோ வெற்றி பெற்றவள் போல சொல்ல..

ஜனனி! என்று பரிதாபமாகப் பார்த்த அவினாஷ், "உனக்குக்கூட பொறுப்பு வந்துடுச்சோன்னு நினைச் சேன்!" என்று ராகம் படித்தான்.

"நீ நினைச்சா... அதுக்கு அவங்களா பொறுப்பு, அத்தான் தெய்வமடா!" என்று கையெடுத்து கும்பிட்டு ரகுலன் ஒரு பாவனை கொடுக்க,

''டேய்! டம்மி பீசுங்களா, என்னை கிண்டல் பண்றீங் களா? என்று இப்போது அவர்களை துரத்தப் போக, அத்தான் தான் ஓடுவாரு, நாங்கள்லாம் ஓட மாட்டோம், அடிச்சிக்கோ!'' என்று சொல்லி அமர்ந்திருக்க,

''போங்கடா!'' என்று பேருக்கு ஒரு அடிவைத்து போனாள்.

இப்படியாக மூன்று நாட்களும் ஆட்டம், பாட்டம், ஆர்பாட்டம், மகிழ்ச்சி, என கரை புரண்டு ஓடியது. எவ்வளவு விளையாட்டுத்தனம் இருந்தாலும் ஜனனி வேலைகளை மிகவும் பொறுப்பாக செய்தாள், எல்லோரையும் பார்த்துப் பார்த்து கவனித்தாள்.

ஸ்வாதி திரும்பவும் ''உனக்கு பொறுப்பு கிடையாது, விளையாட்டுத்தனம் அதிகம், நீ என் மகனுக்கு செட் ஆகமாட்டேன்னு சொன்னேன். அஞ்சு வருஷம் பிரிஞ்சும் இருந்தீங்க. உனக்கு என் மேல் கோபமே இல்லையா?'' என்றார் திரும்ப.

''ஐயோ அத்தை! மறுபடியும் முதல்ல இருந்தா! என்று சலித்தாள். ஆனாலும் நீங்க சொன்னது நிஜம் தானே அத்தை. நான் அவருக்கு மேட்ச் இல்லை தானே!'' என்றவள்,

''ஆனா நான் இப்படி சொன்னா... நீ தான் என் மேட்ச் பாக்ஸ், நீ தான் என்னை பத்த வைக்க முடியும்னு இவர் சொல்வார்!'' என்றும் சொல்ல,

வீட்டில் எல்லோருக்கும் அப்படி ஒரு சிரிப்பு, அவினாஷும் ரகுலனும் விழுந்து விழுந்து சிரித்து, ''அச்சோ அத்தான்!'' என்று வாசுவை பரிதாபமாகப் பார்த்தனர்.

அனுராதாவும் செல்லம்மாளும் "அடி பொண்ணே!" என்று ஜனனியை பார்க்க,

"அம்மா!" என்று வாசு பரிதாபமாக விழித்தவன், "நீ இவ கிட்ட தயவு செஞ்சு பேசாத! என் மானத்தை மொத்தமா வாங்கிடுவா!" என்று அசடு வழிய நின்றான்.

"இல்லை அத்தை, எனக்கு அப்போ அப்போ தோணும், ஆனாலும் இவர் என் பின்னாடியே சுத்துவாரா. அப்போ நான் சரியாகிடுவேன்! ஜனனியும் ஏதோ பார்க்கற மாதிரி இருக்கா போல, இவருக்கு மேட்ச் ஆவா போலன்னு!" என்று ஜனனி சீரியசாக சொல்லவும்,

அவளின் பாவனையில் எல்லோரும் சிரிப்பை கைவிட்டார்கள், "அக்கா உனக்கு என்ன குறை சொல்லு, நீ ரொம்ப அழகு!" என்றான் அவினாஷ்.

"ஆளாளுக்கு நீங்க பொறுத்தம்!" என்று சொல்ல, அப்போதும் அரைமனதாய் வாசுவை பார்த்திருந்தாள். "நீ அடி வாங்கப் போற!" என்று வாசு பார்வையால் மிரட்டி பார்த்திருந்தான்.



# 18

அப்போது வந்த பக்கத்து வீட்டுப் பெண், "என்ன?" என்று பாட்டியிடம் கேட்க, அவர் "ஜனனி அழகு!" சொல்ல,

''எஸ் தீதி யு ஆர் பியுட்டிபுல்!'' என்றவள், ''திஸ் இஸ் மை நியூ கேமரா, ஐ வான்ட் டு டேக் போத் ஆஃப் யு'' என்றாள்.

வாசுவின் கோபத்தை பார்த்து அவனருகில் முக மலர்ச்சியோடு நின்றவள், வாசுவிடம் ரகசியம் பேசினாள், ''என்னை விட்டுட்டு, உங்களை மட்டும் எடுப்பாளோ?'' என்று,

வாசு திரும்பவும் முறைத்துப் பார்த்தான்.

''ஹி, ஹி, நோ, முறைச்சிஃபையிங் வாசுத்தான்!'' என்று சிரிப்போடு சொல்ல,

''படுத்தாதடி!'' என்று சொன்ன வாசுவின் முகம் சற்று சீரியசாய் இருக்க, விளையாட்டுத்தனத்தை மூட்டை கட்டி வைத்தாள்.

திரும்ப வெளியில் எதுவும் காட்டிக் கொள்ளவில்லை, யாருக்கும் எதுவும் தெரியவில்லை. அன்று எங்கே போகலாம் என்று ப்ளான் செய்ய, ''ஐ வில் டேக் யு டு தி டெம்பிள்ஸ்'' என்று அந்த யுவதி சொல்ல,

எல்லோரும் ரெடியாக சென்றனர்.

வாசு ரூம் செல்ல ''எதுக்கு கோபம்?'' என்றாள் அவன் பின்னோடு சென்று ஜனனி.

''இன்னுமா எனக்கு நீ தான் மேட்ச்! நீ மட்டும் தான் மேட்ச்ன்னு புரியலை! எல்லோர் முன்னாடியும் அவ்வளவு சந்தேகமா பேசற! நீ தெரிஞ்சு தான் பேசறியா? தெரியாம பேசறியா?'' என்று கோபமாக வாசு பேசினான்.

''தெரியும் தான்! ஆனா அப்போ அப்போ ஒரு டவுட்டு வருது! அஞ்சு வருஷம் வெயிட் செஞ்சு கல்யாணம் பண்ற அளவுக்கு உன் கிட்ட என்ன இருக்குதுன்னு!'' என்று சொல்ல,

''திரும்ப திரும்ப உளறக் கூடாது. ஒரு பொண்ணுக்கு இருக்குற எல்லாம் இருக்கு!'' என்று நக்கலாக சொன்னான்.

''ஜனனி ஐயோ! என்ன பேச்சு இது?'' என்று ஒரு முக பாவனையைக் கொடுக்க,

''நானா பேசறேன்! நீ என்னைப் பேச வைக்கிற! அப்புறம் என்ன இப்படி பேசறேன்னு ஒரு லுக்!'' என்று கோபமாகச் சொன்னான்.

அப்போதும் எதற்கு இப்படிப் பேசினாய் என்று ஜனனி பார்த்திருக்க, வேகமாக அவளை இழுத்து அணைத்தான்.

''உனக்கு புரியாது... அம்மா சொன்ன மாதிரி நான் வாழ்க்கை எதுக்குன்னு ஒரு பிடிப்பு இல்லாத சமயத்துல எனக்கு ஒரு பிடிப்பு கொடுத்தவ நீ!''

''எப்பவும் என் மனசுக்குள்ள உன்னோட ஞாபகம் தான், தனியா யாரோடையும் அதிகம் பேசாத என்னை, எனக்குள்ள உன்னோட பேச வைச்ச! எங்கயோ நீ இருந்தாலும், எனக்குள்ள துடிச்சது உன் இதயம் தானேடி!'' என சொல்லி இன்னும் இறுக அணைத்தான்.

''வலிக்குது!'' என்று முணுமுணுத்தாள்,

''வலிக்கட்டும்! அதுதான் உனக்கு பனிஷ்மென்ட். இனிமே உனக்கு இந்த சந்தேகம் வரும்!'' என்று அவள்

முகம் பார்த்தவன், காதல் கணவனாய் அவனுக்கு தோன்றிய இடத்தில் எல்லாம் முற்றுகையிட,

''அச்சோ! சொல்ல மாட்டேன்! எல்லோரும் வெளில இருக்காங்க!'' என்று கெஞ்சிய பிறகு தான் விட்டான்.

''இனிமே இந்த மாதிரி உளறின, இன்னும் பயங்கரமா பனிஷ்மெண்ட் குடுப்பேன்'' என்றவனிடம்,

தூரமாக சென்று ''இதுக்கு பேர் உங்க ஊர்ல பனிஷ் மெண்டா'' என்று கண்ணடித்தாள்.

''அப்போ வேற என்னவாம்?'' என்று வாசு புன்ன கைக்க,

''ம்ம்ம், அதெல்லாம் சொல்ல முடியாது'' என்று சொல்லிச் சென்றாள். இருவர் முகத்திலுமே புன்னகை வெகு நேரம் உறைந்திருந்தது.

கோவில் சென்று திரும்ப வீடு வரும் போது ''நாளைக்கு நாங்க கிளம்பறோம்!'' என அனுராதா சொல்ல,

''என்ன?'' என்ற ஜனனியின் முகம் சுருங்கி விட்டது.

''மூணு நாள் ஆகிடுச்சு, அங்க பாட்டி, தாத்தா, அப்பா, பெரியப்பா, எல்லோரும் தனியா இருக்காங்க ஜனனி. சாப்பாட்டுக்கு கஷ்டம். எத்தனை நாள் கடையில சாப்பிடுவாங்க!'' என்று செல்லம்மாள் பொறுமையாக சொல்ல,

''ம்'' என்றவள், ''சரி, நீங்க போங்க, இவங்க இருக்கட்டும்!'' என்று ஸ்வாதியையும் அவினாஷையும் ரகுலனையும் காட்டினாள்.

''இல்லை ஜனனி, அங்க ஹோட்டல் பார்க்கணும், நெக்ஸ்ட் மந்த் நீங்க வாங்க!'' என்றார்.

''நாங்களும் ஆபீஸ் போகணும் கா!'' என்று அவர்களும் சொல்ல, அரை மனதாக தலையாட்டினாள்.

அவள் சோகமாக இருப்பதை பார்த்து ''அது இத்தனை பேரை ஒரு நாலஞ்சு நாளா டார்ச்சர் செஞ்சவ, இப்போ என்னை மட்டும் செய்யணும்னு ஃபீல் பண்றா!'' என வாசு சொல்ல,

''ஹையோ, வெரி பேட் நக்கல் அண்ட் நான் டென்ஷன் ஆகலை!'' என்று ஜனனி சிரிக்காமல் சொல்ல, எல் லோரும் மனம் விட்டு சிரித்தனர்.

''தெய்வம் அத்தான் நீங்க!'' என்றான் ரகுலன் திரும்பவும்.

அடுத்த நாள் காலையிலும் ஜனனி சோர்வாக இருக்க, ''அக்கா, நாங்க போறதுல உனக்கு இவ்வளவு வருத்தமா?'' என்று அவினாஷ் கேட்கவும்,

''இல்லை அவி, மீ மைசெல்ப் ஃபீலிங் டல்'' என்று அவள் சொன்னது தான் போதும்,

''என்ன? என்ன பண்ணுது?'' என்று அம்மா, பெரியம்மா, அத்தை என்று மூவரும் அவளை முற்றுகையிட்டனர்.

''ஏன்மா?'' என்றாள் பரிதாபமாக ஜனனி.

''டூ மந்த்ஸ் ஆகிடுச்சு! ஏதாவது குட் நியூஸ் இருக்கா, உன்னோட டீல்ல ஏதாவது முனேற்றம் இருக்கா?'' என்றார் ஸ்வாதி மெதுவாக.

"என்ன டூ மந்த்ஸ் ஆகிடுச்சா?" என்ற ஜனனி, "இப்போ தான் அத்தை கல்யாணம் ஆன மாதிரி இருக்கு, எனக்கு ஞாபகமில்லை, எப்போ லாஸ்ட் டைம் ஆனேன்னு!" என்று மெதுவாக ஸ்வாதியிடம் சொல்லவும்.

"இது கூடவா மறப்ப!" என்று அம்மா கடிய, அசடு வழிந்து நின்றாள். பின்னே "உங்க பையன் எல்லாத்தையும் என்னை மறக்க வெச்சிடறார்!" என்றா சொல்ல முடியும்.

ஆனாலும் அப்படியும் இருக்குமோ என்று நினைந்த நொடி, ஒரு அமைதி அவளுள், "ஹே, நானும் அம்மா ஆகப் போகிறேனோ!" என்று மனம் குதூகலமிட்ட போதும், வெளியில் அது வரவில்லை. பொறுப்புணர்வு இன்னும் கூடியது.

ஸ்வாதியும் செல்லம்மாளும் அங்கே எங்கே மெடிகல் ஷாப் இருக்கின்றது என்று பார்க்கச் செல்ல, வெளியில் இருந்த யுவதியை "வில் யு கைட் அஸ்!" என்று அழைத்து சென்றனர்.

வாசு உள்ளே குளித்துக் கொண்டிருந்தான். அதனால் அவனுக்கு தெரியவில்லை. இவள் ரூமின் உள் சென்று அமர்ந்து கொண்டாள். வெளியே வந்தவன், உடை அணிந்து கொண்டே "என்ன ஜனனி இங்க உட்கார்ந்து இருக்க, அதுவும் அமைதியாயிருக்க, என்ன விஷயம்?" என்றான்.

பதில் சொல்லாமல் வாசுவைப் பார்த்து இருந்தாள் ஜனனி.

"நான் டிரஸ் மாத்துறதை பார்த்ததே இல்லையா?" என்று கண்ணடித்தான். அதற்கும் பதில் சொல்லாமல் பார்த்து இருந்தாள்.

உடை அணிந்து முடித்தவன், "என்னடா இது உலக அதிசயம்! ஜனனி அமைதியாயிருக்கா?" என்று அருகில் அமர்ந்தான். அவனின் இடுப்பில் கை கோர்த்து அவன் மீது சாய்ந்து கொள்ள, "ஜனனி, டிரஸ் கசங்குது!" என்றான்.

வாசுவை ஒரு பார்வை பார்த்த ஜனனி, தன் முகத்தை அவனின் ஷர்ட்டில் தேய்க்க,

"அட! என்ன இது கலாட்டா! இதை நான் டிரஸ் பண்ணும் முன்ன பண்ணவேண்டியது தானே! அது என்ன டிரஸ் மேல! சின்ன பையனை ஏமாத்துற!" என்றான்.

அதற்கும் பதில் பேசாமல், "என்னவோ பேசிக் கொள்!" என்று அணைத்த வாக்கிலேயே அமர்ந்து இருந்தாள்.

"ஜனனி என்ன விஷயம்?" என்று அவனும் அணைத்துப் பிடித்துக் கேட்டான்.

"அம்மா, ப்ரெக்னன்சி டெஸ்ட் பண்ற கிட் வாங்கப் போயிருக்காங்க!" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

"நிஜமாவா, அப்படியா?" என்று சந்தோஷமாக கேட்டான்.

"தெரியலை, டென்ஷனா இருக்கு!" என்று இன்னும் இறுக அணைத்துக் கொண்டாள்.

"எதுக்கு டென்ஷன்?" என்று கேட்டவனிடம்,

''தெரியலை'' என்று பதில் சொன்னவளின் குரலில் அவ்வளவு கலக்கம்.

''எதுக்கு, சொல்லு ஜனனி'' என்று வாசு பொறுமையாக மீண்டும் கேட்க,

''நம்ம கல்யாணம் நடந்ததே இன்னும் நம்ப முடியலை. டூ மந்த்ஸ் ஆகிடுச்சு அதையும் நம்ப முடியலை. எத்தனை நாள் இதையே யோசிச்சிட்டு இருந்திருக்கேன், இப்போ எல்லாம் டக்குன்னு சரியாகவும் பயமாயிருக்கு!''

''அதுவும் லேட்டா ப்ரெக்னன்ட் ஆனா ரொம்ப காம்ப்ளிகேஷன்ஸ்ன்னு படிச்சேன்!'' என்றாள் கலக்கமாக.

''முதல்ல இந்த நெட் பார்க்கிறதை விடு, அதெல்லாம் முப்பது வயசுக்கு மேல, அதுவும் எல்லோருக்கும் கிடையாது. ஜஸ்ட் ரிஸ்க் ஃபாக்டர்ஸ் அவ்வளவு தான், அதுவும் எங்கயோ ஒருத்தருக்கு தான்!'' என்றான்.

''உனக்கு எப்படி தெரியும்? அப்போ உனக்கும் பயம் இருக்கு தானே! நீயும் லேட்டா கர்ப்பம் ஆனா என்ன பிரச்சனை வரும்னு நெட் பார்த்த தானே!'' என்றாள்.

''அடியேய்!'' என்று செல்லமாக கடிந்தவன், ''நான் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பாஸ் பண்ணியிருக்கேன். அப்போ நிறையப் படிப்பேன். அதுல தெரிஞ்சிக்கிட்டது. ஒத்துக்கோ ஜனனி, ஒத்துக்கோ! உன் அத்தான் ஒரு ஆபீசர்'' என்று காலர் தூக்கி விட்டான்.

''அய்யே!'' என்று ஜனனி உதடு சுளித்தாள்.

''காலையில என்னை டெம்ப்ட் பண்ணாத, எல்லாம் நல்லதாவே நடக்கும்!'' என்று மென்மையாக நெற்றியில் முத்தமிட்டான்.

அதற்குள் ''ஜனனி'' என்ற செல்லம்மாளின் குரல் கேட்க, எதோ எக்ஸாம் போகும் பெண் போல அவள் முகத்தில் அவ்வளவு டென்ஷன்,

சிரித்தவன், ''ஆல் தி பெஸ்ட். நான் இங்கயே இருக்கேன். நீ போ! இல்லை எல்லோர் முன்னயும் நீ பண்றதுக்கு சிரிச்சு வைப்பேன். போ!'' என்று அவளை அனுப்பினான்.

வேறு ரூமில் டெஸ்ட் செய்து பாசிடிவ் என்று வரவும்,

ஸ்வாதி, அம்மா, பெரியம்மா என்று அனைவர் முகமும் உற்சாகத்தில், அனுராதா தன் அப்பா அம்மா விடம் சொல்லப் போக, செல்லம்மாள் கணவருக்கு அழைக்க, ஸ்வாதி தன் பெற்றோருக்கு அழைக்க,

இதுவாகத் தான் இருக்க வேண்டும் என்று யூகித்த அவினாஷும் ரகுலனும் ஒருவரை ஒருவர் அணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

வாசுதேவனிடம் விரைந்தாள் ஜனனி,

''எனக்கு கல்யாணமும் ஆகிடுச்சு! எனக்கு குழந் தையும் பிறக்கப் போகுது!'' என்று சொன்ன போது குரலில் ஒரு குதூகலம் இருந்தாலும் ஜனனியின் கண்களில் நீர் கூட,

''லூசு'' என்று வழக்கம் போல வாசு அவளுக்கு ஒரு பாராட்டைக் கொடுத்தாலும், ஜனனியை நோக்கி கை விரித்து நின்றான்.

அவனின் கைகளில் அடைக்கலமானவள், நிமிர்ந்து அவன் முகம் பார்க்க ''தேங்க்ஸ் ஜனனி!'' என்றான்.

"எதுக்கு?"

"இதுக்கு!" என அணைத்துப் பிடித்திருந்ததை காட்டியவன், "அதாவது நீ என் வாழ்க்கையில வந்ததுக்கு, என் கைக்குள்ள வந்ததுக்கு, எனக்குள்ள வந்ததுக்கு, என் இதயமா வந்ததுக்கு, என் இதயமா மாறினதுக்கு! இப்போ புதுசா இன்னொரு இதயம் உருவாக்குறதுக்கு!" என கண்ணடித்து கவிதை பேசினான்.

"அய்யோடா! கவிதை! கவிதை! அருவி மாதிரி கொட்டுது!" என்று ஜனனி கிண்டல் பேச,

"ம்ம்ம்!" என்றவன், "கவிதையோட கீழ போட்டுக்கோ எழுதினவர் யாருன்னு தெரிய."

"யாரு?"

"இப்படிக்கு உன் இதயம்!" என்றான் கண்களில் காதலை தேக்கி ஜனனியைப் பார்த்தவாறே.

"அது யாரு?" என்றாள் புரியாதவள் போல,

"எனக்குள்ள இருக்குற உன் இதயம்!" என்றவனை இறுக அணைத்துக் கொண்டாள், அவன் வார்த்தையாகச் சொன்னதை, அப்படித்தான் எனக்கும் என்று காட்டுவது போல மேலும் மேலும் இறுகியது அணைப்பு.

★

மல்லிகா மணிவண்ணனின்

# இப்படிக்கு... உன் இதயம்

